வெளியீடு 4-12-2002 Issued 4-12-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, செப்டம்பர் 5, 2001 – தொகுதி 10 – எண் 2

Wednesday the 5th September, 2001 – Volume 10 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

## 5–9–2001

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. தகவல் கோரல்—**

(அ) பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை விதிப்பதால் பீடித் தொழிலாளர்களுக்கு வேலை பாதிப்பு — 489-490

(ஆ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல் — 490-496, 501-502

(இ) வாக்காளர் பட்டியலில் விடுபட்ட பெயர்களைச் சேர்த்தபின் உள்ளாட்சித் தேர்தலை நடத்துதல் — 497-498, 547-548, 557-558

(ஈ) உறுப்பினர்கள் சிலர் வாயில் கருப்புத் துணியைக் கட்டிக்கொண்டு அமர்ந்தது — 498-501

(உ) கொள்கை விளக்கக் குறிப்புடன் மக்கள் சாசனம் என்னும் குறிப்பேட்டினை அளிக்கக் கோருதல் — 521

**2. அறிவிப்புகள்—**

(அ) தீர்மானம் கொண்டுவரப்படாமல் வினா—விடை நேரம் ஒத்திவைக்கப்பட்ட முந்தைய நிகழ்வுகள் — 496-497

(ஆ) உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு — 503

(இ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் — 522

பக்கங்கள்

3. கவன ஈர்ப்பு—

குன்னூர் தொகுதி, பேரட்டி கிராமம், இந்திரா நகரிலுள்ள குடிசைகள்மீது மரங்கள் விழும் அபாயம் 503-505

4. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27 — ஊரக வளர்ச்சி
(ஆ) கோரிக்கை எண் 48 — குடிநீர் வழங்கல்
(இ) கோரிக்கை எண் 49 — நகராட்சி நிருவாகம் 505-547, 548-556, 559-568, 569-626

* மாண்புமிகு திரு. சி. துரைராஜ் 506, 511, 517, 520, 531, 600-617

திரு. எஸ்.கே. வேதரத்தினம் 513, 522, 523-533, 622

* திரு. தங்க. தமிழ்ச்செல்வன் 533-541

* திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி 541-547

* திரு. எஸ்.எஸ். ரமணீதரன் 548-551

* திரு. கோ. இரவிராஜ் 551-556

* திரு. கே. கோபிநாத் 559-568

* திரு. டி. மணி 569-574

* திருமதி செ. சுந்தராம்பாள் 575-579

திரு. வை. சிவபுண்ணியம் 579-586, 596



பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27 — ஊரக வளர்ச்சி
(ஆ) கோரிக்கை எண் 48 — குடிநீர் வழங்கல்
(இ) கோரிக்கை எண் 49 — நகராட்சி நிருவாகம் —தொடர்ச்சி

* திருமதி எஸ். கனிதா சம்பத் 586-594

திரு. எச். ராஜா 594-599

5. ஒழுங்குப் பிரச்சினை—

உறுப்பினர் தெலுங்கில் பேச அனுமதிக்கப்படுதல் 568-569

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 626-627

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 20, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 5, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு."

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்

### (அ) பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை விதிப்பதால் பீடித் தொழிலாளர்களுக்கு வேலை பாதிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். பொது இடங்களிலே புகை பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பீடித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளில் பாதிப்பு ஏற்படுகிறது. இதைப் பொறுத்த அளவிலே விவாதிப்பதற்கு நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதை இன்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224477.
சென்னை-600 008
நூலகம்

[2001 செப்டம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், இதை ஏற்கெனவே என் அறையில் சொல்லியிருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. அது பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்களும் பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள்.

## (ஆ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

***திரு. துரைமுருகன்:** Hon. Speaker Sir, Point of order. பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியப் பிரச்சினை குறித்து தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். தங்களுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கிற இந்த மாமன்றத்தில் பேரவை நடவடிக்கைகளைப் படம் எடுக்கின்ற செய்தித் துறையைச் சார்ந்தவர்கள் சரியாக எடுக்கவில்லை, பாரபட்சமாகக் காட்டுகிறார்கள், எதிர்க் கட்சிகளை இருட்டடிப்புச் செய்கிறார்கள், ஆளும் கட்சிக்கு அதிக முக்கியத்துவத்தைத் தருகிறார்கள், எனவே, இந்தக் குறையைப் போக்குவதற்காக, நீங்கள் அவர்களுக்குத் தருவதோடு, அரசுக்குச் சொந்தமாக இருக்கிற தூர்தர்ஷனுக்கும் அத்தகைய வாய்ப்பைத் தருவீர்களேயானால், மத்திய அரசு, மாநில அரசு என இரு அரசு நிறுவனங்களும் படம் எடுக்கிறபோது (குறுக்கீடு) இத்தகைய நிலைமை ஏற்படாது என்று தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் ஏற்கெனவே ஒரு நாள் கொண்டு வந்தேன். அதுகுறித்து, எழுதிக் கொடுங்கள், நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று தாங்கள் தெரிவித்தீர்கள். நானும் எழுதிக் கொடுத்தேன். நீங்கள் அவர்களுக்குத் தக்க அறிவுரைகளை வழங்கியிருப்பீர்கள் என்று, நானும் நித்தம் நித்தம் ஓடிப் போய் டிவியிலே இந்தச் செய்தி வருகிறபோதெல்லாம் உட்கார்ந்து பார்த்தேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.



2001 செப்டம்பர் 5]

**திரு. துரைமுருகன்:** சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஏற்கெனவே ஒழுங்குப் பிரச்சினையை நீங்கள் கொண்டு வந்தீர்கள். எழுதியும் கொடுத்தீர்கள். அதற்கு ஒரு பதிலை நான் ஏற்கெனவே, நேற்றைய தினமேகூடச் சொல்வதாக இருந்தது. நேற்று முக்கியமான சில பிரச்சினைகள் இருந்த காரணத்தினால் இன்றைக்கு அதற்கான அறிவிப்பினை இப்போது நான் வாசிக்கிறேன்:

*"மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தனது 28-8-2001 ஆம் நாளிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு திரைப்படத் துறை, சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்து, தொலைக்காட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கும்போது, ஆளும் கட்சிக்கு அதிக வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது என்றும், எதிர்க் கட்சிகள் பேசுகின்ற பேச்சின் முக்கியப் பகுதிகள் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன என்றும், எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் பாதிக்கப்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்கள்.*

*ஒவ்வொரு நாளும் நடைபெறும் பேரவை நடவடிக்கைகள்—20-8-2001 முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் அனைத்தும்—ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையில் அறிவித்தவாறு, தமிழ்நாடு திரைப்படத் துறையினரால் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரை மணி நேரம் காணக்கூடிய ஒளி, ஒலி நாடாக்களாகப் பதிவு செய்து, தமிழ்நாடு திரைப்படத் துறை இணை இயக்குநரால் சட்டமன்றப் பேரவை வளாகத்தில் வைத்து தணிக்கை செய்யப்பட்டு, தொகுக்கப்பட்டு, சென்னை தொலைக்காட்சி நிலையம் மற்றும் 10 தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும், அவரவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒளிநாடாக்களில் ஒளிப்பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.*

*தினமும் பேரவையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அன்றையதினமே தொலைக்காட்சி மூலம் பொதுமக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், காலையில் 3-1/2 மணி நேரம் நடைபெறும் பேரவை நிகழ்ச்சிகளைத் தொகுத்து அரை மணி நேரம் காணக்கூடிய ஒளிநாடாக்களிலும், மாலை இரண்டு மணி நேரம் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து சுமார் 20 நிமிடங்கள் காணக்கூடிய ஒளிநாடாக்களிலும் பதிவு செய்து, அன்றையதினமே தொலைக்காட்சி*

நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வமயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தெரிவிக்கும் முக்கியக் கருத்துகள், அரசின் முக்கிய நலத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள், எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களின் ஆக்கப்பூர்வமான கருத்துகள் மற்றும் முக்கிய ஆலோசனைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு, இந்த அரை மணி நேர ஒளிநாடாத் தொகுப்பில் இடம் பெறச் செய்யப்படுகின்றன. எனவே, குறுகிய கால அளவில், திறம்பட, விரைவாக சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளைப் பொதுமக்களுக்கு அவ்வப்போது வழங்க வேண்டுமெனில், தற்போது நடைமுறையிலிருக்கும் 30 நிமிடங்கள் ஓடக்கூடிய ஒளிநாடாக்களாக வழங்குவது மட்டுமே நடைமுறை சாத்தியமானதாகும் எனப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்." இதுசம்பந்தமாக இதுதான் என்னுடைய விளக்கம்.

*முற்பகல் 10-05*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பெருமுயற்சி எடுத்து, அவர்களிடத்திலே கேட்டு இந்த மாமன்றத்திற்கு ஒரு விளக்கம் தர வேண்டுமென்கிற தங்களுடைய பெருந்தன்மைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதிலே தெரிவித்திருக்கிறவை சரியான காரணங்கள் அல்ல. பல நேரங்களில் ஆளும் கட்சி மாண்புமிகு அமைச்சர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து விவாதத்திற்கு இடமில்லை. தாங்கள் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினீர்கள், எழுதியும் கொடுத்தீர்கள். அதற்கான பதிலை நான் பொறுப்புணர்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். இதற்கு மேலும் இதிலே விவாதம் எதுவும் கிடையாது.

**திரு. துரைமுருகன்:** ஆகையினாலே நாங்கள் கேட்பது, இதிலே விமர்சனம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இவர்கள் இதே நிலையைத்தான் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்களுடைய கோரிக்கை—ஒன்று, நான் தெரிவித்ததைப்போல தூர்தர்ஷனுக்கும் இந்த வாய்ப்பைத் தர வேண்டும். இல்லாவிட்டால் மற்ற மாநிலங்களிலே





உள்ளதைப்போல் எல்லா டி.வி. நிறுவனங்களுக்கும் அளித்து live ஆகக்காட்டினால் எல்லோருடைய நிலைமைகளும் விளங்கும். எனவே, நீங்கள் சொன்னதற்குப் பிறகும் அதே நிலையை அந்த நிறுவனங்கள், செய்தித் துறைக்காரர்கள் கடைப்பிடித்து வருவதனாலே இங்கு நாங்கள் எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கிறோம். அதிருப்தியைத் தெரிவிக்கிறபோது—இந்த மாமன்றத்திலே அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு இரண்டு, மூன்று வகைகள் உண்டு—அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு இந்த மாமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள் என்னவென்று நான் யோசித்துப் பார்த்தேன். ஒன்று, வெளிநடப்புச் செய்வது (குறுக்கீடு) வெளிநடப்புச் செய்யவில்லை. இரண்டாவது, நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களெல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தார்கள். அப்போது அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக அவர்கள் சில வழிமுறைகளைக் கையாண்டார்கள். அது இந்த மாமன்றத்திலே இருக்கிறது. எனவே, எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கிற வகையில், நாங்கள் சொன்ன கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று மீண்டும் பேரவைத் தலைவர் அவர்களை வேண்டிக்கொள்கிற அளவிலே நாங்கள், அவர்கள் என்ன செய்தார்களோ, அதையே நாங்கள் இப்போது உங்களிடத்திலே செய்துகாட்டி, இந்தக் கறுப்புத் துணியை நாங்கள் கட்டிக்கொண்டு சபையிலே அமர்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.(குறுக்கீடுகள்)

*(அவையிலிருந்த தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து தங்கள் வாயில் கறுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு அமர்ந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உங்களுடைய அடுத்த இன்னொரு பிரச்சினைக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், பேச முடியுமா?

**திரு. துரைமுருகன்:** ஆம். தாராளமாக முடியும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, கறுப்புத் துணியைப் பார்த்து எனக்கொன்றும் அலர்ஜி இல்லை. ஏனென்றால், நாம் அந்தப் பாரம்பரியத்திலிருந்துதான் வந்தவர்கள். எனவே, அதைப்பற்றி ஒன்றும் இல்லை.

**திரு. துரைமுருகன்:** அதனால்தான் சுந்தரம் அன்றைக்குக் கட்டிக் கொண்டு வந்தபோது நாங்களும் அலர்ஜி ஆகாமல், அதை allow பண்ணினோம்.

[2001 செப்டம்பர் 5

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 31-8-2001 அன்று...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எதிர்க்கட்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற ஆதங்கத்தைக் கூறினார்கள். நான் பட்ஜெட் விவாதத்திலே கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் பேசினேன். நானும் டி.வி. முன்பு உட்கார்ந்துகொண்டு, என்னுடைய முகம் வருமா, வருமா. வருமா என்று பார்த்தேன். ஆனால், ஒரு வினாடிகூட என்னுடைய முகத்தைப் பார்க்க முடியவில்லை.(குறுக்கீடு) உறுப்பினர் சொன்னதற்குத்தான் சொல்கிறேன். நானும் ஒரு மூத்த உறுப்பினர்தான். என்னுடைய பேச்சைக் காணவில்லை. அடுத்ததாக, சுந்தரம் அவர்கள் சென்ற முறை கறுப்புத் துணி கட்டிக்கொண்டு வந்தார்கள் என்று கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் கறுப்புக் கொடியை எடுத்துக் காட்டினோமே தவிர, அவர்களைப் போல வாயிலே கட்டிக்கொண்டு எந்த நேரத்திலுமே உட்காரவில்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களுக்கு இன்னொன்றையும் நான் சொல்கிறேன். அதாவது, நீங்கள் இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பிய அன்றே உங்களை ஆதரிக்கிற தொலைக்காட்சியிலே தற்செயலாக நான் அதைப் பார்க்க நேரிட்டது. ஒழுங்குப் பிரச்சினையை டி.வி.யிலே எப்படி edit செய்கிறீர்கள் என்று நீங்கள் கேட்ட ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பிய அன்றே உங்களுடைய ஆதரவுத் தொலைக்காட்சியிலே நான் தற்செயலாகப் பார்க்க நேரிட்டது. அதிலே நீங்கள் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பியது, உங்களுடைய முகம் தெரிகிறது, உங்களுடைய குரல் கேட்கிறது. அதற்கு நான் சொன்ன பதில் இடம் பெறவில்லை. அதனால் என்ன சொல்கிறேன் என்றால் (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கே இந்தக் கதிதான். (குறுக்கீடுகள்)



2001 செப்டம்பர் 5]

*முற்பகல் 10-10*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவருடைய நடவடிக்கையில் நாங்கள் சந்தேகப்படவில்லை. உங்கள் பெருந்தன்மைக்கு, இந்த அவையை எப்படியாவது கட்டிக் காத்துப் போக வேண்டும் என்ற தங்களுடைய பொறுப்புணர்ச்சிக்கு நான் தலை வணங்குகிறேன். (குறுக்கீடுகள்) ஆனால் அதே நேரத்தில், பேரவைத் தலைவரையும் மிஞ்சி இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறபோது, எங்களுடைய அதிருப்தியை நாங்கள் தெரிவிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கு எதிர்ப்பாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவருக்காகச் சொல்லவில்லை. ஒவ்வொரு தொலைக்காட்சியிலும் எப்படி அது ஒளிபரப்பப்படுகிறது என்பதற்காகச் சொல்கிறேன். திரைப்படத் துறை அரை மணி நேரம் தொகுத்துக் கொடுத்துவிடுகிறது. அரை மணி நேரம் எல்லாத் தொலைக்காட்சிகளிலும் காட்ட முடிவதில்லை. 3 நிமிடங்களோ, 4 நிமிடங்களோ, 5 நிமிடங்களோதான் காட்டுகிறார்கள். அவர்களுக்கு வேண்டியதை அதிலே எடுத்துக்கொண்டு காட்டுகிறார்கள். இதுதான் நிலைமை (குறுக்கீடுகள்) அதாவது துரைமுருகன், Buffet சாப்பாடு மாதிரி வைத்துவிடுகிறோம். நீங்கள், உங்களுக்குப் பிடிக்கிறதை எடுத்துக்கொள்கிறீர்கள். அவ்வளவுதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இந்தப் பிரச்சினை இத்துடன் முடிகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இங்கே கிளப்பினார். நீங்கள் அதற்கு விளக்கம் தந்தீர்கள். உங்களுடைய விளக்கம் சரியாக இல்லை என்று அவர்களுடைய கட்சியின் சார்பிலே ஒரு முடிவு எடுத்து, பேசவே முடியாத அளவிற்குக் கறுப்புத் துணியைக் கட்டியதற்குப் பிறகு அவரும், மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களும், அந்த உறுதிமொழியை, வாக்குறுதியைத் தவற விட்டுவிட்டு, துணியை எடுத்துவிட்டுப் பேசுவது முறையா? இதற்கு மட்டும்.... (குறுக்கீடுகள்)

[2001 செப்டம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அப்போதே சொல்லி விட்டார். அவ்வப்பொழுது அதை எடுத்துவிட்டு பேசிக்கொள்வோம் என்று சொல்லிவிட்டார் அவர். (சிரிப்பு) (குறுக்கீடுகள்) இல்லை, அதாவது துரைமுருகன் அவர்களே, தாங்கள் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினீர்கள். நான் இன்றைக்குப் பதில் சொல்கிறேன் என்று சொன்னேன். நான் என்ன பதில் சொன்னாலும், இந்த முடிவிலேதான் இருப்பது என்று நீங்கள் ஏற்கெனவே கறுப்புத் துணியை வெட்டி, தயார் பண்ணிக்கொண்டு வந்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு துரைமுருகன் அவர்களுடைய வேண்டுகோளின்படி தூர்தர்ஷனுக்கும், எல்லா டி.வி.க்களுக்கும், சன் டி.வி.க்கும் அனுமதி அளிக்கப் போகிறோம் என்று சொல்லியிருந்தால், 'தாங்கள் வாழ்க, வாழ்க' என்று சொல்லி இதை எடுத்திருக்கவே மாட்டோம். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை முடிந்தது.

## 2. அறிவிப்புகள்

### (அ) தீர்மானம் கொண்டுவரப்படாமல் வினா-விடை நேரம் ஒத்திவைக்கப்பட்ட முந்தைய நிகழ்வுகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *31-8-2001* அன்று பேரவைக் கூட்டம் தொடங்கியவுடன் கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட்டதற்குத் தீர்மானம் கொண்டு வரவில்லை என்றும், அதனால் மரபுகளுக்கு முரணாக சட்டமன்ற நடவடிக்கைகள் இருக்கின்றன என்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். இதற்கு நான் பதிலளிக்கையில், கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது என்று *30-8-2001* அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் ஏற்கெனவே ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டு, அன்றையதினமே *(30-8-2001)* 'கேள்வி நேரம் மறுநாள் இல்லை' என்று அவையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்கு முன்னுதாரணங்கள் உள்ளன என்றும், மரபுகள் எந்த வகையிலும் மீறப்படவில்லை என்றும் கூறினேன்.



2001 செப்டம்பர் 5] [பேரவைத் தலைவர்]

இதற்குப் பல முன் நிகழ்வுகள் உள்ளன. சிலவற்றை இங்கே சுட்டிக்காட்டுகிறேன்.

*1. 11-5-1987 அன்று அவையில் கேள்வி நேரம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இதற்கு எந்தவிதமான தீர்மானமும் அவையில் கொண்டு வரப்படவில்லை.*

*2. 28-1-1988 அன்று அவையில் கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்று 25-1-1988 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. பின்னர் 28-1-1988 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் ஏதும் கொண்டு வரப்படாமலேயே கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.*

*3. 28-12-1995 அன்று அவையில் கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்று 27-12-1995 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. பின்னர் 28-12-1995 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் ஏதும் கொண்டுவரப்படாமலேயே கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட்டது.*

*அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்கவும், பேரவையில் கேள்வி நேரம் ஒத்திவைக்கப்படுவது குறித்து அறிவித்த பிறகும், நிகழ்ச்சி நிரலில் 'வினாக்கள்-விடைகள்' என்று குறிப்பிடப்படாத நிலையிலும், மறுநாள் கேள்வி நேரம் தேவையில்லை என்பதற்கு அவையில் அவை முன்னவர் தீர்மானம் கொண்டுவந்தால், விதிகளின்படி ஏகமனதாக எந்த உறுப்பினரின் ஆட்சேபணையுமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு மாறாக, உறுப்பினர் எவராகிலும் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை எனத் தெரிவித்து விட்டால், அந்நிலையில் வினாக்கள்-விடைகள் எவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுவது என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும்."* (குறுக்கீடுகள்)

## 1. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (இ) வாக்காளர் பட்டியலில் விடுபட்ட பெயர்களைச் சேர்த்தபின் உள்ளாட்சித் தேர்தலை நடத்துதல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

[2001 செப்டம்பர் 5

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஒரு நிமிடம் நான் பேசி விடுகிறேன். அடுத்து, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், இதுகுறித்து நீங்கள் அறையில் ஏற்கெனவே சொன்னீர்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இதற்கு விளக்கம் சொல்வார்கள். ஏன் மறுபடியும் இந்தப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும்? உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசவிருக்கிறார். அவர் பேசுகிறபோதுகூட பேசட்டும். இது Point of order கிடையாது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*முற்பகல் 10-15*

### (ஈ) உறுப்பினர்கள் சிலர் வாயில் கறுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு அமர்ந்தது

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காப்பது உங்களுடைய கடமையாகும். அதை நாங்கள் யாரும் தவறு என்று சொல்ல முடியாது. நீங்கள் காத்துத்தான் வருகின்றீர்கள். போன வாரம் இதே அவையில் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய அதிருப்தியையும், தன்னுடைய எண்ணத்தையும் வெளிப்படுத்துவதற்காகச் சட்டையில்லாமல் வந்தார். அப்போது நீங்கள் உடனடியாக விசாரித்து, உரிய நடவடிக்கை எடுத்தீர்கள். அவையிலே ஒருவர் எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. அது சட்டமன்றமானாலும் சரி, பாராளுமன்றமானாலும் சரி. அவர்கள் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்காக நடைமுறையில் இல்லாத ஒரு முறையை வகுப்பது சபைக்கு சரிவராத ஒரு முறையாகும். ஆகவே, நீங்கள் அருள்கூர்ந்து இதுசம்பந்தமாக ஏதாவது ஒரு முடிவெடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் செய்யும் இந்த நடவடிக்கைகள்மீது ஏதாவது முடிவெடுக்க வேண்டும். இல்லாவிட்டால், இப்படியே விட்டீர்கள் என்றால், ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். ஆகவே, இது சபையின் கண்ணியத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2001 செப்டம்பர் 5] [டாக்டர் மு. தம்பிதுரை]

இரண்டாவது, இவர் சொன்னதுபோல, ஏதோ தூர்தர்ஷனைக் கொண்டு வர வேண்டும். எல்லா டிவிக்களையும் கொண்டு வர வேண்டும் என்றால் எங்கேயும் அதுமாதிரி தருவதில்லை. ஏதாவது ஒரு டிவிக்குத்தான் கொடுப்பார்கள். பார்லியமெண்ட்டில் தூர்தர்ஷன் செய்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதே பார்லியமெண்ட்டிலே நாங்கள் பேசியதுகூட எவ்வளவோ வராமல் இருந்திருக்கிறது. அதற்காக நாங்கள் இதுமாதிரி ஒரு கறுப்புச் சட்டை போட்டுக்கொண்டு, முகமூடி போட்டுக்கொண்டு, ஒரு கறுப்பு கொள்ளைக்காரன் மாதிரி நான் வந்து உட்கார்ந்திருக்க முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எதிர்ப்பைச் சொன்னார்கள். அது சரி, அதற்கு ஒரு முறை இருக்கிறது. அதற்காக இப்படியெல்லாம் செயல்படுவோம் என்று சொன்னால், அடுத்தது இன்னொரு முறை நாங்கள் குல்லா போட்டுக்கொண்டு வர வேண்டும், நாங்கள் அப்படி ஏதாவது போட்டுக்கொண்டு வந்து உட்கார வேண்டும் என்பார்கள். இப்படியெல்லாம் வருவதற்கு அவையின் செயல்முறை இடம் தருகிறதா? (குறுக்கீடுகள்) அதன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேரவைத் தலைவருக்குத்தான் வேண்டுகோள் வைத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) உங்களுக்கு அல்ல. பேரவைத் தலைவருக்குத்தான் வேண்டுகோள் வைத்திருக்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் அதற்குக் கட்டுப்படுகிறோம். மாண்புமிகு அமைச்சர் டெல்லியிலிருந்து வந்தவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பர்கூரிலிருந்து வந்தவர்.

**திரு. துரைமுருகன்:** சென்ற முறை என்ன நடந்தது என்றால், திடீரென்று உள்ளே வந்து சுந்தரமும் மற்றவர்களும் பெரிய பேனரையே பிடித்துவிட்டார்கள். இங்கிருந்து அவ்வளவு தூரத்திற்குப் பேனரைப் பிடித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) கறுப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள். அதெல்லாம் மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியாது. ஏனென்றால் அவர் அப்போது இங்கு இல்லை. ஆகவே அவர்கள் செய்ததில் பாதிதான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் என்ன சொன்னாலும் இந்த அவையில் எங்கள் இயக்கம் கட்டுப்படும். சபாநாயகருக்கு மரியாதை தருவது என்பது நாங்கள் எடுத்திருக்கிற முடிவு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எனக்குத்தான் வேண்டுகோள் வைத்தார். (குறுக்கீடுகள்) உங்களுக்கல்ல. எனக்குத்தான் அந்த வேண்டுகோள் வைத்தார். கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர், பரிதி இளம்வழுதி, பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர், அமைச்சர்களாக இருந்தவர்களெல்லாம் இருக்கிறார்கள். பிச்சாண்டி இருக்கிறார். நம்முடைய சாத்தூர் இராமச்சந்திரன்—நம்முடைய சாத்தூர் இராமச்சந்திரன்—அவரும் இருக்கிறார். ஆகவே, எல்லோரும் மூத்த உறுப்பினர்கள். அமைச்சர்களாக இருந்தவர்கள். அனுபவம் பெற்றவர்கள். அவையினுடைய கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்கின்ற உணர்வு அவர்களுக்கும் நிச்சயமாக இருக்க வேண்டும். அவர்கள் இதுதான் முறையென்று விரும்பினால், பொது மக்கள் அதைப் புரிந்துகொள்ளட்டும். அதற்கு மேல் நாம் என்ன செய்ய முடியும்?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம் பேனரைக் காட்டியதுகூட உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது என்று அறிகிறேன். (குறுக்கீடுகள்) அதுதான் அவர்கள் பேனரைக் காட்டிவிட்டு முடித்துவிட்டாரே, (குறுக்கீடுகள்) இப்போதும்கூட நீங்கள் கண்டனத்தைத் தெரிவித்து விட்டீர்கள். கட்டிக்கொண்டே இருக்க வேண்டியதில்லையே? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கோரிக்கைகளை உணர்ந்து, உங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள். என்வே, இதை எடுத்துவிடலாம் என்று சொன்ன காரணத்தால், பேரவைத் தலைவருக்கு நாங்கள் மரியாதை தந்து, இப்போது நாங்கள் அதை எடுத்துவிடுகிறோம்.





*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய வாயில் கட்டிக்கொண்டிருந்த கறுப்புத் துணியை எடுத்துவிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி. கண்ணியத்தைக் காப்பதற்கான முறை, வழி, இதுதான். கண்டனத்தைத் தெரிவித்து விட்டீர்கள், முடித்துவிடுங்கள். பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள். இன்னொரு நாளைக்கு அது பயன்படும் என்று அதைப் பத்திரப்படுத்தாதீர்கள். (சிரிப்பு)

## (ஆ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்-தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள். பாராளுமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், பாராளுமன்றத்திலே மைய அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற தூர்தர்ஷன் மட்டும்தான் அங்கு வைக்கப்படுகிறது. தமிழகத்திலே தூர்தர்ஷனை தற்போது வைக்க முடியாது. ஏனென்றால் தமிழகத்திலே தற்போது நாம் Information Department மூலமாக அதை எடுத்துக்கொண்டிருக்கிறோம். பாராளுமன்றத்திற்கு ஒரு விதி, சட்டமன்றத்திற்கு ஒரு விதி என்று கடைபிடிப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூர்தர்ஷன் என்பதுகூட இப்போது தனி அமைப்பு. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நான் ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். தூர்தர்ஷன்கூட ஒரு தனி அமைப்பு. ஏற்கெனவே அவர்கள் இங்கே எடுத்த நேரத்தில் நான் அவையிலே இருந்து அவைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட சில கருத்துகளை தூர்தர்ஷனிலே வெளியிட்டுவிட்டார்கள். நான் அதற்கு வருத்தம் தெரிவித்து தூர்தர்ஷனுக்குக்கூட கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, அது ஒரு தனி அமைப்பு. ஆகவேதான் இந்தப் பிரச்சினைகள் வரக்கூடாது என்று திரைப்படத் துறை இதை எடுக்கிறது. இதற்கு நீங்கள் உங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள், புலப்படுத்தியிருக்கிறீர்கள். அந்த அளவோடு பிரச்சினை முடிந்தது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

முற்பகல் 10-20

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குத் தெரியாது. ஒரு நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஆந்திராவில் தனியார்களுக்குக் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் சொல்வது புரிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பினார்கள். எல்லாத் தொலைக்காட்சிகளும் இதை ஒளிபரப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம் என்று முதலமைச்சர் அவர்கள் விரும்பினார்கள். ஆனால் நம்முடைய அவையிலே போதுமான இடம் இல்லை, நெருக்கடி இருக்கிறது. மேலே இருக்கின்ற மாடங்கள் எல்லாம் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இந்தச் சிக்கல் இருக்கின்ற காரணத்தால்தான், வேறு வழியில்லாமல்தான் இந்த முடிவுக்கு வந்தோம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் முகமூடிக் கொள்ளைக்காரர்களைப் போல் இருக்கிறார்கள் என்றார்கள். நான் உங்களைச் சொல்லவில்லை. சில பேருக்கு கறுப்புத் துணி அணிந்தால் தான் முகம் முகமூடிக் கொள்ளைக்காரனைப்போல் இருக்கிறது. சில பேருக்கு கறுப்புத் துணி அணியாமலேயே கொள்ளைக்காரனைப்போல் தோற்றம் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் சொன்னது சரி. சில பேருக்கு அணியாமலேயே கொள்ளைக்காரனைப் போல் முகம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பரிதி இளம்வழுதி:** அவரை மட்டும் பேச அனுமதிக்கிறீர்கள். என்னை பேசவிட மறுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, பிரச்சினை முடிந்துவிட்டது. முடிந்த பிரச்சினையைக் கிளறாதீர்கள்.



## 2. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு (Orientation Course) நடைபெறவுள்ளது. அக்கருத்தரங்கு இன்று மாலை 4-30 மணிக்கும், 8-9-2001, 10-9-2001 ஆகிய நாட்களில் மாலை 4-30 மணிக்கும் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் 10-வது தளத்தில் உள்ள மாநாட்டு கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கருத்தரங்கைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### குன்னூர் தொகுதி, பேரட்டி கிராமம், இந்திரா நகரிலுள்ள குடிசைகள் மீது மரங்கள் விழும் அபாயம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கா. கந்தசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் தாலுகா, பேரட்டி கிராமம், இந்திரா நகரில் வசிக்கும் ஏழைப் பொதுமக்கள், ஆதிதிராவிட பொதுமக்கள் வசிக்கும் 50 குடிசைகள் மீது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி, அதிலே உள்ள வாசகத்தை வாசிக்க வேண்டும்.

**திரு. கா. கந்தசாமி:** அதே வாசகத்தைத்தான் நான் வாசிக்காமல் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாசிக்காமல் சொல்லக் கூடாது. அதிலே இருப்பதை அப்படியே வாசிக்க வேண்டும். கவன ஈர்ப்பு என்பது அதுதான்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, பேரட்டி கிராமம், இந்திரா நகரில் உள்ள ஏழைப் பொதுமக்கள் வசிக்கும் 50 குடிசைகள் மீது எந்த நேரமும் மரங்கள் விழுந்து விடும் அபாயம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எஸ். எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

### அறிக்கை

இந்திரா நகர், நீலகிரி மாவட்ட குன்னூர் வட்டாட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. அங்கே 15 வருடங்களுக்கு முன்பு ஊராட்சி ஒன்றியத்தால் எழுப்பப்பட்ட தைல மரத் தோட்டங்கள் அமைந்துள்ள பகுதியில் மக்களால் குடிசைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி இதுவரை மழை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு ஆளானதில்லை. மேலும், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் இருமுறை அப்பகுதியை நேரில் தணிக்கை செய்து, இந்திரா நகரில் மரங்களால் உயிருக்கோ அல்லது மக்கள் சொத்துக்கோ பாதிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துள்ளார். ஆகவே, மரங்களால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற கேள்விக்கு இடமில்லை. இதனை நீலகிரி மாவட்ட ஆட்சியரும் உறுதி செய்துள்ளார்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதில் எந்த ஆபத்தும் இல்லை என்று கோட்டாட்சித் தலைவரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த மரங்கள் எல்லாம் மிகப் பெரிய மரங்கள். தைல மரங்களும், சில்வர்-ஓக் மரங்களும் அங்கே இருக்கின்றன. மண் அரிப்பு ஏற்பட்டு வேர்கள் எல்லாம் வெளியே தெரிகின்றன. காற்றடித்தால், மழை பெய்தால், அந்த மரங்கள் குடிசைகள் மீது விழுந்து உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது.





எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, உயிர்ச் சேதம் ஏற்படாமல் இருக்க அந்த மரங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி என்பது கிராம மேய்க்கால் பகுதி. இந்த நிலம் வருவாய்த் துறைக்குச் சம்பந்தப்பட்டது. அங்கே மரம் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது வன இலாகாவுக்குச் சொந்தம், ஆகையினால் அதை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார். இது வன இலாகாவுக்குச் சொந்தம். அல்ல. Revenue Department — வருவாய்த் துறைக்கு-சம்பந்தமானது. அது மட்டுமல்ல, அந்த இடத்திற்கு கோட்டாட்சியரும், வட்டாட்சியரும் நேரில் சென்று பார்த்து, அந்த மரங்கள் மிகப் பெரிய மரங்கள், காற்றினாலோ, மழையினாலோ அல்லது எந்த ஆபத்தினாலோ விழக்கூடிய மரங்கள் அல்ல என்றும், இப்போது இருக்கின்ற அந்த 50 குடிசைகளும் ஆக்கிரமிப்புப் பகுதிகள் என்றும், அந்த மரங்களை எடுத்தால் அந்தப் பகுதியையும் ஆக்கிரமிப்புச் செய்துவிடுவார்கள் என்றும், ஆகையினால் அந்த மரங்களை எடுக்கத் தேவையில்லை என்றும், அதனால் எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரும், கோட்டாட்சித் தலைவரும், தாசில்தாரும் பதில் கூறியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி**

**(ஆ) கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல்**

**(இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம்**

...

### (அ) கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27, ஊரக வளர்ச்சி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.15,44,57,61,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *3600*, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தையும், தொப்பம்பட்டி ஒன்றியத்தையும் பிரித்து, கள்ளிமந்தயத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *176*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் தொகுதியில் அலமேலுமங்காபுரம், பெருமுகை வெங்கட்டாவரம், சதுப்பேரி, கொணவட்டம், கருகம்புத்தூர், பாலமதி, சிறுகாஞ்சி கிராமம் ஆகியவற்றில் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்து சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி'விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2253*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி'விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *588*, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே உள்ள கன்னேரிமுக்கு உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பிக்க வேண்டி உடனடியாக பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1151*, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி நகரில் உள்ள மிகவும் பழுதடைந்த மாநகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து'விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1727*, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1418*, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சி, கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி மற்றும் திருவண்ணாமலை நகராட்சியைச் சுற்றியுள்ள மலைப் பாதையைச் சுற்றியுள்ள முக்கிய இடங்களில் உயர் கோபுர விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3587, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வெள்ளக்கோவில் தொகுதியில் உள்ள கிராம மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1826, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1674, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் யானைகள், புலிகள், சிறுத்தைகள் போன்ற கொடிய வனவிலங்குகளால் மக்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படுவதைத் தடுக்க தெருவிளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3109, திரு. துரை கி. சரவணன்.

**திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் காட்டுமன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர் மற்றும் மின்சார வசதிகள் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1863, திரு. க. முருகவேல் ராஜன்.



**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2667, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3197, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2616, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 875, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 761, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2007, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2042, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'செங்கல்பட்டு தொகுதியில் இணைப்புச் சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1191, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 838, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தண்டராம்பட்டு ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து தானிப்பாடியை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1453, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி மாநகராட்சியில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,44,57,61,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48- குடிநீர் வழங்கல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.159,10,78,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2066, திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வில்லிவாக்கம் தொகுதியில் உள்ள மாநகராட்சிக்கு உட்பட்ட 62, 63, 64, 65-ஆ, 108 ஆகிய வட்டங்களில் குடிநீர் தங்குதடை இல்லாமல் போதுமான அளவிற்குக் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 924, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் நகராட்சிகளுக்கு குடிநீர் வழங்க ஒகேனக்கல் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 612, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பேரூராட்சி, அணையட்டியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2144, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2549, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுகா, இத்தலாரில் உள்ள கரியல்வளை கிராமத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1447, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவெறும்பூர் தொகுதி, காவிரிக்கரை ஓரங்களில் உள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3281, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3577, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, கொளத்துப் பாளையம் பேரூராட்சியில் உள்ள கிராமங்களுக்கு காவிரி குடிநீர்த் திட்டம் (முத்தூர்-காங்கேயம் திட்டம்) குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3420, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 651, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 731, திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தலைஞாயிறு-கீழையூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1840, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3119, திரு. துரை கி. சரவணன்.

*முற்பகல் 10-30*

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிதம்பரம் நகருக்கு குடிநீர் வழங்கும் வக்கிரமாரி ஏரியின் பழுதடைந்துள்ள பில்டரினை உடனடியாகச் சரி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1888, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2907, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3121, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 895, திரு. ரா. ஈஸ்வரன்.



**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 755, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1977, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3598, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில், இடையகோட்டை புதூர், அய்யம்பாளையம், கக்கரநாயக்கனூர், சின்னக்காம்பட்டி புதூர், பாறைப்பட்டி, ராயக்காவலசு, ஆத்திக்காட்டுப் புதூர், கணவாய்ப்பட்டி, அத்தப்பன்பட்டி, குப்பியாக்கவுண்டன்புதூர் ஆகிய ஊர்களில் புதிதாக ஆழ்குழாய் அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2060, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அஞ்சூர், குண்ணவாக்கம். பட்ரவாக்கம், வல்லம், பெரிய பொத்தேரி மற்றும் கிராமங்களையும் இணைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம்

குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1184, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 829, திரு. ஜெ. அன்பழகன், இருக்கையில் இல்லை

வெட்டுத் தீர்மானம் எண் 1460, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி நகரின் அபிவிருத்திப் பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2945, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.159,10,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



## (இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49- நகராட்சி நிருவாகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.775,32,87,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1433, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை நகராட்சிப் பகுதியில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையுள்ள பகுதிகளான மேட்டுத் தெரு. புது வாணியங்குளத் தெரு, செட்டிக்குளம் மேடு ஆகிய பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 922, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2094, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 578, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி கடைகளை அந்தந்த குத்தகைதாரர்களுக்கே ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2551, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் தினமும் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3282, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1841, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1906, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2897, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3124, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 896, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 754, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1979, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2944, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1686, திரு. ஆஸ்டின், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 531, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூரில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2980, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.775,32,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப் பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 629 முதல் 766 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம், திரு. எஸ்.கே. வேதரத்தினம். (குறுக்கீடு)

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (உ) கொள்கை விளக்கக் குறிப்புடன் மக்கள் சாசனம் என்னும் குறிப்பேட்டினை அளிக்கக் கோருதல்

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. பல்வேறு மானியக் கோரிக்கைகளில் விவாதம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. குறிப்பாக, மக்கள் சாசனம் என்ற ஒரு குறிப்பேடு, Policy Note-உடன் அனுப்பப்படுவது வழக்கமாக இருந்தது. மக்களுடைய நலத் திட்டங்களை ஒவ்வொரு துறையின் சார்பாகவும் அரசு அனுப்பும். அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கையேடாகக் கூட பயன்படும். அதோடு மட்டுமல்ல; ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு, வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு, கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்குக்கூட அது பயனுள்ளதொரு விஷயமாக இருக்கும். அரசு ஆண்டுதோறும் அறிவிக்கக்கூடிய திட்டங்கள், பொதுமக்கள் எல்லோரும் படித்துத் தெரிந்துகொண்டு பயனடையக்கூடியது. அந்த மக்கள் சாசனம் என்ற புத்தகம் என்பது மிக அவசியமானது. எங்களுக்கு வந்திருக்கிற Policy Notes-ஐயெல்லாம் பார்த்தோமென்று சொன்னால், சமூக நலத் துறையிலிருந்து மட்டுமே மக்கள் சாசனம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது ஒவ்வொரு சட்டமன்றத்திற்கும்கூட மாறும். ஒவ்வொரு மானியத்திற்கும்கூட மாறுபடும். அப்படி நலத் திட்டங்களை அரசு அறிவிக்கிறபோது, புதிய புதிய திட்டங்களை மக்கள் படித்துப் பயன்பெற வேண்டுமென்றால், உங்கள் மூலமாக ஒவ்வொரு துறைக்கும் தெரிவித்து, அந்த மக்கள் சாசனம் என்ற புத்தகத்தை எங்களுக்குக் கொடுப்பதுடன், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் போன்ற துறைகளுக்கும் அனுப்பினால் மக்கள் பயன் அடைவார்கள். ஆகவே, தங்கள் மூலமாக இது குறித்து எல்லாத் துறைகளுக்கும் ஆணையிடப்பட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம், திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

*முற்பகல் 10-35*

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய அடிப்படை வசதிகளைப் பெருமளவிலே பூர்த்தி செய்கின்ற ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளினுடைய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அதேபோல, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களுக்கும், அதேபோல இரண்டாவது முறையாக என்னை வேதாரண்யம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பிய வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

இன்றைக்கு விவாதிக்கப்படுகின்ற மானியக் கோரிக்கையான ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையிலே, இந்தியாவினுடைய இதயம் கிராமங்களிலேதான் உள்ளது என்று உத்தமர் காந்தியடிகள் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

## 2. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேதரத்தினம், கொஞ்சம் இருங்கள். காலை 11-00 மணியளவில் எல்லா உறுப்பினர்களுக்கும் பேரவையை ஒட்டியிருக்கின்ற மண்டபத்தில் உள்ளாட்சித் துறையின் சார்பாக சிற்றுண்டி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேதரத்தினம், பேச்சைத் தொடரலாம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மக்கள் ஆட்சியிலே கிராம ஊராட்சிகள் ஓர் அடித்தள அமைப்பு என்றும், அந்த அடித்தள அமைப்பை நாம் வலுவுள்ளதாக மாற்றினால்தான் நமது ஜனநாயக அமைப்பு உறுதியானதாகவும் உயிர்த்துடிப்புள்ளதாகவும் இருக்கும் என்றும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டியிருந்தார்கள். அந்த அடிப்படையிலேதான், இருக்க இடம், நடக்க பாதை, குடிக்கத் தண்ணீர், பார்க்க வெளிச்சம், படிக்கப் பள்ளிக்கூடம், அதேபோல உயிர் காக்க சுகாதாரம் என்று மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலேதான் 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரையிருந்த 5 ஆண்டுகால ஆட்சியிலே, உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த நிலைமையை மாற்றி, கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் 1996-லே உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி, அதேபோல உள்ளாட்சி மன்றத்தினுடைய பிரதிநிதிகளையும், மக்களுடைய பிரதிநிதிகளையும் கொண்டு அந்த மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற ஓர் அருமையான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருந்தார்கள். அதேபோல, அதிலே பல்வேறு மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு பணிகளை மிகச் சிறப்பாக ஒருவருக்கொருவர் மிக அதிகமாக போட்டி போட்டுக்கொண்டு பணிகளைச் செய்த காரணத்தால் இந்தத் தமிழகத்தினுடைய வரலாற்றிலே, சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து உள்ளாட்சித் துறை கடந்த 5 ஆண்டுகாலத்திலே மிகச் சிறப்பானதொரு துறையாக விளங்கியது என்பதையும் அதற்குச் சான்றாக சில புள்ளிவிவரங்களை இங்கே நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1991-லிருந்து 1996 வரை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்யப்பட்டிருக்கின்ற பணிகளைப் பொறுத்தவரையில், மத்திய மாநில அரசு நிதியாக வளர்ச்சி மற்றும் இதர பணிகளுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 1,484.03 கோடி ரூபாய். ஆனால், 1996-லிருந்து 2001 வரை தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 6,169.63 கோடி ரூபாய். கிட்டத்தட்ட நான்கு மடங்கு வரை இந்தத் தொகை அதிகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ்.கே. வேதரத்தினம்] [2001 செப்டம்பர் 5

அதேபோல கடந்த 50 ஆண்டுகளில், 1996-க்கு முன்பு கடந்த 50 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளினுடைய எண்ணிக்கை 17,501. ஆனால், 1996-லிருந்து 2001 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 5 ஆண்டுகளிலே கட்டி முடிக்கப்பட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளினுடைய எண்ணிக்கை 27,104. அதுமட்டுமல்ல, அடிக்குழாய் பம்புகள் 1996-லிருந்து 2001 வரை கட்டி முடிக்கப்பட்டது 33,576. ஆனால் கடந்த 50 ஆண்டுகளில், 1996-க்கு முன்னாலே, கட்டி முடிக்கப்பட்டது 1 இலட்சத்து 44 ஆயிரத்து 102. அதுமட்டுமல்ல, குடியிருக்கின்ற வீடுகள் கட்டுகின்ற திட்டத்திலே 1991-லிருந்து 1996 வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 2 இலட்சத்து 4 ஆயிரத்து 187. அதிலும் 90 ஆயிரம் வீடுகள் கட்டப்படாமல் இருந்ததை 1996-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு கட்டி முடித்திருக்கிறார்கள். ஆனால், 1996 முதல் 2001 வரை கட்டப்பட்ட வீடுகள் 2 இலட்சத்து 69 ஆயிரத்து 802. ஆகவே, உள்ளாட்சி நிருவாகம் எல்லா வகையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது என்பதற்கு இது ஒரு நற்சான்று.

அதேபோல இங்கே நமது முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை, ஏற்கெனவே அறிவித்திருந்த திட்டங்களையெல்லாம் மீண்டும் அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி. ஏற்கெனவே, நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது, கிராமங்களிலே மனுக்களைப் பெறச் சென்றபோது, ஊராட்சி மன்றத் தலைவர்கள், அதுபோல ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் என்று உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் வைக்கின்ற கோரிக்கைகளை, அந்தப் பணிகளை அங்கேயே நாங்கள் செய்து தருகிறோம் என்று சொல்லி, பல பணிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். அந்த அளவுக்கு அவர்களுக்கு அதிகாரம் இருந்தது; வாய்ப்பு இருந்தது. ஆனால், எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரும், 1996-க்கு முன்பு இதுபோன்ற ஒரு வாக்குறுதி அளிக்கவோ, அதைச் செய்து கொடுக்கின்ற வாய்ப்போ நேரடியாக இல்லாமல் இருந்தது. அந்தக் குறையையும் எடுத்துச்சொன்னபோது தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு, முதன்முதலாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைச் செய்து தந்தார்கள்.

*முற்பகல் 10—40*

1997-98-லே ரூ.25 இலட்சமும், 1998-99-லே ரூ.35 இலட்சம், அதேபோல 1999-2000-லே ரூ.50 இலட்சமும், 2000-2001-லே ரூ.75 இலட்சமும்



2001 செப்டம்பர் 5] [திரு. எஸ்.கே. வேதரத்தினம்]

அதிகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். நீங்களும் அந்த நிதியைச் சற்றுக் கூடுதலாக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். ஆனால், ஏறி வருகின்ற விலைவாசியைப் பொறுத்த வரையில், இடுபொருட்களினுடைய நிலையைப் பொறுத்து, அதைக் கருத்தில்கொண்டு, அந்த தொகை அதிகப்படுத்திக் கொடுக்கப்படவில்லை. எனவே, ரூ.82 இலட்சமாக இருக்கின்ற அந்த நிதியை ஒரு கோடி ரூபாயாக அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலே—இப்போது நேரடியாக அறிவித்த திட்டங்கள் 2; ஒன்று, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; அதேபோல் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டம். இந்த இரண்டு பெரிய திட்டங்களிலும்-பெரிய கட்டுப்பாட்டை வைத்திருக்கிறீர்கள். நிறைய துறைகளுக்கு நிறைய திட்டங்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் செய்து தரப்படும் என்ற ஒரு நிலையை எற்படுத்தித் தந்திருக்கிறீர்கள். கடந்த காலத்திலே, அதிலிருந்து 3 பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஆனால், இப்போது கட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது என்ற நினைக்கிறேன். இங்கே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கே, அங்கே அதிகாரிகளே இருக்கின்ற காரணத்தினாலே, பின்னாலே அவர்களுக்கு மிகப் பெரிய பிரச்சினையாக அது இருக்கும். ஏனென்றால், அதிகாரிகளிடத்திலே இந்த அதிகாரம் மிகக் கூடுதலாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதைத் தாங்கள் பரிசீலனை செய்து, சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால், எந்தப் பணியையும் எடுத்துச் செய்யலாம் என்கின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, கிராமத்தினுடைய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்கின்ற அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், முதன்முதலாக கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு இப்போது 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறீர்கள். பொதுவாக, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இன்னொன்றையும் சொல்லியிருக்கிறீர்கள். இந்தத் திட்டம் புதிய கண்ணோட்டத்துடன் முனைப்போடு செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, கடந்த காலங்களிலே ஒதுக்கப்பட்டிருந்த நிதிதான் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட வேண்டும். இப்போது, இது ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு

ஒரு கிராமம் என்ற நிலையிலே இருக்கிறது. இதை ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிராமம் என்ற அடிப்படையிலே நீங்கள் அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களிடம் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, கிராமத் தன்னிறைவுத் திட்டம். இது ஏற்கெனவே கலைஞர் அவர்கள் ஆட்சியிலே, 'நமக்கு நாமே திட்டம்' என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட திட்டம். அதாவது, நம்முடைய தேவைகளை நம்முடைய பங்களிப்போடு, அரசினுடைய நிதியுதவியைப் பெற்று நாமே செய்து கொள்கின்ற ஓர் அருமையான திட்டம். அதற்குத்தான் பெயர் நமக்கு நாமே திட்டம். அந்தத் திட்டத்திற்கு இந்தப் பெயர் வைத்ததிலே என்ன தப்பு என்றே தெரியவில்லை; ஏனென்று தெரியவில்லை, கிராமத் தன்னிறைவுத் திட்டம் என்று மாற்றி இருக்கிறார்கள். ஏனென்றால், இந்தத் திட்டம் கிராமத்திற்கு மட்டும் பயன்படுகிற திட்டம் அல்ல. நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி போன்ற இடங்களிலேகூட இந்த நமக்கு நாமே திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வருகிற திட்டம் அல்ல. ஆகையினால், நீங்கள் அதை கிராமத் தன்னிறைவுத் திட்டம் என்று மாற்றியிருப்பதை தயவுசெய்து மாற்ற வேண்டும். இந்தப் பெயர் பொருத்தமாக இல்லை; ஏற்கெனவே இருந்த பெயர்தான் நன்றாக இருக்கிறது; என்ன காரணத்தினாலோ அதை மாற்றியிருந்தாலும்கூட, அதை நீங்கள் சரி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நமக்கு நாமே திட்டம் மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அதற்கு நீங்கள் 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிதியைக்கூட அதிகப்படுத்திக் கொடுக்கலாம். ஏனென்றால், நீங்கள் 3 ரூபாய் கொடுத்தால், பொது மக்கள் பங்குத் தொகையாக அரசாங்கத்திற்கு ஒரு ரூபாய் பணம் வருகிறது. ஆகையினால், அந்த நிதியைக்கூட கூடுதலாகக் கொடுத்தால், அது இன்னும் சிறப்பாக இருக்கும்.

அதேபோல், இன்னும் ஒரு சின்ன யோசனை. இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிதியைக் கொடுக்கிறீர்கள். அந்த நிதியிலே, சட்டமன்ற உறுப்பினர் உள்ளூரிலே இருக்கிற முக்கியமானவர்கள், பிரமுகர்களை எல்லாம் அணுகி, நாங்கள் நமக்கு நாமே திட்டம் என்பதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலேயிருந்து, 3 ரூபாய் கொடுத்தால், பொதுமக்கள் பங்குத் தொகையாக ஒரு ரூபாய் பெற்று, அதன்மூலம், 4 ரூபாய் சேர்த்து அந்தப் பணியைச் செய்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறதா என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்து, அதற்கு வழி இருந்தால் அதை ஏற்பாடு செய்ய வேண்டும்.





அதேபோல், ஊராட்சிகளிலே, ஊராட்சி மன்றத் தலைவர்களுடைய பொது நிதி, ஒன்றியங்களிலே உள்ள பொது நிதி போன்ற நிதிகளையும்கூடப் பெற்று, இந்த நமக்கு நாமே திட்டத்தை அந்த வகையிலே செயல்படுத்தினாலும் அரசுக்குக் கூடுதலான பணிகள் நடைபெறுவதற்கு உரிய வாய்ப்புகள் ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-45*

இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள். அதேபோல், ஊரக வளர்ச்சித் துறையிலே, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நபார்டு வங்கியின் மூலம் கடந்த ஆண்டிலிருந்து நிதி கொடுக்கிறார்கள். R.I.D.F. என்று சொல்கிறார்கள். அதேமாதிரி பிரதம மந்திரி கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சாலைப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல், மத்திய மாநில அரசுகளுடைய நிதியைக் கொண்டு ஏராளமான சாலைகளை இப்போது உள்ளாட்சித் துறையிலே போடுகிறார்கள்; அதேபோல பாராளுமன்ற உறுப்பினர் நிதி மூலம் போடுகிறார்கள்; சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் போடுகிறார்கள்; நமக்கு நாமே திட்டத்தின் மூலம் போடுகிறார்கள்; அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் பல்வேறு சாலைகள் இன்றைக்கு மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கிராமச் சாலைகள் திட்டத்திலே ஊரகப் பகுதியிலே, கிராமங்களிலே கூடுதலாக சாலைகள் நிறையப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கோரிக்கை என்ன என்றால் அந்தக் கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் சாலைகள் போடுகின்ற பணியைச் சற்று ஒத்திவைத்து — கிராமங்களில் எல்லாம், பொதுவாக பாசனப் பகுதியில் இருக்கின்ற கிராமங்களில் எல்லாம், ஏராளமான வாய்க்கால்கள் சாலைகளில் குறுக்கிடுகின்றன. வாய்க்கால்கள் மேலே பாலம் கட்டுவதற்கு ஓர் ஏற்பாடு செய்தால், நபார்டு திட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற கிராமச் சாலைத் திட்ட நிதியிலிருந்து பாலங்களுக்கு முன்னுரிமை அளித்துப் பயன்படுத்தினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கிராமப்புறச் சாலைகளில் எல்லாம் சாலை ஓரங்களிலே மின் கம்பங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதற்குரிய பணத்தைச் செலுத்தினால்கூட மின்சார வாரியம் அதைக் கண்டுகொள்வதே இல்லை. பலமுறை எடுத்துச் சொன்னாலும் அதைக் கேட்பதே இல்லை. அதனால் ஏகப்பட்ட சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல; சாலைகள்

அதனால் சீரழிக்கப்படுகின்றன. அதனால் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடு ரோட்டிலே மின் கம்பங்கள் இருக்கின்றன கிராமச் சாலைகளிலே; அதற்குப் பணத்தைக் கட்டினாலும் மாற்றி அமைக்க மாட்டேன் என்கிறார்கள். இதற்கு நீங்கள் சொல்லி, அதுசம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அந்தப் பணம் கட்டினால் உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டு இருக்கிறேன். ஊராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி இவை சம்பந்தப்பட்ட தெருவிளக்கு மின் கம்பங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்கின்ற கருத்துரு சம்பந்தப்பட்ட ஊராட்சி, மாநகராட்சி, பேரூராட்சியிடத்திலிருந்து வந்தால் உடனடியாக நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதிலே என்ன ஒரு பிரச்சினை என்றால் இதை Deposit Work–ஆகத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட பேரூராட்சியாக இருந்தாலும், ஊராட்சியாக இருந்தாலும், மாநகராட்சியாக இருந்தாலும் E.B.–க்கு பணம் செலுத்திய பிறகுதான் இந்தப் பணி நடைபெறும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் சேர்மனாக திரு. விஜயராகவன் இருந்த நேரத்தில் ஊராட்சிகளைப் பொறுத்த அளவிலே அப்படி deposit கட்ட வேண்டாம் என்று சொல்லி ஓர் உத்தரவு போடப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் வந்த வாரியத் தலைவர்கள் அதை மாற்றிக்கொண்டார்கள். இன்று பல பஞ்சாயத்துகளிலே ஊதியம் கொடுப்பதற்குக்கூட கஷ்டப்படுகிற நேரத்திலே அவர்கள் இப்படிப்பட்ட deposit–ஐக் கட்டுவதற்கு மறுக்கிறார்கள். அதன் காரணமாக பல கிராமங்களிலே நடு ரோட்டிலேயே கம்பங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. போடப்பட்ட சாலைகளைக்கூட பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே திரு. விஜயராகவன் காலத்திலே போடப்பட்ட அந்த உத்தரவை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய ஒரு நாளைக்கு மட்டும், யூனிட் மின்சாரம் கிட்டத்தட்ட 95 காசுகள் இழப்பிலே, மின்சாரத்தை நாங்கள் விநியோகம் செய்துகொண்டு வருகிறோம். ஒரு நாளைக்கு மட்டும் 9-1/2 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே, E.B.–ஐப் பொறுத்தவரையிலே பொருளாதாரச் சூழ்நிலை ஒரு நல்ல நிலையில் இருக்குமானால், நிச்சயமாக அவருடைய கருத்தைப் பரிசீலிக்கலாம். ஆனால், நிதி நிலைமை



ரொம்பவும் மோசமாக இருக்கின்ற சூழ்நிலையிலே, இந்தக் கருத்தை இப்பொழுது ஏற்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே நாம் மின்சாரத்தை நம்முடைய மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிக்குக் கொடுத்ததன் காரணமாக நம்முடைய L.A. Department–லிருந்து 77 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. அதையும் நாங்கள் வாங்குவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேதரத்தினம், இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** அவர்கள் இடையிலே மின்சார வாரிய மானியக் கோரிக்கைக்குப் போய்விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குத்தான் பதில் சொல்லியிருக்கிறார் அவர். நடு ரோட்டிலே இருக்கிறது என்று சொன்னதற்குத்தான் பதில் சொல்லியிருக்கிறார் அமைச்சர்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** குறுக்கீடுகள் நிறைய வந்துவிட்டன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் நலப் பணியாளர்கள் 1989 ஆம் ஆண்டு பணியில் அமர்த்தப்பட்டார்கள். இடையில் 1991-96 வரைக்கும் நீக்கினார்கள். மறுபடி 1996-லிருந்து 2001 வரை உள்ள காலகட்டத்தில் அந்த மக்கள் நலப் பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் இந்த ஆட்சியில் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் பெரிய பாதிப்பு. எங்கள் ஊரின் அருகில் இருக்கும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்த ஊரிலேகூட ஒரு மக்கள் நலப் பணியாளர் மருந்து குடித்து செத்துப்போய்விட்டார். அதுமட்டுமல்ல, அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் அந்தச் சம்பளம் எல்லாம் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய விஷயத்தில் நீங்கள் தனிக் கவனம் எடுத்துச் செய்ய வேண்டும்.

அடுத்து உள்ளாட்சித் தேர்தலை அறிவித்திருக்கிறீர்கள். நீங்கள் ஏற்கெனவே கவர்னர் உரையிலே சொல்லியிருந்தீர்கள். வாக்காளர் பட்டியலிலே விடுபட்டிருக்கிற பெயர்களை எல்லாம் சேர்த்து அதைச் சரி செய்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைச் சரி செய்துவிட்டுத் தேர்தலை நடத்தப் போகிறீர்களா அல்லது சரி செய்யாமல் தேர்தலை நடத்தப் போகிறீர்களா என்பதை நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ்.கே. வேதரத்தினம்] [2001 செப்டம்பர் 5

அதேபோல இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம். ஏற்கெனவே 27,000 ரூபாய் என்று இருந்தது. 1996-லே தி.மு.க. அரசு அதை 32,000-ஆக மாற்றிக் கொடுத்தது. அதனுடைய இடுபொருட்களின் விலை எல்லாம் இன்றைக்கு அதிகமாகி இருப்பதால் அதைக் கட்டுவதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனாலே அந்தத் திட்டத்திற்குரிய செலவை ஒரு வீட்டுக்கு 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் தரமான வீடுகளாகக் கட்ட முடியும். கட்டப்பட்ட பல வீடுகள் மோசமான நிலையில் உள்ளன என்பது இங்கே இருக்கின்ற அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

*முற்பகல் 10-50*

அதேபோல குடிநீர்ப் பிரச்சினை. எங்களுடைய வேதாரண்யம் தொகுதியிலே வேதாரண்யம்-கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று ஒரு பெரிய திட்டம் அறிவிக்கப்பட்டு அந்த வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், வேதாரண்யம் பேரூராட்சி, தலைஞாயிறு பேரூராட்சி, முத்துப்பேட்டை பேரூராட்சி, முத்துப்பேட்டை ஒன்றியம், திருத்துறைப்பூண்டி பேரூராட்சி, அதேபோல திருவாரூர் நகராட்சி என்று பல இடங்களுக்கு 133 கோடி ரூபாயில் - அந்தக் கிராமங்களுக்கு மட்டுமல்ல; வழியோரக் கிராமங்களுக்கும் பயன்படுகின்ற வகையிலே- அந்தத் திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். நமது மாண்புமிகு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்காகப் பெருமுயற்சி எடுத்து, அந்தப் பணிகள், கிட்டத்தட்ட 60 சதவீதம், நடைபெற்று முடிந்திருக்கின்றன. ஏற்கெனவே, இன்னொரு திட்டம் இருக்கிறது; அதிலே விடுபட்டு இருக்கின்ற தலைஞாயிறு பகுதியை, தலைஞாயிறு ஒன்றியத்தை இணைக்கின்ற வகையிலே, தலைஞாயிறு-கீழையூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று ஒரு திட்டம் முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு கருத்துரு இன்றைக்கு அந்தக் குடிநீர் வடிகால் வாரியத்திலே இருக்கிறது. அந்தத் திட்டத்தை நீங்கள் எடுத்துச் செயல்படுத்த வேண்டும். அந்த இரண்டு ஒன்றியங்களிலும் மிகப் பெரிய அளவில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அந்த ஓர் ஒன்றியம் அவருடைய தொகுதியிலே வருகிறது. அவருக்கு மிக நன்றாகத் தெரியும். அங்கே கஷ்டமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த ஒன்றியத்தையும் சேர்த்து, அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 5] [திரு. எஸ்.கே. வேதரத்தினம்]

அதேபோல, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள். ஏற்கெனவே அவை தொடங்கப்பட்டு இருந்தாலும்கூட 1996-லே இருந்து 2001 வரை ஏராளமான மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு வழிகளிலும் அவர்களுடைய விழிப்புணர்ச்சி அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையிலே நீங்கள் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை—கட்டட வசதி மற்றும் அந்தப் பொருட்களையெல்லாம் விற்கின்ற வசதி, இதுபோன்ற அடிப்படை வசதிகளை—செய்து தருவோம் என்று உறுதி கூறி இருக்கிறீர்கள். அதற்கு நான் உண்மையாகவே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல கிராமங்களிலே 10,800 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கும் பயிற்சி அளிப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

அதேபோல இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை. கடந்த ஆட்சியிலே தொலைநோக்குப் பார்வையோடு, போடுகின்ற சாலைகளெல்லாம் தார்ச் சாலைகளாக, சிமெண்ட் சாலைகளாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தெருக்களிலே போடுகின்ற சிமெண்ட் சாலைகள், பல்வேறுவிதத்திலே பயன்பாடு உள்ளதாக இருந்தன. குறிப்பாகச் சொல்லப்போனால், ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற அந்தத் தெருக்களிலே அவர்கள் அந்தத் தரைத் தளத்தை ஒரு திருமணக் கூடமாகவே மாற்றி இருந்தார்கள். அதேபோல, இரவிலே படுத்துத் தூங்குவதற்கு பயன்படுத்தினார்கள். தங்களுடைய உணவுப் பொருட்களை, விளை பொருட்களைக் காய வைப்பதற்குரிய தானியக் களமாகவே அதைப் பயன்படுத்தினார்கள். அது ஒரு சாலையாகவே இல்லை. பல்வேறு வகையிலே அது பயன்படக்கூடிய ஒரு தரமான சிமெண்ட் சாலை. அந்தச் சிமெண்ட் சாலை போடுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். நீங்கள் தயவுசெய்து அதை நிறுத்தி வைக்கக் கூடாது. ஏனென்றால், நீங்கள் கிராமங்களுக்குச் சென்று—

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் சாலை போடப்படுவது நிறுத்தப்படவில்லை. நிதி ஒதுக்கீடு அதிகப்படியாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால், அந்தத் திட்டத்தை விரும்புகின்றவர்கள் பயன்படுத்தலாம்; நிதி ஆதாரம் அதிகப்படியாக இருக்கின்ற பேரூராட்சி, நகராட்சிகள் வேண்டுமானால் பயன்படுத்தலாமே தவிர, கிராம ஊராட்சிகளுக்கு நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் சிமெண்ட் சாலை போடுவதைத் தற்காலிகமாக நாங்கள் தள்ளி வைத்திருக்கிறோமே தவிர, நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதும், நான் சொல்வதும் கிட்டத்தட்ட ஒன்றுதான். அதை நிறுத்தி வைத்துள்ளதாகத்தான் சொல்கிறார்கள். ஆகையினாலே, அந்த சிமெண்ட் சாலைகளை மீண்டும் போடுவதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஏனென்றால் மழைக் காலங்களிலே எல்லாம் அந்தக் கிராமங்களிலே அது ஒரு வரப்பிரசாதம்.

அதேபோல இன்னொரு முக்கியமான பிரச்சினை. தார்ச் சாலைகள் கொடுத்தார்கள். எல்லாக் கிராமங்களுக்கும் போட்டால் தார்ச் சாலை தான். சிவப்புக் கப்பி, இரண்டு லேயர் கருங்கல் ஜல்லி, அப்புறம் தார் ஜல்லி என்று போடுவார்கள். அப்படிப் போட்டால், இப்போது ஒரு கிராமத்திலே 15 கிலோ மீட்டர் தார்ச் சாலை இருக்கிறது என்றால் ஒரு தார்ச்சாலை போடுவதற்கு 1 கிலோ மீட்டருக்கு கிட்டத்தட்ட 12 இலட்சம் ரூபாய் வேண்டியிருக்கிறது. அப்படி, 15 கிலோ மீட்டர் போடுவது என்றால், 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் வேண்டியிருக்கிறது. ஒரு கிராம ஊராட்சியிலே சட்டமன்ற உறுப்பினர் நிதியாக இருந்தாலும், எந்த நிதியாக இருந்தாலும், ஐந்து, ஆறு ஆண்டுகள் ஆனால்தான் அதைச் செய்ய முடியும். இப்போது கிராமங்களிலே ஏராளமான மண் சாலைகள் இருக்கின்றன. அந்த மண் சாலைகளைப் போடுவதற்கு, இப்போது ஊராட்சித் தேர்தல்கள் நடக்கப் போவதால், பல ஊராட்சி மன்றத் தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏகப்பட்ட சாலைகளை எடுத்திருக்கிறார்கள். அதனாலே, அதுபோன்ற மண் சாலைகளை கார், ஆட்டோ, சைக்கிள் போன்ற வாகனங்கள் செல்லக்கூடிய அளவிற்கு சிவப்புக் கப்பிச் சாலைகளாக மாற்றித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே இந்த வேண்டுகோளை வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட நேரம் கொடுத்தாயிற்று.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன். அதேபோல, இங்கே திருவள்ளூர் மாவட்டத்தில் நமக்கு நாமே திட்டத்திலே கட்டப்பட்டதற்கு நிதி விடுவிக்கப்படாமல் இருந்தது. இதுவரைக்கும் நிருவாக அனுமதி அளிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 3-1/2 கோடி ரூபாய்க்கு உள்ள வேலைகள் அங்கே தேங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கவனித்து அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கெனவே 1991-லிருந்து 1996 வரை 1,16,000 ஊரகப் பணிகள் அனுமதிக்கப்பட்டும் வேலை முடியாமல் இருக்கிறது. அதை



இந்த ஆட்சி வந்த பிறகுதான் நிறைவேற்றித் தந்திருக்கிறது. அந்த வகையில் பார்த்தால், இப்போது தமிழகத்தில் கலைஞருடைய அரசு இந்த உள்ளாட்சித் துறையில் மிகப் பெரிய மாற்றத்தை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைமட்டும் சொல்லி, மீண்டும், உங்களிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, அருமையான திட்டம், நமக்கு நாமே திட்டம். அந்தப் பெயர் மாற்றத்தைப் பற்றி தயவுசெய்து நீங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்பதை மட்டும் சொல்லி, இந்த அருமையான வாய்ப்பு அளித்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன்.

***திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம் போன்ற மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இன்று மக்களால் போற்றப்பட்டு, நூறு நாட்களுக்கு மேல் ஒரு நல்லாட்சியை நடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்கு மக்கள் வழங்கியிருக்கிற மார்க் 100-க்கு 100 என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் பாதம் பணிந்து இந்தக் கோரிக்கையில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதலிலே நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

முதலிலே குடிநீர்ப் பிரச்சினை. குடிநீர் வழங்கலில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு எந்தெந்த வகையில் என்னென்ன சிறப்பான திட்டங்களை இன்று வழங்கியிருக்கிறது என்பதை இங்கே தெரிவிப்பது சாலச் சிறந்ததாகும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இப்போது சென்னையில் முக்கியமான பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் அனைவருமே கூறுகிறார்கள். ஆனால், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் போர்க்கால அடிப்படையில் எவ்வளவு விரைவாகக் குடிநீர்ப் பிரச்சினையை மக்களுக்குத் தீர்க்க முடியுமோ அந்த வகையில் பணியை சிரமேற்கொண்டு செய்து பல நல்ல திட்டங்களை வழங்கி, புதிய திட்டமான வீராணம் திட்டத்திற்கு 720 கோடி ரூபாய்க்கு ஆணை பிறப்பித்து மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள ஏரிகளை ஆழப்படுத்தி,

[திரு. தங்க. தமிழ்ச்செல்வன்] [2001 செப்டம்பர் 5

அணைகளைக் கட்டி, அதன் மூலமாகத் தண்ணீரைத் தேக்கி, குறிப்பாக நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலம் சென்னைக்குத் தண்ணீரைக் கொண்டுவந்து மேட்டூர் மற்றும் ஈரோட்டிலிருந்தும் இரயில்கள் மூலமாக சென்னைக்குக் குடிநீரைக் கொண்டுவந்து, இப்போது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சென்னை மக்கள் அறிவார்கள்.

நான் இங்கே கேட்பதெல்லாம், கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஐந்தாண்டு காலம் ஆட்சியில் இருந்தது. நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் மேயராக, முன்னாள் முதல்வர் மகன் மாண்புமிகு திரு. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றார்கள். ஆனால், ஐந்தாண்டு காலத்தில் சென்னைக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்களால் முடியவில்லை. காரணம், அவர்கள் அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்ததுகூட கிடையாது என்பதுதான் உண்மை. பாலம் கட்டினோம்; எதை எதையோ செய்தோம் என்று மக்களிடத்திலே கூறுகிறார்கள். ஆனால், தலையாயப் பிரச்சினை, சென்னையில் குடிநீர்ப் பிரச்சினை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நன்றாகத் தெரியும். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் இந்தப் பிரச்சினையைப் பற்றி அவர்கள் சிந்தித்ததாக வரலாறு கிடையாது. அந்தச் சிந்தனை இல்லாத காரணத்தால், இப்போது சென்னையில் குடிநீர்ப் பிரச்சினை தாண்டவமாடுகிறது. முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது தமிழகத்தில் 1989 முதல் 1991 வரை ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் காவலர்களுக்கு எந்தக் குடியிருப்பையும் கட்டவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. துரைமுருகன் எழுந்து, நாங்கள் இரண்டு ஆண்டுகள்தான் ஆட்சியில் இருந்தோம், அதனால் கட்டவில்லை என்று தனது தவறை ஒப்புக் கொண்டுவிட்டார். நான் கேட்கிறேன். இப்போது நாங்கள் வந்து 100 நாட்களுக்குள் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்றால் எப்படி முடிக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) நூறு நாட்களில் சென்னைக்கு வேண்டிய முக்கியப் பிரச்சினைகளைக் கவனித்து நிச்சயமாகத் தண்ணீரைக் கொண்டுவந்து வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். போர்க்கால நடவடிக்கை...(குறுக்கீடு)

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசவில்லை என்கிறார். பொதுவாகப் பேசுங்கள். பெயரைச் சொல்லாமல் பேசுங்கள்.



2001 செப்டம்பர் 5]

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** டாக்டர் புரட்சித் தலைவி அரசு நூறு நாட்களில் சென்னை நகருக்கு மட்டுமல்ல, ஏனைய குக்கிராமங்கள், நகராட்சிகள் போன்ற அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முற்போக்கான சிந்தனையில் இன்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் சென்னைக் குடிநீர்த் திட்டத்தை முழுவதுமாக திருப்திகரமாகச் செய்கின்ற வகையில் ஒரு முற்போக்கான சிந்தனையில் காவிரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டத்தையும் ஆய்வில் வைத்திருக்கிறார்கள் என்பதையும் பெருமையோடு இங்கே கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதேபோல, நீண்டகாலமாக இருக்கிற பிரச்சினையான, தருமபுரி மாவட்டக் குடிநீர்ப் பிரச்சினைபற்றி மிக நன்றாகத் தெரியும். அதை டாக்டர் புரட்சித் தலைவி அரசு அறிந்து ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.1,008 கோடி ஒதுக்கி ஒரு மாபெரும் திட்டத்தைக் கொண்டுவந்தது உண்மையிலேயே சாலச் சிறந்ததாகும்.

அதேபோல இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர்த் திட்டம்; சேடப்பட்டி, ஆண்டிப்பட்டி கூட்டுக்குடிநீர்த் திட்டம் போன்றவற்றிற்கு ரூ.100 கோடி ஒதுக்கி, எனது பகுதியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அனுமதி வழங்கிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல அவினாசி-அத்திக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டம்; பவானி ஆற்றின் உபரி நீரைக்கொண்டு அந்தப் பகுதியில் நீரைத் தேக்கி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு பரிசீலித்திருப்பதாகக் கூறுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் இந்தத் திட்டத்தைச் செயல்முறைப்படுத்தி அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வழங்கினால் உண்மையிலேயே நன்றாக இருக்கும் என்பதை இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, ஊரக வளர்ச்சியில் புதிய திட்டங்களை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு வழங்கியிருக்கிறது. இங்கே பேசிய மாற்றுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இரண்டு விதமான கருத்துகளைக் கூறுகிறார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் சன் தொலைக்காட்சியில் அளித்த ஒரு பேட்டியைக் கண்டேன். சட்டமன்ற நிகழ்ச்சியில் இந்தத் திராவிட

[திரு. தங்க. தமிழ்ச்செல்வன்] [2001 செப்டம்பர் 5

முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்ற ஒரு கேள்விக்கு அழகான ஒரு பதிலைச் சொன்னார். என்ன பதில் என்றால், இந்த அரசு எந்த ஒரு புதிய திட்டத்தையும் அறிவிக்கவில்லை என்ற கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். அதே திராவிட முன்னேறறக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், நாங்கள் போட்ட திட்டத்தைத்தான் நீங்கள் போடுகிறீர்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாங்கள் கேட்பதெல்லாம் நீங்கள் போட்ட திட்டத்தைப் போடுகிறோமா அல்லது நாங்கள் புதிய திட்டத்தைப் போடுகிறோமா என்பதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். ஆனால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புதிய திட்டத்தைத்தான் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்போது ஊரக வளர்ச்சியிலே வருகின்றபோது, கிராம நிர்வாக அலுவலர்களின் நிலைமை என்ன என்பது இங்கே இருக்கிற அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். அந்தக் கிராமத்திலே பள்ளிச் சான்றிதழ் முதற்கொண்டு அனைத்தையும் பெற அந்தக் கிராம நிர்வாக அதிகாரியைத்தான் போய்ப் பார்க்கிறார்கள். ஆனால், அவர்களை அந்த ஊரிலே சென்று பார்ப்பது கடினம். காரணம், அவர்களுக்கு என்று ஒரு அலுவலகம் கிடையாது. ஒரு டீக்கடையில்தான் அவர்களைப் பார்க்க வேண்டும். அந்த ஓர் அவலமான நிலைதான் இதுவரை இருந்து வந்தது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதை ஆராய்ந்து, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடம் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்தமைக்கு முதற்கண் நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இப்போது இந்தியாவின் நிலைமை உங்களுக்கு நன்றாகத் தெரியும். கிராமங்களினுடைய வளர்ச்சியைப் பொறுத்துத்தான் இந்தியாவினுடைய வளர்ச்சி இருக்கிறது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை 12,619 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. ஆனால், பெண்களுக்குக் கழிப்பிட வசதி என்று பார்க்கும்போது எந்தக் கிராமத்திலும் அது இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. எத்தனையோ ஆட்சிகள் மாறியிருக்கின்றன. ஆனால், யாரும் அதைப் பற்றி சிந்திக்கவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை ஆராய்ந்து 12,619 கிராம ஊராட்சிகளிலும் மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம் நிறுவப்பட உள்ளது. எப்படி என்றால் கழிப்பறை வசதி, குளிப்பதற்கான தொட்டிகள், துவைப்பதற்கு இட வசதி, மின்சார வசதி, தண்ணீர் வசதி போன்ற அனைத்து வசதிகளுடன் 12,619 கிராம ஊராட்சிகளிலும்



2001 செப்டம்பர் 5] [திரு. தங்க. தமிழ்ச்செல்வன்]

ஒருங்கிணைந்த துப்புரவு அலுவலகம் நிறுவப்பட வேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புதுமையான திட்டம், முற்போக்கான திட்டம்.

அதேபோல, கிராமச் சந்தை மேம்பாட்டுத் திட்டம். நாம் சந்தையைப் பார்த்திருப்போம். உண்மையிலே ஒவ்வொரு ஊரிலும் சந்தைக்குப் போனால், அந்தச் சந்தையைப் பார்த்தால், குட்டிச் சுவராகத் தான் கிடக்கிறது. அங்கே பாதை இருக்காது; சுற்றுச் சுவர் இருக்காது; கழிப்பிட வசதி இருக்காது; கரண்ட் வசதி இருக்காது. அப்படிப்பட்ட அவலமான நிலையில்தான் கடந்த 100 ஆண்டு காலமாக கிராமச் சந்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றை யாரும் கவனித்து மேம்படுத்த வேண்டும் என்று சிந்திக்கவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கிராமச் சந்தையை மேம்படுத்த வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டுவந்து நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் இங்கே கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-05*

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் களுக்கான தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதியை உயர்த்தி இருக்கிறார்கள். இங்கே பேசிய மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்கள் தலைவர்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால், அவர்களுடைய தலைவர், தன்னுடைய பிறந்தநாளை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக, இந்தத் திட்டத்திற்கு ரூபாய் 77 இலட்சமாக உயர்த்தினார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த உள்நோக்கமும் இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காக நடப்பு ஆண்டில் இதனை 82 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனிப்பட்ட முறையில் அவருக்கான விளம்பரமாக அது இல்லை என்பதை இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சிறு பாசனக் குளங்களைப் புனரமைத்தல். இந்தக் குளங்களைப்பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள். மொத்தம் தமிழ்நாட்டில் 41,915 சிறு பாசனக் குளங்கள் இருக்கின்றன. இவற்றில் ஊராட்சி

ஒன்றியத்தைச் சார்ந்த குளங்கள் 23,156. பொதுப் பணித் துறையைச்
சார்ந்தவை 8,903. முன்னாள் ஜமீன் குளங்கள் 9,856. இப்படிக் குளங்கள்,
குட்டைகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. மாற்றுக் கட்சிக்காரர்களிடம்
நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டு காலத்தில்,
குளங்களைத் தூர் வாரினோம், குட்டைகளைத் தூர் வாரினோம்,
ஆழப்படுத்தினோம் என்று கூறுகிறீர்கள். உண்மையிலே, மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், கடந்த
ஆட்சியில் உண்மையிலே குளங்கள் தூர் வாரப்படவில்லை, கரைகள்
மட்டும்தான் போடப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் கண்டுபிடித்து
ஆராய வேண்டும். இப்போது வெற்றி பெற்று நாங்கள் சட்டமன்ற
உறுப்பினர்களாகத் தொகுதிகளுக்குச் செல்கிறபோது, வாருங்கள், எங்களது
குளங்களைப் பாருங்கள், குளத்தை எப்படித் தூர் வாரியிருக்கிறார்கள்
என்று பொது மக்கள் எங்களை அழைத்துக் கொண்டுபோய்க்
காண்பிக்கிறபோது பார்க்கிறோம். அந்தக் குளங்கள் வெட்டப்படவில்லை;
ஆனால், பில் போட்டு பணத்தை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி) ஆனால், கரையை மட்டும் போட்டிருக்கிறார்கள். இதைச்
சொல்வதற்குக் காரணம், மாறுபட்ட கருத்துக்காக நான் சொல்லவில்லை.
மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு
முற்போக்கான சிந்தனையில் செயல்படுகிறார்கள்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மணி அவர்கள் பேசினார்கள்,
இப்போது மக்கள் தொகை வளர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால், நீர்வளம்
வளரவில்லை என்று. நல்ல கருத்துத்தான். ஆனால், மாண்புமிகு டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதை நியாயப்படுத்துகின்ற
வகையில் ஒரு முற்போக்கான சிந்தனையில் நிலத்தடி நீரைச் சேமிக்க
வேண்டும் என்பதற்காக குளங்களை, குட்டைகளைத் தூர் வார வேண்டும்
என்றவொரு ஒப்பற்ற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.
தமிழகத்திலே உள்ள அனைத்துக் குளங்களும் குட்டைகளும் தூர்
வாரப்பட வேண்டும் என்ற திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். நான்
இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்வதெல்லாம்—பொதுப் பணித் துறை அமைச்சரும் இருக்கிறார்—
இப்போது குளங்கள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன, நிதிகளை
ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே நீங்கள் தனியாகக் கவனம் செலுத்தி
அந்தக் குளங்களில் உண்மையாகவே எத்தனை அடி ஆழம் மண்ணை
வெட்டுகிறார்கள், எத்தனை அடிக்குக் கரைகளை உயர்த்துகிறார்கள்
என்பதை அதிகாரிகளை வைத்து முறையாகச் செயல்படுத்தினால்தான்
மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டம்





நூற்றுக்கு நூறு வெற்றி பெறும் என்பதை நான் கூறிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தெரு விளக்குகள். மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் கிராமங்கள் அதிகமாக
இருக்கின்றன. கிராமங்களில் சோடியம் ஆவி விளக்குகளைக் கடந்த
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொண்டுவந்தது. நான் பெருமையாகச்
சொல்கிறேன், கொண்டு வந்தார்கள். நல்ல திட்டம்தான்; மக்களுக்கு
வெளிச்சம் வேண்டும். ஆனால், அந்த சோடியம் ஆவி விளக்குகளைப்
போட்டதன் விளைவை இப்போது சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஒரு
சோடியம் ஆவி விளக்கிற்கு ரூ.7,000 செலவாகிறது. அதனுடைய கரண்ட்
பில் ஆயிரத்திற்குச் செல்கிறது. கிராமங்களில் பணப் பற்றாக்குறை
இருக்கிறது. இப்போது அதிகப்படியான கிராமங்களில், கிராமப்
பஞ்சாயத்தை நடத்த முடியாத அளவுக்கு பண நெருக்கடி இருக்கிறது.
ஆனால், அவர்கள் சோடியம் ஆவி விளக்குகளைப் போட்டுவிட்டு
வந்துவிட்டார்கள். அது fuse போனால்கூட ஆயிரம் ரூபாய்க்கு பல்ப்
வாங்க வேண்டும்; வாங்க முடியவில்லை. அந்தத் திட்டம் failure-ஆகி
நிற்கிறது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் அதை ஆராய்ந்து கிராமப் பகுதி மக்கள்மீது அதிகச்
சுமை ஏறக்கூடாது, இந்தத் திட்டத்தினால் கிராம மக்களுக்குப் பயனில்லை
என்பதை அறிந்து இந்த சோடியம் ஆவி விளக்குகளை அகற்றிவிட்டு,
குழல் விளக்குகளை, அதாவது டியூப் விளக்குகளை அமைத்திட
மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
ஆணையிட்டிருக்கிறார்கள். இதனுடைய நோக்கம் என்ன? ஒரு tube
light set—ஐ 500 ரூபாய்க்கு வாங்கலாம். ஆனால், 7,000 ரூபாய்க்கு
சோடியம் ஆவி விளக்குகளை வாங்குகிறோம். 7,000 ரூபாய்க்கு எத்தனை
tube lights வாங்கலாம்? அனைத்துக் கிராமங்களும் தன்னிறைவு பெறும்
என்பதை இங்கே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 11-10*

புரட்சித் தலைவர் அறிவித்த எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு
மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 155
கோடி ரூபாய் நிதி ஒதுக்கி சிறப்புச் செய்திருக்கிறார்கள் என்பதையும்
இங்கே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன். பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி இங்கே

இருக்கிற அனைவருக்கும் நன்றாகத் தெரிந்த தொகுதி. இந்தத் தொகுதியினுடைய நிலையை முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் தொகுதி மூன்று ஒன்றியங்களைச் சேர்ந்தது. பெரியகுளம் ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், கடமலைமயிலை ஒன்றியம். ஆக, 3 ஒன்றியங்களைச் சேர்ந்த தொகுதி ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி.

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு அருகில்தான் முல்லைப் பெரியாறு ஓடுகிறது. அதற்கு அருகில்தான் வைகை அணை இருக்கிறது. ஆனால், முல்லைப் பெரியாறு தண்ணீரையும், வைகை அணைத் தண்ணீரையும் ஆண்டிப்பட்டி மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் மேட்டுப் பகுதியில் இருக்கிறார்கள். ஆண்டிப்பட்டி ஒன்றியம், பெரியகுளம் ஒன்றியம் ஓரளவுக்குத் தரைப்பகுதி. ஆனால், கடமலைமயிலை ஒன்றியத்தில் மலை சூழ்ந்த இடங்களில் 130 கிராமங்களில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு சட்டசபை தேர்தல் முடிந்து, சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு, நன்றி தெரிவிப்பதற்காக 10 நாட்கள் கழித்துப் போகிறேன். ஜீப்பில் ஏறி, மாண்புமிகு வாக்காளப் பெருமக்களே, எனக்கு ஓட்டுப் போட்டதற்கு நன்றி என்று பேசிக் கொண்டிருக்கிறேன். அப்போது ஒருவர் அங்கு வந்தார். 'ஏய், இறங்கப்பா முதலில்' என்றார். நான் என்னப்பா என்றேன். 'இறங்கப்பா முதலிலே' என்றார். சரி என்று இறங்கினேன். அவர் என்னை ரோட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார். இந்தத் தெருவைப் பார்த்தாயா என்றார். என்ன வேண்டும் என்றேன். இங்கு பாரய்யா, தெருவிலேதான் சாக்கடை ஓடுகிறது பார்த்தாயா என்றார். ஆமாம் அண்ணே, என்ன செய்ய வேண்டும் என்றேன். சாக்கடை கட்ட வேண்டாமா என்றார். நீங்கள் சொல்வது நல்ல கோரிக்கைதான் அண்ணே; நீங்கள் ஓட்டுப் போட்டு எத்தனை நாள் ஆயிற்று என்றேன். 10 நாட்கள் ஆயிற்று என்றார். என்ன அண்ணே, இப்போதுதான் சென்னைக்குப் போய் கையெழுத்துப் போட்டுவிட்டு, இங்கே வந்திருக்கிறேன். இப்போதே நீங்கள் ரோட்டைப் போடு, சாக்கடையைக் கட்டு என்றால் எப்படி அண்ணே என்றேன். அம்மாவுக்கு ஓட்டுப் போட்டோம் அல்லவா என்றார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலிலே மக்கள் எங்களுக்கு வாக்களித்த பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவிக்குத்தான் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மூஞ்சியைப் பார்த்து யாரும் ஓட்டுப் போடவில்லை. தங்க. தமிழ்ச்செல்வன் வேட்பாளர். ஆனால், பொது மக்கள் வாக்களித்தது மாண்புமிகு அம்மாவுக்குத்தான்.



எந்த சாக்கடை வசதியும் முற்றிலுமாக நிறைவேற்றப்படவில்லை. கிராமங்களுடைய அவல நிலை இதுதான். அதையும் நான் கேட்டேன், ஏனப்பா, 5 வருடங்களாக திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் இங்கு இருந்தாரே, ஏனப்பா இந்தச் சாக்கடை விஷயத்தைப்பற்றி நீங்கள் பேசவில்லை என்று. அதனால்தான் நாங்கள் ஓட்டுப் போடவில்லை. அதுதான் அம்மாவுக்கு ஓட்டுப் போட்டிருக்கிறோம் அல்லவா, நீ செய்யப்பா என்றார். நிச்சயமாகச் செய்கிறேனப்பா என்று சொன்னேன். நான் போய் 10 நாட்கள்தான் ஆகின்றன. இரண்டு தடவை சென்னைக்குப் போய் வந்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட துறைக்குச் சொல்லி, அமைச்சரிடம் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களிடம் சொல்லி, பணத்தை ஒதுக்கி, அதற்குப் பிறகுதானப்பா இதெல்லாம் வரும் என்று சொல்லி அவரைச் சமாதானப்படுத்திவிட்டு வந்திருக்கிறேன். இதை நான் இங்கே கூறுவதற்குக் காரணம், அந்தப் பகுதியில் மலைப்பாங்கான இடங்களில் முற்றிலுமாகச் சாக்கடை வசதியில்லாமல் மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மலைப்பாங்கான இடத்திற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சற்று அதிகக் கவனம் செலுத்தி, ஒரு சிறப்புத் திட்டத்தை அந்தப் பகுதிக்கு வழங்கி, சாக்கடை வசதியை முழுமையாக அமைத்துக் கொடுத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க நான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமங்கள், நகரங்கள் அனைத்திலும் வாழ்கின்ற, ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் மாநிலம் முழுவதும் வாழ்கின்ற 6 கோடி மக்களுக்கு மேலானவர்களுடைய அடிப்படை வசதிகளையும் தேவைகளையும் நேரடியாகக் கவனித்து நிறைவேற்றித் தருகின்ற பொறுப்பு இந்தத் துறைகளுக்கு உண்டு. ஆகவே, இந்தத் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிற ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நான் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)*

*முற்பகல் 11-15*

தமிழகத்தில் 12,619 ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 29 மாவட்டப் பஞ்சாயத்துகள், 611 பேரூராட்சிகள், 102 நகராட்சிகள், 6 மாநகராட்சிகள் கடந்த ஐந்தாண்டுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை வைத்து இயங்கிக்கொண்டிருக்கின்றன. அமைப்புகளுடைய நிர்வாகக் காலம் முடிந்து அடுத்த மாதம் தேர்தல்கள் நடைபெறும் என்கிற அறிவிப்பை இந்த அரசாங்கம் வெளியிட்டிருக்கின்றது. தேர்தல் வருமோ, வராதோ, நடத்துவார்களோ, இல்லையோ என்கின்ற ஒரு விவாதத்தை ஒருசாரார் சொல்லிக் கொண்டிருந்த நேரத்திலே, தேர்தல் சட்டரீதியாக நடைபெறும் என்று சொல்லி, இந்த அரசு தன்னுடைய ஜனநாயகக் கடமையினை நிறைவேற்றித் தருகின்ற அளவிலே முன்வந்திருக்கிறது. இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டுவதோடு, ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இந்தத் தேர்தலின் மூலம் மதச் சார்பற்ற அணி மீண்டும் மகத்தான வெற்றியைப் பெறும் என்பதை உறுதிப்படுத்திச் சொல்வதோடு (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் ஆதரவும் செல்வாக்கும் முதலமைச்சருக்கு இருக்கிறது என்பதை மீண்டும் நிலைநிறுத்துகிற அளவிலே இந்தத் தேர்தல் முடிவுகள் வரும்(மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

தேர்தல்களை நடத்திவிட்டால் மட்டும் போதாது. தேர்தல் நடந்த பின்னாலே அமைக்கப் பெறுகின்ற அத்தனை அமைப்புகளுக்கும் நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. நிதிநிலை அறிக்கையுடன் வெள்ளை அறிக்கை இங்கே கொடுக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கையிலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கின்ற நிதி அவல நிலைகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு பகிர்ந்தளிக்கும் நிதியாதாரங்களின் பெரும் பகுதி சம்பளச் செலவுகளுக்கே பயன்படுத்தப்படுகிறது என்பது கண்கூடு. உள்ளாட்சி நிறுவனங்கள் மூலமாக மக்களாட்சி முறை பரவலாக்கப்பட வேண்டும் என்ற உயரிய குறிக்கோளை எய்த வேண்டுமாயின், உள்ளாட்சி மன்றங்கள் வரிச் சீரமைப்பு, வரி வசூலை மேம்படுத்துதல், அவற்றால் ஆற்றப்படுகின்ற சேவைகளுக்கான பயனீட்டாளர் கட்டணங்களைத் திருத்தியமைத்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலமாகத் தங்களது சொந்த நிதியாதாரங்களைப் பெருக்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவசியமாகிறது என்று குறிப்பிட்டுவிட்டால்



மட்டும் போதுமானது என்று நான் கருதவில்லை. இதற்கான வழிவகைகளைக் கண்டு எல்லா உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரு guideline கொடுக்கிற அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதியாதாரங்கள் சரியாக இல்லாத காரணத்தினாலேதான் இப்போது சின்ன சின்ன விஷயங்களைக்கூட சட்டமன்ற உறுப்பினர்களாலே செய்ய முடியவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியிலேயே ஒரு குடிசைப் பகுதியிலே ஒரு கழிப்பறை கட்ட வேண்டுமென்று போய்க் கேட்டபோது, 'பணம் இல்லை, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்து கொடுங்கள், செய்கிறோம்' என்கிறார்கள். இன்னொரு இடத்திலே சாக்கடை வசதி செய்ய வேண்டுமென்று சொன்னால், 'நிதி இல்லை, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்து கொடுங்கள்' என்று அதிகாரிகள் பொதுவாகச் சொல்கிற அளவிற்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதிக்கு அதிகமான டிமாண்ட் இப்போது வந்திருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆகவே, மிக அன்போடு கேட்டுக்கொள்வேன், ஏற்கெனவே சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுடைய நிதியை ரூபாய் 82 இலட்சமாக உயர்த்திக் கொடுத்திருந்தாலும்கூட, அதை எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் சொல்லியதைப்போல ஒரு கோடி ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி கொடுப்பதோடு மட்டுமல்லாமல், இன்னொன்றும் நான் சொல்வேன், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் வேதரத்தினம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்த நிதியைக் கொடுத்துவிட்டு அதற்குச் சில கட்டுப்பாடுகளை விதிக்கின்ற அளவுக்கு அரசு இருக்கக்கூடாது என்பதை மிகுந்த பணிவோடு நான் சொல்லிக் கொள்வேன். இந்த நிதி என்பது, சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் நேரடியாகப் பழகி, அவர்களுடைய தேவைகளை அறிந்து செய்ய வேண்டிய ஒரு பணிக்காக இருக்கின்ற காரணத்தினாலே அந்தக் கட்டுப்பாடுகள் இல்லாமலேயே செய்கின்ற அளவிற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

கிராமப்புறங்களைப் பொறுத்தமட்டிலே இப்போது அரசு சரியான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது; பொறுப்பான நடவடிக்கைகளை

எடுத்திருக்கிறது. மகளிர் நலனுக்காகச் செய்திருக்கிற சகல வசதிகளுடன்கூடிய கழிப்பறைகள், குளியல் அறைகளைக் கட்டும் திட்டத்தை வரவேற்கின்றேன்.

அதைப்போல கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு அலுவலகம் கட்டித் தருவதும், கிராமச் சந்தைகளுடைய அபிவிருத்திக்காகக் காரியங்களைச் செய்வதும் உண்மையிலேயே கிராமத்தினுடைய முகப்பையே மாற்றுகிற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.

அடுத்து, முக்கியமான குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே, கிராமங்களுக்குத் தனியாக நடவடிக்கை எடுத்திருந்தாலும்கூட சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டிலே நான் சில கருத்துகளை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். சென்னை நகரத்தில் குடிநீர்ப் பிரச்சினை என்பது நாடு விடுதலை அடைந்து 54 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டாலும்கூட, சரியான, ஒழுங்கான திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் அரசு தவித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். கடந்த 54 வருடங்களிலே பல திட்டங்கள் பற்றிப் பேசப்படுகிறது. வீராணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். 30 வருடங்களுக்கு மேலாகப் பேசிக் கொண்டேயிருக்கிறோம். வீராணம் திட்டத்திற்காகக் காவிரித் தாயின் ஒரு பொம்மையை சைதாப்பேட்டையிலே வைத்து ஒரு விழா நடத்தினோம். அதற்காக சிமென்ட் குழாய்கள் செய்தோம். அவை எல்லாம் இப்போது நினைவுச் சின்னங்களாக இருந்து கொண்டிருக்கின்றன.

கிருஷ்ணா தண்ணீரைப் பற்றி பல வருடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். கிருஷ்ணா தண்ணீர் வருமா, வராதா என்பதை யாரும் சொல்லமுடியாத நிலையிலே இருக்கிறோம். இப்போது இந்தத் துறையினுடைய குடிநீர் வழங்கு திட்டங்களைப் பற்றிய விவரங்களிலேகூட கிருஷ்ணா தண்ணீரைப் பற்றிய எந்த விளக்கமும் சொல்லப்படாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது அதற்கு விளக்கம் கொடுக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணா வந்துவிட்டது என்றும், வரவில்லை என்றும் ஒரு சூடான வாதம் இங்கே நடந்தது. கால்வாய் வெட்டினார்களா, இல்லையா என்பதைக்கூடச் சரியாகத் தெரிந்துகொள்ளமுடியாமலே இங்கே ஒரு விளக்கம் சொல்லப்பட்டிருந்தது. இந்த நிலையிலே குடிநீருக்காகப் பல திட்டங்கள் இங்கே வரவு-செலவுத்திட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன.



சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1, குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-2 என்று சொல்லி பல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வளவு திட்டங்கள் சொல்லியதை அரசாங்கத்தின் எச்சரிக்கையான நடவடிக்கை என்று நான் வரவேற்கின்றேன். அதேநேரத்திலே கிருஷ்ணா தண்ணீர் வருமா, இல்லையா, எப்போது வரும்? அதற்குச் செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பது தெளிவாக, வெளிப்படையாக இங்கே சொல்லப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 50 வருடங்களிலே சென்னை நகருக்காகச் செய்யப்பட்ட அதிகப்படியான வேலை என்பது, ரெட் ஹில்ஸ் ஏரி, சோழவரம் ஏரி, பூண்டி ஏரி ஆகிய நீர்த் தேக்கங்களுக்குக் கரையை உயர்த்தியதைத் தவிர வேறு எந்த ஒரு திட்டமும் இங்கே நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

திட்டம் இல்லாத நிலையைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டு சோவியத் நாட்டிற்கு மாநகராட்சிக் குழுவோடு சேர்ந்து செல்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. அங்கே மாஸ்கோ நகரத்திலே தண்ணீர் விநியோகம் எப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பற்றி நாங்கள் அங்கே ஆய்வு நடத்தினோம். அந்த 1967 ஆம் ஆண்டிலே தனி நபர் ஒருவருக்கு 50 லிட்டர் தண்ணீர் கொடுப்பதற்கான நடைமுறை இருந்தது. 1980 ஆம் ஆண்டு வருகின்றபோது 80 லிட்டர் தண்ணீர் கொடுப்பதாக ஒரு திட்டத்தை வைத்திருந்தார்கள். 2000 ஆம் ஆண்டு வருகின்றபோது 100 லிட்டர் தண்ணீர் ஒரு தனி நபருக்குக் கொடுப்பதற்கான திட்டத்தை அப்போதே அவர்கள் வைத்திருந்தார்கள். அதாவது 1967 ஆம் ஆண்டிலேயே, 33 வருடங்களுக்கு முன்னாலேயே வளருகின்ற மக்கள் தொகையையும் கணக்கில் வைத்துக்கொண்டு தொலைநோக்கோடு திட்டத்தை நிறைவேற்றுகின்ற நிலைமை அங்கே இருந்தது. இங்கே 54 வருடங்கள் ஆகியும் இப்போது எந்த ஒரு திட்டமும் நம்மிடம் கைவசமில்லாமல், ஆய்வு செய்கிறோம், பரிசீலனை செய்கிறோம் என்று வார்த்தைகளிலேயே இருந்து கொண்டிருக்கிறோமேயொழிய, சென்னை நகருக்கு எப்போதுதான் நிரந்தரமான தண்ணீரைக் கொண்டுவரப் போகிறீர்கள் என்பதை இங்கே தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என் கட்சியின் சார்பில் நான் ஒருவன்தான் பேசுகிறேன். ஆகவே, கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** எல்லாக் கட்சியிலும், ஒருவருக்குத்தான் பேசுவதற்கு அனுமதி கொடுக்கிறார்கள்; பேசுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** அடுத்து, என்னுடைய தொகுதி உள்ளடங்கிய சென்னை மாநகராட்சி நிர்வாகத்தைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை மாநகராட்சியிலே ஏறக்குறைய 14 வருட காலம், 1973 ஆம் ஆண்டு வரையிலே நான் உறுப்பினராக இருந்திருக்கிறேன்; அப்போதும் இப்போதும் பார்க்கிறபோது பல பெரிய மாற்றங்களை எல்லாம் நான் பார்க்கிறேன். அதிகாரிகள், உயர்மட்ட அதிகாரிகளுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. தேவைக்கு அதிகமாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்போது நாங்கள் இருந்த காலத்திலே குடிநீர் இலாகாவும், கழிவுநீர் அகற்றும் இலாகாவும் சென்னை மாநகராட்சியோடு சேர்ந்திருந்தன. இந்த இரண்டு இலாகாகளும் மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்ட, அதிகச் சுமையுள்ள இலாகாகள். அந்த இரண்டு இலாகாகளும் தனி வாரியமாக ஆக்கப்பட்ட பின்னாலே, மாநகராட்சிக்கு இருக்கின்ற சுமை அந்த அளவிற்கு இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், ஒன்றாக இருந்த நிலையைக்காட்டிலும் கூடுதலான எண்ணிக்கையிலே அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது ஒரு விஷயம். அதிகாரிகளை நியமித்திருக்கிறார்களேயொழிய அடித்தளத்திலே தொழிலாளிகள் இன்றையவரையிலே தேவையான அளவிற்கு நியமனம் செய்யவில்லை. அங்கே துப்புரவு செய்வதற்கு ஆட்கள் போதுமான அளவிலே இல்லை. சாக்கடை அடைப்புகளை எடுப்பதற்குப் போதுமான அளவிலே ஆட்கள் இல்லை. மழைநீர் வடிகால்களைச் சுத்தப்படுத்துவதற்கு ஆட்கள் இல்லை. குழி, பள்ளங்களையெல்லாம் சாலையிலே சரிசெய்வதற்கு ஆட்கள் இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையையெல்லாம் மாற்ற போதுமான அளவிற்குத் தொழிலாளிகளை நியமனம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் கடந்த 5 வருடங்களாக ஒரு புதிய கோஷம் கொடுக்கப்பட்டு வருகின்றது. சிங்காரச் சென்னை என்கிற கோஷம் இங்கே கொடுக்கப்பட்டு வருகின்றது. அதை வெறும் கோஷமாக நான் நினைக்கவில்லை. அதை ஒரு இலட்சிய முழக்கமாகவே நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், அந்த இலட்சியத்தை நிறைவேற்றுகின்ற அளவுக்கு என்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்பது நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு விஷயம். இங்கே சென்னையிலே



வெளிப்படையாக நடந்திருப்பதெல்லாம், பாலங்களை 100 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவு செய்து கட்டியிருக்கிறார்கள். பாலங்கள் கட்டிவிட்டதாலேயே சென்னை நகரம் சிங்காரச் சென்னையாக மாறிவிட முடியுமா? அதிலேயும்கூட, ஒரு பாலம் பெரம்பூரிலே இருக்கின்ற பாலம், இப்போதும் சர்ச்சைக்குரியதாக இருக்கிறதேயொழிய, அது எப்போது முடியப் போகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

ஒன்றை நான் தெளிவோடு சொல்லிக்கொள்வேன். சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டிலே இப்போது 10-3/4 இலட்சம் குடிசைவாழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்று மக்கள்தொகை கணக்கீட்டாளர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அதாவது 25.6 சதவீதம் மக்கள் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். 100 கோடி ரூபாயை பாலத்திற்குக் கொட்டியவர்கள், இங்கே இந்த குடிசைப் பகுதிகளுக்குப் பணத்தைச் செலவிட்டிருக்க வேண்டாமா? அங்கே சாக்கடை வசதி கிடையாது; அங்கே ரோடு வசதி கிடையாது. அங்கே இருக்கின்றவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் அவல நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்காக ஏதேனும் செய்திருக்க வேண்டாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, இதை நான் சுட்டிக்காட்டுவதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கின்றது. இந்த குடிசைப்பகுதிகளுக்கென்றே, அங்கே வசதிகளைப் பெருக்கிக் கொடுப்பதற்காகவே ஒரு crash programme அரசாங்கம் வெளியிட்டு, அதனை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகச் செயல்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இங்கே நான் கோரிக்கை வைக்கின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) வாக்காளர் பட்டியலில் விடுபட்ட பெயர்களைச் சேர்த்தபின் உள்ளாட்சித் தேர்தலை நடத்துதல்—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நடந்த பொதுத் தேர்தலில் ஆளுநர் உரையிலே இந்த அரசு ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒரு கோடி வாக்காளர்கள்...

[2001 செப்டம்பர் 5

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இல்லை. முன்பே கேட்டுவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, முன்பே கேட்டுவிட்டீர்கள். ஆரம்பத்திலேயே கேட்டீர்கள், பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை. இப்போது பழைய நண்பர் என்று நீங்கள் கேட்கிறீர்கள், உட்காருங்கள். நான் அனுமதிக்கமாட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன். (குறுக்கீடு) இல்லை, பேரவைத் தலைவர் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. நான் மாற்றுத் தலைவர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி என்னைக் கேட்பது முறையல்ல.

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*முற்பகல் 11-30*

***திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாயங்களின் பளிங்கு மண்டபமாம் இம்மாமன்றத்தில் ஆயிரம் சோதனைகள் வந்தாலும் உடைத்துத் தூள் தூளாக்கிவிட்டு வேங்கடம் முதல் குமரி வரை வாழ்கின்ற மக்களின் மாபெரும் ஆதரவைப் பெற்று அதிகாரம், ஆணவம், அடக்குமுறை இவற்றையெல்லாம் தீயிட்டுப் பொசுக்கிவிட்டு, அரசியல் வானில் ஒரு துருவ நட்சத்திரமாய், தமிழக மக்களின் தன்னிகரில்லா ஒளிச்சுடராய், விவசாயிகளின் வேதனை தீர்த்திடும் விடிவெள்ளியாய், ஏழைகளுக்கு வாழ்வு தரும் அமுதசுரபியாய், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் பாதுகாப்பு அரணாய், மாதர் குலம் போற்றும் மங்கையர் திலகமாய், சாதனைச் சரித்திரம் படைக்கும் சமூக நீதிகாத்த வீராங்கனையாய், அறிவால், ஆற்றலால், சிந்தனையால், செயல்திறனால், திடமான முடிவால், ஆறு மொழிகள் பேசும் திறனால், தீர்க்கதரிசனத்தால் இம்மன்றத்தில் மீண்டும் புரட்சித் தலைவரின் ஆட்சியை அமர்த்தியே தீருவேன் எனச் சூளுரை ஏற்று அதிலே வெற்றியும் பெற்று, தமிழகத்தின் முதல்வராக வீற்றிருக்கும் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கிவிட்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்



2001 செப்டம்பர் 5] [திரு. எஸ்.எஸ். ரமணீதரன்]

அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து, அதேபோல கோபிசெட்டிபாளையம் வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிவிட்டு என் உரையைத் தொடங்குகிறேன்.

அம்மா, எங்கேயோ ஒரு கடைக்கோடியில் சிறிய கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கோபிசெட்டி பாளையம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராக்கி, ஆன்றோரும், சான்றோரும் அலங்கரிக்கும் இம்மன்றத்தில், எனக்கும் பேசுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த என் தாய்க்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துவிட்டு என் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற வள்ளுவர் கூற்றுக்கு இணங்க, அம்மா, நீங்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதும் ஆற்றியிருக்கின்ற சாதனைகளை இந்நாட்டு மக்கள் வாழ்த்துகிறார்கள். உப்பு நீருக்கே உருக்குலைந்த சென்னைவாழ் மக்களின் தாகத்தைத் தீர்க்க இளநீர்போல் தண்ணீர் கொடுத்து, போர்க்கால அடிப்படையில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கினீர்கள். 493 கோடி ரூபாய் செலவில் சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் 2-ன் மூலமாக உபரி நீரைச் சேமிக்க தடுப்பணைகள், நீர்த் தேக்கங்கள், கசிவுநீர்க் குளங்கள் அமைத்து, மழை நீரைச் சேமிக்கும் திட்டம், மகளிர் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த மகளிர் துப்புரவு வளாகங்கள் அமைக்கும் திட்டம், கிராமப்புற மகளிரிடையே சுயவேலைவாய்ப்பு மற்றும் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சுய உதவிக் குழுத் திட்டம், குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்தி, ஏழை எளியோருக்கு வீடுகளைப் புதுப்பிக்கும் திட்டம், அடிப்படை வசதிகள் இல்லாத கிராமச் சந்தைகளில் நபார்டு வங்கியின் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவியுடன் குடிநீர் வசதி, விளக்கு வசதி, பொதுக் கழிப்பிடம், இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தி கிராமச் சந்தைகளை மேம்படுத்தும் திட்டம், கிராம நிர்வாக அலுவலரின் கடமையை மேலும் திறம்படச் செய்ய ஒவ்வொரு ஊராட்சி அலுவலகத்தையொட்டி 60,000 ரூபாய் செலவில் அலுவலகம் கட்டுகிற திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 77 இலட்சத்திலிருந்து ரூபாய் 82 இலட்சமாக உயர்த்திக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி எண்ணற்ற திட்டங்களை நிதிநிலை அறிக்கையிலே கொடுத்து ஏழை எளிய, நடுத்தர, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை

உயர்த்துகின்ற நிதிநிலை அறிக்கையாக உள்ளது என்பதால், இதைப் பாராட்டி, வாழ்த்தி, மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வை என்னுடைய தொகுதிமீது படவேண்டுமென்று கூறி சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன்.

அம்மா, என்னுடைய தொகுதி விவசாயத்தையே நம்பியிருக்கிற ஒரு தொகுதியாகும். விவசாயத்தைப் பொறுத்தவரையில் ஒருசில மாதங்கள்தான் வேலைவாய்ப்பு இருக்கிறது. மற்ற நாட்களில் வேறு வேலைவாய்ப்புகள் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகின்ற நிலைமைதான் உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் எங்கள் பகுதியில் தொழிற்பேட்டைகள் அமைத்து, ஆண்டு முழுவதும் ஏழையெளிய மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க ஆவன செய்ய பணிவுடன் கேட்டுக்கொள்கிறன்.

அதேபோல, என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க கோபி-லக்கம்பட்டி பேரூராட்சி முழுவதும் பயன்படும் குடிநீர்த் திட்டத்தின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதை, உடனடியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஒப்புதல் வழங்கி, நிறைவேற்றித்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோபி-மொடச்சூர் கிராமப் பஞ்சாயத்து முழுவதும் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டத்தின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்ட ஒப்புதல் வழங்கி நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணற்ற விவசாயக் கூலித் தொழிலாளிகள், விவசாயக் கூலி வேலைகளுக்குச் செல்ல ஏதுவாக கோபி-நஞ்சக்கவுண்டன்பாளையம்-கள்ளிப்பட்டி பாதையில் பவானி ஆற்றுப்பாலம் கட்ட திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றித் தருமாறு மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சுயநிதிக் கல்லூரிதான் உள்ளது. இங்கு வாழும் ஏழை எளிய விவசாயக் கூலித் தொழிலாளிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர் படிக்க வசதியாக ஓர் அரசு கலைக் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மாவிடம் மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, அம்மா, என்னுடைய தொகுதி, கரும்பு விவசாயிகள் நிறைந்த தொகுதியாகும். மூன்றில் இரண்டு பங்கு விவசாயிகள் கரும்பு பயிர் செய்கின்றனர். தனியார் ஆலைகளுக்குத் தங்கள் கரும்பை அனுப்பிவிட்டு பணத்திற்காகப் பல மாதங்கள் காத்திருக்கவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் தனியார் ஆலைகளும் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள்ளாக கரும்பு விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுத்து உதவும்படி மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இம்மாமன்றத்தில் பேச அனுமதியளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. இரவிராஜ், திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்.

***திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை முதலாவதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது குடிநீர்ப் பிரச்சினை. சிறப்பு வாய்ந்த பெருமைக்குரிய திருத்தணி நகரத்திலே இருக்கக்கூடிய மக்கள் இன்றைக்குக் குடிநீர் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற அவலநிலை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த பத்து தினங்களாக, ஏற்கெனவே தனியார் வாகனங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்த குடிநீர் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனாலே மக்கள் பெரும் துயரத்திற்கும், துக்கத்திற்கும் ஆளாக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது.

அதேபோல், மணவாள நகர், வெங்கத்தூர் பஞ்சாயத்திலே பெரும் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டு, மக்கள் வீதிக்கு வந்து போராடக்கூடிய ஓர் அவலநிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் அங்கு இருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, மக்களுடைய துயரைத் துடைக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஆட்சி மாற்றத்திற்கு ஒரு தூணாக, துணையாக இருந்தவர்கள் கரும்பு விவசாயிகள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. என்னுடைய திருத்தணி தொகுதியிலே கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. திருத்தணி தொகுதியிலே இருக்கக்கூடிய பெரும்பான்மையான மக்கள் கரும்பு விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, 8.5 சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கும் டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்க அரசு பரிசீலிக்கும் என்கிற செய்தியை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது விரைவாகக் கொடுக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை இங்கே முன்வைத்து, ஏற்கெனவே கரும்பை வெட்டி கரும்பு ஆலைக்கு அனுப்பியிருக்கிற அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு காலம் காலமாக, கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக்கு மேலாகக் கொடுக்கப்படாமல் இருக்கிற அந்தப் பணத்தையும் விரைவாகக் கொடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய வேண்டுகோளை இந்த அவையிலே முன்வைக்கிறேன்.

அதேபோல் திருத்தணிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய அருங்குளம் ஆற்றுப் படுகையிலேயிருந்து கடந்த ஓர் ஆண்டிற்கு முன்பாக 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில், அங்கே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக திருத்தணி நகருக்குக் குடிநீரைக் கொண்டுவருவதற்காக ஒரு திட்டத்தை அமைத்து அது செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. அப்படிச் செயல்படுத்துகிறபோது அங்கே 30 அடி ஆழம் உள்ள மூன்று கிணறுகள் தோண்டப்பட்டு, அதன் மூலமாக திருத்தணி நகரத்திற்குக் குடிநீர் வழங்க திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால், 30 அடி ஆழத்திலே இன்றைக்குக் குடிநீர் வருமா என்று சொன்னால், நிச்சயமாக வராது. சரியாகத் திட்டமிடாமல், நம்முடைய பழமொழி சொல்வதைப்போல், 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டும்' என்று சொல்வார்களே, அதைப்போல ஆற்றிலே 4 கோடியே 10 இலட்சம் ரூபாயை அளந்து அதிகாரிகள் வீணடித்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இன்றைக்கு மக்களுக்கு முழுமையாகப் பயன்பட வேண்டும் என்று சொன்னால், அருங்குளம் ஆற்றிலே தடுப்பணை ஒன்று, அதாவது Check Dam ஒன்று உடனடியாக நிறுவப்பட வேண்டும். அப்படி நிறுவப்பட்டால் மட்டுமே 4 கோடி ரூபாய் வீணாகாமல் திருத்தணி நகர மக்களுடைய



குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கப் பயன்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்திலே கொண்டு தடுப்பணைத் திட்டத்தை அமைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய வேண்டுகோளான, திருத்தணி தொகுதியிலே இருக்கக்கூடிய திருவாலங்காடு மற்றும் என்.என். கண்டிகை ஆகிய இரு இடங்களிலேயும் சுகாதார மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்டநாட்களாக அந்தப் பகுதியினுடைய மக்கள் இந்த வேண்டுகோளை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பல கிராமங்களிலே இன்றைக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தாலும், இதுவரையில் ஒரு சொட்டுக் குடிநீர்கூட காணாத ஒரு கிராமம் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அது கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிறது. பீமாவரம் என்கிற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு உடனடியாகக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

இன்றைக்கு ஒரு நபருக்கு 40 லிட்டர் குடிநீரை அரசு வழங்க வேண்டுமென்று சமீபத்திலே உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் இப்போது என்ன நிலைமை என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைக்கு இயற்கையின் சதியாலும், ஒருசில அதிகாரிகளின் மெத்தனப் போக்காலும் மக்கள் படும் அவதிகளுக்கு அளவேயில்லை. கடந்த 24 ஆம் தேதி திருத்தணியிலே சுமார் 50-க்கும் மேற்பட்ட தாய்மார்கள் வந்து அவர்களுடைய அவலநிலையை அழுது புரண்டு என்னிடத்திலே சொன்னார்கள். எங்களுக்குக் குடிப்பதற்கும் தண்ணீரில்லை; குளிப்பதற்கும் தண்ணீர் இல்லை; நாங்கள் குளித்தே 3 நாட்கள் ஆகிவிட்டன; இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். அதன் அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே நேரடியாகச் சென்று சந்தித்து இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டுமென்றும், ஏற்கெனவே வாகனங்கள் மூலமாக வழங்கப்பட்ட குடிநீர் அந்தப் பகுதியிலே நிறுத்தப் பட்டிருக்கிறது என்றும் அதை உடனடியாக மீண்டும் வழங்க வேண்டு

என்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கோரிக்கை வைத்தேன். தொலைபேசி மூலமாகப் பலமுறை சொல்லியதற்குப் பிறகும் அங்கே நிதியில்லை என்று சொல்லி அந்தப் பொது மக்களுடைய அவல நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதை உடனடியாகப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

'தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்'

என்று சொன்னான் பாரதி. ஆனால் இன்றைக்குக் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிற இந்த மக்களினுடைய அவல நிலையைப் பார்ப்பதற்கு பாரதி இருந்திருந்தால் என்ன கண்ணீர் வடிப்பாரோ, தெரியவில்லை. அந்த அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்குன்றம், மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர், ரெட்டை ஏரி, ஆகிய ஏரிகளை ஆழப்படுத்திட இந்த அரசு கொண்டு வந்துள்ள திட்டம் வரவேற்கத்தக்க ஒரு திட்டம். அதேநேரத்திலே கொரட்டூர் ஏரியிலும், ரெட்டை ஏரியிலும் வரக்கூடிய நீர் மழைக்காலங்களில் அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து வெளியேறும் நச்சுக் கழிவுகளோடு கலந்து வரக்கூடிய நீராக இருக்கிறது. எனவே, அந்தக் கழிவுகள் வராமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற (மணியடிக்கப்பெற்றது) நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கை பம்புகளை உடனே பழுது பார்க்கவேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளிலேயுள்ள கை பம்புகளைப் பழுது பார்த்தாலே ஓரளவுக்கு குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல பல ஆண்டுகளுக்கும் முன்னால் போடப்பட்டிருக்கிற பைப் லைன்களை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்குச் சுயாட்சிக் கோரிக்கை உள்ளதுபோல கிராமங்கள், நகரங்கள் ஆகியவற்றை நிர்வாகம் செய்யும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். எந்த வகையிலான அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றன என்றும் அறிவிக்கப்பட வேண்டும்.



மத்திய, மாநில அரசுத் திட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதை முறைப்படுத்த வேண்டும்.

அரசுக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது மாதிரி எல்லாக் கிராமங்களுக்கும் இன்னும் முறையாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை. நடப்பாண்டிலே (மணியடிக்கப்பெற்றது) போர்க்கால அடிப்படையிலே எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பரவலாக வருவாய் இல்லாத, நலிவடைந்த ஊராட்சிகளின் நிலையை உயர்த்த, கிராமங்களில் பொது மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாததால் நலிவடைந்த ஊராட்சிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

சென்னை மாநகரில் குடிநீர்ப் பஞ்சம் அதிகம் உள்ளது. நாம் எவ்வளவுதான் இந்த மாமன்றத்திலே பேசினாலும் குடிநீர்ப் பஞ்சம் சென்னையிலே தீர்க்கப்படவில்லை. மக்கள் நெருக்கம் அதிகமுள்ள சென்னைக்கு இன்னும் விரைந்து குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடபழனி பகுதியில் குளோரின் கலக்கப்படாமல், சுத்திகரிக்கப்படாமல் காலம் காலமாக லாரிகளிலே நீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதனால் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. இதை உடனடியாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள் (குறுக்கீடு) இன்னும் 10 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** அதேபோல, ஊரக வளர்ச்சியிலே இன்றைக்கு மக்களை கிராமப்புறங்களிலே சென்று பார்க்கிறபோது—இங்கே மாமன்றத்திலே அமர்ந்திருக்கிற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும்—மக்களிடம் ஓட்டு கேட்கச் செல்கிறபோது, அவர்கள் சொன்னார்கள்;

ஆட்சிகள் மாறினாலும் எங்களுடைய அவலநிலை என்கிற காட்சிகள் மாறவில்லையே, நீங்களெல்லாம் ஓட்டுக் கேட்டு வருகிறீர்களே, எங்களுடைய நிலைமையை நீங்கள் எடுத்துச் சொல்லி எங்களுக்கு நல்ல திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று மக்களெல்லாம் சொன்னார்கள். அந்த அடிபபடையிலே இன்றைக்குத் தொகுப்பு வீடுகள் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்திற்கென்று மொத்தம் 871 தொகுப்பு வீடுகள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 8 தொகுதிகளை உள்ளடக்கிய அந்த மாவட்டத்திற்கு ஒரு தொகுதிக்கு 110 வீடுகள்கூட கிடைக்காது. ஆக அந்த 110 வீடுகளை எத்தனை பேருக்குப் பிரித்துக் கொடுத்து மக்களை எப்படித் திருப்திப்படுத்துவது என்றே தெரியவில்லை.

*முற்பகல் 11-45*

எனவே, இதுபோன்ற மக்கள் நலப் பணிகளுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கச்சா வீடுகளும், ஒட்டுமொத்தமாக ஒரு தொகுதிக்கு 50 வீடுகள் மட்டுமே ஒதுக்கப்படுகின்றன. இதில் எந்த மக்களையும் நாம் திருப்திப்படுத்த முடியாது என்ற இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன். அதேபோல நவாப்ரா திட்டத்திலே வழங்கப்படும் 1 கோடி ரூபாய் மக்களுடைய பணம் வீணாக்கப்படுகிறது. அதிகாரிகளுடைய முறைகேடுகள் காரணமாக இன்றைக்கு அந்தத் திட்டம் தவித்துக் கொண்டிருக்கிறது. அதிலே கவனம் செலுத்தி, மக்களுக்குப் போய் சேரக்கூடிய வகையிலே அந்தத் திட்டத்தை—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். 10 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. கோ. இரவிராஜ்:** அதேபோல, நகராட்சிப் பகுதியிலே குடிநீர் விநியோகம் செய்வதற்கும், கழிவுநீர் அகற்றுவதற்கும், போதுமான வாகனங்கள் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது போதுமான அளவிற்கு துப்புரவுப் பணியாளர்கள் இல்லாமல் நகராட்சிகள் நாற்றம் எடுத்துக்கொண்டிருக்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்த அவல நிலைமைகளையெல்லாம் போக்குவதற்குப் போதுமான வாகன வசதிகள் செய்வதுடன், துப்புரவுப் பணியாளர்களும் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக வழங்கப்படுகிற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய 82 இலட்சம் ரூபாயை வரும் நிதியாண்டில் 1 கோடி ரூபாயாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த அவையிலே கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.



## 1. தகவல் கோரல் - தொடர்ச்சி

### (இ) வாக்காளர் பட்டியலில் விடுபட்ட பெயர்களைச் சேர்த்தபின் உள்ளாட்சித் தேர்தலை நடத்துதல்-தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இதிலே என்ன Point of order?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான இந்த உள்ளாட்சித் துறை மானியம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதே வேளையிலே உள்ளாட்சித் தேர்தலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள உறுப்பினர் வேதரத்தினம் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். வாக்காளர் பட்டியலிலே இன்னும் பல பேர் விடுபட்டிருக்கிறார்கள் என்ற கருத்தை அவர்கள் இங்கே சொன்னார்கள். நாங்களும் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறோம். இந்த அரசுகூட ஆளுநர் உரையிலே, சுமார் 1 கோடி பேர் அடையாள அட்டை இருந்தும்கூட சென்ற பொதுத் தேர்தலிலே வாக்கு அளிக்க முடியவில்லை என்கிற கருத்தைச் சொல்லி, இரண்டு அடுக்கு முறையை நாங்கள் புகுத்தி அந்த Voters list-ஐ எல்லாம் சரிசெய்து விட்டுத்தான் இந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்தவிருக்கிறோம் என்று ஆளுநர் உரையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பொதுத் தேர்தலில் இருந்த அதே வாக்காளர் பட்டியலைத்தான் இப்போது இந்த உள்ளாட்சித் தேர்தலுக்கும்-reproduce-அப்படியே மறுபதிப்பாகப் போட்டிருக்கிறார்கள். இன்னும் எங்களுடைய வேலூர் தொகுதி நகராட்சிக்குள்ளே 40,000 வாக்காளர்கள் பெயர்கள் விடுபட்டு போய் இருக்கின்றன. அது சரிசெய்யப்படவில்லை. ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இவற்றையெல்லாம் சரிசெய்யாமல் இப்போது உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதாகச் சொல்லியிருக்கிற காரணத்தினாலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதிலை அமைச்சர் அவர்கள் கடைசி நேரத்திலே சொல்வார்.

[2001 செப்டம்பர் 5

**திரு. சி. ஞானசேகரன்:** உள்ளாட்சித் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியலைச் சரிசெய்து விட்டு, இரண்டு அடுக்கு முறையைக் கொண்டு வந்த பிறகு தேர்தல் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியலைப் பற்றி அவர் சொல்லியிருக்கிறார். தலைமைத் தேர்தல் அதிகாரி தேர்தலை நடத்துகிறபோது, அதைக் கருத்திற்கொண்டு செயல்படுவார் என்று கருதுகிறோம். இரண்டு அடுக்கு, மூன்று அடுக்கு என்று சொல்வதெல்லாம் அது Parliament-லே செய்யவேண்டியது. Act-ஐ மாற்றவேண்டும். Immediate-ஆக அதையெல்லாம் செய்ய வேண்டுமென்றால் தேர்தலை நடத்த முடியாது. தற்போது நீங்கள் சொல்கிற அந்த மாறுதலை Constitution Amendment-ஆகச் செய்யவேண்டும். அது இப்போது ஆகின்ற நிலைமை கிடையாது. இந்த வாக்காளர் பட்டியலைப் பற்றிச் சொல்கிறீர்களே; எப்படி அதைச் சரிப்படுத்த வேண்டும் என்று பார்த்து அதிகாரிகள்தான் செய்யவேண்டும். அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச் செல்கின்றோம். ஆனால், தேர்தல் தள்ளி வைக்கப்படுவது என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, அதை விளக்கமாகச் சொல்வார். தேர்தலைத் தள்ளி வைப்பதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். இரண்டு அடுக்கு முறை, கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசுதான் amendment கொண்டுவர வேண்டும் என்று சொன்னார். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதை வேண்டுமானால் விடுத்து, இந்த ஒரு கோடி வாக்காளர்களின் பெயர்களை, அதாவது விடுபட்டுப் போன பெயர்களையெல்லாம் மீண்டும் வாக்காளர் பட்டியலிலே சேர்த்தபிறகு இந்தத் தேர்தலை நடத்துவதற்கு ஆளுநர் உரையிலே அரசு வாக்குறுதி அளித்தவண்ணம், அதை நீங்கள் சரிசெய்து விட்டு தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 5]

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும் -தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள் சுந்தரத் தெலுங்கிலே செப்புவார். (சிரிப்பு)

**திரு. கே. கோபிநாத்:** *(உறுப்பினர் தெலுங்கில் பேசத் தொடங்கினார்) (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதை இங்கே தமிழிலே மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, ரெக்கார்டு ஆகிவிடும். நீங்கள் கவலைப்பட வேண்டாம். வேண்டுமானால், அதன் நகலைக் கொடுக்கிறேன். பிறகு படித்துக்கொள்ளுங்கள்.(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருக்குத் தெரிந்த மொழியில் பேசலாம் என்று விதியில் இடமிருக்கிறது. அவர் தாய்மொழியிலே பேசலாம். உறுப்பினர், பேசுங்கள்.

***திரு. கே. கோபிநாத்:**(உறுப்பினர் தெலுங்கில் உரையைத் தொடர்ந்தார்) Respected Deputy Speaker, Sir, நான் ஏன் தமிழிலே பேசாமல் தெலுங்கில் பேசுகிறேன் என்பதைச் சொல்கிறேன். இதுகுறித்து, என் உரையின் அடுத்த paragraph-ல் வருகிறது. Because actually-நாங்கள் அந்த அளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். தமிழ் எனக்கு அவ்வளவு fluent-ஆக வராது. நான் படித்தது, என்னுடைய தாய்மொழியில்; everything is Telugu. Eventhough I studied upto 12th Standard, பிளஸ் 2 படிக்கும்போதுகூட, நான் படித்தது தெலுங்கில்தான். ஆனால் எங்களுக்கு Question paper வரும்போது English-லே வந்தது. நான் எதனால் தெலுங்கில் பேசுகிறேன் என்பதை அடுத்தபடி பேசுகிறேன், please.

**HON. DEPUTY SPEAKER:** No objection, you continue.

**THIRU. K. GOPINATH:** Thank you, Sir.

" மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் எனது கன்னிப் பேச்சைத் துவக்க அனுமதி தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

" மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க சேர்க்கப்பட்ட தெலுங்கு உரையின் தமிழாக்கம்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஒசூர் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளராக என்னைப் போட்டியிடச் செய்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், எனது வெற்றிக்கு ஆதாரமாக இருந்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது வெற்றிக்கு அயராது உழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய முஸ்லீம் லீக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அனைத்து இயக்கங்களைச் சார்ந்த சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் இந்த நேரத்தில் எனது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினராக முதன்முதலில் ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மசோதாவின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஏனென்று சொன்னால் ஊரக வளர்ச்சி என்கிற உயர்ந்த கோட்பாடு பெருந்தலைவர் காமராஜரால் உருவாக்கப்பட்ட ஒன்று. தமிழகத்தில் அரசின் நலத் திட்டங்கள் கிராமப்பகுதிகளில் வாழும் கோடானுகோடி மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் துவக்கப்பட்டன. அதைப்போலவே, எங்களுடைய அருமைத் தலைவர் ராஜிவ் காந்தி அவர்களின் முன்னோடித் திட்டமான பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா, சட்டங்களின் மூலம் 33% பெண்கள் இடம் பெற்றனர்.

தாழ்த்தப்பட்ட இன மக்கள் உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் வர முடிந்தது. மக்களுக்கே அதிகாரம் என்ற இலட்சியத்தின் அடிப்படையில் அமல்படுத்தப்பட்ட இச்சட்டங்கள் கடந்த 5 ஆண்டுகளில் எந்த அளவில் நடைமுறைப் படுத்தப்பட்டன என்பதை நாம் அறிவோம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஓசூர் சட்டமன்றத் தொகுதி தற்போது மாண்புமிகு முதல்வர், புரட்சித்தலைவி அவர்களின் பெருங்கருணையினால் புதியதாக அமையவுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடம் பெற்றிருப்பதால் இந்த அரசு ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வழங்கல் துறை பணிகளை எனது தொகுதியில் முனைந்து செயல்படுத்தும் என நம்புகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி நமது மாநிலத்தின் எல்லையில் அமைந்த தொகுதி. தமிழகத்திலேயே மிகவும்



பிற்படுத்தப்பட்ட பகுதி. ஓசூர் நகரம் தொழில் நகரமாக மாறியிருந்தாலும் ஊரகப் பகுதிகள் இன்னும் அடிப்படை வளர்ச்சிகள் கூட பெறவில்லை.

ஊரக வளர்ச்சி மானியத்தில் வறுமை ஒழிப்பு மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கொடுக்க வேண்டிய நிதியில் ரூ.419.32 கோடி குறைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தமிழகத்தைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட துறையின் மத்திய அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நேரில் சந்தித்து மேற்படி நிதியைக் குறைக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டும் மத்திய அரசு அதனைப் பரிசீலிக்கவில்லை. இதே மத்திய அரசு சென்ற ஆண்டு கொடுத்த தொகையைவிட தற்போது குறைத்துக் கொடுத்துள்ளதற்கு அரசியல் காரணமா....? அப்படியிருந்தால் அதனை மக்கள் மன்னிக்கமாட்டார்கள். தமிழகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்த வேண்டாம் என மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்கள்தான் இந்நாட்டின் உயிர்நாடி என்றார் அண்ணல் காந்தியடிகள். கிராமப்புற வளர்ச்சி, கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது இந்த அரசின் முதற்கடமையாக இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டம் வறட்சியினாலும், புளோரைடு கலந்த குடிநீரினாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எங்கள் மாவட்டத்தின் நீண்டநாள் கோரிக்கையான ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் ரூ.1008 கோடி செலவில் பன்னாட்டு நிதி உதவியால் செயல்படுத்தப்படும் என அறிவித்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தி எங்களைக் காத்திட வேண்டுகிறேன். அதேநேரத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பேசப்பட்டு வரும் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் செயல்பட உடனடியாக நடவடிக்கை எடுத்து ஓசூர் நகர மக்களும், விவசாயிகளும் பயனடையச் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் நகரம் தமிழகத்தில் ஒரு பெரும் தொழில் நகரம். தொழில் வளர்ச்சியடைந்திருந்த போதும் நகரின் சுகாதாரம் மேம்பாடு அடையவில்லை. குடிநீர் மற்றும் சாக்கடை வசதிகள் இல்லை. நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் பெருக்கத்தினைக் கருத்தில்கொண்டு ஓசூர் நகருக்கென தனித்திட்டம் வகுத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஓசூர் தொகுதி பெரும்பாலும் மலைப்பாங்கான பகுதியாகும். வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். வருடத்தின் பெரும்பாலான நாட்கள் இப்பகுதி பனியினாலும், குளிரினாலும் பாதிக்கப்பட்டுவிடும். ஆகவே, ஏழை மக்களைப் பனியிலிருந்தும், கடும் குளிரிலிருந்தும் பாதுகாத்திட இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் எங்கள் தொகுதியில் கூடுதலாக குடியிருப்பு அமைத்துத் தந்து எங்கள் தொகுதி மக்களைக் காத்திட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஓசூர் தொகுதியும், அதனைச் சுற்றியுள்ள தளி, தேன்கனிக்கோட்டை போன்ற பகுதிகளும் பூகோள ரீதியாக எப்படித் தமிழகத்தின் மற்ற பகுதிகளிலிருந்து மாறுபட்டுள்ளதோ அதேபோல கலாச்சார, மொழி ரீதியாகவும் மாறுபட்டுள்ளது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். குறிப்பாக இந்த அவையில் நான் தெலுங்கு மொழியில் பேசும் காரணத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது மாநிலத்தில் உள்ள இருமொழிக் கல்வித் திட்டம் எங்களுக்குப் பெரும் பாதகமாக உள்ளது. எங்கள் பகுதி மாணவர்கள் பள்ளியில் தெலுங்கு மொழியில்தான் படிக்கிறார்கள். ஆனால் பொதுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு வினாத்தாள்கள் ஆங்கிலத்திலேயே கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்குத் தெலுங்கு மொழியிலேயே வினாத்தாள்கள் அளிக்கப்படவேண்டும். அதேபோல தெலுங்கு மொழியில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்மொழிப் பாடத்தினைக் கட்டாயமாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு தமிழைப் படிக்கவும், எழுதவும் தெரியாத ஒரு நிலையில் எனது பகுதி மாணவர்கள் இனி இருக்கக்கூடாது என்பதே எனது எண்ணம். ஆகவே உலகமெல்லாம் தமிழ்ப்பணி சிறக்கத் தொண்டாற்றி வரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து தமிழையும் தெலுங்கையும் வேறுபாடின்றிக் காத்திடவும், எங்கள் பகுதியில் தெலுங்கு ஆசிரியர்களே இல்லாமல் மாணவர்கள் பாதிக்கப்படும் நிலையைப் போக்கிடவும் ஆவன செய்ய பணிவுடன் வேண்டுகிறேன்.

அதேபோல் எங்கள் மாவட்டத்தில் செயல்படும் 36 தெலுங்கு நடுநிலைப் பள்ளிகளில் கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு தெலுங்கு ஆசிரியர்கூட நியமனம் செய்யப்படவில்லை. ஆனால் இப்பள்ளிகளில் உருதுமொழி ஆசிரியர்களும், தமிழாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அரசாணை எண் 307 நாள் 01.11.1999 அன்று பிறப்பிக்கப்பட்டும்



நேர்காணல் நடைபெற்றும் இதுநாள் வரை ஒரு நியமனம்கூட நடைபெறவில்லை. தமிழகத்தில் உள்ள தெலுங்கு மொழி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் அவை துவக்கப்பட்ட காலத்திலிருந்தே இதுநாள் வரை தெலுங்கு ஆசிரியர் நியமிக்கப்படவில்லை என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழகத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையோர் மொழி வளர்ச்சி கருதி உருது அகாடமி நிறுவப்பட்டது. அதுபோலவே மொழி சிறுபான்மையோரில் பெருவாரியாக உள்ள (40%) தெலுங்கு இன மக்களின் நலன் கருதி தெலுங்கு அகாடமி நிறுவப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓசூர் நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாக இருந்தும்கூட நகரின் வளர்ச்சி, தொழில் பெருக்கம் மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப நகராட்சியில் போதுமான அலுவலக உதவியாளர்கள், பிளம்பர்கள், மின்பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் கிடையாது. ஆகவே போதுமான பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்திட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தற்போது பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் வசிக்கும் பகுதியாக ஓசூர் நகரம் மாறி வருகிறது. ஓசூர் நகரத்திற்குத் தற்போது மின்சார மயானம் அவசியம் தேவை. ஓசூர் நகராட்சிக்கு மின்சார மயானம் அமைத்திட தமிழக அரசு உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஓசூரில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் 200-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நலிவடைந்துவிட்டன. அவற்றில் பணியாற்றிய தொழிலாளர்களின் வாழ்க்கை இன்று கேள்விக்குறியாகிவுள்ளது. ஆகவே தொழில் மற்றும் சிறுதொழில் முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து நலிவடைந்த தொழிற்சாலைகளை மீண்டும் இயக்கவும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மறுவாழ்வு பெறவும் ஆவன செய்யவேண்டுகிறேன். ஓசூர் நகரம் கர்நாடக மாநில எல்லையிலும், பெங்களூர் நகரத்தையொட்டியும் அமைந்திருப்பதால் அண்டை மாநிலத்தில் குற்றங்கள் புரிந்துவிட்டு குற்றவாளிகள் ஓசூர் நகரில் ஊடுருவி விடுகின்றனர். அவர்களால் ஓசூர் நகரின் இயல்பு நிலை பாதிப்பு

அடைகிறது. புதியதாக உருவாக்கப்படும் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் காவல் துறைத் தலைமையகம் ஓசூரில் அமைந்தால் ஓசூர் நகரில் கிரிமினல் குற்றம் மிகக் குறையும். ஆகவே, எனது வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்று ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு வகையான காய்கறி, கனி வகைகள் பயிரிடப்படுகின்றன. விவசாயிகள் அதனை விற்பனை செய்வதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்குக் குளிர்பதன கிடங்கு வசதி செய்து கொடுத்தால் பல்லாயிரக்கணக்கான காய்கறி விவசாயிகள் பயனடைவார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகளைக் காத்திட தகுந்த நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

கிராம மக்களின் அன்றாடத் தேவைகளான குடிநீர், பொது சுகாதாரம், மின்விளக்கு போன்ற வசதியினை அவ்வப்போது செயல்படுத்தும்பொருட்டும், ஊராட்சிக்கு நிரந்தரமான முழு நேரப் பணியாளர் நியமனம் செய்யும்பொருட்டும், ஊராட்சிச் செயலர் பணியினை நியமிக்க அரசு ஆணை இருந்தும் அதை முழுமையாக இன்னும் செயல்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கடந்தகால ஆட்சியில் கிராமங்களுக்கு விளையாட்டு மைதானம் அமைத்திட தலா ரூ.25,000/- நிதி ஒதுக்கீடு செய்திருந்தனர். ஆனால் அவ்வாறு அமைத்த விளையாட்டு மைதானங்கள் சரிவர பராமரிக்கப்படாததால் அவை விளையாட்டு மைதானங்களாகக் காணப்படவில்லை.

மேலும் விளையாட்டுப் பொருட்களுக்கு என்று ரூ.25,000/- ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒதுக்கீடு செய்திருந்தும் மேற்குறிப்பிட்ட தொகைக்கு ஏற்ப எந்தவொரு ஊராட்சியிலும் விளையாட்டுப் பொருட்கள் இல்லை என்பதே உண்மை.

எனவே, மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கிய தொகை கடந்த கால ஆட்சியில் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து...

**திரு. கே. கோபிநாத்:** அதாவது, இப்போது நான் இங்கே பட்ட இந்த ** இனிமேல் எந்தவொரு தெலுங்கு மீடியம் பள்ளிகளில் படிக்கிறவர்களும் படக்கூடாது என்பதற்காக ஒரு சிறிய கோரிக்கையை அம்மா அவர்களுக்கு வைக்கிறேன். Hereafter தெலுங்கில் கற்பிக்கப் படுகின்ற School-களில் ஒரு Subject , compulsory–ஆக தமிழை வைக்க வேண்டுமென்று அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*(உறுப்பினர் தொடர்ந்து தெலுங்கில் பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Hon. Member, please wait.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாய்மொழியில் பேசுவதைப் பெருமையாகக் கொள்ள வேண்டுமேயொழிய ** கொள்ளக்கூடாது.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசத் தொடங்கிய உடனேயே பல மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து குரல் எழுப்பி அவர் தெலுங்கில் பேசியதைக் குறை கூறிய காரணத்தால் அவர் மனம் நொந்து அந்த வார்த்தையைக் கூறினார் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரும் குறை கூறவில்லை. உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருக்குத் தெரிந்த தாய்மொழியில் பேசுவது ஒன்றும் தவறில்லை. ஆனால் தமிழர்கள் மற்ற மாநிலங்களில் எவ்வாறு அனுமதிக்கப்படுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும். அவரவர் தாய்மொழியில் பேசலாம், தமிழில் பேசுவதற்கு பெங்களூரில் எந்தெந்தத் தொல்லைகளை நம்முடைய தமிழர்கள் அனுபவிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக நாம் இதை எதிர்க்கக்கூடாது. இதைப் பாராட்டலாம். அதேபோல நமக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கை

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இருக்கிறது. முன்னுதாரணமாக நம்முடைய அவையில் நடக்கட்டும், தவறு ஒன்றும் கிடையாது. அவர் பேசுவதைத் தவறு என்று நாங்கள் சொல்லவில்லை. அதை ** என்று அவர் சொல்ல வேண்டியதில்லை.

**HON. DEPUTY SPEAKER:** Hon. Member, your time is over, please complete the speech.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தருமபுரி மாவட்டத்தில் இருந்து வந்த தளி தொகுதி எம்.எல்.ஏ.க்கள் தெலுங்கில் பேசினார்கள் என்பதையும், அதை இந்த மாமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் உங்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். இந்த மாமன்றம் இப்போதும் ஏற்றுக்கொள்கிறது.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ** என்று சொல்லியிருக்கிறார். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி மாண்புமிகு உறுப்பினர் பேசியிருந்தால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெலுங்கில் பேசியதை யாரும் குறை சொல்லவில்லை, ஏற்றுக்கொள்கிறோம். அதேநேரத்திலே நம்முடைய வேதனையெல்லாம் என்னவென்று சொன்னால், நாம் தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர் தெலுங்கு படித்திருக்கிறார். ஆங்கிலம் படித்திருக்கிறார். ஆனால் தமிழ்ப் பாடம் இல்லையே என்கின்ற வேதனை நம்மை எல்லாம் உலுக்கிக் கொண்டிருக்கிறது; வருத்திக் கொண்டிருக்கிறது. கடந்த 5 ஆண்டு காலம், இந்த மாமன்றத்திலே இதை நான் பலமுறை எடுத்துச் சொன்னேன். நிறைவேறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



ஆகவே,எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயம் தமிழ் மொழி ஒரு பாடமாக இருக்கவேண்டும். அதை வைப்பதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், தமிழ் இவையெல்லாம் ஒருசேர, ஒரே நேரத்தில் பேசப்பட்ட அவைதான் இந்த அவை. இன்றைக்கு இராஜதானி சட்டமன்றம் நம்முடைய நினைவில் வருகிறது. எனவே, தெலுங்கு பேசுவதற்கும், மலையாளம் பேசுவதற்கும் இங்கே தடையுமில்லை, எதிர்ப்பும் இல்லை. ஆகையினால், உறுப்பினர் அவர்கள் ** நிலையும் இல்லை. சிறுபான்மை மக்கள், அதுவும் மொழிச் சிறுபான்மை மக்கள், அவர்களுடைய தாய்மொழியில் பேசுவதை இந்த அவை வரவேற்கின்றது என்பதைப் பொறுப்புடன் சொல்லிக்கொள்கிறேன்; அவர்களைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே...

**திரு. லா. சந்தானம்:** துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே என்ன விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது? (குறுக்கீடு) உறுப்பினர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** Hon'ble Deputy Speaker Sir. இப்போது நான் தெலுங்கிலே பேசியது ** இல்லை. அதிலே ** என்று சொன்னது எனக்குப் பெருமை இருக்கிறது. என்னுடைய தாய்மொழியிலே பேசுவது எனக்குப் பெருமையாக இருக்கிறது. I am proud of it. ஆனால் இங்கே என்னை ** என்று சொன்னேன். That is what has actually happened. மனம் நொந்து, I feel, very bad. That is what I am telling. என்னைப் பொறுத்த வரையில் நான் தெலுங்கிலே பேசுவது எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** துணைத் தலைவர் அவர்களே, யாரும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரை ** அவர் தவறாக எடுத்துக் கொண்டிருந்தால் அது தவறானதுதான். யாரும் அவரை **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி மாண்புமிகு உறுப்பினர் கோபிநாத் அவர்கள் நினைத்ததால் அதை ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லியாகிவிட்டது. உறுப்பினர் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** *(தெலுங்கில் உரையைத் தொடர்ந்தார்.)*

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.

## 5. ஒழுங்குப் பிரச்சினை

### உறுப்பினர் தெலுங்கில் பேச அனுமதிக்கப்படுதல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நேரமாகி விட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. வேறொன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவையிலே பொதுவாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டும்தான் எழுதக்கூடிய Reporters இருக்கிறார்கள். தெலுங்கிலே யாராவது பேசினால், அதை எழுதக்கூடிய Reporters இந்த அவையிலே இல்லை. தொடர்ந்து அதுபோன்ற முறையும் இல்லை. இங்கே Press Gallery-யிலே உட்கார்ந்திருக்கக்கூடிய நம்முடைய நண்பர்களுக்கும் தெலுங்கு தெரியுமா என்பதும் தெரியவில்லை. இவ்வளவு அருமையான கருத்துகளை தன்னுடைய சுந்தரத் தெலுங்கிலே அவர் எடுத்து வைத்திருந்தாலும்கூட, அது எப்படி நம்முடைய அவையினுடைய குறிப்பேட்டிலே ஏறுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவர் முதலிலேயே ஒரு Script-ஐக் கொடுத்திருக்கிறார். அதை நாங்கள் அங்கே கொடுத்துவிடுவோம்.



**திரு. சி. ஞானசேகரன்:** இது அவையில் இல்லாத ஒரு மரபு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருக்கிறது. விதியிலே இருக்கிறது. எந்த மொழியிலும் பேசலாம் என்று விதி 86-லே இருக்கிறது. படித்துக் காட்டட்டுமா?

**திரு. சி. ஞானசேகரன்:** வாசித்துக் காட்டுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நான் மாண்புமிகு பேரவைக்கு வாசித்துக் காட்டுகிறேன். அவையினுடைய 86 ஆம் விதி.

"பேரவையின் அலுவல் தமிழிலோ, ஆங்கிலத்திலோ இருமொழிகளிலுமோ நடைபெறலாம். மேலும் ஓர் உறுப்பினர் மாநில அரசினால் ஏற்பளிக்கப்பெற்ற எம்மொழியிலாவது அல்லது இந்தியிலாவது உரை ஆற்றலாம். மேலும், மேற்கூறிய மொழிகள் எதிலும் தமது கருத்தைத் தெளிவுற எடுத்துரைக்க முடியாத உறுப்பினர் தமது தாய்மொழியில் பேரவையில் உரையாற்றுவதற்குப் பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம்." (மேசையைத் தட்டும் ஒலி) விதி தெளிவாக இருக்கிறது.

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்றங்களுடைய பொதுவான மானியக் கோரிக்கைகளிலே மிக முக்கியமான பிரச்சினை என்பது குடிநீர்ப் பிரச்சினையாகும். மாநிலம் பூராவிலும், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே ஆயிரக்கணக்கான கிராமங்களுக்குக் குடிநீரைக் கொண்டு வந்து விடுவோம்; அதை நிறைவேற்றிவிடுவோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இதுவரையிலே அந்தக் கருத்து இன்னும் நிறைவேற்றப்படாமலே இருக்கிறது. எனவேதான், இந்த மாநில அரசு ஆயிரக்கணக்கான கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தருவதற்கு உரிய நடவடிக்கையை இந்தக் காலகட்டத்திலே எடுத்தாக வேண்டும். அதனுடைய முயற்சி என்ற முறையிலேதான் சென்னை மாநகராட்சிக்கு குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆதரித்து வரவேற்கிறேன்.

அதேநேரத்தில், இவை மட்டும் போதுமா என்பதைக்கூட ஆலோசிக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகிறேன். இங்கே நம்முடைய மாநகராட்சிப் பகுதியிலே குடிநீர்த் தட்டுப்பாடு என்பதில் பல பிரச்சினைகள் இருந்தாலும்கூட, அந்த முயற்சி வரவேற்கத்தக்கது.

அடுத்து, நம்முடைய மதுரை மாநகராட்சியிலே 4 மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆனால் தண்ணீர் செல்வதில்லை. காரணம் கேட்டால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கும், அந்தக் கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக, தண்ணீர் ஏற்றி மக்களுக்குக் கொடுக்காத ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க, இருவரையுமே நம்முடைய உள்ளாட்சித் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூப்பிட்டுப் பேசி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான் பல மாவட்டங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்று சொன்னால், அதைப் பொதுவாக ஏற்றுக்கொள்வதற்கு சாத்தியம் இல்லை. காரணம், கன்னியாகுமரி மாவட்டத்திலே, எங்களுடைய பகுதியிலே தாமிரபரணி ஆறு என்று நெல்லையினுடைய மறு பகுதியிலே உள்ள ஒரு ஆறு வடிகிறது. அங்கு கடையால்மூடு என்ற பேரூராட்சியிலிருந்து அதனுடைய கடைசிப் பகுதி சென்று அடைகின்ற இடம் வரையிலும், விளாத்துறை பேரூராட்சி, அடுத்து மங்காடு இப்படிப்பட்ட பகுதிகளெல்லாம் இருக்கின்றன. ஆற்றுக்குள்ளேதான் கிணற்றைப் போட்டு, தண்ணீரைக் கொடுத்து வந்தார்கள். ஆனால், ஆற்றிலே மணல் எடுத்த காரணத்தினால், இப்போது அந்தக் கிணறுகள் எல்லாம் சரிந்து ஆற்றுத் தண்ணீரை பம்ப் செய்கின்றபோது, முதலிலே அந்த பம்ப் வேலை செய்யும்போது, தண்ணீர் கலங்கி, செம்மண் கலரிலே வருகிறது. பெருவாரியான பகுதிகளிலே தண்ணீர் கலங்கித்தான் கிடைக்கிறது. எனவே என்னுடைய வேண்டுகோள் எல்லாம், அந்தத் தாமிரபரணி ஆற்றிலே, பல்வேறு பகுதிகளிலே check–dam கட்டி, ஆற்றுத் தண்ணீரை நீரேற்று நிலையத்தின் மூலமாக filter செய்து, சுத்தம் செய்து கொடுப்போமேயானால், குளச்சல் பகுதி வரையிலும், அதாவது களியக்காவிளையிலிருந்து ஆரம்பித்து குளச்சல் பகுதி வரையிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தரமுடியும். அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதனுடைய முன்னோடியாகத்தான் இன்று குழித்துறை நகராட்சியில் அப்படி ஒரு திட்டத்தை வகுத்து நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய



அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த வகையிலே இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

கடையால்மூடு பேரூராட்சி மலைப்பாங்கான பகுதி. அங்கே நம்முடைய ஆற்று நீரை எடுத்துக் கொடுக்க முடியாது. அந்த மலைப் பகுதிக்குள்ளே எந்தச் சேதாரமும் இல்லாமல் 3 போர்வெல்லை போட்டார்கள். ஆனால் வனத் துறை அதைத் தடுத்துவிட்டது. அந்தப் பகுதியிலே வருகின்ற தண்ணீர் எங்கே போகிறது என்று கேட்டால் கேரள மாநிலத்தைப் பார்த்துச் செல்கின்றது. நமக்கு ஒரு துளி தண்ணீர்கூடக் கிடைக்காது. அதனுடைய அருகில்தான் இந்த போர்வெல்லைப் போட்டார்கள். அந்த போர்வெல்லிலிருந்து தண்ணீரை எடுத்தால் அந்த மலைப்பாங்கான பகுதிகளான ஆறுகாணி, பத்துகாணி, மருதம்பாறைக்கு முழுமையாகத் தண்ணீரைத் தர முடியும். அதற்கான உரிமையை அந்தத் துறை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உள்ளாட்சிகள். அதிகாரம் பரவலாக்கப்பட்டது என்று பொதுவாக ஒரு கருத்தைச் சொல்கின்றோம். ஒரு கோஷமே கடந்த தேர்தலிலே, அதிகப்படியான அதிகாரம் வேண்டும், அதிகப்படியான நிதி வேண்டும் என்ற இந்த இரண்டு கோஷங்களை நாம் வைத்திருந்தோம். அதோடு சேர்த்து ஊழலற்ற நிர்வாகம் வேண்டும் என்று அதையும் சொன்னோம். இந்த 3 கோஷங்களினுடைய அடிப்படையிலேதான் அந்தத் தேர்தலைச் சந்தித்தோம். எங்களுடைய மாவட்டத்தில் பல பேரூராட்சிகளில், ஒரு நகராட்சியில், ஒரு ஒன்றியத்தில் இன்றைக்கு எங்களுடைய அணி வெற்றி பெற்றுச் செயல்படுகின்றது. ஆனால் மேல்புறத்திலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதியாதாரம் இல்லாத காரணத்தால் அரசாங்கம் கொடுத்த ஜீப் இன்றைக்கும் மழையிலே நனைகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஒரு தொகையை ஒதுக்கி அங்கே அதற்கு ஒரு shed-ஐப் போடுவதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்றுதான் பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் போதுமான நிதியாதாரம் இல்லாத ஒரு சூழ்நிலை பொதுவாக இருக்கிறது. அதிகாரம் பரவரலாக்கப்பட வேண்டும் என்று சொன்னால் ஒரு நகராட்சியிலே இன்று அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து 10 இலட்சம் ரூபாய்க்கான வேலை நடத்த வேண்டும் என்று சொன்னால் அந்த நகராட்சி தீர்மானத்தை மட்டும் போட்டுவிடலாமே தவிர, அதனுடைய அங்கீகாரத்தைத் தர

வேண்டியவர்கள் மேலே இருக்கின்ற அதிகாரிகள். இதனால் காலதாமதம் வெகுவாக ஏற்படுகிறது. அந்த நிலைக்கு நாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு நகராட்சியிலே, அதனுடைய பொறியாளருக்கு 5 இலட்சமோ, 10 இலட்சமோ அவர்களுடைய எல்லைக்குள்ளே அந்தப் பணியைச் செய்வதற்கான உரிமையை நாம் வழங்க வேண்டும். அப்படி அதிகாரம் என்பது பரவலாக்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்திலே, மேற்கு வங்கத்திலே இந்த உள்ளாட்சிமன்றங்களுக்குப் பட்டா வழங்குகின்ற அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். அதுபோன்று திட்டப் பணிகளைக்கூட நம்முடைய உள்ளாட்சிமன்றங்களுக்கு நாம் கொடுப்பதன் மூலமாக விரைவாக அரசாங்கம் தருகின்ற பணத்தைச் செலவிடுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே நம்முடைய இந்த அதிகாரத்தைப் பரவலாக்குகின்ற அந்த நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

இன்னொன்று, அதிலே ஊழல்கள் மலிகின்ற ஒரு நிலை இருக்கிறது. கடந்த 5 ஆண்டு காலத்திலே முதல் முறையாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக சுமார் 75 இலட்சம் ரூபாய் தூத்தூர் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் முறைகேடுகள் அதிகம் நடந்ததன் காரணமாக அந்த வேலைகள் சரிவர நடக்கவில்லை. எனவே, அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த ஊராட்சியினுடைய தலைவரைப் பதவி நீக்கம் செய்தார். பின்னர் அவர்கள் அந்தப் பதவிக்கு எப்படி வந்தார்கள், யார் அவர்களுக்குக் கை கொடுத்தார்கள் என்று முந்தைய ஆட்சியிலே அன்றைக்கு இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து நான் இந்த விவரங்களையெல்லாம் சொன்னேன். அதற்கு அவர் எனக்கு ஒரு பதிலைச் சொன்னார். அதிகாரிகள் ஏதோ அப்பீலை வாங்கிச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னார். இன்று என்ன நிலைமை என்றால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குக் கொடுத்ததிலே 20 இலட்சத்திற்கு அதிகமான பணத்தைக் கொள்ளை அடித்து இருக்கின்றார் தலைவர். என்ன நடவடிக்கை? அதில் ஒரு நடவடிக்கை எடுப்போமேயானால்தான் நம்முடைய இந்த உள்ளாட்சிமன்றங்கள் சரிவர செயல்பட்டு நாம் கொடுக்கின்ற பணம், அரசு கொடுக்கின்ற பணம் நம்முடைய மக்களுக்குச் சென்றடையும். அந்த வகையிலே நாம் இதைப் பார்க்க வேண்டும்.

அதுபோன்றுதான் மருதங்கோடு ஊராட்சி. அங்கே ஒரு தலைவி என்ன செய்கின்றார்கள் என்றால், ஒரு இலட்சம் ரூபாய்க்கான ஒரு வேலை. அந்த வேலையை ஆரம்பித்தால் முதலிலே போய் 12 சதம் அட்வான்ஸாக அந்த அம்மாவுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னால், அங்கே வேலை நடக்காது. எனவே, அங்கேயும் நம்முடைய மாவட்ட



ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த அம்மாவைப் பதவி நீக்கம் செய்தார்கள்.
மீண்டும் அவர்கள் பதவிக்கு வருவதற்கு எந்த அதிகாரிகள் உடந்தையாகச்
செயல்பட்டார்கள் என்பதை நம்முடைய மாமன்றம் அறிய வேண்டும்.
நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதைச் சரியாக
பரிசீலனை செய்ய வேண்டும். அதிகாரிகள் மட்டத்திலே குறைபாடுகள்
இருக்கின்றன. ஆனால், அதைச் சரிப்படுத்துவதற்காக அல்லது நல்ல
நெறிமுறைகளிலே அவர்கள் வருவதற்காகத்தான் இதிலே வருகின்ற
தலைவர்கள் செயல்படுகின்றார்கள். ஆனால் நம்முடைய அனுபவங்கள்
எல்லாம் நேர்மாறாக இருக்கின்றன. ஆகவேதான், இந்த
உள்ளாட்சிகளுடைய அதிகாரப் பரவல் என்பது ஒரு பக்கத்திலே
இருந்தாலும், அதிகப்படியான நிதியாதாரம் வேண்டுமென்பது இன்னொரு
பக்கத்திலே இருந்தாலும், கடந்த காலங்களிலே இருந்த நிலையை நாம்
பார்க்கின்றபோது, அந்த தூத்தூர் ஊராட்சிக்குப் போய் பணம்
வசூலிக்கின்ற ஓர் ஊழியர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே
கூறிவிட்டார். எனவே, அந்தத் தலைவர் 10 மாதங்களாக அந்த
ஊழியருக்குச் சம்பளம் கொடுக்கவில்லை, இன்றும் அது தொடர்கிறது.
ஆக, இந்த நிலைகள் மாற்றப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய
கோரிக்கை.

*பிற்பகல் 12-15*

இந்த அடிப்படையிலே நின்று கொண்டு தேர்தலை நாம் சந்திக்கப்
போகின்றோம். எனவேதான், இந்த அதிகாரப் பரவல் என்பது
பொதுவாகக் கொண்டுவரப்பட வேண்டும். ஏற்கெனவே, நான் முதலில்
சொன்னது மாதிரி, குடிநீர் வடிகால் வாரியத்திலே பல பகுதிகளிலே
ஊழியர்கள் இருக்கின்றார்கள். அந்த ஊழியர்களுக்கு இன்று பல்வேறு
விதமான பாதுகாப்பு ஒரு பக்கத்திலே இருந்தாலும், இருந்த ஊழியர்களிலே
பலபேரை வெளியேற்றிவிட்டார்கள். இன்று குழாய்க் கிணறுகளைப்
போடுகின்ற ஒரு யூனிட் இருக்கிறது. அதனுடைய இயந்திரங்கள்
பழுதடைந்திருக்கின்றன என்ற காரணத்தைச் சொல்லி, அந்த யூனிட்டை
மூடுவதற்காக சில முயற்சிகள் நடப்பதாகத் தெரிகின்றது. எனவே,
மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம்,
அந்த யூனிட்டை மூடாமல், புதிய இயந்திரங்களை வாங்கி அங்கே
இருக்கின்ற ஊழியர்களையும், தொழிலாளர்களையும் பாதுகாக்கின்ற
வகையில் (மணியடிக்கப்பெற்றது) எங்கே போர்வெல்ஸ் போட வேண்டுமோ
அந்த அடிப்படையிலே அதைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கையை
மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊரகத் துறை. இந்த ஊரகத் துறையிலே வருகின்றபோது தான், பல்வேறு ஊழியர்கள் இருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனுக்குப் போனால், இன்று வேலைகளைச் செய்வதற்கு முடியாமல் ஊழியர்கள் பஞ்சம் இருக்கிறது. எங்களுடைய மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக் கொண்டாலும், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக் கொண்டாலும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக் கொண்டாலும், ஆள் இல்லை. ஏற்கெனவே பல கோடி ரூபாயை நாம் இதற்காகச் செலவிடுகின்றோம். ஏற்கெனவே, மத்திய அரசாங்கம் இந்தத் துறைக்குக் கடந்த கால..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மணி, நேரமாகிவிட்டது. உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. டி. மணி:** கடந்த கால கட்டங்களிலே நமக்கு வரவேண்டிய பணத்தைச் சரிவரத் தருவதில்லை, அது குறைந்து கொண்டே வருகின்றது. இந்தச் சூழ்நிலையில்கூட, இந்த ஊழியர்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு கட்டாய நிலை நமக்கு ஏற்படுகின்றது. அந்த வகையிலே நடவடிக்கை எடுப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

அதேபோன்று கோவை மாநகராட்சிப் பகுதிக்குள்ளே இந்தப் பத்திரப் பதிவிலே இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் கடந்த காலங்களிலே இருக்கின்ற பணத்தைக்கூட கட்டவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது சாத்தியம் இல்லாத நிலை. அதைக்கூட அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து, இந்தத் துறைக்குச் சம்பந்தப்படாத ஒரு பிரச்சினையைச் சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான, குழித்துறையிலே, தேவிகுமாரி கல்லூரி என்று ஒரு கல்லூரி இருக்கிறது. 7 ஆசிரியர்கள் இல்லை. அதன் காரணமாக மாணவர்கள் படிக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில் அவர்கள் ஒரு வேலை நிறுத்தத்தைச் செய்தார்கள். அதன் காரணமாக அந்தக் கல்லூரி மூடப்பட்டு, பல தினங்கள் தாண்டிவிட்டன. எனவேதான், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சருடைய மேலான கவனத்திற்கு நான் பலமுறை இந்த விவகாரத்தைக் கொண்டு வந்தாலும், தீர்வு ஏற்படவில்லை. எனவே, கல்லூரியைத் திறப்பதற்கும், ஆசிரியர்கள் வேலையில் சேர்வதற்கும், மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுந்தராம்பாள்.

***திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக 6 கோடி மக்களின் காவல் தெய்வமாகவும், ஒளி விளக்காகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக 1-1/2 கோடித் தொண்டர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து இருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் இரண்டாவது முறையாக என்னை வேட்பாளராக அறிவித்து கொட்டும் மழையில் வாக்கு சேகரித்து, என்னை வெற்றி பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றிகூறி, மேட்டூர் தொகுதி மக்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தமைக்காக நன்றி கூறி, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது பேச விழைகின்றேன்.

*பிற்பகல் 12-20*

உள்ளாட்சித் துறை என்பது மக்களோடு ஒன்றிய துறை. ஏனென்றால் மக்களின் அத்தியாவசியத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி, சாக்கடை வசதி ஆகியவற்றைச் செய்து கொடுப்பது இத்துறையே. மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் கடந்த முறை 1991 முதல் 1996 வரை முதல்வராக இருந்தபொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்து கொடுத்தார்கள். ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, நமது இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தோற்றுவித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிட வேண்டுமென்றும் நமது இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்மீது பல உண்மைக்குப் புறம்பான வழக்குகளை ஜோடனை செய்து அவர்களைச் சிறையிலே அடைப்பதையே தங்களின் வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள். 'தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும்' என்பதற்கேற்ப இன்றைய காலகட்டத்தில் தமிழகத்தின் ஆறு கோடி மக்களின் ஆதரவோடு நமது இதய தெய்வம் அவர்கள் முதல்வராகப் பதவியேற்று இந்த அரியணையில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் பதவியேற்றவுடன், நடப்பு நிதியாண்டில் ஊரக வளர்ச்சிக்காக ரூபாய் 92 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 12,619 கிராம ஊராட்சிகள் அனைத்திலும்

மகளிர் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், மகளிர் துப்புரவு வளாகங்களை அமைக்கவும், ஆவன செய்து மகளிருக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள இவ்வரசை மக்கள் அனைவரும் பாராட்டுகின்றார்கள்.

கிராம நிருவாக அலுவலர்கள் மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கு அலுவலகக் கட்டடங்கள் தேவை என்பதை உணர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு நிதியாண்டில் ரூ.24 கோடி ஒதுக்கீடு செய்து – ஒவ்வொரு கட்டடமும் ரூ.60 ஆயிரம் செலவில் – இந்த ஆண்டு மட்டும் 4000 கட்டடங்கள் கட்டுவதைத் தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் கஜானாவைக் காலி செய்துவிட்டுச் சென்றும்கூட நமது கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.77 இலட்சத்திலிருந்து ரூ.82 இலட்சமாக மாற்றியமைத்ததை சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாது தமிழகம் முழுவதுமுள்ள மக்கள் வாழ்த்தி வரவேற்கின்றார்கள்.

நபார்டு வங்கியின் உதவியுடன் கிராம ஊராட்சிகளில் நடத்தப்படும் கிராமச் சந்தைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ஒவ்வொரு கிராமச் சந்தைக்கும் ரூ.7.48 இலட்சம் ஒதுக்கீடு செய்த கருணை உள்ளம் கொண்ட ஏழைகளின் காவல் தெய்வமாக விளங்குகின்ற எங்கள் அன்னைக்கு இந்த மாமன்றத்தின் மூலம் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் நடப்பு நிதியாண்டில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் குடிசைவாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு ரூ.9 கோடியும், மேலும் நகர்ப்புற மகளிருக்கு 1341 கழிப்பிடக் கட்டடங்கள் கட்டுவதற்கு 42 கோடி ரூபாயும், நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்கள் தொகுதி மக்கள் சார்பாக, தெய்வமாகிய கருணை தேவதைக்குக் கோடானு கோடி நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேற்படி மக்களின் முக்கிய அத்தியாவசியத் தேவையான தாகத்தைத் தீர்க்கும் குடிநீர் வசதியை கிராம மற்றும் நகர்ப்புறங்களில் அதிகரிப்பதற்காக ரூ.690 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல், அன்றாடத் தேவையான குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு, நீர் போதிய அளவு கிடைப்பதற்கு ஏதுவாக புதிதாக நீர்வளப் பாதுகாப்புத் துறை அதாவது,





Water Resources Consolidation Project–II உருவாக்கிடவும், நெய்வேலியிலிருந்து சென்னைக்கு லாரிகளில் குடிநீர் கொண்டு வருவதற்கும், மேட்டூர் மற்றும் ஈரோட்டிலிருந்து இரயில் மூலமும் குடிநீர் கொண்டு வந்து சென்னை மக்களின் தாகத்தைத் தீர்க்கவும் உதவி செய்த தரணி போற்றும் தாரக மந்திரத்திற்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தமிழ்நாட்டு 6 கோடி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மழைநீர் சேமிப்பின் பயன்களை உணர்ந்து பெரிய அளவில் மழைநீர் சேமிப்பு அமைப்புகள்—Installation of Rain Water Harvesting Structures —என்ற திட்டத்திற்கும், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்திற்கும், இராமநாதபுரம் குடிநீர்த் திட்டத்திற்குமாக ரூ. 10 கோடி அடையாள ஒதுக்கீடு செய்ததன் மூலம் இவ்வரசு புதிய குடிநீர்த் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளதையும், சுமார் ரூ.493 கோடி செலவில் சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் 2-ஐச் செயல்படுத்த உத்தேசித்துள்ளதையும், பள்ளிபாளையம் திறந்த நிலை கால்வாய்த் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் முக்கிய இடங்களில் நீர்த் தேக்கங்கள் மற்றும் தடுப்பணைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதையும் பாராட்டி, நூறு நாட்களில் சாதனை செய்த, நூறு ஆண்டு காலம் வாழவிருக்கும் எங்களை ஈன்றெடுத்த அன்னைக்கு நெஞ்சம் நெகிழ்ந்த மகிழ்ச்சியை மலர்ப் பாதங்களில் தூவி வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதியிலுள்ள சில பிரச்சினைகளை இங்கே கூற விழைகின்றேன். மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த லக்கம்பட்டி கிராமம் விவசாயிகள் நலன் கருதி ஊமாண்டித்தட்டு என்ற இடத்தில் check–dam கட்டித் தரவேண்டும். மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட லம்பாடி இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு S.T. சான்றிதழ் வழங்க வேண்டும். கொளத்தூர் ஒன்றியத்தில் பாலமலை கிராமத்தில் வாழும் பொதுமக்கள் எந்தவொரு வசதியும் கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவ வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் முதல் காவேரிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது. இதனை வழியோரக் கிராமங்களாகிய பண்ணவாடி பஞ்சாயத்து, லக்கம்பட்டி பஞ்சாயத்து, சிங்கிரிபட்டி பஞ்சாயத்து, தின்னம்பட்டி பஞ்சாயத்து, கருங்கல்லூர் பஞ்சாயத்துகளுக்கு நீட்டித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கொளத்தூரிலிருந்து கண்ணாம்பூச்சி வரை கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

மேட்டூர் நகராட்சிப் பகுதியில் 1934 ஆம் ஆண்டு மேட்டூர் அணை கட்டியபொழுது அப்பொழுது இருந்த மக்கள் தொகைக்கு ஏற்ப ஒரே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிதான் கட்டப்பட்டது. ஆனால், தற்போது மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப கீழ்க்கண்ட இடங்களில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி நகர், தங்கமாபுரிபட்டணம், சேலம் கேம்ப், காந்தி நகர் ஆகிய இடங்களில் புதிதாக overhead tank கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் மேட்டூர் நகருக்குக் கொண்டு வரப்பட்டிருந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தை கடந்த ஆட்சிக் காலத்தில் நாமக்கல்லிற்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். அதை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதியில் ஒரு கலைக் கல்லூரியும், ஒரு பாலிடெக்னிக் கல்லூரியும், ஓர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் ஒட்டுமொத்த டெண்டர் என்ற முறையில் ரூ.1 கோடி முதல் ரூ.70 கோடி வரை டெண்டர் விடப்பட்டது. இதனால் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் யாரும் கலந்துகொள்ள முடியாமல் போனது. இதுபோன்ற டெண்டர்களில் வெளி மாநில கம்பெனிகள்தான் வேலையை எடுக்கின்றன. வெளி மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. இதை மாற்றி 1991 முதல் 1996 வரை மாண்புமிகு அம்மா ஆட்சியில் இருந்த நடைமுறைப்படி குடிநீர் வடிகால் வாரியத்தில் டெண்டர் விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் சேலம் மாவட்டத்தில் மூன்று கம்பெனிகளே வேலை செய்கின்றன. E.C.C.I., L & T, கோயா போன்ற கம்பெனிகள்.



என் தொகுதியில் உள்ள மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியாகும் சாம்பல் உபரி நீரை வாய்க்கால் மூலம் கொண்டு சென்று நங்கவள்ளி ஒன்றியத்தில் உள்ள வீரக்கல், வனவாசி, சாணார்பட்டி, சப்பாணிப்பட்டி ஊர்களில் விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். வாக்காளர் பட்டியலைப் பற்றி இங்கே நீண்ட விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. காலத்தின் அருமை கருதி நான் அதன் உள்ளே செல்லவில்லை என்றாலும், வாக்காளர் பட்டியலிலேயுள்ள குளறுபடிகளை நீக்கி தேர்தல் நடத்த வேண்டும் என்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் அனைவருடைய விருப்பமாக இருக்கிறது. அரசு அதன்மீது கவனம் செலுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பொறுத்தவரையிலும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. சென்ற ஆட்சியிலேகூட பலமுறை அதைப் பற்றி பேசப்பட்டது. போதுமான நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தினாலே உள்ளாட்சி நிறுவனங்களால் செயல்பட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கு உரிய முயற்சிகளை எடுப்பதற்கான காரண காரியங்களைச் சொன்னார்கள். அதைப்போலவே இப்போதுகூட மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது. ஆனால், மாநில அரசாங்கத்தினுடைய நிதி குறைவாக இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். ஆகவே, மத்திய அரசாங்கத்திடமிருந்து வருகிற நிதியுதவியைப் பெற்று மாநிலத்திலே இருக்கிற உள்ளாட்சி அமைப்புகளை நிர்வாகம் செய்வது என்கிற நிலை சரியானதாக இருக்குமா என்பதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும். தேவையான அளவிற்கு இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத்தான் அனைத்து முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிற காரணத்தினாலே, தேவையான நிதி ஒதுக்கீடு செய்து அந்த உள்ளாட்சி அமைப்புகளைச் சிறந்த செயல்பாட்டுக்குரியவையாக மாற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில முக்கியமான பிரச்சினைகளை நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன். குறிப்பாக, மாநகராட்சிப் பகுதியிலே அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. சென்றமுறை எல்லாம் பேசப்பட்டு நிலுவையில் இருக்கிறது. அந்த அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளினாலே பல்வேறு மாநகராட்சிகளில் பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, கோவை போன்ற மாநகராட்சிகளிலே 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அதிலே பாதிப்படைந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்படி அங்கீகரிக்கிறபோது அதற்குரிய அபிவிருத்திக் கட்டணம், அபராதக் கட்டணம் என்பதையெல்லாம் போட்டு அவர்களைச் சுமைக்குள்ளாக்குகிற முயற்சி இருக்கிறது. அப்படியில்லாமல் அவற்றைத் திருத்தியமைத்து அவர்களுக்கு அந்த அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாசனத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நீர்வள ஆதாரத்தை அதிகப்படுத்துவதற்காக சிறு குளங்களைச் சீரமைப்பதற்கான முயற்சி உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இந்த முயற்சி உரிய காலத்தில், அதாவது 25 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்திலே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி இருக்கும்பட்சத்தில் அந்தக் குடிநீர்ப் பிரச்சினை, பாசன பிரச்சினைகளையெல்லாம்கூடத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும். ஆகவே, குளங்களை, ஏரிகளைச் சீரமைப்பதற்கான முயற்சி நல்ல முயற்சி. அதிலும் குறிப்பாக ஒரே ஒரு தடவையில் அது நடத்தப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. அது மிகவும் சிறப்புக்குரியது. ஆகவே, அந்தச் சிறப்பான திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். பாசனங்களைப் பெறுவதற்குரியதாக அந்த வேளாண்மைக்கும் உத்தரவாதத்தை அளிக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை முறையாக, சரியாக நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும், அனைத்து நிதி உதவிகளையும் கவனத்தோடு அரசு செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இருக்கிற விவசாயிகள் சங்கம் நேற்றையதினம் இந்த நிதி ஆதாரத்தை வளப்படுத்த வேண்டும் என்பதற்கான முயற்சியாக தென்னக நதிகளை இணைக்க வேண்டும் என்ற ஒரே கோரிக்கையை மட்டும் வலியுறுத்தி நாகர்கோவிலிலிருந்து ஒரு குழுவும், ஒகேனக்கல்லிலிருந்து ஒரு குழுவும், இரண்டு குழுக்களாகத்



தமிழகம் முழுமையிலும் எல்லா நகரங்கள், கிராமங்களில் எல்லாம் பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டு சென்னையில் வந்து முடிக்கிறார்கள். ஆகவே, இந்தத் தென்னக நதிகளின் இணைப்பில்தான் நம்முடைய தமிழகத்தினுடைய வளமான வாழ்க்கை அமைந்திருப்பதாக நான் கருதுகிறேன். அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். அது நீண்ட காலத் திட்டமாக இருக்கலாம்; பெரிய செலவாக இருக்கலாம்; ஆனால், இது அடிப்படைத் தேவை என்ற காரணத்தினாலே அந்தச் செய்தியை நாட்டு மக்களுக்குச் சொல்லி, அதன்மீது கருத்துகளை உருவாக்க வேண்டும். அதை மத்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற அந்த முறையிலே அந்தப் பிரச்சார இயக்கம் வந்துகொண்டிருக்கிறது. அந்த இயக்கம் வந்து கொண்டிருப்பது மட்டுமல்ல, இதை எல்லா அரசியல் கட்சிகளுக்கும், எல்லா மக்களுக்கும் உரிய பிரச்சினையாக மாற்றுவதற்கு அனைவருமே ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக போர்க் கால நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். சென்னைக்குக்கூட பல இக்கட்டான சூழ்நிலையிலே லாரிகள் மூலமாகக் குடிநீர் வழங்கப்படுகிறது. தேவைகளை அறிந்து, உணர்வுகளை அறிந்து வழங்கப்படுகிறது என்று சொன்னாலும் மேலும் தேவை இருக்கிறது. இதே நிலை நீடிக்காமல் இருக்க வேண்டும் என்றுகூட கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. லாரிகள் மூலமாகக் குடிநீர் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள், வரவேற்கிறேன். அதற்கு மாற்றுத் திட்டமாக பல திட்டங்களையும் அறிவித்திருக்கிறீர்கள். விரைவாக நடவடிக்கைகளை எடுத்து அதை முடிவு செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம். இதுவொரு சிறந்த திட்டம். ஆனால், இந்தக் குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்குகிற அந்த முறை இருக்கிறதே, அது பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. ஒரு குடியிருப்புக்கு 32,000 ரூபாய் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்குவது என்பது போதுமானதாக இல்லை. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போதிருக்கிற விலைவாசி நிலைமை, அங்கே இருக்கிற நிலைமைகளை எல்லாம்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2001 செப்டம்பர் 5

கவனத்தில் கொண்டு அந்தத் தொகையை உயர்த்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். மத்திய அரசிடம் நாம் போராட வேண்டும், கேட்க வேண்டும். மாநில அரசும் அதற்குரிய முறையிலே நிதியை ஒதுக்குவதற்கான முயற்சிகளைச் செய்து அந்த நிதியை உயர்த்திக் கொடுக்க வேண்டும். ரூ.50,000 அளித்தால்தான், அந்த வீடுகளைக் கட்டுவதற்குரிய நிலைமை இருக்கும். அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இந்தக் காரியங்களைச் செய்கின்றபோது, மேலும் கூனிக் குறுகி அந்த வீடுகளுக்குச் செல்கிற நிலையை இந்தத் திட்டம் உருவாக்கிவிடக்கூடாது. ஆகவே, அந்த நிதியை உயர்த்துவதற்கான முயற்சியினை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக கிராம சபா கூட்டங்கள் ஆண்டிற்கு நான்கு முறை நடைபெறுகின்றன. இது பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படுகிறது. இதுவொரு சிறந்த, வரவேற்கக்கூடிய அம்சம். ஆனால், கிராம சபா கூட்டங்கள் நடப்பதாலே பல ஊராட்சிகளிலே குழப்பம்தான் ஏற்படுகிறது. எப்போது கிராம சபா கூட்டம் நடந்தாலும் அதிலே நூற்றுக்கணக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுவிடுகின்றன. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாத காரணத்தாலே, நிதி இல்லாத காரணத்தாலே என்ன செய்தீர்கள் என்ற கேள்வி எழுந்து கிராம சபா கூட்டங்களை நடத்துவதா, வேண்டாமா, என்ற கேள்வி எழுந்துவிடுகிறது. இதை நான் சொல்வதாலே கிராம சபா கூட்டங்களை ஒத்திவைக்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் இல்லை. கிராம சபா கூட்டங்களை நடத்தச் சொன்னதும், நடத்துவதும் என்ன நோக்கத்திற்காகவோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை. ஆகவே, அந்தக் கிராம சபா கூட்டங்களை நடத்தும் அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானால் தேவையான நிதியைத் தாராளமாக மாநில அரசும் வழங்க வேண்டும்; மத்திய அரசும் வழங்க வேண்டும். அப்படி வழங்குவதுதான் அந்தக் கிராம சபா கூட்டங்களை நடத்துவதற்குரிய அர்த்தமாக அமையும். அந்த முயற்சியை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சிகளில் மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள்; அதுபற்றி சிறப்பான முறையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. அதை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகப் பராமரிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.



2001 செப்டம்பர் 5] [திரு. வை. சிவபுண்ணியம்]

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதிலே ஒரு சின்ன இடைவெளி என்னவென்றால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஒரு கிராமத்தைத் தத்து எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், அந்தக் கிராமத்தினுடைய எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்வதற்கான, தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவது இல்லை. இது கடந்த காலங்களிலே பிரச்சினையாக இருந்திருக்கிறது. அந்த ஊரிலே இருக்கிற பல முக்கியமான பணிகள் விடுபட்டுப் போகின்றன என்ற கருத்து இருக்கிறது. ஆகவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்றாலே அது தன்னிறைவு பெற்றுவிட்டதாக ஒரு கருத்து இருக்கிறது. ஆனால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே தேவைகள் அதிகமாக இருக்கின்றன என்ற கருத்து இருப்பதையும் அரசு உணர்ந்து எல்லா வகையான திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவு இல்லாமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது என்ற கொள்கை முடிவை இந்த அரசு எடுக்குமானால் அந்தத் திட்டம் மேலும் வெற்றிகரமாக நடைபெறும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியை 82 இலட்சமாக அதாவது 5 இலட்சத்தை உயர்த்தி, வழங்கியிருக்கிற உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தட்டச்சர் போடுவதற்கான திட்டத்தைச் சென்ற ஆட்சியிலே அறிவித்தார்கள். 10-6-1997-ல் ஓர் உத்தரவு வழங்கப்பட்டது. ஒரு தட்டச்சர் இருக்கிறார், பணிச் சுமையின் காரணமாக மேலும் ஒரு கூடுதல் தட்டச்சர் நியமிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது நிலைமைகளை ஆராய்ச்சி செய்து பார்க்கிறபோது 384 ஊராட்சி ஒன்றியங்களில், 300 ஒன்றியங்களில் அறவே தட்டச்சர் இல்லை என்ற நிலை இருப்பதாக அறிகிறேன். நான் சொல்கிற கணக்கு சற்றுக் கூடுதலாக இருக்கிறதா, குறைவாக இருக்கிறதா, என்பது எனக்குத் தெரியாது. அமைச்சர் இதிலே கவனம் செலுத்த வேண்டும். 384 ஊராட்சி ஒன்றியங்களில் 300 ஒன்றியங்களில் தட்டச்சர்களே கிடையாது. ஒரு தட்டச்சர் இருந்த நிலையை இரண்டாக மாற்ற முடிவு

எடுத்து, இரண்டுமே இல்லாமல், தட்டச்சரே இல்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இதுபற்றி கவனித்து உடனடியாக அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அதைப்போல அவர்களுடைய கோரிக்கையிலே பல விஷயங்கள் இருக்கின்றன. அவர்கள் ஓய்வு பெறுகிறபோது பல சங்கடமான சூழ்நிலைகள் இருக்கின்றன. அதாவது, அவர்கள் ஓய்வு பெறுகிறபோது, அந்தக் கடைசி காலத்திலே அவர்கள்மீது தணிக்கை என்ற பெயராலே நடவடிக்கை எடுத்து suspend செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, நான் இதைச் சொல்கிறபோது suspend செய்ய வேண்டாம் என்று அர்த்தப்படுத்திக்கொள்ளக் கூடாது. தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்பதிலே உறுதியாக இருக்கிறோம். ஆனால், இதை உரிய காலத்திலேயே விசாரித்து அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, நாளை மறுநாள் அவர் ஓய்வு பெறப் போகிறார் என்று தெரிந்து இன்றையதினம் அவரைப் பதவியிலிருந்து நீக்கம் செய்துவிடுவது என்கிறபோது இதனால் அவர் மன உளைச்சலுக்கு ஆளாகிறார். பல்வேறுவிதமான சிரமங்களுக்கு ஆளாகிற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கும்போது உரிய காலத்திலே அந்த நடவடிக்கைகளை எடுத்துத் தண்டனை வழங்குவதும், அதற்குரிய முயற்சி எடுப்பதும் என்ற வகையில் ஒரு பணியாக இதனை நம்முடைய நிர்வாகம் செய்ய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. இருந்தாலும் காலத்தின் அருமை கருதி ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு பிரச்சினை, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் நான் சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்காகக் கட்டப்பட்ட அலுவலகம் திறக்கப்பட முடியாமல் இருக்கிறது. நகராட்சி ஆணையர் அவர்களைச் சந்தித்துப் பேசி, அவர்களும் உரிய முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னாலும், ஒரு விரைவான நடவடிக்கையாக அது இல்லை. ஒரு நகர்மன்ற உறுப்பினரே அந்தக் கட்டடம் கட்டப்பட்ட இடம் தனக்குச் சொந்தம் என்று நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்றிருக்கிறார். இடைக் காலத் தடை பெற்றிருக்கிறார். இதிலே என்ன வருத்தம் என்று சொன்னால் அந்த இடத்தை ஒப்படைத்தது நகராட்சி. அப்படி



ஒப்படைத்து, அந்தக் கட்டடத்தைக் கட்டச் சொல்லி, முடிந்து, திறப்பு விழா செய்யப்போகிற நேரத்திலே கடைசியில் தடையாணை வருகிறது. இந்தத் தடையாணை, அந்த வழக்குக்குச் சென்றவருக்குரிய வாய்ப்புடன் வந்திருந்தால்கூடப் பரவாயில்லை. இந்த வழக்கிற்கு நீதிமன்றத்திலே அழைப்பு வருகிறபோது, 17 வாய்தாக்களுக்கும் அந்த நகர் மன்றத்திலே இருக்கிற எந்த ஒரு அதிகாரியும் ஆஜராகாத காரணத்தினாலே ஒருதலைபட்சமான தீர்ப்பு வந்தது. என்ன வருத்தம் என்றால், நகராட்சிக் கட்டடம் இந்த compound-ல் இருக்கிறது. அடுத்த compound-ல் முன்சீப் கோர்ட் இருக்கிறது. ஐந்து தப்படிக்குள்ளாகவே இருக்கிற நீதிமன்றத்திற்குக்கூட 17 முறையும் போகாமல் அந்த அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனம் செலுத்தி, உரியவர்கள்மீது உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் வலுவாகச் சொல்லிக்கொள்கிறேன். இதிலே காலம் கடத்தப்படுவதால் பல்வேறுவிதமான தேவையில்லாத விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதிலே ஆக்கிரமணம் செய்துகொண்டிருப்பவர் முன்னாள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த தி.மு.க. நகர் மன்ற உறுப்பினர். அதுதான் இதிலே இருக்கிற கொடுமையான செய்தி. ஆகவே, இதை உடனடியாகப் பரிசீலித்து, இதன்மீது உரிய தீர்வை காண வேண்டும். இடத்தைப் பெறுவது மட்டுமல்லாமல், உரிய அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன என்று சொன்னாலும், மனனார்குடியிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை மனுவை நான் அளித்திருக்கிறேன். அது கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் கடந்த நகராட்சி மன்றம். அந்தத் திட்டத்தை அங்கே நிறைவேற்றுவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும்.

அதேபோல, குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய முயற்சியை அங்கே நீண்ட காலத் திட்டமாக, பெரிய திட்டமாக நிறைவேற்றுவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும்.

அதேபோல கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியிலேயும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2001 செப்டம்பர் 5

புதிய ஒன்றியங்கள் பிரிப்பதற்கான முயற்சிகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டன. அவை என்ன நிலையில் இருக்கின்றன? அதேபோல புதிய வாக்குச் சாவடிகள் அமைப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. அது என்ன நிலையில் இருக்கிறது? இவற்றை எல்லாம், தேவைகள் அறிந்து, நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் எல்லாம் இல்லை. ஒரே வார்த்தையைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நிறைய கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஊட்டி மலை உயரத்திலே இருப்பதனால் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பகுதி உறுப்பினர் கொடுத்திருக்கிறார். அந்தப் பகுதியிலே 2 மணி நேரம்தான் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. அதை 3 மணி நேரமாக மாற்றி வழங்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அதேபோல பல்வேறு கோரிக்கைகள் என்னிடம் வழங்கப்பட்டிருக்கின்றன என்றாலும், காலத்தின் அருமை கருதி, வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து, இந்த அளவில் நிறைவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கனிதா சம்பத். உங்களுடைய உரையை மூன்று நிமிடங்களில் முடித்துக்கொள்ளுங்கள்.

***திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு, எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்காக அதிகம் ஒதுக்கீடு செய்திருப்பதால், இது எங்களுடைய கன்னிப் பேச்சு என்பதனால், எங்களுக்கு அதிக நேரம் தேவைப்படுகிறது. தொகுதியைப் பற்றியும் அதிகமாகப் பேசவேண்டும் என்று மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**. மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, நான் விரோதமானவன் அல்ல. என்னை ஏதாவது சிக்கலில் மாட்டிவிடாதீர்கள். (சிரிப்பு)



2001 செப்டம்பர் 5]

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இமயத்தைப் பணிய வைக்கும் துணிவும், இல்லார்க்கு வாழ்வளிக்கும் கனிவும், தொண்டர்களை வாழ வைக்கும் ஈரமும், துரோகிகளை வீழ்த்துகின்ற வீரமும், நெருப்பு ஆறுகளில் நீந்துகின்ற திறமும், நினைத்ததை முடிக்க நெஞ்சில் உரமும், ஒருசேரப்பெற்ற நம் ஒப்பற்றத் தலைவியாம் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதக் கமலங்களுக்கு நன்றியினை மலர்களால் நான் அவர் இருக்கும் திசை நோக்கி ஆராதனை செய்கிறேன்.

'ஒளி பிறந்தபோது - மண்ணில்
உயிர்கள் பிறந்ததம்மா - இங்கு
நீ பிறந்த போது - தெய்வம்
நேரில் வந்ததம்மா'

என்று தெய்வத்தையே அம்மா வடிவில் கண்டு நாம் தினமும் பூஜித்து வருகிறோம்.

தர்மத்தின் ஒளிவிளக்காய், சத்தியத்தின் மறுவடிவாய் விளங்கிக் கொண்டிருப்பது நம் புரட்சித் தலைவி அம்மா. அதனால்தான் தர்மத்தின் வாழ்வுதனை இடையிலே சூது கவ்வினாலும் இப்போது தர்மம் மீண்டும் வென்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சத்தியம் ஓங்கியிருக்கிறது. எத்தனை பொய் வழக்குகள்; எத்தனை புரட்டு விமர்சனங்கள்; தினந்தோறும் வழக்குகள்; சிறையிலும் அவமதிப்புகள். முடிவு என்ன ஆயிற்று? உங்கள் பொய்மைகளை எல்லாம் நாங்கள் நம்பத் தயாராய் இல்லை என்று நாட்டு மக்கள் நடந்து முடிந்த தேர்தலில் தெளிவாகக் காட்டி விட்டார்கள்.

பிற்பகல் 12-40

ஒரு இராணுவ வீரரின் மகளாய்ப் பிறந்து, விவசாயக் குடும்பத்தில் மருமகளாய் இருந்த என்னை, ஊராட்சிமன்றத் தலைவராகவும், கழகத்தின் மாவட்டப் பிரதிநிதியாகவும், மேலும் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கிய எங்களது இதய தெய்வம், ஆறு கோடி மக்களின் தாயாக இருக்கும் எங்கள் குல தெய்வமே, திருப்போரூர் சட்டமன்றத் தேர்தலில் என்னை முதல் பெண் வேட்பாளராக நிறுத்தி எனக்காக தேர்தல் பிரச்சாரத்தின்போது அம்மா அவர்களின் பொற்பாதம் பட்டதால் இதுவரை இத்தொகுதியில் யாரும் பெறாத அளவிற்கு 25 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப் பெறச் செய்த எனது இதய தெய்வத்திற்கு எத்தனை கோடி முறை நன்றியைக் கூறினாலும் ஈடேறாது. என் உயிர்

மூச்சு உள்ளவரை என்னுடைய தாய் பின்னாலிருந்து என்னுடைய வாழ்நாள் முழுவதும் மக்களுக்காகப் பணியாற்றுவேன். என்னை இந்த அளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த என்னுடைய தொகுதி மக்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், கட்சித் தோழர்களுக்கும் என் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற வரிகளுக்கு இலக்கணம் அமைக்கின்ற வகையில் 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து இன்று ஏழையெளிய மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதக் கமலங்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது கன்னிப் பேச்சை இந்த மாமன்றத்தில் தொடங்குகின்றேன்.

ஐந்தாண்டு கால ஆட்சியில் சாதிக்க முடியாததை எல்லாம் நூறு நாட்களுக்குள் சாதித்துவிட்டார்களே என்று உழைக்கும் வர்க்கம் உளமாரப் பாராட்டுகிறது; ஆசிரியப் பெருமக்கள் அகமகிழ்ந்து போற்றுகிறார்கள்; உலக வரலாற்றுச் சரித்திர ஏடுகளில் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் இதுபோன்ற ஒரு நிதிநிலை அறிக்கையை இதுவரை எந்தவொரு முதல்வரும் சமர்ப்பித்தது இல்லை என உறுதியாகக் கூறலாம். அந்த வகையில் தரிசு நில மேம்பாடு, விவசாயிகளின் வட்டித் தள்ளுபடி, மழைநீர் சேமிப்பு, போதைப் பொருள் தடை, கேளிக்கை வரி போன்ற புரட்சிகரமான திட்டங்களாக இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தரிசு நிலங்களை மூலிகைகள், நறுமணச் செடிகள், பழ வகைகள் போன்றவற்றைப் பயிரிடும் நிலங்களாக மாற்றவும், சமையல் எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் எண்ணெய் வித்துத் தாவரங்கள் பயிரிடும் நிலங்களாக மாற்றவும், மின் உற்பத்திக்கு உதவும் மரங்களான காட்டுக் கருவேல், சவுக்கு போன்ற மரங்களைப் பயிரிடும் நிலங்களாக மாற்றவும் இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனது தொகுதியில் அடங்கிய மூன்று உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றியமைத்த அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எனது திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் 2 ஊராட்சி ஒன்றியங்களில் சுமார் 175 கிராமங்கள் உள்ளன. மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதியான எனது தொகுதியில் தரிசு நிலங்கள் அதிக அளவில் உள்ளன. இந்தத் தரிசு நில



மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எனது தொகுதியினைத் தத்தெடுத்து கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தித்தர வேண்டுமென இந்த நேரத்தில் எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அனைத்து மீனவர்களுக்கும் ஒவ்வொன்றும் ரூபாய் 37,000 செலவில் 4,000 வீடுகள் கட்டப்படும் என நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனது தொகுதியில் ஒரு பகுதி மீனவர் குப்பம் ஆகும். இப்பகுதியில் உள்ள மீனவர்களின் வீடுகள் இடிந்து போகிற நிலையில் உள்ளன. இவை புரட்சித் தலைவர் காலத்தில் கட்டப்பட்டு, கடந்த 1996 ஆம் ஆண்டு அம்மா ஆட்சிக் காலத்தில் பழுது பார்க்கப்பட்டன. அதன் பின்னர் வந்த ஆட்சிக் காலத்தில் கேட்பாரற்ற நிலையில் இருந்தன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது தொகுதியில் உள்ள அனைத்து மீனவர் பகுதிகளுக்கும் புதிய வீடுகள் கட்டி அவர்களது வாழ்வில் விளக்கேற்றி வைக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அம்மா அவர்கள் கோட்டையிலே இருந்தாலும் அவரது எண்ணமும் ஓட்டமும் முழுமையும் கிராமப் பகுதி மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதைக் குறித்துத்தான் என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்துள்ளார்கள். அந்த வகையில் எனது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மின் வசதி தண்ணீர் வசதியுடன், தனியாகக் கழிப்பிடம் மற்றும் குளியல் வசதியுடன் கூடிய மகளிர் துப்புரவு வளாகங்கள் கட்டித்தர வேண்டுமென இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் நிறைந்துள்ள பகுதியிலிருந்து நான் வந்திருக்கின்றேன். ஏழை ஆதிதிராவிட மக்கள் பெரிதும் நலன் பெறும் திட்டங்களில் ஒன்று தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் நல்லதொரு திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு 1991-96 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பணியாற்றியபோது வீடுகள் கோரும் விண்ணப்பதாரருக்கு மனை உரிமைச் சான்றிதழ் மட்டுமே இருந்தால் போதுமானது. ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் மனை உரிமைச் சான்றிதழ் செல்லுபடியாகாது, பட்டா இருந்தால்தான் செல்லுபடியாகும், அப்போதுதான் வழங்க முடியும் என அரசாணை பிறப்பித்துள்ளார்கள். ஏழையெளிய ஆதிதிராவிட மக்கள் பட்டா பெறுவதில் காலதாமதம் மற்றும் எத்தனையோ நடைமுறைச்

சிக்கல்கள் உள்ளன என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவார்கள். எனவே, தாய் உள்ளம் கொண்ட அம்மா அவர்கள் இதைக் கருணையுடன் பரிசீலித்து, மீண்டும் தொகுப்பு வீடுகள் பெறுவதற்கு மனை உரிமைச் சான்றிதழ் மட்டுமே வழங்கினால் போதும் என அரசாணை பிறப்பிக்கும்படி அம்மா அவர்களை இந்நேரத்தில் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

மேலும், ஏழையெளிய விவசாயிகள் பயன்பெறும் வகையில் நமது இதய தெய்வம் அம்மா அவர்கள் ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் கிணறு எடுத்து விவசாயம் செய்வதற்கு அரசு மூலம் உதவி செய்து வந்தார்கள். ஆனால், 1996 ஆம் ஆண்டு பதவியேற்ற ஆட்சியாளர்கள் இந்தத் திட்டத்தை அடியோடு இரத்து செய்துவிட்டார்கள். இதை மத்திய அரசுதான் கொடுக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் போன தி.மு.க. ஆட்சியாளர்கள் வலியுறுத்தி இருக்கலாம். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி ஏழை விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டுமென இந்த நேரத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 8 ஆம் வகுப்பு வரை படித்தப் பெண்களுக்குத் திருமணம் நிகழும் நேரத்தில் நிதி உதவி அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் இதை மாற்றி 10 ஆம் வகுப்பு வரை படித்து முடித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தார்கள். கிராமப்புறங்களில் பயிலும் ஏழைப் பெண்கள் கிராம தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளியில் பயின்று படிப்பை முடித்தவர்கள் 10 ஆம் வ்குப்பிற்காக நகரத்திற்குச் செல்ல வாய்ப்பு, குடும்பச் சூழ்நிலை மற்றும் வசதிகள் இல்லை. எனவே, அம்மா அவர்கள் இதைக் கருத்தில்கொண்டு மீண்டும் முன்போல 8 ஆம் வகுப்பு வரைப் படித்த பெண்ணுக்குத் திருமண நிதி உதவி அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஏழை எளிய பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்குப் புரட்சித் தலைவர் காலந்தொட்டு புரட்சித் தலைவி அம்மா காலம் வரை I.R.D.P. loan வழங்கப்பட்டு பல்லாயிரம் மக்கள் பயனடைந்தார்கள். ஆனால், இந்தத் திட்டத்தையும் கடந்த ஆட்சியாளர்கள் எடுத்துவிட்டனர். இதைக்



கருணை உள்ளம் கொண்ட தங்கத் தலைவி அம்மா அவர்கள் பரிசீலித்து மீண்டும் வங்கியின் மூலம் I.R.D.P. loan வழங்கிட ஆணை பிறப்பிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிராம ஊராட்சிகளில் எரியும் தெரு மின் விளக்குகள் மற்றும் குடிநீருக்காக இயக்கப்படும் பம்புகளின் மின்சாரக் கட்டணம் ஊராட்சியின் நிதியிலிருந்து செலுத்தப்படுவதால் பணப் பற்றாக்குறை ஏற்பட்டு ஊராட்சிக்கு வேண்டிய நலத் திட்டப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் கிராம ஊராட்சிகள் உள்ளன. தனிப்பட்ட ஒரு விவசாயிக்கு இலவச மின்சாரம் வழங்கும் அரசு, கிராம ஊராட்சியில் பயன்படுத்தப் படும் மின்சாரக் கட்டணங்களையும் அரசே செலுத்த ஆவன செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் - நெம்மேலி இடையே ஒரு சிறிய மேம்பாலம் அமைத்துக் கொடுத்தால் அதைச் சுற்றியுள்ள 15 கிராமங்களில் உள்ள மக்கள் பயனடைவார்கள். அக்கிராமங்களில் உள்ள மக்கள் திருப்போரூர் நகரத்திற்கு வரவேண்டும் என்றால் மாமல்லபுரம் போய்ச் சுற்றி வர வேண்டும் அல்லது கோவளம் போய்ச் சுற்றி வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. சுமார் 20 கிலோ மீட்டருக்கு மேல் சுற்றி வரவேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். ஆகவே, திருப்போரூர் - நெம்மேலி இடையே சிறிய பாலம் அமைத்துக் கொடுத்தால் 2 கிலோ மீட்டர் தூரத்தில் திருப்போரூர் நகரை வந்து அடைய முடியும். இச்சிறிய மேம்பாலம் அமைப்பதைக் குறித்து கடந்த நமது கழக அம்மா ஆட்சியின்போது அமைச்சர் அவர்கள் தலைமையில் 10 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு பார்வையிட்டது. அப்போது அவர்களுக்கு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் பிறகு வந்த தி.மு.க. ஆட்சியில் அப்பாலம் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, அம்மா அவர்கள் தற்போது உள்ள நமது கழக ஆட்சியில் இப்பாலம் அமைக்கும் பணியினை எடுத்துச் செய்து கொடுத்தால் அங்குள்ள சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள். மேலும், பின்தங்கிய ஆதிதிராவிடர் மக்கள் நிறைந்த பகுதி அது என்பதால் அம்மா அவர்கள் விடுபட்ட இப்பணியினை அவசியம் செய்து கொடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் ஒன்றியத்தில் கோவளம் ஊராட்சியில் உள்ள மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் பணம் கொடுத்து வாங்கும் நிலையில் உள்ளனர். நான் அக்கிராமத்திற்கு வாக்கு சேகரிக்கச் சென்றபோதும் மற்றும் நன்றி

கூறச் சென்றபோதும் அங்குள்ள சாலைகளையும் பார்வையிட்டேன். அவை மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அங்குள்ள மக்களிடம் மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் ஆட்சி அமைய நீங்கள் எங்களுக்கு வாக்களியுங்கள், குறைபாடுகளை அம்மாவிடம் எடுத்துக் கூறி, கண்டிப்பாகச் செய்து கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுத்துள்ளேன். எனவே, அம்மா அவர்கள் அவ்வூராட்சிக்குத் தனி நிதி ஒதுக்கீடு செய்து மேற்கூறிய குறைகளைச் சரி செய்து தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கல்பட்டிலிருந்து திருப்போரூர் செல்லும் சாலை குறைந்தது 27 கிலோ மீட்டர் இருக்கும். அச்சாலை தற்போது ஒரு வழிப் பாதையாக உள்ளது. திருப்போரூர் நகரைச் சுற்றி பல தொழிற்சாலைகள் மற்றும் கோயில்கள் நிறைந்த பகுதி என்பதால், போக்குவரத்து அதிகரித்து வருவதால் அங்கு அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. இச்சாலையை இருவழிப் பாதையாக அகலப்படுத்தித் தர அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மனு கொடுத்து முறையிட்டுள்ளேன். எனவே, அம்மா அவர்கள் அச்சாலையை இருவழிச் சாலையாக மாற்ற உத்தரவிட்டால் அப்பகுதியைச் சேர்ந்த 50,000 கிராமப் பொதுமக்கள், கோயில் பக்தர்கள், தொழிற்சாலையில் பணிபுரியும் ஆட்கள் அனைவரும் பயன்பெறுவார்கள் என பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

திருப்போரூர் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் தற்போது அதன் அருகில் உள்ள சிறுதாவூர் கிராமத்திலிருந்து கொண்டு செல்லப்படுகிறது. இருப்பினும் குடிதண்ணீர் பற்றாக்குறையாக உள்ளது. மேலும், அக்கிராம மக்களின் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்பதால் பேரூராட்சிக்குத் தண்ணீர் வரும் பைப்புகளை அடிக்கடி உடைத்து வருகிறார்கள். இதனால், அடிக்கடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதற்குக் காரணம், விவசாயம் பாதிக்கப்படுகிறது என்று அக்கிராம மக்கள் கூறுகிறார்கள். அதனால், பேரூராட்சிக்கு என்று ஒரு குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தி அப்பிரச்சினையைத் . தீர்த்து வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முருகப்பெருமானின் வழிபாட்டு ஸ்தலங்களில் திருப்போரூர் முருகன் கோயில் பாடல் பெற்ற சிறப்பு வாய்ந்த ஸ்தலமாகும். அங்கு ஒரு பெரிய தெப்பக் குளமும் உள்ளது. சித்திரை மாதமும், ஆடி மாதமும் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். பக்தர்கள் குளத்தில்



குளிக்கும்போது கூட்ட நெரிசலில் சிக்கி உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. எனவே, பக்தர்களைக் காக்கும்வண்ணம் குளத்தைச் சுற்றி தடுப்புக் கம்பிகள் அமைத்துத் தர அம்மா அவர்களை மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருப்போரூர் நகரத்தைச் சுற்றி பல குக்கிராமங்கள் உள்ளன. மேலும், அந்நகரத்தில் பல தொழிற்சாலைகள் உள்ளதால் அடிக்கடி விபத்து மற்றும் மக்கள் உடல் நலக் குறைவு ஏற்பட்டால் அங்குள்ள மக்கள் குறைந்தது 28 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செங்கல்பட்டு மருத்துவமனைக்கு வரவேண்டிய சூழ்நிலை உள்ளதால் தற்போது இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறும் மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருவதாக கடந்த தி.மு.க. ஆட்சியில் கூறி இன்றுவரை நிறைவேற்றப்படாமல் உள்ளது. அப்பணியினை அம்மா அவர்கள் நிறைவேற்றி அங்குள்ள மக்களின் நலனைப் பாதுகாக்க 24 மணி நேர மருத்துவமனை அமைத்துத் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய வடக்கால் ஊராட்சியில் உள்ள வடக்கால் கிராமத்திற்குச் செல்லும் பாதை தாழ்வான பாதையாக உள்ளதால் மழைக் காலங்களில் அங்குள்ள மக்கள் பாய்மரப் படகுகளில் செல்லும் நிலையில் உள்ளனர். இந்த நிலைமை மழைக் காலங்களில் தொடர்ந்து 4 அல்லது 5 மாதங்கள் நீடிக்கும். இதனால், அங்குள்ள மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். குறிப்பாக, பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள், வேலைக்குச் செல்லும் ஆட்கள் அனைவரும் குறிப்பிட்ட மாதங்களில் அவதிப்படும் நிலைமை உள்ளதால் அப்பாதையில் ஒரு சிறிய மேம்பாலம் அமைத்துக் கொடுத்தால் இது போன்ற உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியும். எனவே, அம்மா அவர்கள் இப்பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்குமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

·எனது தொகுதியில் அடங்கிய காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கூடுவாஞ்சேரி - நந்திவரம் என்ற பேரூராட்சி சென்னையையொட்டி உள்ள புறநகர்ப் பகுதியாகும். அப்பகுதியில் ஒரு பெரிய குளம் உள்ளது. அந்தக் குளத்தில் உள்ள தண்ணீரைத்தான் அங்குள்ள மக்கள் பயன்படுத்துகிறார்கள். ஆயினும், அந்தக் குளத்தை சுத்தப்படுத்தி குறைந்தது 20 வருடங்களுக்கு மேல் ஆகிறது. அங்குள்ள மக்களுக்கு இந்தத் தண்ணீரை விட்டால் வேறு வழியில்லை. ஆகவே,

அம்மா அவர்கள் அந்தக் குளத்தைத் தூர் எடுத்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதி ஆதிதிராவிட மக்கள் நிறைந்த பகுதி என்பதாலும் மற்றும் சென்னை நகரையொட்டியுள்ள பகுதி என்பதாலும், மக்கள் நிறைய பணிகளை எதிர்பார்ப்பதால் அம்மா அவர்கள் மேற்கூறிய குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மக்களுக்கு ஒரு வேலைக்காரியாக இருந்து நான் 24 மணி நேரமும் பணிபுரிவேன் என்று கூறி, அம்மா அவர்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, பெண் உறுப்பினர் என்பதால் முன்னுரிமை கொடுத்து 14 நிமிடம் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்கு நெருக்கமான நிர்வாக அமைப்பாகும். உள்ளாட்சி அமைப்பு முறை என்பது மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது. இந்த முறை 1994-லே 73-வது திருத்தச் சட்டத்திற்குப் பிறகு கொண்டு வரப்பட்டது. ஆனால், பல மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுவதற்கு தற்போதுள்ள மூன்று அடுக்கு முறை ஏற்றதாக இல்லையென்றும், எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முந்தைய நிலையான இரண்டடுக்கு உள்ளாட்சி அமைப்பைக் கொண்டு வருமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால், இது தொடர்பாக மாநில அரசின் விருப்பத்திற்கிணங்க இரண்டு அடுக்கு முறையைக் கொண்டுவர வசதி ஏற்படுத்தும் வண்ணம் 80-வது திருத்தச் சட்ட மசோதா பற்றிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் மாநில அரசிற்கு அதிகாரம் தரப்படுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அந்த மசோதா நாடாளுமன்றத்தின் Standing Committee-க்கு விடப்பட்டுள்ளது. இருந்தாலும், உள்ளாட்சித் தேர்தல்களைத் தாமதப்படுத்தாமல் இப்போது உள்ள மூன்றடுக்கு அமைப்பு அடிப்படையில் நடத்த



அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்கள் பரவலாக்கப்படுவது ஜனநாயகத்தைப் பலப்படுத்தும். குடிநீரைப் பொறுத்தவரையில் 2000 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்குள்ளாக வரலாறு காணாத அளவுக்கு குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு குடிநீர் இல்லாமல் மக்கள் மிகப் பெரிய கஷ்டத்திற்கு—(குறுக்கீடு)

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, என்ன வேண்டும்?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் பேசுகிற போது, அங்கே இரண்டு அடுக்கு முறையைக் கொண்டு வருவதற்கு கம்யூனிஸ்ட்டுகள் ஒத்துவரவில்லை என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. நாடாளுமன்றத்தில் இன்றைக்கு கூட்டாட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. தனி ஆட்சிதான் சட்டத்தைத் திருத்தமுடியும். தனிப் பெரும் கட்சி நாடாளுமன்றத்தை ஆளுவதற்கு இனிமேல் வாய்ப்பே கிடையாது. அதற்கான தகுதியும்கூட இன்றையதினத்திலே பாரதிய ஜனதாவுக்கும் கிடையாது. ஆக, எந்தச் சட்டத்தை வைத்துச் சொல்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 80-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவுக்காக ஒரு சர்வ கட்சிக் கூட்டமானது பிரதமர் தலைமையில் மே மாதம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பங்குகொண்ட கட்சிகள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டடுக்கு முறையை வைக்க விரும்பும் மாநிலங்கள் அவ்வாறு வைத்துக்கொள்ள அனுமதித்தால் நாட்டில் ஒரு uniformity இருக்காது என்று அதிலே காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், தங்கள் கருத்தைத் தெரிவித்தபிறகு, ஒருமித்த கருத்து ஏற்படாத காரணத்தால் அது Standing Committee-க்கு விடப்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே விவாதிக்கப்பட்டு இந்த மூன்றடுக்கு முறையைக் கொண்டு வந்த பின்னால், அந்த Standing Committee-யிலே இவர்கள் மட்டும் கூடி என்ன முடிவெடுக்க முடியும்?

நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வாருங்கள், பில்லை வையுங்கள். அங்கே விவாதிக்கலாம். முடிவெடுக்கலாம். அதைத்தான் கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அங்கே கூட்டப்பட்ட ஒரு சர்வ கட்சிக் கூட்டத்திலே கட்சிகளால் சொல்லப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலே சட்டத்தைப் பற்றிப் பேசுவது எப்படிச் சரியாக இருக்கும்? நாங்கள் இன்றைக்கு அமலிலேயிருக்கிற சட்டத்தை அமல்படுத்த வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்றைய மாநில அரசுகள் எந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமோ அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அமல்படுத்துகிற நிலையை யாரும் தடுக்கவில்லை. இன்று ஒரு பிரச்சினை சம்பந்தமாக விவாதிக்கிற நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்வது என்பது ஒவ்வொரு கட்சிக்கும் இருக்கிற சுதந்திரம். அது ஒரு துறையின் வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக இருக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எச். ராஜா அவர்களே, பேசுங்கள் (குறுக்கீடு) நீங்கள் இதை முடியுங்கள். கடைசியிலே அமைச்சர் இதற்கு பதில் சொல்வார். திரு. எச். ராஜா அவர்களே, பேசுங்கள். (குறுக்கீடு) சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் குறிப்பிடுகிறபோது, இந்தப் பிரச்சினையை Standing Committee-க்கு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு பிரதமர் அவர்கள் சிட்டிங்-கிலேயே இரண்டு ஆண்டுகளுக்கு மேல் உட்கார விருப்பமில்லை என்று அறிவித்துவிட்டார். ஆகவே, இது ஸ்டேன்டிங்குடன் இருக்குமா, சிட்டிங்-க்கு போகுமா என்பதே பிரச்சினைக்குரியதாக இருக்கிறபோது அதன் உள்ளே நுழையாமல் அவர் மற்ற செய்திகளுக்குப் போகலாம்.

**திரு. எச். ராஜா:** நான், நானாக இந்த விஷயத்திற்குள் போகவில்லை. இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்காக நான் இங்கே குறிப்பிட்டேன். *2000* ஆம் ஆண்டுகளில், *10* ஆண்டுகளுக்குள்ளாக வரலாறு காணாத அளவுக்கு குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு, குடிநீர் இல்லாமல் மக்கள் மிகப் பெரிய கஷ்டத்திற்கு உள்ளாவார்கள் என்றும், அதிலே தமிழ்நாடும் ஒன்று என்றும், தேசிய நீர் வள ஆணையத்தால் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், தமிழ்நாட்டில் இயற்கையாக நடைபெறும் நிலத்தடி நீர் செறிவூட்டல்



சுமார் *10* முதல் *25* விழுக்காடே ஆகும் என்றும், பெரும்பாலும் மழை நீர் மூலம் ஏற்படும் நீர் செறிவூட்டல் நமது பண்டைய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட குளங்கள், ஊரணிகள், ஏரிகள் மற்றும் கண்மாய்களின் மூலம் நிகழ்கிறது என்றும் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், அரசு பெரிய அளவில் மழை நீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, எனது காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கல்லல் மற்றும் சாக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள *600*-க்கும் மேற்பட்ட கண்மாய்களைத் தூர் வாரி மராமத்துச் செய்து வறட்சியைப் போக்கிட வேண்டுகிறேன். எனது தொகுதியில் உள்ள கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் பெரிய அளவு குடிநீர் கஷ்டம் உள்ளது. பிரச்சினையின் கடுமையைத் தீர்த்திட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, விசாலயன்கோட்டை, சாத்தம்மத்தி, சன்னவனம், பாகாடி, பனங்குடி, திருத்திப்பட்டி, ஆலத்துப்பட்டி, கம்பனூர், ஆதிதிராவிடர் காலனி, பொட்டல்வலசை, இளங்குடி, கருகுடி, நடராஜபுரம், வீரனேந்தல்பட்டி, பலவான்குடி, எ. கருங்குளம், கூந்தலூர், கொடுங்குளம் ஆகிய பகுதிகளில் தண்ணீர்ப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது.

மேலும், பொதுவாக கல்லல் ஒன்றியத்தில் நிலத்தடி நீர் உவர் நீராக உள்ள காரணத்தால், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக மட்டுமே இந்த ஒன்றியத்தின் பிரச்சினையைத் தீர்த்திட முடியும். இது தொடர்பாக, காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் குடிநீர் வழங்கும்வண்ணம் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்கின்ற அறிவிக்கையை வரவேற்கிறேன். இத்திட்டத்தைப் பன்னாட்டு நிதி உதவி மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் கல்லல் ஒன்றியத்தில் *111* குடியிருப்புகளுக்குப் பலன் கிடைக்கும். கல்லல் ஒன்றியத்தின் நீர்ப் பற்றாக்குறை பிரச்சினையைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை உடனடியாகச் செயலாக்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

*பிற்பகல் 1-00*

இதேபோன்று, சாக்கோட்டை ஒன்றியத்தில் நேமம், சுக்கனேந்தல், பிள்ளங்குடி, மணச்சை அம்பேத்கர் காலனி, நவத்தாவு புத்தன்பட்டி, மணச்சை புதுகாலனி, பெத்தாட்சி தெற்குக் குடியிருப்பு, காயம்பட்டி,

சிவலான்குடி, செங்காத்தாங்குடி ஆகிய கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

காரைக்குடி நகராட்சியைப் பொறுத்தவரை நீராதாரம் நல்லமுறையில் இருந்தும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு பற்றாக்குறையால் இங்கு தற்பொழுது கடுமையான குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். அதற்குப் பிறகு நகரின் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாகவும், பக்கத்துக் கிராமங்களில் உள்ளவர்கள் காரைக்குடியில் குடியேறியுள்ளதாலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு போதவில்லை. ஏற்கெனவே இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு அனுமதி வழங்கிட வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடியின் மையப் பகுதியில் அமைந்துள்ள கல்லுக்கட்டி கொப்புடைய அம்மன் கோவில் குளத்தில் கழிவுநீர் விடப்பட்டு குளம் அசுத்தமாக்கப்பட்டுள்ளது. இது நோய்க் கிருமிகளை உருவாக்கும் மையமாக ஆகிவருகிறது. எனவே, திருக்கோவில் குளத்தில் கழிவுநீர் விடப்படுவதை நிறுத்தி, குளத்தைத் தூர் வாரி, சுத்தப்படுத்திட வேண்டுகிறேன்.

அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்த ஒரு செயல்திட்டம் வரையறுக்கபபடவுள்ளது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. மிக வேகமாக வளர்ந்து வரும் கல்வி நகரமான காரைக்குடியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், காரைக்குடி நகரில் மீனாட்சிபுரம் குடிசைப் பகுதிகள், சந்தைப்பேட்டை, 36-வது வார்டு ஆகிய பகுதிகளில் நகர்ப்புற மகளிர் கழிவறைகள் கட்டும் சிறப்புத் திட்டத்தின்கீழ் கழிவறைகள் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்லல் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களில் உள்ள சாலைகளைப் போடுவதற்குப் போதுமான நிதியாதாரம் இல்லை. பல கிராமங்களுக்குச் சரியான சாலை வசதி இல்லாததால், மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர். குறிப்பாக, கல்லல் ஒன்றியத்தில் கொடுங்குளம், கூமாச்சிபட்டி, மீனாட்சிபுரம் ஆகிய பகுதி மக்கள் சாலை வசதி



இல்லாததால், கடந்த தேர்தலின்போது தேர்தல் புறக்கணிப்பு அறிவிக்கும் அளவிற்கு பிரச்சினை கடுமையாக உள்ளது. கல்லல் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களில் உடனடியாக சாலை அமைத்துத் தரவேண்டிய பகுதிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தனியாகக் கொடுத்துவிடுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மேற்படி சாலைகளை அமைத்துத் தர அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி நகராட்சியில் உள்ள பெரும்பாலான சாலைகள் பல ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமல் உள்ளன. பல இடங்களில் பாலங்கள் பழுதுபட்டு மரணக்குழிகளாக உள்ளன. மேலும் காரைக்குடியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ரிங் ரோடு ஒன்று அமைக்க வேண்டுகிறேன்.

காரைக்குடியில் உள்ள 4 மயானங்களில் தகன மேடைகள், சாலை வசதிகள், விளக்கு வசதிகள் மற்றும் போர்வெல் வசதிகள் ஏற்படுத்தவும், சுற்றுச்சுவர்களைக் கட்டி மேம்படுத்தவும் அரசுக்கு அனுமதி கோரி கருத்துரு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு உடனடியாக அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாக்கோட்டை ஒன்றியத்தின் கீழ்ப் பகுதியில் நெருக்கமாக பல ஊராட்சிகள் உள்ளன. அதில் பெரியகோட்டை, சிறுகப்பட்டி போன்ற ஜனத்தொகை அதிகமாக உள்ள ஊராட்சிகளும் உள்ளன. அப்பகுதி மக்கள் சிகிச்சைக்காக புதுவயல் பேரூராட்சிக்கு வரவேண்டியுள்ளது. எனவே, புதுவயலில் தற்போது இருக்கின்ற ஆரம்ப சுகாதார மையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ஊராட்சி என்பதை மாற்றி ஒன்றியத்திற்கு ஒரு ஊராட்சி என்று அனுமதி அளித்திட வேண்டும். இதன் மூலமாக மேலும் 177 ஊராட்சிகள் உடனடியாகப் பயன் பெற வாய்ப்பு உண்டு. ஆகவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஒன்றியத்திற்கு ஒன்று என விஸ்தரிக்கும்படி கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மூத்த உறுப்பினர் அண்ணன் ம. அப்துல் லத்தீப் அவர்கள் பேச முடியாத சூழ்நிலைக்கு வருந்துகிறோம். ஏனென்றால், அடுத்த மானியக் கோரிக்கையிலே உங்களைப் பேச அனுமதிக்கிறோம். இப்போது

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4.05

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியான சேடப்பட்டி தொகுதியில் பெருங்காநல்லூர் என்ற கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற வேட்பாளராகத் தேர்வு செய்து, சேடப்பட்டித் தொகுதியிலே வெற்றிபெறச் செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெறச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த சேடப்பட்டித் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்"

என்னும் வாக்கிற்கிணங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியில் அமர்ந்துள்ளார்கள்.(மேசையைத் தட்டும் ஒலி)

நீண்ட காலத்திற்கு நன்மை பயக்கும் பல திட்டங்களை வகுத்து, அனைத்து மக்களுக்கும் குடியிருக்க வீடு, நடப்பதற்கு நல்ல சாலை, குடிப்பதற்கு நல்ல குடிநீர், படிப்பதற்கு பள்ளிக்கூடம், வெளிச்சம் தர தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் கிடைத்தல் வேண்டுமென்பது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இலட்சியமாகும்.





மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழகத்திலே ஏழ்மை, வறுமை, இல்லாமை இல்லாத நிலைமையை உருவாக்கி, வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்பவர்கள் தமிழ்நாட்டிலே அறவே இல்லை என்ற உன்னதமான நிலையை உருவாக்குவதே இந்த அரசின் இலட்சியம் என்று தெரிவித்தார்கள். அந்த இலட்சியத்தை அடைவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையின் பணிகளை ஆய்வு செய்தபோதும், நிதிநிலைக் குழுக் கூட்டத்தின்போதும் சில முக்கியமான முடிவுகளை மேற்கொண்டார்கள். அதன் அடிப்படையிலே சாதனைகளைச் சரித்திரமாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இன்று பல புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

தருமபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முற்றிலும் பழுதடைந்துவிட்டதால் அந்த அலுவலகம் ஊராட்சி ஒன்றிய வளாகத்திலுள்ள சமுதாயக் கூடத்தில் இயங்கி வருகிறது. இடப் பற்றாக்குறையினால் அவதியுறும் அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு இதற்காக 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்காகக் குடியிருப்பு வசதி ஏதும் இல்லை. அங்கு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மட்டும் ஒரு பணியாளர் குடியிருப்பு தற்போதுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் நலனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 39,60,000/- ரூபாய் செலவில் கூடுதலாக 6 பணியாளர்கள் குடியிருப்புக் கட்ட உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக இந்த ஆண்டு 15,84,000/- ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தருமபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பணியாளர்களுக்கு 3 குடியிருப்புகள் 9,90,000/- ரூபாய் செலவில் கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த நிதியாண்டில் இதற்காக 3,96,000/- ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் வைத்த முக்கியமான கோரிக்கை, பெண்களுக்குக் கிராமப்புறங்களில் கழிப்பறை வசதி செய்து தரப்பட வேண்டுமென்பதுதான். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி 12,619 கிராம ஊராட்சிகளில் போதிய மின் வசதி, தண்ணீர் வசதி போன்ற வசதிகளுடன் கழிப்பிடம், குளியலறை மற்றும் துணிகள் துவைப்பதற்கென்று ஒவ்வொரு கிராம ஊராட்சியிலேயும் வளாகம் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டு நடப்பு நிதியாண்டில் 6,309 வளாகங்கள் ரூபாய் 126 கோடியே 18 இலட்சம் செலவில் கட்டப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதிலே நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிற்பகல் 1-10

கிராம மக்கள் தங்களது குறைகளைத் தீர்க்க கிராம நிர்வாக அதிகாரிகளை எளிதில் அணுகுவதற்கு அந்தந்த வருவாய் கிராமத்திலுள்ள ஊராட்சி அலுவலகங்களையொட்டி 60,000 ரூபாய் செலவில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, நடப்பு நிதியாண்டில் 24 கோடி ரூபாய் செலவில் 4,000 அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும். அனைத்து வருவாய் கிராமங்களுக்கும் 3 ஆண்டுகளில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரும்பாலான ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள் இல்லாமலேயே கிராமச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்த அவல நிலையைப் போக்கி அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி,



விளக்கு வசதி, பொதுக் கழிப்பிடம் மற்றும் கடைகளுக்கான மேடைகள் அமைத்தல் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், இத்தகைய வசதிகள் ஒவ்வொரு கிராமச் சந்தைக்கும் 7 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். 385 கிராமச் சந்தைகளை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி 38 கோடியே 19 இலட்சம் ரூபாய் ஆகும். 5 வருடங்களில் இந்த கிராமச் சந்தைகளுக்கு மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். இதனால் ஊரகப் பொருட்கள் விற்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன் அந்த ஊராட்சி ஒன்றியங்களின் வருமானமும் அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 77 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகையினை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் 82 இலட்சம் ரூபாயாக உயர்த்த உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் 192 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி ஏழை மக்களுக்கு நிலையான வருமானம் கிடைக்கச் செய்வதன் மூலமே வறுமையை ஒழிக்க முடியும். இந்த நோக்கம் நிறைவேற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கிராமப்புறப் பெண்கள் பொருளாதார வளர்ச்சி பெறும் நோக்கில் சுய உதவிக் குழுக்களை அமைத்து, சுய தொழில் குழுவில் உள்ள மகளிர் 30,000 பேருக்கு இந்த ஆண்டு இத்துறை மூலம் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோன்று கிராமப்புறங்களில் படித்து வேலையின்றி வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் இளைஞர்களையும் சுய தொழில் உதவிக் குழுக்கள் மூலம் ஒருமுகப்படுத்தி அவர்களில் 10,800 பேருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும். இதுநாள்வரை இருந்த அரசு படித்து வேலையற்று வறுமைக் கோட்டிற்குக்கீழே இருந்த இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[திரு. சி. துரைராஜ்] [2001 செப்டம்பர் 5

ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் 10,800 இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்க உத்தரவிட்டுள்ளார் என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக மொத்தம் 4 கோடியே 8 இலட்சம் ரூபாய் இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்குச் சற்று அதிகமாக வருமானம் உள்ள குடும்பங்கள் பயனடைய கடன் மற்றும் மானியத் திட்டத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் 40,000 ரூபாய் கடன் தொகை பெறலாம். இதில் மானியத் தொகையாக 10,000 ரூபாய் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயனாளிகள் மிகச் சுலபமாகக் கடன் பெறுவதற்கு, பத்திரப் பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள். நடப்பு நிதியாண்டில் 7 கோடியே 45 இலட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,828 வீடுகள் கட்டப்படும் என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—15*

பிரதம மந்திரி கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் 151 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 1446 கிலோ மீட்டர் நீளத்தில் ஊரகப் பகுதிகளில் தார்ச் சாலைகள் அமைக்கப்படும். 1,572 சிறு பாலங்கள் கட்டப்படும். பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1,446 கிலோமீட்டர் நீளத்தில் ஊரகச் சாலைகள் அமைப்பதற்கு ஏற்படும் திட்டமிடாச் செலவிற்கு, குறிப்பாக ஒப்பந்தப்புள்ளி வெளியிட விளம்பரச் செலவு, மண் பரிசோதனை செய்தல், தரக் கட்டுப்பாடு, சிறு மேற்பார்வை போன்ற பணிகளுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் 23,156 சிறு பாசனக் குளங்கள் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளன. இந்தச் சிறு பாசனக் குளங்களில் காலம் காலமாகத் தூர் வாரப்படாததாலும், ஆக்கிரமிப்பாலும், நகர்ப்புறங்களாக மாற்றப்படுவதாலும், புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படுவதாலும் இந்தக் குளங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இத்தகைய சீர்குலைவினால் நிலத்தடி நீர் குறைவதுடன் குடிநீர்த் தட்டுப்பாடு மற்றும் பாசனத்திற்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர்



2001 செப்டம்பர் 5] [திரு. சி. துரைராஜ்]

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சிறு பாசனக் குளங்களைப் புனரமைப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒரே தடவையில் சீரமைக்கும் முயற்சியின்கீழ், கிராம மக்கள் பங்கேற்புடன் (மேசையைத் தட்டும் ஒலி) ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும், குளங்களை ஆழப்படுத்துதல், குளங்களின் கரைகளை வலுப்படுத்துதல், தூர் வாருதல், மதகுகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இந்த 23,156 சிறு பாசனக் குளங்களை மேம்படுத்த 1,157 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய திட்டம் ஒன்று நிறைவேற்றப்படும் என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள பல்வேறு வெட்டுப் பிரேரணைகள் குறித்து தனித்தனியே விளக்கம் அளிக்க விருப்பம் இருந்தாலும் காலத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த வெட்டுப் பிரேரணைகளில் உள்ள பொருட்கள் பெரும்பாலும் பொதுவானவையாக இருப்பதால் அவற்றிற்கு பொதுவாக விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளில் 3 அடுக்கு முறையை நீக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். அரசமைப்புச் சட்டம், 73-வது சட்டத் திருத்தத்திற்கு முன்பாக தமிழ்நாட்டில் 2 அடுக்கு முறையே இருந்தது. அது ஒரு வலுவான அமைப்பு மட்டுமல்லாமல் நல்ல முறையிலும், இணக்கமான முறையிலும் செயல்பட்டு வந்தது. இப்போது நடைமுறையிலுள்ள 3 அடுக்கு முறையில் எழும் பிரச்சினைகளை இந்த அரசு நன்றாக அறிந்துள்ள காரணத்தால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டம் 243(C) பிரிவிற்குத் தகுந்த திருத்தங்கள் இயற்றி, முன்பு இருந்ததைப் போலவே 2 அடுக்கு முறையே வேண்டுமென்று மத்திய அரசுக்கு வலியுறுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தவும், தற்போது இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க அதாவது ஆட்சி எல்லைகளை மாற்ற வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்பட உள்ளதால், அவற்றின் எல்லைகளில் மாற்றம் எதையும் செய்யாமல் தற்போதுள்ள நிலையிலேயே இருக்க வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டுள்ளதால் மாண்புமி

உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. துரை. கி. சரவணன் ஆகியோர் தெரு விளக்குகள் அமைக்க வேண்டியதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். ஊரகப் பகுதிகளில் 51,247 குமிழ் விளக்குகளும், 10,20,668 குழல் விளக்குகளும் 69,955 சோடியம் ஆவி விளக்குகளும், 2,180 பாதரச ஆவி விளக்குகளும் உள்ளன.

முந்தைய ஆட்சியில் 69,955 சோடியம் ஆவி விளக்குகளை, 26 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவு செய்து அமைத்திருக்கிறார்கள். ஆனால், சோடியம் ஆவி விளக்குகளுக்குப் பதிலாக குழல் விளக்குகளைப் பொருத்தியிருந்தால், 3 கோடியே 75 இலட்சம் ரூபாய்தான் செலவாகியிருக்கும். சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்தியதால் 23 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவு செய்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், சோடியம் ஆவி விளக்குகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 8 கோடியே 23 இலட்சம் ரூபாய் மின் கட்டணம் கட்ட வேண்டியுள்ளது. சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதால் பன்மடங்கு கூடுதல் செலவு ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு இந்த அரசு குழல் விளக்குகளைக் கிராமப்புறங்களில் அமைக்க வேண்டுமெனவும், அதற்கான நிதியைச் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக் குழு மானியத்தில் இருந்தோ மேற்கொள்ளலாம் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக உருவாகிவரும் குடியிருப்புப் பகுதிகளுக்கும் மற்றும் விரைவாகப் பெருகிவரும் குடியிருப்புப் பகுதிகளுக்கும் விளக்குகளின் தேவையைக் கணக்கிட்டு விளக்குகளை அமைக்க வேண்டுமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இந்த வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய சமத்துவபுரங்கள் அமைக்க வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியுள்ளனர். கடந்த ஆட்சிக் காலத்தில் 150 சமத்துவபுரங்கள் கட்ட திட்டமிடப்பட்டு அதில் 132 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 சமத்துவபுரங்களில் 11 சமத்துவபுரங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. 4 சமத்துவபுரங்களின் கட்டுமானப் பணிகள் நிலப் பிரச்சினை காரணமாக



தொடங்கப்படாமல் உள்ளன. 3 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கித் தரத் தயாராக உள்ளன. 2000-2001 இடைக்கால நிதிநிலை அறிக்கையில் சமத்துவபுரத்திற்கென நிதியொதுக்கீடு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளுக்கு அதிகமான தொகுப்பு வீடுகள் தேவை என்று குறிப்பிட்டுள்ளார்கள். தொகுப்பு வீடுகளுக்கான எண்ணிக்கைகளும், நெறிமுறைகளும் மத்திய அரசால் வகுக்கப்பட்டு, தேவையான நிதியொதுக்கீட்டினை மத்திய அரசே மாவட்டங்களுக்கு நேரடியாக விடுவித்துவிடுகிறது. அந்த நெறிமுறைகளின்படி அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து பிற திட்டங்களுக்குப் பகிர்வு செய்வதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதிக்கு சில விதிமுறைகளை உருவாக்குவதுபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். 1997-98 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட மேம்பாட்டு நிதி 25 இலட்சம் ரூபாய். அந்த நிதியொதுக்கீட்டில் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயைக் குடிநீர் வசதிக்கும், 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயைச் சாலைகளுக்கும் பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது. அதன் பிறகு, 1999-2000 ஆம் ஆண்டில் அந்த நிதியிலிருந்து 3 பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு 12 இலட்சம் ரூபாயையும், 13 இலட்சம் ரூபாயில் தார்ச் சாலைகள் அமைப்பதற்கும், நடைபாதைகளைச் சரிசெய்வதற்கும், சந்துகளுக்கு சாலை அமைப்பதற்கும் செலவிட வேண்டுமென ஆணை வெளியிடப்பட்டிருந்தது. 2000-2001 ஆம் ஆண்டில் இந்தத் திட்ட நிதியிலிருந்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்குக் கணினிப் பாடத் திட்டத்திற்காக 3 பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. எனவே, 1997-98 ஆம் ஆண்டிலிருந்து 2000-2001 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்ட நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆணையிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் விருப்பப்படி பணிகளைத் தேர்வு செய்யலாம். செய்யக்கூடாத பணிகளைத் தவிர பிற பணிகளை அவர்கள் விருப்பப்படி தேர்வு செய்யலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-25*

நடப்பு நிதியாண்டில், ஊரக மக்களின் தேவைகளுக்கு ஏற்பவும், மாறி வரும் தேவைகளுக்கேற்பவும், சில திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியமாகிறது. நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்கான தொகை 82-00 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதியொதுக்கீட்டில், ஊரக மகளிருக்கான துப்புரவு வளாகம் கட்டுவதற்கும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மாணவ, மாணவிகளுக்கு விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும் முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளிக்க அரசு உத்தேசித்துள்ளது. மக்களின் தேவைகளுக்கேற்ப அரசு முன்னுரிமை கொடுத்து, இத்திட்டத்திலிருந்து நிதியை ஒதுக்கீடு செய்கிறது. எனவே, இம்மாதிரி முன்னுரிமை கொடுப்பது முதல் முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. சிவராஜ், திரு. ரா. ஈஸ்வரன், திரு. அ. இரா. மலையப்பசாமி, திரு. மு. அப்பாவு, திரு. க. முருகவேல் ராஜன், திரு. ஜி.கே. மணி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஐ. கணேசன், திரு. மு. கார்த்தி ஆகியோர், கொள்கை பற்றி விவாதிக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர். வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கு சுய வேலைவாய்ப்புகள் உருவாக்குதல், ஊரக மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், குடியிருப்பு, சாலைகள், தெரு விளக்குகள், பள்ளிக்கூடங்கள், சுற்றுப்புறச் சுகாதார மேம்பாட்டிற்காக வடிகால்கள், கழிப்பறை வசதிகள், சிறுபாசனக் குளங்கள், மருந்தகங்கள், சத்துணவுக் கூடங்கள் போன்ற வசதிகளை உருவாக்கி, ஊரக மக்கள் பயன்பெறத் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தி, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு முடிவு எடுத்துள்ளது குறித்து, ஊரக வளர்ச்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரையில், ஊரக வளர்ச்சித் துறை, கிராமப்புறங்களில் செயல்படுத்தப்படவுள்ள மேலான நல்ல பல திட்டங்களைப் பற்றி மாமன்றத்தின்முன் எடுத்து வைத்தேன். தற்போது பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களைப் பற்றித் தெரிவிக்க விரும்புகிறேன்.



பேரூராட்சிகள். முதன்முறையாக 28 சிறப்பு நிலை பேரூராட்சிகளும், 16 பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகங்களும் கணினி மயமாக்கப்படவுள்ளன. இதற்கு 44.00 இலட்சம் ரூபாய் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திலிருந்து மானியமாக வழங்கப்படும்.

பேரூராட்சிகளில் பெண்களுக்காக மொத்தம் 725 கழிப்பிடக் கூடங்கள், 18,72,00,000 ரூபாய் செலவில் கட்டப்படும். இதனைப் பெண்கள் சுய வேலைவாய்ப்புக் குழுக்கள் பராமரிக்கும். முதன்முறையாகத் தமிழ்நாட்டிலேயே நகரக் கழிவு மேலாண்மை, நகர்ப்புற மக்கள் நல மேலாண்மை, மக்கள் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், குறைந்த செலவில் நோய் கண்டுபிடிப்புப் பரிசோதனைக் கூடங்கள் அமைத்தல், மன நலக் காப்பகம் அமைத்தல், சிறு அறுவைச் சிகிச்சை நிலையங்கள் அமைத்தல், விலங்கு நல மேலாண்மை, சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் ஆகிய அனைத்தும் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இதற்காக, 881.00 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டம் தமிழ்நாடு 3 ஆம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிகள், தஞ்சை, வாணியம்பாடி, வாலாஜாபேட்டை, காரைக்குடி, திண்டுக்கல், ஆரணி, கோபி, இராமநாதபுரம், பாமக்குடி, விருத்தாச்சலம் ஆகிய நகராட்சிகளில் உள்ள நகரப் பேருந்து நிலையங்களின் ஓடுதளம், சிமெண்ட் ஓடுதளமாக மாற்றப்படும். இதற்காக 2.00 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** ஸ்ரீவில்லிப்புத்தூர், சங்கரன்கோவில், தூத்துக்குடி, நாகர்கோவில், பத்மநாபபுரம் ஆகிய சுற்றுலா நகரங்கள் மேம்பாடு செய்யப்படும். செங்கல்பட்டு, ஆலந்தூர் உள்ளிட்ட 32 நகராட்சிகளுக்குக் குடிநீர் விநியோகம் மேம்படுத்தப்படும். பகுதி-2 திட்டத்தின்படி நகராட்சிகளில் உரக் கிடங்குகள் அமைக்க – compost yard - நிலம் கையகப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டம் 22 நகராட்சிகளில் செயல்படுத்தப்படும். தாய்-சேய் நல விடுதிகள் மேம்பாட்டிற்காக 15 இலட்சம் ரூபாய், 7 நகராட்சிகளுக்கு வழங்கப்படும்.

[திரு. சி. துரைராஜ்] [2001 செப்டம்பர் 5

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். நவீன முறையில் குப்பைகளைப் பயனுள்ளதாக ஆக்க, mobile composter மூலமாகக் குப்பைகளை இறுக்கி, இறுக்கிய குப்பைகளைக் கடல் அரிப்பு போன்றவற்றைத் தடுக்கப் பயன்படுத்த ரூ.1 கோடி ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிப் பகுதிகளில் குடிசை வாழ் மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளில், அடிப்படை வசதிகளை மேம்படுத்த 27 கோடி ரூபாய் வழங்கப்படும்.

நகர்ப்புறங்களில் அடித்தளத்திலுள்ள மக்கள், குறிப்பாக பெண்கள், கழிப்பிட வசதி ஏதுமின்றி, அல்லலுறுவதைக் கண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தண்ணீர் வசதியுடன்கூடிய கழிப்பிடம் கட்ட மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் 102 நகராட்சிகளில் 400 கழிப்பிடக் கூடங்கள் ரூபாய் 16 கோடி செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இக்கழிப்பிடக் கூடங்கள் பெண்கள் நலக் குழுக்களால் பராமரிக்கப்படும். இக்கழிப்பிடங்களில் பயன்படுத்தப்படும் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் கழிப்பிடங்களைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்படும். மேலும், நகர்ப்புறங்களில் சுற்றுப்புறச்சூழல் பாதுகாத்தல் மற்றும் சுகாதார விழிப்புணர்வினை ஏற்படுத்த ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் செலவிடப்படும்.

நகர்ப்புறப் பகுதிகளில் குப்பைகள் இல்லாத பகுதிகள்- zero garbage area- ஏற்படுத்தி வீடுகள்தோறும் குப்பைகளைச் சேகரித்து, plastic தவிர ஏனைய குப்பைக்கூளங்களை விவசாயிகளுக்குத் தேவையான கலப்பு உரமாக அந்தந்தப் பகுதிகளிலே செய்யவும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகத் திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகராட்சி. இத்தருணத்தில் சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையினைத் தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமையாகும். 1996 ஆம் ஆண்டில் மேயராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் சென்னை மாநகரத்தைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவேன் என்று சொல்லி, பல கோடி ரூபாயை பல்வேறு அமைப்புகளிடமிருந்து சென்னை மாநகராட்சி கடனாகப் பெற்றுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 20.04 கோடியாகும். 1998-99 ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய்



2001 செப்டம்பர் 5] [திரு. சி. துரைராஜ்]

35.22 கோடியாகும். 1999-2000 ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 45.11 கோடியாகும். 2000-2001 ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 51.34 கோடியாகும். சென்னை மாநகராட்சியின் வருவாயைப் பெருக்கி நலத் திட்டங்களைச் செயற்படுத்தாமல், சென்னை மாநகராட்சி பல கோடி ரூபாய் கடன் வாங்கி, மீளாக் கடனில் மூழ்கியுள்ளது என்பதனை இந்த மாமன்றத்திற்கு மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து சென்னை மாநகராட்சி ஒப்பந்தக்காரர்களுக்கு, அவர்கள் செய்த வேலைக்குப் பணம் பட்டுவாடா செய்யவில்லை. எனவே, சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும், ஒப்பந்தக்காரர்கள், அவர்கள் செய்த வேலைகளுக்குப் பணம் தரமுடியாத நிலையில் ஒப்பந்தக்காரர்கள் எந்த வேலையையும் செய்ய முன்வரவில்லை. 30-6-2001 ஆம் நாளன்று ஒப்பந்தக்காரர்களுக்கு நிலுவையாக பட்டுவாடா ஆகாமல் இருந்த தொகை 19 கோடியே 39 இலட்சம் ரூபாயாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையைப் பரிசீலனை செய்து, சென்னை மாநகராட்சிக்கு உடனடியாக 33 கோடியே 71 இலட்சம் ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) ஜூலை மாதத்தில் வழங்கினார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-35

சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையைச் சரிகட்டினார்கள். தமிழகத்தின் நிதிப் பற்றாக்குறையுடைய வேறு எந்த மாநகராட்சிக்கும் செய்யாத மாபெரும் நிதியுதவியினை சென்னை மாநகராட்சிக்கு வழங்கி, சரிந்துவிட்ட சென்னை மாநகராட்சியைச் சரிசெய்து. நிறுத்தப்பட்ட வேலைகளை மீண்டும் தொடர வைத்த பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நடப்பாண்டில் சென்னை மாநகராட்சியில் 96 இடங்களில் கழிப்பிடக் கூடங்கள் சுமார் 2 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டும் திட்டத்திற்கான மொத்தத் தொகையையும் மாநில அரசு சென்னை மாநகராட்சிக்கு வழங்கும் என்பதைப் பெருமையோடு (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரையில் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களைப்பற்றித் தெரிவித்தேன். தற்போது, சென்னை மாநகரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீர்த் திட்டச் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ள திட்டங்கள் குறித்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னை குடிநீர்த் திட்டம். பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், நீர் நிருவாகத்தில் நீண்டகாலத் தொலைநோக்குப் பார்வை இல்லாததாலும், சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு மிக அதிக அளவில் இருந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் அமைந்த அரசு சென்னைக்கு அவசரகால மற்றும் நீண்டகாலத் திட்டங்களைச் செயல்படுத்தி, உடனடித் தேவையான குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில், லாரிகள் மூலமாகவும் இரயில்கள் மூலமாகவும் நீண்ட தொலைவிலிருந்து நீர் கொண்டு வருவதை இப்பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இத்தகைய குடிநீர்த் தட்டுப்பாட்டினை இனி வருங்காலத்தில் சென்னை நகர மக்கள் சந்திக்காமல் இருக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீண்டகாலத் திட்டத்தை வகுத்துள்ளார்கள். அதன் ஒரு பகுதி வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டமாகும். இந்தத் திட்டத்தை 18 மாத காலங்களில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 720 கோடி ரூபாயாகும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மழைநீர் வீணாகக் கடலில் சென்று கலப்பதைத் தவிர்க்க கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு, பாலாறு ஆகியவற்றில் தடுப்பணைகள், நீர்த் தேக்கங்கள், கசிவுநீர்க் குளங்கள் மூலம் உபரி நீரைச் சேகரிப்பது சென்னை குடிநீர் வழங்கல் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணியாகும். செங்குன்றம், மாதவரம் ஏரி, கொரட்டூர் ஏரி, அம்பத்தூர் ஏரி, ரெட்டை ஏரி ஆகியவற்றின் கொள்ளளவை உயர்த்துதல், புதியதாக நீர்த் தேக்கங்கள் கட்டுதல், காவிரி ஆற்றிலிருந்து குழாய்கள் மூலம் நீர் கொண்டு வருதல் ஆகிய திட்டங்களுடன் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தையும் செயல்படுத்தினால் இனி எதிர்வரும் காலங்களில் பெண்கள் குடங்களைத் தூக்கிக் கொண்டு அலையும் நிலை ஏற்படாது என்ற நிலையை ஏற்படுத்துவதே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நோக்கமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்படி திட்டத்திற்கான செலவினங்கள் பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும்.



சென்னை மாநகரம் பல குடிநீர்த் தட்டுப்பாடுகளைக் கடந்த காலங்களில் சந்தித்துள்ளது. அந்தச் சமயங்களில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நீர் நிறுத்தப்பட்டு, தொழிற்சாலைகளை மூடும் அபாய நிலையும் இருந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அரசு, தொழிலாளர்களின் நிலைமைகளைக் கருத்தில்கொண்டு தொழிற்சாலைகளுக்கு மாற்று ஏற்பாடாக, சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரையும் மற்றும் கொளவாய் ஏரியிலுள்ள நீரையும் வழங்கி தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்கும் நிலையைச் செய்துள்ளது.

கடலோரப் பகுதிகளில் வாழும் ஏழை மீனவர் சமுதாயத்திற்குத் தொடர்ந்து நல்ல குடிநீர் கிடைக்க உவர் நீரை நன்னீராக்கும் குடிநீர் நிலையங்கள் தற்போது அயோத்தியா குப்பம் மற்றும் இராயபுரத்திலுள்ள காசிமேடு ஆகிய இரு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், உவர் நீரை நன்னீராக்கும் திட்டங்கள் பல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூடுதலாக இரண்டாயிரம் குடிநீர்த் தொட்டிகளை, தண்ணீர் வராத இடங்களுக்கு அமைக்க உத்தரவிட்டு, பணிகள் முழு வீச்சுடன் நடைபெற்று வருகின்றன. இது தவிர, 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சியில் குடிசைப் பகுதிகளில் குடிநீர் அல்லாத மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய 100 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை நீர் இறைக்கும் மின்சார மோட்டார்களுடன் இணைத்து, தொட்டியின் வழியே குழாய்கள் மூலமாக நீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுகின்றன என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

அடுத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். நிலுவையிலுள்ள 51 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 63 நகரக் குடிநீர்த் திட்டங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. நடப்பாண்டில் செயல்படுத்தப்படவுள்ள நகரக் குடிநீர்த் திட்டங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நடப்பாண்டில், 46 பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நகரக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். திருவொற்றியூர், மாதவரம், கத்திவாக்கம், அம்பத்தூர், ஆவடி, திண்டிவனம், விழுப்புரம், திருமழிசை, சின்ன சேக்காடு, போரூர், இடைக்கழிநாடு,

நந்தம்பாக்கம், மேல்விசாரம், நாட்ராம்பள்ளி, ஒடுக்கத்தூர், ஜோலார்பேட்டை, தேசூர், பொணமல்லூர், பரங்கிப்பேட்டை, தடாவூர், தம்மம்பட்டி, காடையாம்பட்டி, எடங்கணசாலை, நாமகிரிப்பேட்டை, பிபுதுப்பட்டி, பி.பி.அக்ரஹாரம், கீழ்குந்தா, வரதராஜன்பேட்டை, உப்பிடமங்கலம், திருமங்கலம், எழுமலை, டிகல்லுப்பட்டி, ஏ. வெள்ளாளப்பட்டி, திருநகர், பாளையம், வடமதுரை, சேவுகம்பட்டி, தாடிக்கொம்பு, எரியோடு, கெங்குவார்பட்டி, மேல சொக்கநாதபுரம், எஸ். கொடிகுளம், கழுகுமலை, எட்டையாபுரம், கயத்தாறு, கீழப்பாவூர் ஆகிய இடங்களில் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,800 ஊரகக் குடியிருப்புகளுக்கு மின்னிறைப்பான் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டம் நடப்பாண்டில் செய்ல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு முதல், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மையங்களுக்கும், நோயாளிகள் மற்றும் பொதுமக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யும் விதமாக, ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டிகள், ஆரம்ப சுகாதார மையங்களுக்குக் கட்டித் தரப்படும். இந்த ஆண்டு 9,016 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும். இதற்கு ஆகும் செலவுகள் சுமார் 9 கோடி ரூபாய் ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீரில் ஃப்ளோரைடு, உவர் தன்மை, இரும்புச் சத்து அதிகமுள்ள பகுதிகளுக்குக் குடிப்பதற்கு உகந்த தண்ணீர் வழங்க, பன்னாட்டு நிதியுதவியுடன் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என ஆணையிட்டு, 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பாண்டில், ஆய்வுக்காகவும், செயலுக்காகவும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள சில சிறப்புக் குடிநீர்த் திட்டங்களை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான ஒகேனக்கல் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம், சுமார் 1,008 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மூலம், தருமபுரி மாவட்டத்தில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையிலும் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, பன்னாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



வறட்சியாலும், தண்ணீரில் உவர் தன்மை அதிகமாக உள்ளதாலும், பல ஆண்டுகளாகக் குடிப்பதற்கு உகந்த நீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டு வந்த இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட மக்களின் கண்ணீரைத் துடைக்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 850 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பன்னாட்டு நிதியுதவியுடன், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவினாசி—அத்திக்கடவுத் திட்டம். பல ஆண்டுகளாக கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த அன்னூர், அவினாசி, நம்பியூர் பகுதி மக்களின் நீண்டகாலக் கனவாக இத்திட்டம் உள்ளது. அக்கனவை நனவுபடுத்தும் வகையில் அத்திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-45*

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் வறட்சிக்கு இலக்கான பகுதிகளான டி. கல்லுப்பட்டி, சேடப்பட்டி, உசிலம்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஆண்டிப்பட்டி – சேடப்பட்டி கூட்டுக் கூடிநீர்த் திட்டம் வைகை ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் நகருக்குக் குடிநீர் வழங்கும் பாலாறு மாசுபட்டுவிட்டமையால் நிலவி வரும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினை நிரந்தரமாகத் தீர்க்க, தீர்வுகாணும் வகையில் காவிரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு ஒரு சிறப்புக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது காணப்படும் வறட்சி நிலைக்குக் காரணம் இதுவரையிலும் பெய்த மழையை நிலத்தில் நாம் சேமிக்காததே ஆகும். இந்த அரசு மழை நீரைச் சேமிக்கும் பணிகளை விரைவுபடுத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல பணிகளைச் செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய பகுதிகளில் மழை நீர் சேமிப்பின் அவசியத்தை எடுத்துக்கூறி, மழை நீர் சேமிப்பு முறையைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, மழை நீரைச் சேமித்து குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வழங்கல் மானியம் தொடர்பாக மொத்தம் 86 வெட்டுத் தீர்மானங்கள் மாண்புமிகு உறுப்பினர்களால் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 33 வெட்டுத் தீர்மானங்கள் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டித் தருதல் தொடர்பானவை ஆகும். 37 வெட்டுத் தீர்மானங்கள் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அமைத்துத் தருவது தொடர்பானவை ஆகும். குடிநீர் வசதி இல்லாத அனைத்துப் பகுதிகளுக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அதன் மூலம் குடிநீர் வழங்குவதற்கும், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்குவதற்கும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் இன்மை காரணமாக என்னால் அனைத்து வெட்டுத் தீர்மானங்களுக்கும் பதில் அளிக்க இயலவில்லை. எனவே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இத்துறையின் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் மேதகு ஆளுநர் உரையில் உள்ளாட்சி மன்றத்தின் தேர்தலை நடத்துவதற்காக வாக்காளர் பட்டியல் சரி செய்யப்படும் என்று சொன்னார்கள். அதன்படி, வாக்காளர் பட்டியலில் புதிதாக விடுபட்டுப் போனவர்கள் எத்தனை பேர் இதுவரைச்



சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்? அதேபோல, கடந்தகால அரசில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நீர் ஆதாரங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நேரத்தில் தேர்தல் வந்துவிட்ட காரணத்தால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. அதையெல்லாம் இப்பொழுது செயல்படுத்தாமல் வேறு புதிய திட்டங்களை அங்கே செயல்படுத்துவதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். அதற்கு அமைச்சருடைய பதிலை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய வெள்ளக்கோவில் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்த இடத்தில், வருகின்ற ஞாயிற்றுக்கிழமை அன்று குடிநீர்த் திட்டம் தொடங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படுகிற நிதியிலிருந்து எது எதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை வகுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதைத்தான் Budget Memorandum என்பதிலிருந்து நான் எடுத்துப் படித்துக் காண்பித்தேன். ஆக, ஒரு பகுதியிலே 82 இலட்சம் என்று சொல்லிவிட்டு, இப்படிப் பல திட்டங்களுக்கு நீங்கள் எடுக்கிறீர்களே என்று சொன்னேன். அதற்கு, முன்னாலேகூட எடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர் ஓர் உதாரணத்தைக் காட்டினார். நான் அதற்குள்ளே போகவில்லை. ஆனால், அன்றைக்கும் நம்முடைய கல்வி அமைச்சர் எழுந்து, அதெல்லாம் கிடையாது; நீங்கள் எதற்கு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்; எவ்வளவு வேண்டுமானாலும் செலவு பண்ணலாம் என்றார். ஆனால், நிதியமைச்சர் அவர்கள் அன்றைக்குப் பேசாமல் உட்கார்ந்து இருந்தார். நான் அப்பொழுதே சொன்னேன், "அந்தந்த மந்திரி வேலையை அந்தந்த மந்திரி பார்த்தால் இந்தப் பிரச்சினை கிடையாது; எங்களை confuse பண்ணாதீர்கள்" என்று. இப்பொழுது கல்வி அமைச்சர் என்ன சொல்கிறார்? நாங்கள் இஷ்டத்திற்கு செய்யலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் சொல்கிறேன். உங்களுக்கு வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள். வேண்டும் என்றால் எடுத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்கு வேண்டுமானாலும் என்று எப்படி எடுத்துக்கொள்வது? திரு. கேஎன். இலட்சுமணன்.

(பிற்பகல் 1—50)

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளை எப்படி முறைப்படுத்துவது என்பதுபற்றி நிறையப் பேசி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன் அவர்களே, எல்லாவற்றுக்கும் பதில் சொல்வதாக இருந்தால் விடிய விடிய சட்டசபை நடத்த வேண்டும். உங்களுடைய கருத்து அமைச்சருடைய குறிப்புக்குப் போயிருக்கிறது. அதற்கு உரிய விளக்கத்தைப் பின்னால் சொல்வார். எல்லோரும் பசியோடு காத்திருக்கிறார்கள்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (று) கோரிக்கை எண் 27 — ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,544,57,61,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"* என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

[2001 செப்டம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.



2001 செப்டம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கு. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. கு. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.159,10,78,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.775,32,87,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6-9-2001) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

58. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மெக்னீசியம் அண்டு மெரைன் கெமிக்கல்ஸ் லிமிட்டெட்டின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை.



(1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

59. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

60. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

68. மானியக் கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

69. ஊரக வளர்ச்சி பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

70. மானியக் கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

71. மானியக் கோரிக்கை எண் 49 - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் - மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

72. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் - மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் நிருவாகச் செயல்திறன் பற்றிய குறிப்பு,2000-2001. (தமிழ், ஆங்கிலம்).

— — —

# இணைப்பு-I

(520 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 27 – ஊரக வளர்ச்சி

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

## இயல் – I

### முன்னுரை

தமிழ்நாட்டில் 12,619 கிராம ஊராட்சிகள் உள்ளடங்கிய 385 வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. 69 சதவிகித மக்கள் அதாவது, 3.6 கோடி மக்கள் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்றனர். ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முதன்மை நோக்கங்கள் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வறுமையைப் போக்குவது, சமுதாயத் தேவைக்கேற்றவாறு கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், வேலைத் திட்டங்களுக்கு உதவி அளித்து ஊக்குவித்தல் மற்றும் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தலும் ஆகும். மத்திய, மாநில மற்றும் சுற்றுப்புறத்தை வளப்படுத்தும் திட்டங்கள் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி நிலையான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் முன்னுரிமை அளிக்கின்றன.

வறுமை ஒழிப்பு மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கான நிதியைப் பகிர்ந்தளிப்பதற்கு மத்திய அரசினால், திருத்திய கோட்பாடு பின்பற்றப்பட்டதால் இம்மாநிலத்தின் நிதிப் பங்கு 1–4–98 முதல் 7.062 விழுக்காட்டிலிருந்து 4.987 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. கடந்த நான்கு வருடங்களில் தமிழ்நாடு மத்திய அரசிடமிருந்து குறைவான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றதன் மூலம் மொத்தமாக ஏற்பட்ட இழப்பு ரூ.419.32 கோடியாகும்.

இந்த அரசு பதவியேற்ற பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துறையின் திட்டச் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ததின் அடிப்படையில் மத்திய அரசை 7.062 விழுக்காடு அடிப்படையிலேயே

இம்மாநிலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டது மட்டுமின்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்கு சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர்களையும் மற்றும் மத்திய அரசுத் துறைகளின் அதிகாரிகளையும் நேரில் சந்தித்து இம்மாநிலத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்குமாறும் கடந்த வருடங்களில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யுமாறும் கேட்டுக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது.

இந்த அரசு, மகளிருக்கு அவர்களது முழுத் திறமையைப் பயன்படுத்திக்கொள்வதற்கும், எடுக்கப்படும் முடிவுகளில் அவர்கள் முழுமையாகப் பங்கேற்பதற்கும் ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்துவதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும். இந்த அரசின் வறுமை ஒழிப்புக் கொள்கை மகளிருக்கு பொருளாதார அமைப்பில் பங்குபெறுவதற்கு ஏற்றவாறு தற்பொழுது உள்ள நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துதல், சமுதாயத்தில் அவர்களை ஒருங்கிணைத்தல், சுலபமாகக் கடன் பெறுவதற்கான வசதி ஏற்படுத்துதல், பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பின்பற்றுதல் மற்றும் சந்தையில் பொருட்களை விற்பதற்கான வசதியளித்தல் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

இந்த அரசு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களைப் புதிய கண்ணோட்டத்துடனும், முனைப்புடனும் செயல்படுத்தும்.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 11 விழுக்காடு வீடுகளில் மட்டுமே கழிப்பறை வசதிகள் உள்ளன. அகில இந்திய அளவில் 15 விழுக்காட்டுடன் ஒப்பிடும்பொழுது இது குறைவு. ஊரகப் பகுதிகளில் வாழும் பெண்களுக்கு துப்புரவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

மாவட்ட அளவில் மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் செயல்படுத்துகின்றன. திட்டங்களின் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களையும், இலக்குகளையும் அடைவதற்கு இந்த முகமைகள் நிருவாக மற்றும் தொழில்நுட்ப உதவியை அளிக்கின்றன.

மனித வள மேம்பாட்டை அடைவதற்காக மாநில அளவில் மறைமலை நகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி மையமும், மண்டல அளவில் பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, டி. கல்லுப்பட்டி மற்றும் எஸ்.வி. நகரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள



ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்களும் செயல்படுகின்றன. இந்தப் பயிற்சி மையங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட வார்டு உறுப்பினர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், சமூக சத்துணவுத் திட்டப் பயிற்றுநர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கென்று தேவைக்கேற்ற பயிற்சி அளிக்கப்படுகிறது.

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தன்னாட்சி அடிப்படையில் செயலாற்றி, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு விளக்குகள், சாலைகளை மேம்படுத்துதல், குடியிருப்பு வசதி, துப்புரவு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை அளிப்பதிலும் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது மற்றும் பராமரிப்பது ஆகியவற்றிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அரசியலமைப்புச் சட்டத்தின் 73–வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க இந்த மாநிலத்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, இயற்றப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 73–வது சட்டத் திருத்தத்திற்கு முன்பாக தமிழ்நாட்டில் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் என இரண்டடுக்கு உள்ளாட்சி முறை பின்பற்றப்பட்டு இவற்றிற்குப் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது ஒரு வலுவான அமைப்பு முறையாக இருந்ததுமட்டுமன்றி, நடைமுறையிலும் நன்றாகவும் இணக்கமாகவும் செயல்பட்டு வந்தது. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பை ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தியிருப்பதன் மூலம் எழும் பிரச்சினைகளை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இந்த மூன்றடுக்கு அமைப்புகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவையாக உள்ளன. பல மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு தற்பொழுதுள்ள மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு ஏற்றதாக இல்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243–C பிரிவிற்குத் தகுந்த திருத்தச் சட்டம் இயற்றி தமிழ்நாட்டில் முன்பு இருந்ததுபோல இரண்டடுக்கு உள்ளாட்சி அமைப்பு முறையைக் கொண்டுவருமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

[2001 செப்டம்பர் 5

2001-2002 ஆம் ஆண்டிற்கு ஊரக வளர்ச்சித் துறையினால் செயற்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை எண் 27-ன்கீழ் ஊரக வளர்ச்சித் துறைக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1545.05 கோடியாகும். இதில் ரூ.375.47 கோடி திட்டச் செலவுகளுக்காகும். இந்த ஒதுக்கீடு இம்மாநிலத்தின் மொத்த வருவாய் செலவான ரூ. 24522.00 கோடியில் 6.29 சதவீதமாகும்.

**திருத்திய வரவு செலவு மதிப்பீடு 2001-2002**

**அட்டவணை எண் 1**

| | கணக்குத் தலைப்பு | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | | |
| 2202 | பொதுக் கல்வி | 27.84 | | 27.84 |
| 2210 | மருந்தகம் மற்றும் பொதுச் சுகாதாரம் | | 276.64 | 276.64 |
| 2215 | குடிநீர் வடிகால் மற்றும் துப்புரவு | 2416.37 | 188.05 | 2604.42 |
| 2225 | பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் நலம் | 422.81 | 11.80 | 434.61 |
| 2236 | சத்துணவு | 10.56 | 15486.66 | 15497.22 |
| 2501 | ஊரக வளர்ச்சிகள் சிறப்புத் திட்டம் | 2137.90 | | 2137.90 |
| 2505 | ஊரக வளர்ச்சி | 12283.45 | | 12283.45 |
| 2515 | இதர ஊரக வளர்ச்சி திட்டங்கள் | 1346.38 | 48945.07 | 50291.45 |
| 2551 | மலைப்பகுதி மேம்பாடு | 34.53 | | 34.53 |
| 2702 | சிறுபாசனம் | | 100.00 | 100.00 |
| 2810 | மரபுசாரா எரிசக்தி | 222.19 | | 222.19 |
| 3454 | மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரம் | | 18.07 | 18.07 |
| 3604 | உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கான ஈடு செய்தல் மற்றும் வழங்குதல் | 18644.72 | 51732.00 | 70376.72 |
| | மொத்தம் — மானிய எண் 27 | 37546.75 | 116758.29 | 154305.04 |



2001 செப்டம்பர் 5]

**கோரிக்கை எண் 55 – மூலதன ஒதுக்கீடு**

**அட்டவணை எண் 2**

| | கணக்குத் தலைப்பு | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | | |
| 4515 | ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கான மூலதன ஒதுக்கீடு — சமுதாய வளர்ச்சி— கட்டடங்கள். | 33.83 | | 33.83 |
| | மொத்தம் மானியம் எண் 5 | 33.83 | 0.00 | 33.83 |

[2001 செப்டம்பர் 5

**கோரிக்கை எண் 61 – கடன்**

**அட்டவணை எண் 3**

| | கணக்குத் தலைப்பு | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | | |
| 6515 | இதர ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கான கடன்கள், இதர கடன்கள், ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி-V ஊரக திட்டத்தின்கீழ் சாலைகள், மேம்பாலங்கள் மற்றும் வடிகால்களை மேம்படுத்துவதற்கான கடன் | 1875.00 | | 1875.00 |
| | மொத்தம் கோரிக்கை எண் 61 | 1875.00 | 0.00 | 1875.00 |

**கோரிக்கை எண் 60 இதர ஒதுக்கீடு**

**அட்டவணை எண் 4**

| | கணக்குத் தலைப்பு | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | | |
| 4515 | இதர ஊரக வளர்ச்சி திட்டத்திற்கான மூலதன ஒதுக்கீடு—சமுதாய வளர்ச்சி—ஊரக வளர்ச்சியின் கட்டுப் பாட்டிலுள்ள ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி V திட்டத்தின்கீழ் ஊரக சாலை, மேம்பாலங்கள் மேம்படுத்தல் மற்றும் வடிகால்கள் கட்டுதல் | 5625.00 | | 5625.00 |
| 4515 | இதர ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கான மூலதன ஒதுக்கீடு— இதர செலவு—பிரதம மந்திரியின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம் | 0.01 | | 0.01 |
| | மொத்தம் கோரிக்கை எண் 60 | 5625.01 | 0.00 | 5625.01 |



2001 செப்டம்பர் 5]

**கோரிக்கை எண் 32 வீட்டு வசதி**

**அட்டவணை எண் 5**

| | கணக்குத் தலைப்பு | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | | |
| 2216 | வீட்டு வசதி — ஊரக வீட்டு வசதி — இதர செலவுகள்— இதர பிற்பட்ட வகுப்பினருக்கான வீடு கட்டுதல் தொடர்பான திட்டங்கள் | 565.47 | | 565.47 |
| | மொத்தம் மானிய எண் 32 | 565.47 | 0.00 | 565.47 |

| கோரிக்கை எண் 27 | கூட்டுக : திருப்பி வசூலிப்பவை | |
|---|---|---|
| 2215 | | 1.41 |
| 2225 | | 3.93 |
| 2236 | | 8.34 |
| 2501 | | 7.55 |
| 2505 | | 18.64 |
| 2515 | | 111.83 |
| 2810 | | 0.65 |
| 3454 | | 0.23 |
| 3604 | | 0.00 |
| | 0.00 | 152.58 |
| | மொத்தம் | 154457.62 |

[2001 செப்டம்பர் 5

## இயல் – II

## புதிய திட்டங்கள்

2001–2002 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

**1. தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கான கட்டடம் கட்டுதல்**

தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கான கட்டடம் 1959–60 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இது முற்றிலும் பழுதடைந்துவிட்டதால் இந்த அலுவலகம், ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் உள்ள சமூகக் கூடத்திற்கு 1988 ஆம் ஆண்டு முதல் மாற்றப்பட்டு இயங்கிவருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 65 பணியாளர்கள் உள்ளனர். இடப் பற்றாக்குறையினால் இந்தப் புதிய கட்டடம் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட தீர்மானிக்கப்பட்டு இந்த ஆண்டு இதற்காக ரூ.14 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

**2. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்காக ஆறு குடியிருப்புகள் கட்டுதல்**

ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியம், செங்கம், புதுப்பாளையம், போளூர், கலசப்பாக்கம் மற்றும் ஆலங்காயம் வட்டாரங்களிலிருந்து பிரிக்கப்பட்ட பதினொன்று கிராம ஊராட்சிகளைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. ஜவ்வாது மலையில் உள்ள குன்றுகள் மற்றும் வனப்பகுதிகளை உள்ளடக்கிய இந்த வட்டாரங்களில் வாழும் பெரும்பான்மையான பழங்குடி மக்களுக்கென்று இந்த ஊராட்சி ஒன்றியம் செயல்படுகின்றது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 36 பணியாளர்கள் உள்ளனர். வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மட்டும் ஒரு பணியாளர் குடியிருப்பு தற்பொழுது உள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் இந்த ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கென்று ரூ.39.60 இலட்சம் செலவில் கூடுதலாக ஆறு பணியாளர் குடியிருப்புகள் கட்டப்படும். இந்த ஆண்டு இதற்காக ரூ.15.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 5]

**3. தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில்**
**பணியாற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் விரிவாக்க**
**அலுவலர்களுக்காக மூன்று குடியிருப்புகள் கட்டுதல்**

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் பணியாளர் குடியிருப்பு
இல்லை. தொடர்பற்ற பகுதிகளில் உள்ள மக்களின் தேவைகளைப்
பூர்த்தி செய்வதற்கென்றே இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள
பணியாளர்களுக்கு பணியாளர் குடியிருப்புகள் கட்டுவது அவசியத்
தேவையாகும். தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி ஊராட்சி
ஒன்றியத்தில் பணியாற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும்
விரிவாக்க அலுவலர்களுக்காக மூன்று குடியிருப்புகள் ரூ.9.90 இலட்சம்
செலவில் கட்ட தீர்மானிக்கப்பட்டு இந்த ஆண்டு இதற்காக ரூ.3.96
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**4. கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம்**
**ஊராட்சி அலுவலகத்தை ஒட்டி கட்டுதல்**

கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் இல்லாமை,
அவர்கள் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றத் தடையாக உள்ளது.
மேலும் இதனால் கிராம மக்கள் தங்கள் குறைகளைத் தீர்க்க கிராம
நிருவாக அலுவலர்களை எளிதில் அணுக முடியாத நிலையில் உள்ளனர்.
எனவே, கிராம நிருவாக அலுவலர்களுக்காக ஒவ்வொரு ஊராட்சி
அலுவலகத்தை ஒட்டி ரூபாய் 60 ஆயிரம் செலவில் அலுவலகக் கட்டடம்
கட்டித் தரப்படும். இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.24 கோடி
செலவில் 4000 அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். அனைத்து
வருவாய்க் கிராமங்களுக்கும் மூன்று ஆண்டுகளில் கிராம நிருவாக
அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்.

**5. மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டுதல்**

கிராமப்புறங்கள் துரித வளர்ச்சி அடைய வேண்டும் என்பதை
அரசு உணர்ந்து முன்னுரிமை அளித்து பல நடவடிக்கைகள் மேற்
கொண்டுள்ளது. படிப்படியாக, 12619 கிராம ஊராட்சிகள் அனைத்திலும்,
ஒரு வளாகத்தில் போதிய மின்வசதி மற்றும் தண்ணீர் வசதியோடு
அமைக்கப்பட்டுள்ள கழிப்பிட மற்றும் குளியல் வசதிகளுடன் ஒரு
வளாகத்திற்கு ரூ.2 இலட்சம் என்ற அடிப்படையில், துப்புரவு வளாகங்கள்
கட்டப்படும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.92 கோடி
ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வளாகங்களில் அவசியமான இடங்களில்
சிறு கழிவுநீர் சுத்திகரிப்புத் தளவாடங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறு
பற்றியும் அரசு ஆராயும்.

[2001 செப்டம்பர் 5

ஒவ்வொரு வளாகமும், தண்ணீர் வசதியோடு அமைக்கப்பட்டுள்ள பதினான்கு கழிப்பிடங்கள், இரண்டு குளியல் அறைகள், ஒரு விசைக் குழாய் கொண்ட அறை, துணி துவைப்பதற்கான கற்கள் பதிக்கப்பட்ட வசதிகளுடன் அமைக்கப்படும். இந்த வளாகங்களைப் பயன் படுத்துவதற்காக ஒதுக்கப்படும் குடும்பங்களே இவற்றைப் பூட்டி சாவியை வைத்துக்கொள்வதுடன், இவற்றின் பராமரிப்பையும் ஏற்க வேண்டும். இந்த வளாகங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உதவியுடன் சிறப்பாகப் பேணப்படும்.

தமிழ்நாட்டில் 11% ஊரகக் குடும்பங்களில் துப்புரவு வசதி உள்ளது. இது அகில இந்திய சராசரியான 15%-க்கும் குறைவாகும். போதிய சுகாதார வசதியின்மை மற்றும் மாசற்ற சுற்றுப்புறச்சூழல் பல வகை தொற்று நோய்கள் ஏற்படக் காரணமாக அமைகிறது. எனவே பெண்களுக்கான ஒரு ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம், அனைத்து ஊராட்சிகளிலும் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டு வருட காலத்திற்குள், அனைத்து 12,619 கிராம ஊராட்சிகளிலும், ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம் கட்டி முடிக்கப்படும். இதனுடைய பராமரிப்பு பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

நடப்பு நிதியாண்டில், 6309 கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், ரூ.126.18 கோடி செலவில் கட்டப்படும்.

இதற்கான செலவினம் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் மற்றும் கிராம தன்னிறைவுத் திட்டம், மறு வடிவமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்திலிருந்தும் ஒருங்கிணைத்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*6. கிராமச் சந்தை மேம்பாட்டுத் திட்டம்*

பெரும்பாலான கிராம ஊராட்சிகளில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமலேயே கிராமச் சந்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு, ஊரகப் பொருட்களை விற்பதற்கு ஏற்ற மையச் சந்தைகளாக இவற்றை மாற்றுவதற்கு நபார்டு வங்கியின் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவியுடன் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல், குடிநீர் வசதி, விளக்கு வசதி, பொதுக் கழிப்பிடம், கடைகளுக்கு வசதியளித்தல் ஆகியவற்றை இந்தக் கிராமச் சந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. இத்தகைய வசதிகள் செய்து தர ஒவ்வொரு கிராமச் சந்தைக்கும் ரூபாய் 7.48 இலட்சம் செலவிடப்படும். 385 கிராமச் சந்தைகளை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி ரூ.38.19 கோடியாகும். ஐந்து வருடங்களில் அனைத்து கிராமச் சந்தைகளுக்கும்



2001 செப்டம்பர் 5]

மேம்படுத்தப்பட்ட வசதிகள் அளிக்கப்படும். இதனால், ஊரகப் பொருட்களை விற்பதற்கான வசதிகள் ஏற்படுவதுடன் இந்த ஊராட்சி அமைப்புகளுக்கு வருமானமும் அதிகரிக்கும்.

*7. கிராமப்புறங்களில் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் மற்றும் பயிற்சி*

சுய உதவிக் குழுக்கள் மூலம் சுய வேலைவாய்ப்பு மற்றும் சேமிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த உதவி செய்யும் நோக்கத்தில் 30,000 கிராமப்புற ஏழைப் பெண்களைத் தேர்ந்தெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பொருளாதார முன்னேற்றமடையச் செய்யவும் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுய தொழில் குழுக்கள் செயல்படத் தேவையான வசதிகள், தேவையான தொழில்நுட்பம், சுய தொழில் தொடங்க மானியத்துடன்கூடிய கடனுதவி மற்றும் விற்பனைக்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 10,800 கிராமப்புற இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து சுய உதவிக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் 30,000 மகளிருக்கும் 10,800 இளைஞர்களுக்கும் சுய தொழில் முன்னேற்றப் பயிற்சி அளிக்க ரூ.4.08 கோடி செலவிடப்படும்.

**8. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.5 இலட்சம் நிதியை உயர்த்துதல்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் சென்ற ஆண்டு ரூ.77 இலட்சம் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் ஒவ்வொரு தொகுதிக்கும் இதனை ரூ.82 இலட்சமாக உயர்த்த இந்த அரசு முடிவு செய்து இதற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.192.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

*9. ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு கட்டமைப்பு வசதியை வலுப்படுத்துவதற்காக ரூ.7.19 இலட்சம் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது*

## இயல் - III

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

### 1. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் 1-4-1999 முதல் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள், கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள நபர்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், திறமையை மேம்படுத்துவற்கான பயிற்சி, கடன் உதவி, தொகுதி முறையிலான அணுகுமுறை, தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் சந்தை வசதி ஆகியவையாகும். மத்திய அரசும், மாநில அரசும் முறையே 75:25 என்கிற விகிதத்தில் செலவினத்தை ஏற்கின்றன. மத்திய அரசு 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.30.17 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியான ரூ.12.57 கோடி, 2001-2002 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் பங்குத் தொகை நிதியான ரூ.9.04 கோடியையும் மற்றும் சென்ற ஆண்டு மத்திய அரசினால் விடுவிக்கப்பட்ட கூடுதல் நிதிக்கு இணையான மாநில பங்குத் தொகையையும் உள்ளடக்கியதாகும். ஊரகப் பொருட்களை சந்தையில் விற்பதற்கான கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியான ரூ.2.5 கோடியில் 16 வணிக வளாகங்கள் முக்கியமான பகுதிகளில் (தாம்பரம், செங்கல்பட்டு, திருத்தணி, சிதம்பரம், கள்ளக்குறிச்சி, திருச்செங்கோடு, ஆத்தூர், கோபிசெட்டிபாளையம், திருப்பூர், பரமக்குடி, வேளாங்கண்ணி, கொடைக்கானல், பழநி, தே.கல்லுப்பட்டி, பெரியகுளம், திருச்செந்தூர்) கட்டப்படும். இத்தகைய வணிக வளாகங்கள் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் அவ்வப்போது சந்தை நிலவரம் குறித்த விவரங்களைப் பெறுவதற்கும் பெரிதும் உதவும்.

### 2. வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கிராமப்புற பகுதிகளில் வேலை வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ள காலங்களில் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் மக்களுக்கு ஊதியம் தரக்கூடிய கூடுதலான வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதாகும். இரண்டாவதாக, நிலையான சமூக மற்றும் பொருளாதார சொத்துக்களை உருவாக்கி அதன் வாயிலாக நிலையான





வேலைவாய்ப்பிற்கும் மற்றும் வளர்ச்சிக்கும் வழிவகை செய்வதாகும். இத்திட்டத்திற்கான நிதியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் வழங்குகின்றன. இத்திட்டத்தின் நிதியிலிருந்து 70 சதவீதம் நிதி ஊராட்சி ஒன்றியங்களுக்கும், எஞ்சிய 30 சதவிகிதம் நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கும் பிரித்து அளிக்கப்படும். 2001-2002 ஆம் நிதியாண்டிற்கு மத்திய அரசு ரூ.61.01 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. மாநில அரசின் பங்குத் தொகையாக 2001-2002 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 21.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில், சாலை வசதி, நீர்ப்பாசன குளங்களில் தூர் வாருதல், பள்ளிக்கூடக் கட்டடங்கள், பொது விநியோகக் கட்டடங்கள் மற்றும் அங்கன்வாடிகள் கட்டுதல் போன்ற 5738 பணிகள் மேற்கொள்ளப்படும்.

## இயல் - IV

## ஊரகக் குடியிருப்பு

### 1.1 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இந்த மத்திய அரசின் ஊரகக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தில் செலவினத்தை மத்திய அரசும் மாநில அரசும் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. மத்திய அரசு அளிக்கும் தொகைக்கு இணையாக, மாநில அரசு பங்குத் தொகை அளிப்பதுடன் தீ ப்பற்றி எரியாத வகையில் கான்கிரீட் கூரை அமைக்க ஒரு வீ ட்டிற்கு, ரூ.12,000 வீ தம் கூடுதல் தொகையாக மாநில அரசு அளிக்கிறது. எனவே, ஒரு வீ ட்டிற்கான அலகுத் தொகை, சுகாதார கழிப்பிடத்துடன் சாதாரண மண் பகுதியில் ரூ.32,000 எனவும் கடினமான மற்றும் மலைப்பாங்கான பகுதியில் ரூ.34,000 எனவும் ஆகும். மத்திய அரசு இத்திட்டத்தின்கீ ழ் இரண்டு துணைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அவை (அ) புதிய வீ டுகள் கட்டுதல் (ஆ) குடியிருக்க இயலாத கச்சா வீ டுகளை மேம்படுத்துதல் ஆகும். குடியிருக்க இயலாத கச்சா வீ டுகளை மேம்படுத்த மத்திய அரசு அலகுத் தொகையாக ரூ10,000/- அளிக்கிறது. இதை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளும். மாநில அரசின் பங்காக அளிக்கப்படும் தொகை ரூ.2,500/- ஆகும்.

[2001 செப்டம்பர் 5

2000–2001 ஆம் நிதியாண்டு முதல் மத்திய அரசின் நடைமுறை நெறிமுறைகளின்படி இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கான ஓதுக்கீ ட்டில் 80 சதவீ தம் புதிய வீ டுகள் கட்டவும், 20 சதவீ தம் கச்சா வீ டுகளை மேம்படுத்தவும் நிதி ஓதுக்கீ டு செய்யப்பட்டது. 2000–2001 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.5067.75 இலட்சம் நிதி விடுவித்தது. மாநில அரசு அதற்கிணையான மானியத் தொகையாக ரூ.4027.200 இலட்சம் நிதி விடுவித்தது. இந்த ஓதுக்கீ ட்டில் 34137 புதிய வீ டுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. 2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.59.23 கோடி மத்திய அரசின் ஓதுக்கீ டாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.19.48 கோடி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்–குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்துதல்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட மொத்த ஓதுக்கீட்டில் 20 சதவீதம் பயன்படுத்த இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்கான துணைத் திட்டமாக மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி ஒரு வீட்டிற்கு அலகுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதியான ரூ.10,000–ஐ மத்திய, மாநில அரசுகள் முறையே 75:25 வீதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. 2001–2002 ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதி ஓதுக்கீட்டிற்கு ஏற்ப 15794 கச்சா வீடுகளை மேம்படுத்த எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2. நூதனமான குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய கட்டுமான பொருட்களான சுடப்படாத செங்கல், எலிவலை முறை, ஓட்டின் மீது கம்பிவலை அமைத்து கான்கிரீட் போடுதல், பெர்ரோ சிமெண்ட்டினால் வேயப்பட்ட கூரை/கதவு, உட்புறம் காலியாக உள்ள சிமெண்ட், செங்கல், எரி சாம்பலில் இருந்து தயாரிக்கப்படும் செங்கல், கான்கிரீட் முதலியவற்றைக் கொண்டு குறைந்த செலவினத்தில் மிகவும் சிறப்பான தொழில் நுட்பத்துடன் கூடிய நிலைத்து நிற்கக்கூடிய வீடுகளைக் கட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், மேற்கூறிய பொருட்களைப் பயன்படுத்துவது இயற்கையான கிராம குடியிருப்பு சூழ்நிலையுடன் ஏற்புடையதாக இருக்கும். இக்கொள்கைக்கேற்ப கடந்த 1999–2000 ஆம் ஆண்டில் இந்தச் சிறப்புத் திட்டத்தினை ரூ.301.45 இலட்சம் நிதி ஓதுக்கீட்டில் ஈரோடு (56),



2001 செப்டம்பர் 5]

மதுரை (100), தஞ்சாவூர் (100), திண்டுக்கல் (100), காஞ்சிபுரம்(100) கடலூர்(100) மற்றும் திருச்சி (67) ஆகிய ஏழு மாவட்டங்களில் செயல்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. 2000–2001 ஆம் ஆண்டு இச்சிறப்புத் திட்டத்தினை ஒன்பது மாவட்டங்களில் அதாவது, பெரம்பலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, கரூர், வேலூர், கோயம்புத்தூர், திருவள்ளூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கு மத்திய அரசிற்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டன. மத்திய அரசு கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மீதியுள்ள ஆறு மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### 3. கடன் மற்றும் மானியத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குச் சற்று அதிகமாக வருமானம் உள்ள குடும்பங்கள் பயனடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் மானியத் தொகை அளித்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு வீட்டிற்கு ரூ.10,000 வீதம் மானியத் தொகை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளால் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. ரூ.32,000 வரையில் ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியான குடும்பங்களாகும். அக்குடும்பம் மானியத் தொகையுடன் நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம், ரூ.40,000 வரை கடன் தொகையும் பெறலாம். இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளால் காப்பீடு அளிக்க இயலவில்லை. மேலும் கடன் பெற ஏதுவாக பட்டாவைப் பதிவு செய்ய, பத்திரப் பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைத்தாள் கட்டணம் ஆகியவற்றை அவர்களால் செலுத்த இயலவில்லை. பயனாளிகளின் இத்தகைய இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, கடன் மற்றும் மானியத் திட்டத்தின்கீழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற ஏதுவாக பட்டாவைப் பதிவு செய்கையில், பத்திரப் பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைத்தாள் கட்டணம் ஆகியவற்றிலிருந்து இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு விலக்கு அளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார்கள். 2001–2002 ஆம் ஆண்டிற்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.744.82 இலட்சம் நிதி இத்திட்டத்திற்கென ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2001–2002 ஆம் நிதியாண்டிற்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள நிதியான ரூ.182.80 இலட்சத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின்

[2001 செப்டம்பர் 5

பங்குத் தொகை முறையே ரூ.137.10 இலட்சம் மற்றும் ரூ.45.70 இலட்சமாகும். நடப்பு ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 1828 வீடுகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

### 4. பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டம் (ஊரகக் குடியிருப்பு)

2000–2001 ஆம் ஆண்டில் மத்திய அரசு பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டம் எனும் புதிய் திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டம் 1) ஊரகக் குடியிருப்பு 2) ஆரம்பக் கல்வி 3) ஆரம்ப சுகாதாரம் 4) சத்துணவு மற்றும் 5) ஊரகக் குடிநீர் வழங்கல் ஆகிய ஐந்து கூறுகளைக் கொண்டதாகும். இந்த ஐந்து கூறுகளில் ஊரகக் குடியிருப்புத் திட்டம் (வீட்டு வசதி) மட்டும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2000–2001 ஆம் ஆண்டில் மத்திய அரசு இத்திட்டத்திற்காக ரூ.105.39 கோடி விடுவித்தது. குடியிருப்புகள் கட்டுவதற்கு மட்டுமன்றி அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலைகள் அமைத்தல், தெருவிளக்குகள், குடிநீர் ஆகியவற்றிற்காகவும் நிதி வழங்கப்பட்டது. 2001–2002 ஆம் ஆண்டு மத்திய அரசு இதை புதிய திட்டமாகக் கருதி மாநிலங்களுக்கு கூடுதல் மத்திய நிதி உதவி அளித்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் ஒவ்வொரு கூறுக்கும் 15 சதவிகிதம் நிதி ஒதுக்கப்பட்டு மீதியுள்ள 25 சதவிகித நிதியை மாநில அரசு அதன் விருப்பத்திற்கேற்றவாறு மேற்குறிப்பிட்ட ஐந்து கூறுகளில் ஏதாவது ஒன்றிற்கு பயன்படுத்தலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில், ஒவ்வொரு கூறுக்கும் ரூ.15.72 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

2001–2002 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராம வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஊரகக் குடியிருப்பு பிரிவுக்காக மாநில விருப்புரிமை மானிய ஒதுக்கீட்டையும் சேர்த்து ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ரூ.22.23 கோடியாகும்.

## இயல் – V

## சமுதாய கட்டமைப்பு வசதிகள்

### ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு கிராம அளவில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் என்று 1.4.1999 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 5]

இத்திட்டம், தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் கிராம ஊராட்சியால் செயல்படுத்தப்படும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இத்திட்டத்திற்கான நிதியை மாநிலத்தின் பங்கையும் சேர்த்து, நேரடியாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கும். இத்திட்டத்திற்கான ஆண்டு செயல் திட்டம் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை கிராம ஊராட்சி செய்யும். 22.50 விழுக்காடு நிதியை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் தனி நபர் பயன்பாட்டுத் திட்டத்திற்கு கிராம ஊராட்சிகள் செலவு செய்யலாம். இத்திட்டத்தின்கீழ் கூலியானது மாநில அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட குறைந்தபட்சக் கூலி அல்லது மாநில அரசால் நிர்ணயிக்கப்படும் கூலி அடிப்படையில் இருக்கும். 60:40 என்ற கூலி மற்றும் பொருள்களுக்கான விகிதாச்சாரம் தளர்த்தப்பட்டாலும் தொழிலாளர் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் பணிகளுக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கப்படும். கிராம சபையின் ஒப்புதலுடன் ரூ.50,000 வரையிலான பணிகளை கிராம ஊராட்சிகளே அனுமதித்து நிறைவேற்றலாம். இதற்கு வெளி நிருவாக அல்லது தொழில்நுட்ப அனுமதி பெறத் தேவையில்லை. நிருவாக மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக்காக ஆண்டுக்கு ரூ.7500 அல்லது ஒதுக்கீ டு செய்யப்பட்ட நிதியில் 7.5 விழுக்காடு இதில் எது குறைவோ அதனை கிராம ஊராட்சிகள் செலவு செய்யலாம். இத்திட்டத்தின்கீ ழ் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களைப் பராமரிக்க ஆண்டு நிதி ஒதுக்கீ ட்டில் 15 விழுக்காடு வரை கிராம ஊராட்சிகள் பயன்படுத்தலாம். கிராம ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கீ டு செய்யப்படும்.

2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.77.17 கோடி மத்திய அரசின் ஒதுக்கீ டாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.25.72 கோடி மாநில அரசின் பங்குத் தொகைக்காக இத்திட்டத்தின்கீ ழ் ஒதுக்கீ டு செய்யப்பட்டுள்ளது.

## இயல் – VI

## ஊரக சாலைகள்

### 1. நபார்டு திட்டம்

ஊரக வளர்ச்சித் துறைக்கு, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நபார்டு வங்கி 90 சதவீ த கடன் உதவி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) V & VI மூலம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீ ழ் ஊரக

[2001 செப்டம்பர் 5

உள்ளாட்சி அமைப்பு. 10 சதவிகிதம் நிதி அளிப்பதுடன், 25 சதவிகித கடன் பொது நிதியிலிருந்தும் அளிக்கப்படுகிறது. மீ தி கடன் தொகை, அரசினால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியமாக வழங்கப்படுகின்றது. நபார்டு வங்கியால் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீ டு ரூ.122.76 கோடி மதிப்பீ டு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், நபார்டு வங்கியால் ஆர்.ஐ.டி.எப்.5 மற்றும் 6 மூலம் ரூ.110.48 கோடி கடனுதவி வழங்கப்பட்டது. இந்நிதியைப் பயன்படுத்தி, மேம்படுத்தப்படவேண்டிய மொத்த ஊரக சாலைகளின் நீ ளம் 1015 கி.மீ. ஆகும். மேலும் 55 சிறு பாலங்களும் கட்டப்பட உள்ளன. அனைத்து சாலைப் பணிகளும் மார்ச் 2002–க்குள் முடிவடையும். நபார்டு திட்டத்தின்கீழ், இச்சாலை மேம்பாட்டுப் பணிகள் நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகள் மூலம் மேற்கொள்ளப்படும். மேம்படுத்தப்பட்ட ஊரக சாலைகள் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பராமரிக்கப்படும். 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.75 கோடி நிதி இத்திட்டத்திற்காக செலவிடப்பட உள்ளது.

2. பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுக்காக மத்திய அரசின் கூடுதல் நிதி உதவித் திட்டத்தின்கீழ் 15.8.2000 அன்று பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம் என மேற்படித் திட்டம் அறிவிக்கப்பட்டது. இதன் நோக்கம் 1000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் 2003 ஆம் ஆண்டுக்குள்ளும் 500–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் 2007 ஆம் ஆண்டுக்குள்ளும் அனைத்துப் பருவங்களுக்கும் ஏற்ற சாலை வசதி செய்து தருவதாகும். இத்திட்டத்திற்காக 2000–2001 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு அளித்துள்ள ரூ.151.32 கோடி நிதி உதவியில் 1446.498 கி.மீ. நீளத்தில் ஊரக சாலைகளும் 1572 வடிகால் வசதி அமைப்புகளும் ஏற்படுத்தப்படும். அனைத்து வேலைகளுக்கும், திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஒரு தொகுப்பிற்கு மதிப்பீடு ரூ. 1 கோடிக்குக் குறையாமலும் ரூ. 5 கோடிக்கு மிகாமலும் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு கோரப்பட வேண்டும். திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும் உடனடியாக பணிகளை தொடங்குவதற்கும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் விரைவு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

2001–2002 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தை செயல் படுத்துவதற்காக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், மாவட்ட ஊரக சாலைத் திட்டத்திலிருந்து முன்னுரிமை அடிப்படையில் வரைவுத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு, மத்திய



2001 செப்டம்பர் 5]

அரசினால் ரூ.90 கோடி 2001–2002 ஆம் ஆண்டுக்கு உத்தேசமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## இயல் –VII

### ஊரக துப்புரவு

1. மறுவடிவமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரத் திட்டம்

ஊரக சுகாதாரத் திட்டத்தினை மத்திய அரசு 1–4–1999 முதல் திருத்தியமைத்து, வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதன்படி, இத்திட்டம், முழுமையான துப்புரவு திட்டம் மற்றும் ஒதுக்கீடு அடிப்படையிலான திட்டம் என இரு திட்டங்களைக் கொண்டதாகும். முழு சுகாதார திட்டம், தேவைக்கேற்ப செயல்படுத்தல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுத்தப்படும். மக்களிடம் சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கிய நோக்கமாகும். பயனாளிகளுக்கு கல்வி மற்றும் பல தகவல்களை அளிப்பதன் மூலம் அவர்களைப் பெருமளவில் திட்டத்தில் ஈடுபடச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், இத்திட்டம் 80 சதவிகிதம் ஊரக மக்களுக்கு துப்புரவு வசதிகள் அளிப்பதற்காக மூன்று நிதியாண்டுகளில் 24 மாதங்களில் செயல்படுத்தப்படும். மத்திய அரசும் மாநில அரசும் முறையே 80:20 என்ற விகிதத்தில் இத்திட்டத்திற்கான செலவினத்தைப் பகிர்ந்துகொள்ளும். பள்ளித் துப்புரவு மற்றும் இதர நடவடிக்கைகள் மத்திய அரசு மாநில அரசு மற்றும் பயனாளிகள்/கிராம ஊராட்சிகள் செலவினத்தை 60:20:20 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும். 1999–2000 ஆம் நிதியாண்டில் முழு சுகாதாரத் திட்டம் கடலூர், கோயம்புத்தூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. 2000–2001 ஆம் நிதியாண்டில் இத்திட்டம் ஈரோடு, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

2001–2002 ஆம் ஆண்டில் முழு சுகாதாரத் திட்டம் திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

ஒதுக்கீடு அடிப்படையிலான திட்டம் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் முடிவடைந்துவிடும். 2000–2001 ஆம் ஆண்டில்

இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.182.410 இலட்சமும், மாநில அரசு ரூ.144.528 இலட்சமும் ஓதுக்கீடு செய்தன. 31–3–2001 அன்று வரை 60785 தனி நபர் கழிப்பறைகளும் 142 பள்ளிக் கழிப்பறைகளும், பெண்களுக்கான 18 சுகாதார வளாகங்களும், 13 ஊரக சுகாதார அங்காடிகளும் கட்டப்பட்டுள்ளன. 2001–2002–ல் 18,358 தனிநபர் இல்லக் கழிப்பறைகளும், பெண்களுக்கான 10 சுகாதார வளாகங்களும், பெண்களுக்கான 33 பள்ளிக் கழிப்பறைகளும் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

### 2. டேனிடா உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தேவைக்கேற்ப செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்

டேனிடா திட்டம் மரக்காணம் மற்றும் பரங்கிப்பேட்டை வட்டாரங்களில் சுகாதாரம் மற்றும் துப்புரவை மேம்படுத்துவதற்கும் மற்றும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகள் அளிப்பதற்கும் ஒருங்கிணைந்த முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் ரூ.42.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராமங்களில் உடல் நலம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. மேலும், இத்திட்டம் மக்களே நிரந்தரமான குடிநீர் விநியோக ஆதாரங்கள் பராமரிப்பை ஏற்பதற்கான நோக்கத்தை அடைவதற்குத் துணைபுரியும். இத்திட்டத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்களும் மற்றும் திட்டப் பயனாளிகளும் செம்மையான முறைகளில் திட்டத்தை நிறைவேற்றுகின்றனர். நிலத்தடி நீர் உபயோகிப்பதில் கட்டுப்பாடு, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் போன்றவை குறித்தும் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்கள் நன்கு அறிந்துகொள்கின்றனர். இத்திட்டம் செயல்படுத்துவதற்கான காலம் 31–3–2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதி, டேனிடா ரூ.33.60 கோடி, தமிழக அரசு ரூ.5.46 கோடி, மற்றும் ஊராட்சிகளால் ரூ.3.91 கோடி என்ற அடிப்படையில் மொத்தமாக ரூ.42.97 கோடி அளிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கில் 350 குடிநீர் பணிகளும் 30,000 வீட்டுக் கழிப்பறைகளும், 700 நிறுவன கழிப்பறைகளும், இதுவரை எடுக்கப்பட்டு, இவற்றில் 242 குடிநீர் பணிகளும், 11,042 தனி நபர் கழிப்பறைகளும், 316 நிறுவன கழிப்பறைகளும் முடிக்கப்பட்டுள்ளன.





இதற்காக ஏற்பட்ட செலவினம் ரூ.599.46 கோடியாகும். 2000–2001 ஆம் ஆண்டிற்கு ரூ.7.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2001–2002ஆம் ஆண்டிற்கு ரூ.7.96 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இயல் – VIII

## ஊரகக் கல்வி

### கரும்பலகைத் திட்டம்

ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் ஒரு உப திட்டமான கரும்பலகைத் திட்டத்தின்கீழ் ஒரு பள்ளிக் கட்டடம் கூட இல்லாத இடங்களில் ஆண் மற்றும் பெண் பள்ளி மாணவர்களுக்கான கழிவறைகளுடன் கூடிய பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படும். ஒரு பள்ளிக் கட்டடத்திற்கான அலகுத் தொகை ரூ. 3.15 இலட்சம் அதாவது ரூ.2.13 இலட்சம் பள்ளிக் கட்டிடத்திற்கும் ரூ. 0.62 இலட்சம் தாழ்வாரம் மற்றும் ரூ.0.40 இலட்சம் ஆண் பெண் பாலருக்கான இரு கழிவறைகள் கட்ட என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் இத்திட்டத்திற்கான நிதியை 45:55 என்ற சதவிகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. மாநில அரசின் 55% பங்கு நிதியை ஊரக வளர்ச்சித் துறையும் (15%) மற்றும் கல்வித் துறையும் (40%) பகிர்ந்துகொள்ள வேண்டும். தாழ்வாரம் மற்றும் கழிவறை கட்டுவதற்கான செலவினத்தை மாநில கல்வித் துறை ஏற்கும். இதன் அடிப்படையில், 45 சதவீதம் கட்டுமான செலவினத் தொகையாக 960 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு மார்ச் 2000–ல் மத்திய அரசு ரூ.922.65 இலட்சம் நிதி விடுவித்தது. மாநில ஊரக வளர்ச்சித் துறை 15 சதவீ தம் கட்டட செலவின பங்குத் தொகையாக ரூ.307.56 இலட்சம் விடுவித்தது. மாநில கல்வித் துறை இத்திட்டத்திற்கான நிதியிலிருந்து ரூ.1571.85 இலட்சம் நிதியையும் மற்றும் இத்திட்டத்தின் ஒரு கூறான கல்விக்காக ரூ.227.48 இலட்சம் நிதியையும் மாநில நிதியிலிருந்து விடுவித்தது. மொத்தமாக விடுவிக்கப்பட்ட நிதியான ரூ.3029.54 இலட்சத்தில் 960 பள்ளிக் கட்டடங்களும், 1920 கழிப்பறைகளும் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மார்ச் 2001–ல் மத்திய அரசு ரூ.500 இலட்சம் ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்களுக்காக விடுவித்துள்ளது. இத்திட்ட நிதி மத்திய மற்றும் மாநில அரசால் 75:25 என்னும் விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ. 166.67 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுவிட்டது. இந்த மொத்த நிதியான

ரூ. 666.67 இலட்சத்தில் 192 ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்களுக்கான கட்டடங்கள், 2001–2002 ஆம் ஆண்டில் கட்டப்படும்.

## இயல் – IX

### சிறுபாசனக் குளங்களைப் புனரமைத்தல்

தமிழ்நாட்டில், 41,915 சிறுபாசனக் குளங்கள் உள்ளன. அவற்றில் 23,156 ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குளங்கள், 8,903 பொதுப் பணித் துறையைச் சார்ந்த குளங்கள் மற்றும் 9,856 முன்னாள் ஜமீன் குளங்கள் ஆகும். 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டு உடைய சிறு பாசனக் குளங்கள் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளன. நீர்ப்பிடிப்புப் பகுதியில் உள்ள இக்குளங்கள், கிராமங்களில் உள்ள எளிய மக்களுக்கு வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், வறட்சிக் காலங்களில் நீர் அளிப்பதற்கும் பெரிதும் உதவுகின்றன. இக்குளங்கள் தமிழகத்தில், வேளாண்மைக்காக நான்கில் ஒரு பகுதிக்கு நீர் ஆதாரம் அளிக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் இந்த சிறுபாசனக் குளங்களின் நிலை மோசமடைந்து வருகிறது. தூர் வாரப்படாததாலும், ஆக்கிரமிப்புகளாலும், நகர்ப்புறங்களாக மாற்றப்படுதலாலும் நிறைய குளங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இத்தகைய சீர்குலைவினால் நிலத்தடி நீர் குறைந்தது மட்டுமன்றி, பாசனத்திற்கும் வீட்டுத் தேவைக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த சிறுபாசனக் குளங்கள், வேளாண் பொருட்கள் உற்பத்திக்கும், உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவதற்கும், விறகிற்கும் மற்றும் கால்நடை தீவனத்திற்கும் ஆதாரமாக உள்ளதன் முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது.

ஒரே முறையில் சீரமைக்கும் முயற்சியின்கீழ் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், குளங்களை ஆழப்படுத்துதல், குளங்களின் கரைகளை வலுப்படுத்துதல், தூர்வாருதல், நீர் வரும் வாய்க்கால்கள், மதகுகள், சிற்றணைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ரூ.1157.80 கோடி செலவில் 23,156 சிறுபாசனக் குளங்களை மேம்படுத்துவதற்கு இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதி ஆதாரத்தினை மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பொதுமக்களின் பங்குத் தொகை ஆகியவை 50:25:25 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்வு செய்யப்படும்.





## இயல் – X

### இதர மத்திய அரசுத் திட்டங்கள்

#### 1. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசு இந்தப் புதிய திட்டத்தை 1993 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை மற்றும் மாநிலங்களவை) அவர்களது தொகுதியில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய அரசு 1998–99 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் உறுப்பினருக்குமான ஒதுக்கீட்டை ரூ. 2.00 கோடியாக உயர்த்தியுள்ளது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், சென்னை நகர ஆணையராலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 39 மக்களவை உறுப்பினர்களும், 18 மாநிலங்களவை உறுப்பினர்களும் உள்ளனர். ஒவ்வொரு வருடமும் மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்காக ரூ.57 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 2000–2001 ஆம் ஆண்டில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்த நிதியான ரூ.106.50 கோடியில் ரூ.114.00 கோடி நிதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதால், இருப்பில் உள்ள நிதிக்கும் 50 சதவிகிதம் அதிகமாகச் செலவழிக்கப்பட்டபின், மத்திய அரசிடமிருந்து நிதி கோரப்படுகிறது.

#### 2. தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டம்

மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்திற்கு எரிசக்தி சேமிப்பதோடு ஊரகப் பகுதிகளில் பெண்கள் சமையல் செய்யும் அடுப்பறைகளிலிருந்து புகை வருவதைத் தடுப்பதற்கும், இன்னல்களிலிருந்து விடுவிக்கவும், காடுகளின் அழிவைத் தடுக்கவும் மத்திய அரசால் முழுமையாக நிதி வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் 5 வருடங்களுக்குக் குறையாமல் உபயோகிப்பதற்கு ஏதுவாக மண்ணும் கான்கிரீட்டும் கலந்த சூளா அடுப்புகள் ஏற்படுத்த, ஒரு சூளா அடுப்புக்கு ரூ.80/–வீதம் பயனாளிகளுக்கு மானியம் வழங்க மத்திய அரசால் அனுமதிக்கப்படுகிறது. 2000–2001 ஆம் ஆண்டில் 67,321 சூளா அடுப்புகள் நிறுவப்பட்டுள்ளன. மானியம் மற்றும் பணியமைப்புகூடிய செலவினங்களுக்கு ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் ஆண்டில் 2000 சூளா அடுப்புகள் நிறுவப்படும்.

*3. தேசிய கரிம வாயுத் திட்டம்*

இத்திட்டம் மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தி பல்முனை பயன்களை அடையும் நோக்குடன் செயல்படுத்தப்படும் ஒரு முழுமையான மத்திய அரசுத் திட்டமாகும். ஒரு கரிமவாயு கலனிற்கு ரூ.1,800 என்றும், தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ரூ.2,300 என்றும் மானியம் வழங்கப்படுகிறது. 2000–2001 ஆம் ஆண்டில் 2009 கலன்கள். நிறுவப்பட்டுள்ளன. மத்திய அரசால் கடந்த ஆண்டில் ரூ.68.60 இலட்சங்கள் மானியம் மற்றும் இதரச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2000 கலன்கள் நிறுவப்படும்.

## இயல் – XI

## மாநிலத் திட்டங்கள்

*1. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்*

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒரு கிராமத்திற்குத் தேவையான அனைதது அடிப்படை வசதிகள் மற்றும் கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதுடன், அக்கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு மாதிரி கிராமத்தை உருவாக்குகிறது. இத்திட்டம் 212 ஊரகச் சட்டமன்றத் தொகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் எல்லா ஊரக சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கிராமம் சில கோட்பாடுகளுக்குட்பட்டு, தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மக்கள் பங்கேற்பில் முக்கிய கவனம் செலுத்துவதோடு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், கல்வி, உடல் நலன், சத்துணவு, வீட்டு வசதி மற்றும் தெருவிளக்குகள், தெருக்கள் மற்றும் சந்துகள், நியாய விலைக் கடை போன்ற முக்கிய பிரிவுகளின் மேம்பாட்டிற்கும் உதவி அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து தகுதியான பயனாளிகளும் சமூகப் பாதுகாப்பைப் பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ் கட்டுமான வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்குவதோடு, ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை எளியோர் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காக வறுமை ஒழிப்பு, வேலை உறுதியளிப்பு மற்றும் வீட்டு வசதித் திட்டங்கள் முக்கியப் பங்காற்றும்.



2001–2002 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.75.00 கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*2. கிராம தன்னிறைவுத் திட்டம்*

ஊரகப் பகுதிகளில் சுய உதவி மற்றும் சுய சார்பு என்ற கொள்கையினைப் பரப்பவும், அவற்றை உறுதிப்படுத்தவும், தேவையின் அடிப்படையில் மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் திட்டமே கிராம தன்னிறைவுத் திட்டமாகும். இத்திட்டத்தின் முக்கிய அம்சம் கிராம மக்கள் வளர்ச்சித் திட்டங்களில் நேரிடையாகப் பங்கேற்கும் வகையில் திட்டமிடுதல், ஆதாரங்களைச் சேகரித்தல், செயல்படுத்துதல் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களைப் பராமரித்தல் வரை தங்களை ஈடுபத்திக்கொள்வதாகும். அரசு, தொழில்நுட்ப உதவியோடு நிதி ஆதாரங்களையும் கிராம மக்களுக்கு வழங்குகிறது. இத்திட்டம் மக்களின் முக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக விளங்குகிறது. பொது மக்கள் தங்களின் பங்கேற்பாக 2.5%–க்குக் குறையாமல் பணமாக அல்லது பொருளாக அல்லது உடல் உழைப்பாக அளிக்கலாம். அரசு, கிராமங்களில் பணிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் தேவையினை ஆராய்ந்து கிராம சபை மூலம் அத்தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அவற்றைத் தேர்வு செய்து, மக்கள் வளர்ச்சி திட்டங்களில் பங்கேற்பதற்கு ஊக்கப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே கிராமங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாகும். சொத்துக்கள் உருவாக்குதல் முதல் பராமரித்தல் வரை மக்களின் விருப்பமே முக்கியப் பங்காக விளங்குகிறது.

இத்திட்டத்திற்காக 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.40.00 கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*3. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்*

1997–98 ஆம் ஆண்டு மாநில அரசின் முழு நிதியுதவியோடு தொடங்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு, தொகுதிக்குத் தேவையான அவசியமான வசதிகள் நிறைவேற்றப்படுகின்றன. மாநில அரசு, இத்திட்டத்திற்கான நிதியை ஒரு தொகுதிக்கு 1998–99 ஆம் ஆண்டில் ரூ.35.00 இலட்சமாகவும், 1999–2000 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சமாகவும், 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.77 இலட்சமாகவும் உயர்த்தி அளித்தது.

2001–2002 ஆம் ஆண்டிற்கு ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒதுக்கீ டு நிதி ரூ.82 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2001–2002 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.192.70 கோடி நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த ஊரக மகளிருக்கான சுகாதார வளாகங்கள், ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் கட்டுதல், ஊராட்சி அலுவலகத்தினையொட்டி கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பணிகட்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

தமிழக அரசு, குழந்தைகளின் உடல் நலத்தையும், அவர்கள் சத்துணவு பெறும் நிலைமையையும் நன்கு பாதுகாத்து, அவர்களின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. 1 முதல் 10 வகுப்பு வரை பயிலும் 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இத்திட்டம் 1.7.1982 முதல் ஊரகப் பகுதிகளிலும், 15.9.1982 முதல் நகர்ப்புறங்களிலும். பள்ளி சத்துணவுத் திட்ட மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மத்திய அரசு 15.8.1995 முதல், மனித வள மேம்பாடு மற்றும் கல்வித் துறை மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 100 கிராம் வீதம் மதிய உணவு வழங்குவதற்காக இலவச அரிசி, வருடத்திற்கு 10 மாதத்திற்கு அளித்து வருகிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.154.97 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இயல் – XII

### ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

1. மாநில நிதிக் குழு மானியம்

மாநில அரசு, சேர்மம் “ஆ” வருவாயில் 8 விழுக்காடு ஒதுக்கீடு செய்தது. இதன் மூலம் 1998–99 ஆம் ஆண்டிற்கு ரூ.453.73 கோடியும்



1999–2000 ஆம் ஆண்டிற்கு ரூ.455.06 கோடியும், 2000–2001 ஆம் ஆண்டிற்கு ரூ.577.80 கோடியும் ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கீட்டில் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக 1998–99 ஆம் ஆண்டுக்கு ரூ.73.46 கோடியும், 1999–2000 ஆம் ஆண்டுக்கு ரூ.93.28 கோடியும் 2000–2001 ஆம் ஆண்டுக்கு ரூ.93.28 கோடியும் வழங்கப்பட்டதும் அடங்கும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளிடையே 1998–1999 முதல், முறையே 47:45:8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2001–2002 ஆம் ஆண்டில், ரூ.517.32 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும்.

இரண்டாவது மாநில நிதிக் குழு, அரசுக்கு அளித்துள்ள அறிக்கையில் உள்ளாட்சி அமைப்புகளின் நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு பல பரிந்துரைகள் செய்துள்ளது.

2. மத்திய நிதிக் குழு மானியம்

பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2000–2001 ஆம் ஆண்டுக்கு ரூ.186.45 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.155.30 கோடி நிதியில், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் அடிப்படைப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் ரூ.31.14 கோடி உள்ளாட்சிகளின் கணக்குகளைப் பராமரித்தல் மற்றும் தணிக்கை செய்தல் பணிகளுக்கும் மற்றும் அடிப்படை விவரங்கள் தொகுப்பதை மேம்படுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு 73வது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டபின், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. 1996 ஆம் வருடம் அக்டோபர் மாதம் முதல் சாதாரணத் தேர்தல் நடத்தப்பட்டபின் அடுத்த சாதாரணத் தேர்தல் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடத்தப்பட வேண்டும். இந்தத் தேர்தலை நடத்துவதற்கு தமிழ்நாடு தேர்தல் ஆணையம் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தற்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ள வார்டுகளின் எல்லைகளை மாற்றாமல் எதிர்வரும் சாதாரணத் தேர்தல் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டில் உள்ளாட்சி

அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்ட பிறகு ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கென்று ஒதுக்கீடு தொடர்ந்து பின்பற்றப்படும். 1991 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் 2001 ஆம் ஆண்டில் நடத்தப்படவிருக்கும் சாதாரணத் தேர்தலுக்கும் பின்பற்றப்படும். 1996 ஆம் ஆண்டு தேர்தல் நடத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட பணியாளர் இடங்களைக்கொண்டே 2001 ஆம் ஆண்டு நடத்தப்படவிருக்கும் சாதாரணத் தேர்தலுக்காகவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு தேர்தலுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வார்டுகள் மற்றும் தலைவர்களுக்குத் தோற்றுவிக்கப்பட்ட இடஒதுக்கீடு முறையே தற்போதும் பின்பற்றப்படும். பத்தாண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சியைப் பின்பற்றுவதற்கு விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவைக்குத் தேர்தலை நடத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் மிகப் பெருமளவில் வாக்காளர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தகைய முரண்பாடுகளைக் களைவதற்காக வாக்காளர் பட்டியல் திருத்தப்பட வேண்டுமென்பதை இந்திய தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கான செலவை மாநில அரசே ஏற்கிறது. இதற்காக ரூ.41.15 கோடி நிதி, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4. உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சிறப்பு மானியம்

#### 4.1 சமூக கல்வி மானியம்

இந்த மானியம் ஊராட்சி மன்றங்களிலுள்ள சமூக கல்வி மையத்திற்கும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தகவல் மையங்களுக்கும் 'தமிழரசு' மற்றும் 'திட்டம்' ஆகிய செய்தித் தாள்களை 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வாங்கவும் மாநில மற்றும் மாவட்ட அளவில் பொருட்காட்சி நடத்தவும், மாநில தலைநகரில் குடியரசு தின விழாவில் அலங்கார ஊர்தி அமைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. 2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.27.84 இலட்சம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



#### 4.2.முழு நேர மருந்தகங்கள் மற்றும் ஊரக மருந்தகங்கள் பராமரித்தல்

ஊரக மருந்தகங்களைத் தோற்றுவித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலுள்ளது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் மருந்தகத்தைப் பராமரிப்பதற்காக ஆண்டு செலவினத்தில் 50% மானியம் ரூ.5400 என்ற உச்ச வரம்பிற்குட்பட்டு அரசு வழங்குகிறது. இந்த நிதி உதவி அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள, இயங்கிவரும் மருந்தகங்களுக்கு அளிக்கப்படுகிறது. புதியதாகத் தொடங்கப்படும் ஊரக மருந்தகங்களைப் பொறுத்தமட்டில் 100% மானியம் வரை சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை ஆணை எண் 1161, நாள் 18.7.1983–ன்படி ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலையைப் பொறுத்து அரசு உதவி அளிக்கப்படும். 2001–2002 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 8.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### 4.3. தலபாசன மானியம்

முறைப்படுத்திய பாசன வசதி இல்லாத 100 ஏக்கர்களுக்குக் குறைவான ஆயக்கட்டுள்ள பாசனக் குளங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து சிறுபாசன ஏரிகளையும் 5 வருட சுழற்சி முறையில் பராமரிப்பதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.1.00 கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### 4.4. தெரு விளக்குகள்

புதிய குடியிருப்புகளின் விரைவான வளர்ச்சியாலும், புதிய விரிவாக்கப் பகுதிகளிலும் புதிய தெருவிளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள்மூலம் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படும்.

உள்ளாட்சி நிறுவனங்களுக்கு, சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கும், பராமரிப்பிற்கும் அதிக செலவினம் ஊராட்சிகளுக்கு ஏற்படுவதால், இவற்றிற்கு பதிலாக குழல் விளக்குகள் மட்டும் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*5. கிராம சபை*

ஒவ்வோர் ஊராட்சியின் எல்லைக்குள் அடங்கியுள்ள, கிராமங்கள் தொடர்பான வாக்காளர் பட்டியலில் உள்ள நபர்களைக் கொண்ட ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு கிராம சபை இருக்கும். இந்தக் கிராம சபை, கிராமத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல், கிராம வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல், ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்காணித்தல் போன்ற பணிகளை ஆற்றும்.

கிராம சபைக் கூட்டங்கள் வருடத்திற்கு நான்கு முறை நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறும்பொழுது இதைக் கண்காணிப்பதற்கென்றே அரசு, உயர் அதிகாரிகளை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கிறது.

*6. மக்களாட்சிக்கேற்ப அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்*

73–வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி புதிய ஊராட்சிகள் சட்டத்தை இயற்றியதில் தமிழ்நாடு ஒரு முன்னோடியான மாநிலமாகும். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிருவாக மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் கிராம நிலையில் சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இந்த அதிகாரப் பகிர்ந்தளிப்பு, பொதுமக்களின் ஒத்துழைப்பு மூலம், வளங்களைக் கண்டறிதல், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை அடைவதற்காக மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இரண்டாவது மாநில நிதிக் குழு அளித்துள்ள அறிக்கையில் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக அளித்துள்ள பல்வேறு பரிந்துரைகளின்மீது தக்க ஆணைகள் அரசு பிறப்பிக்கும். உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு நன்கு பங்கேற்பதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் இவற்றை வலுப்படுத்துவதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. இதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவர்களது திறனை வளர்த்துக்கொள்வதற்கு தனியாக பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. இவை நன்கு செயல்படுவதற்கு ஏற்றவாறு நிதி உதவியை அரசு அளிக்கும்.





## இயல் – XIII

### மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகம்

பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மாவட்ட அளவில் அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்துக் கண்காணிப்பதில் இந்த நிறுவனம் பெரும் பங்கு வகிக்கிறது. எனவே, இந்த நிறுவனத்தை மிகவும் பயனுள்ளதாக மாற்றியமைக்க மத்திய அரசு தீர்மானித்தது. இதன் அடிப்படையில் மத்திய அரசின் உதவியுடன் மாவட்ட நிருவாகச் செலவினம் என்கிற புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின்படி பல்வேறு திட்ட நிதியிலிருந்து நிருவாகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வந்ததற்குப் பதிலாக ஒரே செலவினத்தில் நிருவாகச் செலவினம் மேற்கொள்ளப்படும்.

1–4–1999 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிற இத்திட்டத்தின் செலவினத்தை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்கிற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. இந்தப் புதிய திட்டத்தின்படி மாவட்டங்களில் உள்ள வட்டாரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், அதாவது (1) ஐந்து வட்டாரங்களுக்கும் குறைவாக உள்ள மாவட்டங்கள் A வகை, (2) 6 முதல் 10 வட்டாரங்கள் வரை உள்ள மாவட்டங்கள் B வகை, (3) 11 முதல் 15 வரை வட்டாரங்களின் எண்ணிக்கை கொண்ட மாவட்டங்கள் C வகை மற்றும் (4) 16 மற்றும் அதற்கு மேற்பட்ட வட்டாரங்களைக் கொண்ட மாவட்டங்கள் D வகை மாவட்டங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.16.06 கோடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிருவாகச் செலவினமாக மத்திய அரசால் அனுமதிக்கப் பட்டுள்ளது.

இதற்கு இணையாக மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.446.41 இலட்சம் நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 5

## இயல் – XIV

## மனித திறன் மேம்பாடு

### 1. மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மறைமலைநகரில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்திற்கு பயணியர் விடுதி, நூலகம், கணிப்பொறி நிலையம் மற்றும் கேள், காண் அமைப்பு வசதியுடன் கூடிய பயிற்சி அறைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளுடன் விசாலமான நிருவாகக் கட்டடமும் உள்ளது. இந்நிறுவனத்திற்கு நிதி மானியமாக அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் இந்நிலைக்கு மேற்பட்ட அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் பயிற்றுநர்கள் ஊரக வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதுடன் மதிப்பீடும் செய்கிறார்கள். 2001–2002 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இந்நிறுவனத்திற்கு ரூ.58.42 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் கட்டமைப்பு வசதிகளுக்காகவும், கணினி வசதிக்காகவும் மொத்தம் ரூ.23.16 இலட்சம் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் ஒரு தலை சிறந்த முதன்மை நிறுவனமாக மாற்றப்படும்.

### 2. ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள்

ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் அரசு அலுவலர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் அவர்களின் தரத்தை மேம்படுத்த, பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களும் ச.வி.நகரம், பட்டுக்கோட்டை, கிருஷ்ணகிரி, தே.கல்லுப்பட்டி மற்றும் பவானிசாகர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

மத்திய அரசு, தொடராச் செலவினத்திற்காக இந்த விரிவாக்கப் பயிற்சி நிலையங்களுக்கு நிதி அளிக்கிறது. இந்த நிதியிலிருந்து தங்கும் விடுதியை மேம்படுத்துதல், புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், பயிற்சிக்கான செலவு ஆகியவற்றை மேற்கொள்ளலாம். மத்திய அரசு மட்டுமன்றி மாநில அரசும் நிருவாகச் செலவிற்காக நிதி அளிக்கிறது.



2001 செப்டம்பர் 5]

மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்குத் தேவைக்கேற்ப புதிய அணுகுமுறையில் பயிற்சி அளிக்கப்படும். 1320 அரசு சாரா அதிகாரிகளுக்கு 44 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டும், 1800 அரசு அதிகாரிகளுக்கு 60 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும். ஐந்து விரிவாக்கப் பயிற்சி மையங்களில் 23,805 அரசு சாரா அதிகாரிகளுக்கு 529 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டும், 14,445 அரசு அதிகாரிகளுக்கு 325 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டும் பயிற்சி அளிக்கப்படும். மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ், இப்பயிற்சிக்காக ரூ.143 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ரூ.28.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2001 செப்டம்பர் 5]

# இணைப்பு-II

(520 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 48 – குடிநீர் வழங்கல்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளை அமைத்துத் தர அரசு முழு உறுதி பூண்டுள்ளது. நீராதாரங்கள் மற்றும் குடிநீர் வழங்கும் அமைப்புகள், தகுந்த நிலத்தன்மை உள்ளவையாக இருக்க வேண்டும் என்பதும் அரசின் நோக்கமாகும். கடந்த காலத்தில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும், சாதனைகளுக்கும் இடையேயான இடைவெளி பெருகி வருகிறது. நிதிப் பற்றாக்குறை, நீராதாரங்களில் இருந்து அதிகப்படியான நீர் எடுத்தல், நிலத்தடி நீரின் நீர்மை குறைதல், கூடுதல் குடிநீர் தேவைகள், பருவமழை தொடர்ந்து பொய்த்துப் போவதால் நிலத்தடி நீர் குறைதல் ஆகியவை தேவையான குடிநீர் வழங்குதலின்கண் உள்ள முக்கிய பிரச்சினைகளாகும். மக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்திற் கொள்ளும்போது, நகர்ப்புற வளர்ச்சி, மக்கள் தொகை அதிகரிப்பு, மாறிவரும் வாழ்க்கை முறை, குடிநீர் வழங்குதலில் ஏற்படும் செலவு மற்றும் நீரின் பற்றாக்குறை மதிப்பு இவற்றை பிரதிபலிக்காத குடிநீர்க் கட்டணம், போதுமான நிறுவன மற்றும் சட்ட வடிவமைப்புகள் இல்லாமை ஆகிய காரணங்களும், இப்பிரச்சினையைப் பெரிதாக்குகின்றன. இந்தப் பிரச்சினைகளை எல்லாம் எதிர்கொள்ள பல்நோக்கு அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பணிகளை சரியான முறையில் கொண்டு செல்லத் தேவையான எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. நீரைச் சேமித்தல், நிலத்தடி நீரை மேம்படுத்துதல், நீர் வீணாவதைத் தடுத்தல், நிலநீர் ஆதாரங்களைப் பெருக்க நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றில் அரசு தனிக் கவனம் செலுத்தவும் தீர்மானித்துள்ளது. இதனால் ஏற்கெனவே செய்துள்ள முதலீடும், வருங்காலத்தில் செய்யப்பட உள்ள முதலீடும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து நற்பயன் கொடுக்க ஏதுவாகும்.

[2001 செப்டம்பர் 5

2. தமிழ்நாட்டில் உள்ள நகரக மற்றும் ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள் அரசால் சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் ஆகிய இரண்டு வாரியங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (த.கு.வ. வாரியம்)

3. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊரக மற்றும் நகரகப் பகுதிகளுக்கு (சென்னை மாநகர் நீங்கலாக) குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கான ஆய்வு, திட்ட உருவாக்கம், திட்ட செயலாக்கம் ஆகிய பணிகளை நிறைவேற்றும் பொருட்டு, 14.4.1971 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடங்கப்பட்டது. இவ்வாரியம், கடந்த பல ஆண்டுகளில் மேற்கொண்ட பல குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செம்மையாகவும், சீரிய முறையிலும், வடிவமைத்து பராமரிப்பதின் வாயிலாக தன் தொழிற்நுட்பத் திறனை வளர்த்துக்கொண்டுள்ளது.

த.கு.வ.வாரியத்தின் மனிதவள மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்கள்:

- சிறந்த தொழில்நுட்பக் கல்வித் தகுதியுடைய 2,200 பொறியாளர்கள், 9,800 தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர்கள் அடங்கிய 12,000 பணியாளர்கள்.
- நீராதார உருவாக்கப் பணிக்கென 40 ஆழ்துளையிடும் கருவிகள் மற்றும் நீராதாரம் பொய்த்த ஆழ்துளைக் கிணறுகளில் நீர் ஆதாரத்தைப் பெருக்கும் பணிக்கென 6 பாறைப் பிளவு இயந்திரங்கள்.
- நிலத்தடி நீர்வளம் கண்டுபிடிப்பதில், தொலையுணர்வு, வானியல் வரைபடம் மற்றும் புவியியல் தகவல் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திவரும் நிலநீர்ப் பிரிவு.
- குடிநீரின் தரத்தினைப் பரிசோதிக்க 30 குடிநீர்ச் சோதனைக்கூடங்கள்.
- கணினி மூலம் நவீன முறையில் பொறியியல் மதிப்பீடுகள் வடிவமைப்பு.



2001 செப்டம்பர் 5]

- மனிதவளச் செயல்திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான பயிற்சிகளை அளிக்க சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை ஆகிய நான்கு நகரங்களில் பயிற்சி மையங்கள்.

## 4. குடிநீர் வழங்கல் வரையறை அளவுகள்

*4.1 ஊரகக் குடிநீர்த் திட்டம்*

4.1.1 ஊரகப் பகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய குடிநீர் வரையறை அளவு பின்வருமாறு:

- நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர்.

குடிநீர்த் தேவையின் விபரம்

| பயன் | நாளொன்றுக்கு நபர் ஒருவருக்குஅளவு (லிட்டரில்) |
|---|---|
| குடிப்பதற்கு | 3 |
| சமைப்பதற்கு | 5 |
| குளிப்பதற்கு | 15 |
| இதர உபயோகங்களுக்கு | 17 |
| மொத்தம் | 40 |

- நல்ல நீராதாரங்கள் உள்ள பகுதிகளில் வீட்டிணைப்பு மூலம் குடிநீர் வழங்கும் வகையில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்று வரையறை அளவு கடைபிடிக்கப்படுகிறது.

*4.2 நகரகக் குடிநீர்த் திட்டம்*

நகரகப் பகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய குடிநீர் வரையறை அளவு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மாநகராட்சி | - நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு - | 110 லிட்டர் |
| நகராட்சி | - நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு - | 90 லிட்டர் |
| பேரூராட்சி | - நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு - | 70 லிட்டர் |

[2001 செப்டம்பர் 5

## 5. நிதி ஆதாரங்கள்

### 5.1 ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கான நிதி ஆதாரம்

5.1.1 ஊரகக் குடியிருப்புகளுக்கு மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் கீழும், மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழும் முழு மானிய உதவி பெற்று குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### 5.2 நகரகக் குடிநீர்த் திட்டங்களுக்கான நிதி ஆதாரம்

நகரகப் பகுதிகளுக்குக் கீழ்க்கண்ட நிதி ஆதாரத்துடன் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

- மொத்தம் உள்ள 611 பேரூராட்சிகளில், 244 பேரூராட்சிகள் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக ஊரகப் பேரூராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த 244 ஊரகப் பேரூராட்சிகளுக்கும், 100 விழுக்காடு மானியத்துடன் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
- இதர நகரங்களைப் பொறுத்தவரை, இந்த நகரக அமைப்புகள் பொதுவாக தங்களது மூலதனச் செலவினை தாமாகவோ அல்லது இதர நிதி ஆதார நிறுவனங்களிடம் இருந்து கடனுதவி பெற்றோ, ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். எனினும் நிதி நிலையில் நலிவுற்ற நகரங்களுக்கு அரசு மானியம் அளிக்கிறது. அந்த நகரத்திற்கான குடிநீர்த் திட்டங்களை நிதி இயைபு உள்ள திட்டமாக மாற்றுவதற்கு ஏற்ப, அந்தந்த நகரங்களின் நிதி நிலையை ஆராய்ந்த பின், தேவைப்படும் நிதியை கணக்கிற்கொண்டு இந்த மானிய உதவித் தொகையின் அளவு தீர்மானிக்கப்படுகிறது.
- இது தவிர, மக்கட்தொகை 20,000–க்கும் குறைவாக உள்ள நகரப் பேரூராட்சிகளுக்கு துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாகவும், 45 விழுக்காடு மாநில அரசின் மானியமாகவும் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 5 விழுக்காடு பயன்பெறும் உள்ளாட்சியின் பங்குத் தொகையாகவும் பெறப்படுகிறது.



2001 செப்டம்பர் 5]

## 6. தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கல் நிலவரம்

### 6.1 ஊரகக் குடிநீர் வழங்கு நிலை

6.1.1 ஊரகக் குடியிருப்புகளில் நிலவும் குடிநீர் வழங்கும் நிலையை அறியும் வகையில் அவ்வப்போது புள்ளி விவரம் சேகரிக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குடிநீர் வழங்கல் அளவினைப் பொறுத்து ஊரக குடியிருப்புகள் நான்கு பிரிவுகளாகக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

அ) குடிநீர் வசதியற்றவை– அதாவது எந்தவொரு குடிநீர் வசதியும் இல்லாத குடியிருப்புகள்

ஆ) பாதுகாக்கப்பட்ட நீராதாரமற்றவை– அதாவது குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள்

இ) பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவை–அதாவது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டருக்கும் கீழ் குடிநீர் பெறும் குடியிருப்புகள்.

ஈ) முழுமையாகக் குடிநீர் வசதி பெற்றவை அதாவது தேசிய அளவுக் குறியீடான நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள்.

6.1.2 1–4–2001 அன்று நிலவரப்படி ஊரகக் குடியிருப்புகளின் நிலவரம் பின்வருமாறு:

| குடிநீர் நிலை | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| குடிநீர் வசதியற்றவை | இல்லை |
| பாதுகாக்கப்பட்ட நீராதாரமற்றவை | 931 |
| பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவை | 4,085 |
| முழுமையாகக் குடிநீர் வசதி பெற்றவை | 61,615 |
| மொத்தம் | 66,631 |

6.1.3 மேலே கூறப்பட்ட குடியிருப்புகளின் குடிநீர் நிலவரம் பற்றிய விவரம் நிரந்தரமானது அல்ல. அது அவ்வப்போது மாறுபடக்கூடியது ஆகும். தற்போது உள்ள வழக்கத்தின்படி, ஒரு குடியிருப்புக்கு முழு அளவில் குடிநீர் வசதி அளித்தவுடன், அந்தக் குடியிருப்பு "முழுமையாக குடிநீர் வசதிபெற்ற குடியிருப்"பாக

வகைப்படுத்தப்படுகிறது. குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட பின்பு குடிநீர் வழங்கல் நிலை மாறுபடுவதை புதிய ஆய்வு செய்யும் வரை கணக்கில் கொள்வதில்லை. ஆகவே, 1–4–2001 அன்றைய நிலவரப்படி 61,615 குடியிருப்புகள் முழுமையான குடிநீர் வசதி பெற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், இதில் சில குடியிருப்புகள் கீழ்க்கண்ட காரணங்களால் பகுதியளவே குடிநீர் வசதி பெறலாம்:

- ♦ மக்கள் தொகைப் பெருக்கம்.
- ♦ அதிக அளவு நீர் எடுக்கப்படுவதால் நீராதாரம் குறைதல்.
- ♦ நீரின் தரம் குறைதல்.
- ♦ பருவமழை பொய்த்துப் போவதால் நிலத்தடி நீர் குறைதல்.
- ♦ திட்டங்களின் சில பகுதிகள் பழுதாகுதல்.

6.1.4 எனவே 2002–2003 ஆம் ஆண்டு முதல் புதிய ஆய்வின்படியும், குடியிருப்புகளிலுள்ள உண்மை நிலவரத்தின்படியும் திட்டங்களை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. மேலும் ஊரகக் குடியிருப்புகளில் உள்ள குடிநீர் வசதியை ஆண்டுதோறும் அறிந்து, குடிநீர் நிலை குறித்த நிலவரத்தை அவ்வப்போது புதுப்பித்து வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

6.2 நகரகக் குடிநீர் வழங்கு நிலை

6.2.1 தமிழ்நாட்டில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) 5 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள், 367 நகரப் பேரூராட்சிகள் மற்றும் 244 ஊரகப் பேரூராட்சிகள் அடங்கிய மொத்தம் 718 நகரங்கள் உள்ளன. தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவைக் கொண்டு மாநிலத்திலுள்ள நகரங்கள் அனைத்தினையும் முழுமையான அளவு, சராசரி அளவு, குறைந்த அளவு குடிநீர் வழங்கப்படும் நகரங்கள் என மூன்று விதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.





| உள்ளாட்சி அமைப்பு | நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு — லிட்டர்களில் | | |
|---|---|---|---|
| | முழு அளவு | சராசரி அளவு | குறைந்த அளவு |
| மாநகராட்சிகள் | 110 மற்றும் அதற்கு மேல் | 70— 109 | 70க்கும்கீழ் |
| நகராட்சிகள் | 90 மற்றும் அதற்கு மேல் | 50— 89 | 50க்கும்கீழ் |
| நகரப் பேரூராட்சி | 70 மற்றும் அதற்கு மேல் | 40— 69 | 40க்கும்கீழ் |
| ஊரகப் பேரூராட்சி | 70 மற்றும் அதற்கு மேல் | 40— 69 | 40க்கும்கீழ் |

6.2.2 மேற்குறிப்பிட்ட அடிப்படையில் நகரங்களின் குடிநீர் வசதி நிலைமை பின்வருமாறு:

| வ எண் | உள்ளாட்சி அமைப்பு | எண்ணிக்கை | குடிநீர் வசதி நிலை | | |
|---|---|---|---|---|---|
| | | | முழு அளவு | சராசரி அளவு | குறைந்த அளவு |
| 1 | மாநகராட்சிகள் | 5 | -- | 5 | - |
| 2 | நகராட்சிகள் | 102 | 31 | 37 | 34 |
| 3 | நகரப் பேரூராட்சிகள் | 367 | 138 | 124 | 105 |
| 4 | ஊரகப் பேரூராட்சிகள் | 244 | 79 | 79 | 86 |
| | மொத்தம் | 718 | 248 | 245 | 225 |

## 7. 2001–2002 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

7.1 ஊரகக் குடிநீர்த் திட்டம்

7.1.1 2001–2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

- ♦ 4,085 ஊரகக் குடியிருப்புகளுக்குத் தனி மின்னிறைப்பான் திட்டங்கள்.
- ♦ 1,784 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 51 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

- மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டபடி, நீராதாரம் வற்றிப்போய் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள நிலையில் உள்ள 2,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு கையிறைப்பான் திட்டங்கள்.
- மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊரகப் பகுதிகளில், 40 மீட்டர் ஆழத்திற்கும்கீழ் நீர் மட்டம் குறைந்துள்ள கையிறைப்பான்களின் மூலம் குடிநீர் இறைப்பது மிகவும் கடினமாக இருக்கின்ற நிலையினைக் கருத்தில் கொண்டும் இதனால் முக்கியமாக பெண்கள் படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டும் ஒரு புதிய திட்டத்தினை இந்த ஆண்டு முதல் தொடங்கி நடத்திட ஆணை பிறப்பித்துள்ளார்கள். இத்தகைய கையிறைப்பான்களுக்குப் பதிலாக சிறு விசை இறைப்பான் மூலம் தண்ணீரை இறைத்து அதைத் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளில் சேமித்து குடிநீர் வழங்க ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி மகளிரின் ஒத்துழைப்புடனும் பங்கேற்புடனும் செயல்படுத்தப்படும்.
- குடிநீரின் தரம் பாதிக்கப்பட்டுள்ள 900 ஊரகக் குடியிருப்புகளுக்கு நல்ல குடிநீர் ஆதாரத்துடன் கூடிய மின்விசைத் திட்டங்கள் அமைத்தல்.
- இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர் நீரால் பாதிக்கப்பட்ட 110 ஊரகக் குடியிருப்புகளுக்கு சவ்வூடு பரவல் (Reverse osmosis) முறையில் 48 இடங்களில் உவர் நீரை நன்னீராக்கும் கலன்கள் அமைத்தல்.
- இரும்புச் சத்து, நைட்ரேட் மற்றும் கடினத் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள 50 இடங்களில் குறைந்த செலவில் அந்தந்த இடத்திலேயே சுத்திகரிப்புக் கலன்களுடன்கூடிய முன்னோடித் திட்டங்கள் அமைத்தல்.

7.1.2 இவை தவிர, ஊரகப் பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், கீழ்க்கண்டவாறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன;

- பள்ளிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தில், கடந்த ஈராண்டுகளில் ஆண்டுக்கு சராசரி சுமார் 2,500 பள்ளிகளுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்பட்ட நிலையினை விரைவுபடுத்தி, மீதமுள்ள அனைத்து 9,016 அரசு பள்ளிகளுக்கும் நடப்பு ஆண்டிலேயே குடிநீர் வசதி செய்து தரப்படும்.





- பள்ளிகள் குடிநீர்த் திட்டம் போன்றே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 1000 லிட்டர் கொள்ளளவுடன்கூடிய மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி அளிக்கும் திட்டம் நடப்பு ஆண்டில் புதிய திட்டமாகச் செயல்படுத்தப்படும். இதன் மூலம் அங்கு வரும் நோயாளிகள் மற்றும் பொதுமக்களும் பயன்பெறுவர். இந்தத் திட்டம் இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும்.

*7.2 நகரகக் குடிநீர்த் திட்டம்*

7.2.1 தற்போது 2 மாநகராட்சிகள், 33 நகராட்சிகள் மற்றும் 169 பேரூராட்சிகள் பயன்பெறும் வண்ணம் 150 குடிநீர்த் திட்டங்கள் ரூ.641.47 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில், 2 மாநகராட்சிகள், 8 நகராட்சிகள் மற்றும் 53 பேரூராட்சிகளில் உள்ள 20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.163.61 கோடி மதிப்பீட்டில் 55 திட்டங்கள் முடிக்கப்படும்.

7.2.2. மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும், துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், இதுவரை 34 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.54.46 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 18 திட்டங்கள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மீதமுள்ள 16 திட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் (2001–2002) 6 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்படும்.

**8. சிறப்புத் திட்டங்கள்**

*8.1 பொதுமக்கள் பங்கேற்புடன்கூடிய ஊரகக் குடிநீர்த் திட்டம்*

8.1.1 ஊரகக் குடிநீர்த் திட்டங்களில் பொது மக்களும் பங்கேற்கும் வகையில் மாநிலங்களை ஊக்குவிக்கும் வண்ணம், 1999–2000 ஆம் ஆண்டு முதல் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு வழக்கமாக வழங்கும் மானிய நிதி உதவிக்கு மேல் கூடுதலான மானிய உதவியை மத்திய அரசு அளித்து வருகிறது. இந்த மானிய உதவியைப் பெறுவதற்கு, மாநில அரசுகள் கீழ்க்கண்ட அம்சங்கள் அடங்கிய சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்:

- தேவை அடிப்படையிலான அணுகு முறையை மேற்கொள்ளுதல்– இதன்கீழ் குடிநீர்த் திட்ட வடிவமைப்பு, செயலாக்க மற்றும் பராமரிப்பு அமைப்பு ஆகியவற்றை, பொதுமக்கள் தாங்களே

தீர்மானித்தலின் மூலமாக, திட்டத்தில் முழுமையான பங்கேற்புகொள்ளச் செய்தல்.

- கிராம அளவில் செயல்திறன் கட்டமைப்பு ஏற்படுத்துதலில் கவனம் செலுத்துதல் (கிராம அளவிலான குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு அமைத்தல்).
- திட்டச்செயலாக்கத்தில் சம்பந்தப்பட்டுள்ள முகமைகளின் பணிகளை ஒழுங்குபடுத்தி, ஒருங்கிணைந்த முறையில் திட்டப் பயன்களைப் பெறுவதை உறுதிப்படுத்துதல்.
- திட்ட அமைப்புச் செலவில், குறைந்தபட்சம் 10 விழுக்காட்டினை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பங்களிப்பு, நிதியாகவோ அல்லது பொருள், உடலுழைப்பு அல்லது நிலம் ஆகிய ஏதேனும் ஒன்றாகவோ இருக்கலாம்.
- மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டு முறைகளை மேற்கொள்ளுவதன் மூலம் நெடுநாளைக்கு பலன் தரும் வகையில் நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

8.1.2 இத்திட்டம் மாநிலத்தில் கீழ்க்கண்ட நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

- கோயம்புத்தூர்
- வேலூர்
- கடலூர்
- பெரம்பலூர் (ஒருங்கிணைந்தது)

8.1.3 இத்திட்டத்தைச் செயல்படுத்த, மத்திய அரசால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.11.22 கோடி நிதி அளிக்கப்பட்டுள்ளது.

8.1.4 இம்முன்னோடி மாவட்டங்களில் 2000–2001–ல் எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் நடப்பு ஆண்டு 2001–2002–ல் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:



**2000 – 2001 ஆம் ஆண்டுக்கான பணிகள் விவரம் மற்றும் 2001–2002–க்கான திட்டம்**

| வ. எண் | முன்னோடி மாவட்டம் | 2000—2001ல் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரம் | | 2001—2002 ஆம் ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|---|---|
| | | எடுத்துக் கொள்ளப் பட்ட திட்டங்கள் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
| 1 | கோயம்புத்தூர் | 96 | 5.18 | 7.50 |
| 2 | வேலூர் | 363 | 2.82 | 7.50 |
| 3 | கடலூர் | 20 | 0.76 | 7.50 |
| 4 | பெரம்பலூர் | 32 | 1.93 | 7.50 |
| | மொத்தம் | 511 | 10.69 | 30.00 |

**.2 நீராதாரங்களின் நிலைத் தன்மைக்கான திட்டம்**

8.2.1 ஊரகப் பகுதிகளில் நீராதாரங்களின் நிலைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றினை இந்த ஆண்டு முதல் மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளிலுள்ள சிறு ஓடைகள்/ஆறுகளின் குறுக்கே நீர் செறிவூட்டும் தடுக்கணைகள் மற்றும் தடுப்பணைகளை அமைப்பதற்கான திட்டங்கள் இவ்வாண்டு செயலாக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

.3 "நீர்வளம் காத்தல்" ஒருங்கிணைந்த நகரக மேலாண்மைத் திட்டம் (**SWIM** – ஸ்விம்)

8.3.1 நகரங்களின் குடிநீர் மேம்பாட்டுக்கான புதிய குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னுரிமை தருகிறது. அதே வேளையில், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட குடிநீர்த் திட்டங்களை முழுப்பயன் பெறும் வகையில் பராமரிக்கும் அவசியத்தையும் அரசு உணர்ந்துள்ளது. பல நகரங்களில் தவிர்க்கப்பட கூடிய குடிநீர்ப் பற்றாக்குறைக்கு அக்குடிநீர்த் திட்டங்களின் திறன் பெருமளவு குறைந்ததே காரணமாகும். குடிநீர்த் திட்டங்களுக்கான இயக்குதலும், பராமரித்தலும், உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பிலிருந்தாலும், தம் பராமரிப்பில் உள்ள குடிநீர்த் திட்டங்களின் திறன் குறைந்திருப்பதை அவை அறிந்தும் நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத் திட்டப் பராமரிப்புக்

[2001 செப்டம்பர் 5

குறைபாடுகளை நீக்குவதற்கான செலவினங்களை இந்த உள்ளாட்சி நிறுவனங்கள் செய்ய இயலாத நிலையினாலும் அடிக்கடி குடிநீர்ப் பற்றாக்குறையைச் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே, வரும் 2001–2002 ஆம் ஆண்டில் நகரங்களில் ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்த "குடிநீர் மேம்பாட்டு மேலாண்மைத் திட்டம்" ஒன்றினை அறிமுகப்படுத்த அரசு எண்ணியுள்ளது. இத்திட்டம், ஆறு அம்சத் தொகுப்புடன் தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதியத்தின் நிதியுதவியோடு நிறைவேற்றப்படும்.

*8.3.2* இத்திட்டத்தின் ஆறு அம்சத் தொகுப்பு (டுவீக்ஸ்) கீழ்க்கண்ட பணிகளை உள்ளடக்கும்:

- **பயனில் உள்ள குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்துதல்**

கணக்கில் வராமல் வீணாகும் குடிநீர் அளவினைக் குறைத்தல், குழாய்ப் பழுதுகளை நீக்குதல், நீர்த்தேக்கத் தொட்டிகளைப் புதுப்பித்தல்.

- **கழிவு நீர் மேலாண்மை**

தற்போதுள்ள திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய கழிவு நீர்த்திட்டங்களை அமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை திரும்பக் கையாளுதல்/மறுபடி பயன்படுத்தும் முறைகளைக் கையாளுதல்.

- **மின்சக்தி தணிக்கை**

மின்சாதனங்களின் செயல்திறனை அதிகரித்தல், திறன் குறைந்த நீரேற்று இயந்திரங்களை மாற்றுதல்.

- **கணக்கிடுதல் முறைகளில் முன்னேற்றம்**

குடிநீர் வழங்குதல் பணிக் கணக்குகளை பொதுக் கணக்கிலிருந்து பிரித்து தனிக் கணக்காகப் பராமரித்தல், பட்டியல் தயாரித்தல் மற்றும் வரவு செலவுக் கணக்குகளை கணினிமயமாக்குதல், கணக்குகளைச் சரிபார்த்தல் முதலியவை அடங்கும்.

- **திட்டங்கள் குறித்த தொழில்நுட்ப அறிவை அதிகரித்தல்**

தொழில்நுட்பப் பயிற்சி, குடிநீர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றி அறிவூட்டல் மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தல்.



2001 செப்டம்பர் 5]

- **நிலைத்தன்மை காத்தல்**

குடிநீர் மாசுறுவதைத் தடுத்தல், நீர் வளத் தளங்களைப் பாதுகாத்தல், மழைநீர் சேகரித்தல் மற்றும் நிலத்தடி நீரைப் பேணுதல் போன்ற குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மை காத்தல் பணிகளும், தகுந்த குடிநீர் கட்டணம் நிர்ணயிப்பதற்கான கொள்கை வகுத்தல் மற்றும் பராமரித்தல் முறைகளை ஒழுங்குபடுத்துதல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ஆண்டுக்கொருமுறை ஆய்வு செய்தல், குறிப்பிட்ட கால அளவில் நீரின் தரப்பரிசோதனை செய்தல் போன்ற திட்ட நிலைத்தன்மைப் பணிகளும் இதில் அடங்கும்.

*8.3.3* இத்திட்டம் நடப்பு ஆண்டில் சில முன்னோடி நகரங்களில் அறிமுகப்படுத்தப்படும். வரும் ஆண்டுகளில் மேலும் பல நகரங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்

### *8.4* குடிநீர்ப் பற்றாக்குறைப்பகுதிகளுக்கான சிறப்புத் திட்டங்கள்

*8.4.1* தமிழ்நாட்டில் குடிநீர்ப் பற்றாக்குறையால் பெருமளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சிறப்புக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டங்கள் பன்னாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

#### *8.4.1.1* ஒகேனக்கல் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம்

காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு வறட்சியால் மற்றும் புளோரைடால் பாதிக்கப்பட்டுள்ள தருமபுரி மாவட்டம் முழுமைக்குமான ஒகேனக்கல் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.1,008 கோடி செலவில் பன்னாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது.

#### *8.4.1.2* இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 3 நகராட்சிகள், 9 பேரூராட்சிகள் சுமார் 2,100 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் வண்ணம் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை பன்னாட்டு நிதி உதவி மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

[2001 செப்டம்பர் 5

8.4.1.3 சேடப்பட்டி–ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு வறட்சியால் பெருமளவு பாதிக்கப்படும் பகுதிகளான சேடப்பட்டி, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, டி.கல்லுப்பட்டி ஆகிய பகுதிகளில் உசிலம்பட்டி நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 447 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் சுமார் ரூ.100 கோடி செலவில் சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

8.4.1.4 அவிநாசி அத்திக்கடவு நீர் செறிவூட்டுத் திட்டம்

பவானி ஆற்றின் உபரியாகச் செல்லும் நீரை ஈரோடு மாவட்டத்தில் நம்பியூர், ஊத்துக்குழி, சென்னிமலை, பெருந்துரை, பவானிசாகர் ஒன்றியங்கள் மற்றும் கோவை மாவட்டத்தில் அன்னூர், அவிநாசி, காரடை, சூலூர், சர்க்கர் சாமக்குளம் ஒன்றியங்களில் உள்ள குளம் குட்டைகளில் தேக்கி நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டம் ஒன்றுக்கு கருத்துரு பெறப்பட்டுள்ளது. கலந்தாலோசகர் மூலமாகத் தயாரிக்கப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

9. கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிப்பு

9.1 தற்போது 4 மாநகராட்சிகள், 22 நகராட்சிகள், 60 நகரப் பேரூராட்சிகள், 120 ஊரகப் பேரூராட்சிகள், 2,017 ஊராட்சிகளில் உள்ள 6,825 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 279 நிறுவனங்கள்/ தொழிற்சாலைகள் ஆக மொத்தம் 1.40 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் 457 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரித்து வருகிறது. நடப்பாண்டில் 51 கூட்டுக் குடிநீர்த் திட்ட செயலாக்கப் பணிகள் முடிவுற்று, வாரியத்தால் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புக்காக ஆண்டொன்றுக்கு ரூ.65.00 கோடி செலவிடப்படுகிறது.

9.2 தனிப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் இயக்குதலும், பராமரித்தலும்

9.2.1 தனிப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டங்களை நல்ல முறையில் பராமரிக்க கிராம அளவில் கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவை அமைப்பதற்கான ஒரு புதிய கருத்தை அரசு வலியுறுத்தும். இதன் மூலம் ஊரகக் குடிநீர்த் திட்டங்களை பொதுமக்கள் தங்கள் சொத்தாகக் கருதி, சிறந்த முறையில் பராமரிக்க இயலும். கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவிற்கு கீழ்கண்ட அதிகாரங்கள் வழங்கப்படும்:



2001 செப்டம்பர் 5]

அ) உள்ளூரில் தேர்ச்சி பெற்ற நபர்களின் மூலம் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல், பராமரிப்புக்குத் தேவையான உதிரி பாகங்களை வழங்குதல், குடிநீர்ப் பாதுகாப்பு, வேதியல் பொருட்களை வழங்குதல், காலவரையரைப்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைச் சுத்தப்படுத்துதல்.

ஆ) பயனிலுள்ள திட்டத்தின் செயல்திறனை அதிகரிக்க திட்டங்களைப் புனரமைத்தல் அல்லது புதுப்பித்தல்.

இ) குடிநீர் வரையறைக்குத் தகுந்தாற்போல் அதிகரிக்க மேம்பாட்டு முறைகள்/ கூடுதல் நீராதாரங்களைச் செயல்படுத்துதல்.

ஈ) பராமரிப்புச் செலவைச் சரிக்கட்டும் வகையில் குடியிருப்போர் மற்றும் வர்த்தக நிறுவனங்களிடமிருந்து நியாயமான குடிநீர்க் கட்டணத்தை வசூலித்தல்.

10. பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

10.1 செயலாக்க நிலை

தற்போது தமிழ்நாட்டில் 16 நகரங்களில் மட்டும் பகுதியளவிலான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் பயனில் உள்ளன.

10.2 செயலாக்கத்திலுள்ள திட்டங்கள்

10.2.1 தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டம்

10.2.1.1 நடப்பு ஆண்டில் மத்திய அரசின் தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் கீழ்க்காணும் நகரங்களில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

அ) திருநெல்வேலி மாநகராட்சி
ஆ) திருச்சி மாநகராட்சி
இ) தஞ்சாவூர் நகராட்சி
ஈ) மயிலாடுதுறை நகராட்சி
உ) கரூர் நகராட்சி
ஊ) இனாம் கரூர் நகரப் பேரூராட்சி
எ) இராமேஸ்வரம் நகரப் பேரூராட்சி
ஏ) திருச்செந்தூர் நகரப் பேரூராட்சி

10.2.1.2 மேற்குறிப்பிட்ட திட்டங்கள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் ரூ.355.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு 38 விழுக்காடு முதல் 58 விழுக்காடு வரை மானியம் அளிக்கவுள்ளது.

10.2.1.3 இது தவிர சென்னை பெரு நகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மதுரை மாநகராட்சி மற்றும் கும்பகோணம் நகராட்சிப் பகுதிகளில், தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.216.00 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை மேற்கொள்ள உள்ளது.

10.2.2 நதி நீர் மாசுபடுதலைத் தடுத்தல் திட்டம்

10.2.2.1 தேசிய நதி நீர் மாசுபடுதல் தடுப்புத் திட்டத்தின்கீழ் திருச்சி, ஈரோடு, பவானி, பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளையம் நகரப் பகுதிகளில் காவிரி ஆறு மாசுபடுதலைத் தடுக்குமுகமாக கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல், பிரித்தல் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய் 30.41 கோடியில் மத்திய அரசு நிதியுதவியுடன் செயலாக்கப்பட்டு வருகிறது.

10.3 நகரப் பகுதிகளுக்கான பெரும் வரைவுத் திட்டம்

10.3.1 பெரிய நகரங்கள் அனைத்திலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைப்பதன் தேவையை அரசு உணர்ந்துள்ளது. நகரப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்த ஒரு பெரும் வரைவுத் திட்டத்தினை அரசு தயாரிக்க முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் பல்வேறு மாற்று தொழில்நுட்ப முறைகள் மூலம் கழிவு நீரைப் பாதுகாப்பான முறையில் மாசு அகற்றவும், கழிவு அகற்றப்பட்ட நீரைத் திரும்பவும் பிற தேவைகளுக்காகப் பயன்படுத்த வழிவகை செய்வதை ஆராய்வதும் அடங்கும். அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும், பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்த ஒரு செயல் திட்டம் வரையறுக்கப்படவுள்ளது.

11 நிலத்தடி நீர் செறிவூட்டல் மற்றும் மழைநீர் சேகரித்தல்

11.1 குடிநீர்த் திட்டங்களில் பெரும்பாலானவை நிலத்தடி நீரையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. ஊரகத் திட்டங்களில் 90 விழுக்காடும், குடிநீர்த் தேவை மற்றும் நகரத் திட்டங்களில் 70 விழுக்காடும் நிலத்தடி நீரையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. சமீப காலமாக நிலத்தடி நீர் மட்டம் மிகவும் தாழ்ந்து கொண்டே வருகின்றது. இதற்குப் பருவ மழை பொய்த்தல், தேவைக்கு அதிகமாக உறிஞ்சப்படும் நிலத்தடி நீர் வளம்





மற்றும் காடுகள் அழிப்பு ஆகியவற்றைக் காரணமாகக் கூறலாம். தமிழகத்தில் 52 ஒன்றியங்கள் நிலத்தடி நீர் பயன்படுத்தலில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒன்றியங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஒன்றியங்களில் நிலத்தடி நீர் எடுத்தல், நீர் செறிவூட்டுதலை விட அதிகமாக உள்ளது. 37 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் உபயோகம் 85 விழுக்காடுக்கு மேல் உள்ளது. 86 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் பயன்பாடு 65 விழுக்காடு முதல் 85 விழுக்காடு ஆகும்.

11.2 நீர் செறிவூட்டல் அல்லது செயற்கை முறை நீர் நிரப்பல் மெதுவாக நடக்கக்கூடிய ஒரு செயலாகும். தமிழகத்தின் 73 விழுக்காடு கடினப் பாறைப் பகுதியில் அமைந்துள்ளதாலும், பெய்யும் மழை குறுகிய காலத்திற்குள் பெய்வதாலும் இந்த நிலத்தடி நீர்ச் செறிவு மிகவும் மெதுவாகவும், பொறுமையாகவும் நடைபெறுகிறது. மழை நீர் மட்டுமே நிலத்தடி நீரினைச் செறிவூட்ட முடியும். தமிழ்நாட்டில் இயற்கையாக நடைபெறும் நிலத்தடி நீர் செறிவூட்டல் சுமார் 10 முதல் 25 விழுக்காடே ஆகும். பெரும்பாலும் மழை நீர் மூலம் ஏற்படும் நீர் செறிவூட்டல் நமது பண்டைய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட குளங்கள், ஊரணிகள், ஏரிகள் மற்றும் கண்மாய்களின் மூலம் நிகழ்கிறது. இந்த நீர்ப் பிடிப்புப் பகுதிகள் சரியான முறையில் இல்லாததாலும் அதன் நீர்ப் பிடிப்புக் கொள்ளளவு குறைந்து கொண்டே வருவதாலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகின்றது. மேலும் நீர்ப் பிடிப்புகள் ஆக்கிரமிக்கப்படுவதாலும், பல்வேறு காரணத்திற்காக வகை மாற்றப்படுவதாலும் இந்நிலை ஏற்படுகின்றது. இத்தகைய நீர்ப் பிடிப்புப் பகுதிகள் மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக அரசு கருதுவதால், பெரிய அளவில் மழை நீர்ச் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டத்தை மேற்கொள்ள உள்ளது.

11.3 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், யுனிசெப் நிறுவன உதவியுடன் 1994 ஆம் ஆண்டு முதல் நீர் சேகரிப்பு மற்றும் நீர் செறிவூட்டலுக்கு ஒரு நுண்ணிய வடிநிலப் பகுதியைத் தேர்வு செய்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் முடிவுகள், நீர்ச் செறிவூட்டலின் மூலம் நிலத்தடி நீரின் வளம் மற்றும் தன்மை ஆகியவை மேம்படுத்தப்படுவதை உறுதி செய்துள்ளது. இத்திட்டப் பகுதியில் அமைந்த அனைத்து நீராதாரங்களும் இத்திட்டத்திற்குப் பின்னர் மேம்படுத்தப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது.

11.4 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அண்ணா பல்கலைக் கழகத் தொலையுணர்வு மையத்தின் உதவியுடன் மேற்கொண்ட ஒரு

முயற்சியின் அடிப்படையில், தமிழகத்தில் நீர் செறிவூட்டலுக்கு ஏதுவான பல இடங்களைக் கண்டறிந்துள்ளது. இந்த ஆய்வு 13,357 கட்டமைப்புகள் அமைக்க வேண்டிய இடங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதன் விவரம் கீழ்வருமாறு:

- குளங்களில் தூர் வாருதல் 5266
- தடுப்பணைகள் கட்டுதல் 6055
- கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல் 1201
- வடிகட்டு குழிகள் அமைத்தல் 684
- நிலத்தடி தடுப்பணைகள் கட்டுதல் 82
- ஓடைத் தடுப்புகள் கட்டுதல் 69

11.5 மேற்கண்ட திட்டத்தினைச் செயலாக்க உத்தேசமாக ரூ.263 கோடி செலவாகும். அரசு இந்தத் திட்டங்களைப் படிப்படியாக மேற்கொள்ள உள்ளது.

11.6 குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும் இத்திட்டம் தவிர, மாநிலத்திலுள்ள மற்ற நீராதாரங்களின் நீர் வளத்தையும் மேம்படுத்த ஒரு பொதுவான பெரிய திட்டம் தயாரிக்கப்படுதலும் மிகவும் அவசியமானது. பல்வேறு அரசுத் துறைகளிடம் உள்ள நிலநீரியல் புள்ளிவிவரங்களின் அடிப்படையில், மாநிலத்திலுள்ள அனைத்து நீர்வள நிலைகளையும் புவியியல் அமைப்புகளையும் சேர்த்து இதற்கென ஒரு பெரும் வரைவுத் திட்டத்தினைத் தீட்ட அரசு உத்தேசித்துள்ளது. இந்த வரைவுத் திட்ட அடிப்படையில் ஒரு மாபெரும் மழை நீர் சேகரிப்பு/நீர் செறிவூட்டல் திட்டம் ஒன்று விஞ்ஞான அடிப்படையில் முறையாக உருவாக்கப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, சுற்றுச்சூழலும் நிலத்தடி நீர் வளமும் மேம்பாடடையும். மேலும் பெருகி வரும் ஊரக/நகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றுவதிலும் இது முக்கிய பயனளிக்கும்.

11.7 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற உத்திகள் மூலம் மழைநீர் சேகரிப்பு பற்றிய விவரங்களை மாநிலம் முழுவதும் பறைசாற்ற அரசு திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு வீடும் மழைநீர் சேகரிப்பு முறைகளைக் கையாண்டு மழைநீர் சேகரிப்பின் பயனைப் பெற முடியும். ஒவ்வொரு மேற்கூரைப் பகுதியும் மற்றும் திறந்த வெளியிடங்களும் மழைநீர் சேகரிப்பிற்கு ஏற்றவையாகும். இன்றும், நகர்ப்புறங்களில் அன்றாட



குடிநீர்த் தேவையில் ஒரு கணிசமான அளவு, வீடுகளில் உள்ள கிணறுகளின் மூலம் கிடைக்கப் பெறுகிறது என்பதும், மழைநீர் சேகரிப்பின் மூலம், இத்தகைய கிணறுகளின் நீர் கொடுதிறன் மற்றும் நீர் வளத்தினை மேம்படுத்த இயலும் என்பதும் உண்மை. கிணறுகள் இல்லாத வீடுகளில் கூட மழை நீரை நேரடியாகச் சேமித்து தினசரித் தேவைக்காகப் பயன்படுத்த முடியும். இத்திட்டங்களைச் செயலாக்கத் தேவைப்படும் சட்ட மற்றும் ஒழுங்கு நெறிமுறைகள் வகுக்கப்படும்.

12. குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் அளப்பரியது. இவை அல்லாது அத்தியாவசியத் தேவைகள் நிறைவு பெற இயலாது. சுத்தமான குடிநீரும், சுகாதார வசதிகளும், தனி ஒரு மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நலம் தரும் திட்டங்களாகும். சுத்தமான குடிநீரால் உடல் நலக் கேடுகள் தவிர்க்கப்படுமேயானால், மனிதத் திறன் மேலோங்கும். தேவையான குடிநீர் அவ்வப்போதே கிடைக்கப் பெறுமேயானால் மாதர்களும் சிறுமியரும் குடிநீரைத் தேடி அலையும் நேரத்தை மிச்சப்படுத்தி தத்தம் பணிகளையும், கல்வி வளர்ச்சியையும் மேம்படுத்த ஏதுவாகும். எனவே, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளுக்காகச் செலவிடப்படும் முதலீடு மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முதலீடு என்றே கொள்ளவேண்டும். மக்களின் வாழ்க்கைத் தர உயர்வே அரசு தீட்டும் திட்டங்களின் இலக்கன்றோ!

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சம்பந்தப்பட்ட வசதிகளை முழுமையாக மேம்பட்ட முறையில் செயல்படுத்த சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியம் 1-8-1978 அன்று தமிழக அரசின் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.

**1. வாரியத்தின் குறிக்கோள், பணி மற்றும் அதன் வளர்ச்சி:**

சென்னை மாநகர மக்களுக்குப் போதிய பாதுகாப்பான மற்றும் தரமான குடிநீரினை வழங்குவது மற்றும் கழிவு நீரினைச் சேகரித்து சுத்திகரிப்பு செய்து பாதுகாப்பாக அவற்றினை அகற்றுவதின் மூலம் நகர மக்களின் உடல் நலம் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல், நியாயமான கட்டணத்தில் இப்பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்துவது சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் குறிக்கோளாகும்.

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் பணிகள்**

(அ) குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்று பணிகளைத் திட்டமிடப்பட்ட முறையில் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

(ஆ) சென்னைப் பெருநகரப் பகுதியில் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்புகளைத் திறமையாக இயக்குதல் மற்றும் பராமரித்தல்

(இ) சென்னைப் பெருநகரப் பகுதியில் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் பணிகளின் எதிர்காலத் தேவையினை நிறைவேற்ற உடனடி மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் தயாரித்தல்

தற்போது பெரும்பாலும் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் ஏறத்தாழ 60 இலட்சம் மக்களுக்குச் சேவை செய்து வருகிறது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சென்னை நகர மக்களுக்குப் போதிய மற்றும் தரமான குடிநீரை அளிப்பதோடு அவர்களின் குறைந்தபட்ச குறைகளை உடனுக்குடன் களையவும் முயற்சி எடுத்து வருகிறது.

**2. தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியையும் குடிநீர்த் தட்டுப்பாட்டையும் சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் அளவு**

சென்னை மர்நகரத்திற்குத் தேவையான குடிநீர் தற்போது முக்கியமான 3 நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழாவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளிலிருந்து பெறப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட நீர்த்தேக்கங்களில் வழக்கமாக வடகிழக்குப் பருவமழை மூலம் தண்ணீர் பெறப்படும் மற்றும் சில சமயங்களில் தென்மேற்குப் பருவமழை பின்னடைவில் தண்ணீர் பெறப்படுகிறது. கடந்த 2 வருட காலமாக வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்ட அளவு மிகவும் குறைந்துவிட்டது.

**3 தற்போதைய குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சீர்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள்**

3.1. சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் முறையையும், குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக எடுக்கப்பட்டிருக்கும்





நடவடிக்கைகளைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-06-2001 அன்று ஆய்வு செய்யப்பட்டு, சென்னை மாநகரத்தின் கடுமையான வறட்சி மற்றும் குடிநீர்த் தட்டுப்பாட்டினைச் சமாளிக்க பல்நோக்கு திட்டங்களான, உடனடி செயல் திட்டங்கள் மூலம் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்யவும் மற்றும் சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க, நீண்ட காலச் செயல் திட்டத்தையும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

3.2. அதன்படி, சென்னை நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், உடனடி நிகழ்வுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, கூடுதல் நீரைப் பெறுவதற்காக, தொலைவிலுள்ள இடங்களிலிருந்து லாரிகள் மற்றும் இரயில்கள் மூலமாகவும் மற்றும் வாடகைக்கு எடுக்கப்பட்ட விவசாயக் கிணறுகளிலிருந்தும் குடிநீர்த் எடுத்துக்கொண்டுவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள தெருக்களில் நிரந்தரமாகக் குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல் மற்றும் கூடுதலாக நீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்து முறையாகவும், துரிதமாகவும் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற ஏழைகள் வசிக்கும் சுமார் 100 பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் தண்ணீரைச் சேகரித்து தண்ணீர்த் தொட்டிகளில் நிரப்பி குடிநீர்த் தேவைகளைத் தவிர மற்றும் இதரத் தேவைகளுக்காக வழங்கப்பட்டு வருகிறது.

**4. சாலை மூலம் தொலை தூரப் பகுதிகளிலிருந்து குடிநீர் கொணர்தல்**

**4. 1 நெய்வேலியிலிருந்து தண்ணீர் கொணர்தல்**

- தற்போதைய தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க நெய்வேலியிலிருந்து நிலத்தடி நீர் கொண்டு வரப்படுகிறது.
- 462 தண்ணீர் லாரிகள் வாடகைக்கு அமர்த்தி நாளொன்றுக்கு 550 நடை எடுக்கப்படுகின்றன.
- லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொண்டுவருவது 10-6-2001-லிருந்து தொடங்கப்பட்டது.
- 21-8-2001 வரை மொத்தம் 292.63 மில்லியன் லிட்டர் அளவிற்குத் தண்ணீர் கொண்டு வரப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 5

4.2. நகரத்தைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களிலிருந்து நிலத்தடி நீரைக் கொணர்தல்

- நகரத்தைச் சுற்றியுள்ள கன்னிகைப்பேர், வள்ளியூர், மீஞ்சூர், பூந்தமல்லி, மாமண்டூர் ஆகிய இடங்களிலிருந்து நிலத்தடி நீர் தனியார் விவசாயக் கிணறுகள் வைத்திருப்போரிடம் வாங்கப்பட்டு தண்ணீர் கொணரப்படுகிறது.
- நகரைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் பணி 28–6–2001–ல் தொடங்கியது.
- 21–8–2001 வரை கிடைக்கப்பெற்ற மொத்த தண்ணீர் அளவு– 398.03 மில்லியன் லிட்டர்.

4.3. கண்டலேறு பூண்டி கால்வாயிலிருந்து (கரகம்பாக்கம்) தண்ணீர் கொணர்தல்

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 2–7–2001 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டு 18–7–2001 அன்று விநாடிக்கு 3 கன அடி வீதத்திற்கு ஆரம்ப முனையில் பெறப்பட்டது.

- நீராவியாதல் மற்றும் நீர்க் கசிவைத் தவிர்ப்பதற்காக ஆரம்ப முனையிலிருந்து செங்குன்றத்திலுள்ள நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் தண்ணீர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட நிலையத்திற்கு சாலை வழியாக லாரிகள் மூலம் அனுப்பப்பட்டது.
- சாலை வழியாகத் தண்ணீரைக் கொண்டு செல்ல ஏதுவாக ஆரம்ப முனையிலிருந்து 14.2 கி.மீ. தூரத்தில் உள்ள கரகம்பாக்கத்தில் கால்வாயின் குறுக்கே பொதுப் பணித் துறை மூலம் மண்மேடு அமைக்கப்பட்டுள்ளது.
- தண்ணீரை லாரிகளில் நிரப்ப நீரேற்று நிரப்பு முனைகளும் நீரிறைக்கும் ஏற்பாடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.
- 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள கீழ்நிலைத் தொட்டி கன்னிகைப்பேரில் கட்டப்பட்டு தற்போதுள்ள 600 மி.மீ. தண்ணீர்க் குழாய் வழியாக நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.



2001 செப்டம்பர் 5]

- இந்தக் கட்டமைப்புத் திட்டம் ரூ.9 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.
- கரகம்பாக்கத்திலிருந்து (14 கி.மீ.) தண்ணீர் கொண்டுவரப்படுவது 18–7–2001 முதல் தொடங்கி 21–08–2001 வரை பெறப்பட்ட தண்ணீரின் அளவு 75.95 மில்லியன் லிட்டராகும்.

4.4 செங்கல்பட்டிலுள்ள குளவாய் ஏரியிலிருந்து தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக லாரிகள் மூலமாக நீர் கொணர்தல்

- சுத்திகரிக்கப்படாத நீர் செங்கல்பட்டில் உள்ள குளவாய் ஏரியிலிருந்து தொழிற்சாலை உபயோகத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.
- ஏரியிலிருந்து தண்ணீரை எடுப்பதற்கு நீரேற்று நிரப்பு முனைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- தண்ணீர் கொண்டுவரப்படுவது 9–8–2001 அன்று தொடங்கப்பட்டது.
- தொழிற்சாலைகளுக்கு 21–8–2001 வரை அனுப்பபட்ட தண்ணீரின் அளவு 19.79 மில்லியன் லிட்டராகும்.

5. இரயில் மூலம் தண்ணீர் கொணர்தல்

5.1. மேட்டூரிலுள்ள காவிரி நதியிலிருந்து நீர் கொணர்தல்

- மேட்டூரில் உள்ள காவிரி நதியிலிருந்து இரயில்மூலமாக நீர் கொணரப்படுகிறது.
- தண்ணீர் கொண்டுவரப்படுவது 5–7–2001 அன்று தொடங்கப்பட்டது.
- 21–8–2001 வரை மொத்தமாகக் கொணரப்பட்ட தண்ணீரின் அளவு–66.20 மில்லியன் லிட்டர்களாகும்.
- தண்ணீர் வில்லிவாக்கம் இரயில் நிலையத்தில் இறக்கப்பட்டு ஏற்கெனவே உள்ள கால்வாய் மூலமாக கீழ்ப்பாக்கம் சுத்தகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.
- நீர் இறைப்பதற்கான ஏற்பாடுகள் அமைப்பதற்கான மொத்தச் செலவினம் ரூ. 65.20 இலட்சங்களாகும்.

**5.2. ஈரோட்டிலுள்ள காவிரி நதியிலிருந்து நீர் கொணர்தல்**

- ஈரோட்டில் காவிரி நதிப் படுகையிலிருந்து இரயில் மூலமாக சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.
- தண்ணீர் கொண்டுவரப்படுவது 20–6–2001 முதல் தொடங்கப்பட்டது.
- 21–8–2001 வரை 46 இரயில் ரேக்குகள் மூலம் பெறப்பட்ட தண்ணீரின் மொத்த அளவு 66.65 மில்லியன் லிட்டர்களாகும்.

**6. கிணற்றுத் தளங்களில் உள்ள விவசாயக் கிணறுகளிலிருந்து தண்ணீர் கொணர்தல்**

சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவதற்கான இரண்டு முக்கிய ஆதாரங்கள் பின்வருமாறு:

பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம் ஏரியின் ஒரு பகுதி ஆகிய நீர் ஆதாரங்களிலிருந்து மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து பெறப்படும் தண்ணீர் மற்றும் (2) நிலத்தடி நீர் 6 கிணற்றுத் தளங்களிலிருந்து, அதாவது பூண்டி, தாமரைப்பாக்கம், வெள்ளப்படுகை, கன்னிகைப்பேர், பஞ்சட்டி மற்றும் மீஞ்சூர் ஆகிய பகுதிகளிலிருந்தும் பெறப்படுகிறது. கிணற்றுத் தளங்களிலிருந்து பெறப்படும் நிலத்தடி நீரை மணலி பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கும் மற்றும் ஒரு பகுதி நகரத்திற்கும் வழங்கப்படுகிறது. 2000 ஆம் ஆண்டில் பெய்த குறைவான மழையின் காரணமாக இந்தக் கிணறுகளில் நீர் கிடைக்கப்பெறுவது குறைந்ததாலும், மேலும் நீர்த்தாங்கிகளில் நீர் ஊட்டல் இல்லாததாலும் போதுமான அளவு நீர் பெற முடியவில்லை. ஆகவே நகரத்தின் குடிநீர் வழங்கலை அதிகப்படுத்துவதற்கும், குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கும் கிணற்றுத் தளங்களில் உள்ள 186 தனியார் விவசாயக் கிணறுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டு அதன்மூலம் தண்ணீர் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டது. சென்னைக் குடிநீர் வாரிய குழாய் அமைப்பு அல்லது நீரேற்று நிலையங்களுக்கு அருகிலுள்ள கீழனூர், மாகரல், தாமரைப்பாக்கம், கன்னிகைப்பேர் மற்றும் வெள்ளப்படுகை ஆகிய இடங்களிலுள்ள தனியார் விவசாயக் கிணறுகள் தேர்வு செய்யப்பட்டு அத்துடன் சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர்க் குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குழாய்கள் மூலமாகத் தண்ணீர் கொணர்வதற்கு 110 மி.மீ. பிவிசி குழாய்களை ஏற்கெனவே உள்ள நீரேற்று நிலையங்கள் அல்லது புதிதாகக் கட்டப்பட்டுள்ள நீர்த் தொட்டியுடன்



இணைக்கப்பட்டுள்ளது. குழாய்களின் மூலமாகக் குறைந்த பட்சமாக 0.4. மில்லியன் லிட்டர் அளவிற்கு ஒரு நாளில் 18 மணி நேரம் ஒரு கிணற்றுக்கு என்ற அடிப்படையில் ஏற்கெனவே தனியாரால் நிறுவப்பட்ட விசைக்குழாய் மூலமாக நீர் இறைக்கப்படுகிறது. இவ்வாறு நீர் இறைப்பதற்கு 1 கிணற்றிற்கு 1 மணி நேரத்திற்கு ரூ. 26/– வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. திட்டமிடப்பட்ட 186 கிணறுகளில் 170 கிணறுகள் குடிநீர் வாரிய நீர் கொணரும் குழாய் அமைப்புகளுடன் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன. 186 விவசாயக் கிணறுகளை வாடகைக்கு எடுப்பதற்கான திட்ட மதிப்பீடு ரூ 843.26 இலட்சமாகும். இதில், கட்டுமானப் பணிகளுக்கான செலவு, வாடகைக் கூலி மற்றும் மின்சார பயனீட்டளவுக்கான கட்டணம் ஆகியவை அடங்கும். கூடுதலான தண்ணீரைப் பெறுவதற்காக மேலும் பல கிணறுகளைத் தேர்வு செய்து வாடகைக்கு எடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வப்போது தேர்வு செய்யப்படும் கிணறுகள் ஏற்கெனவே உள்ள அமைப்புகளுடன் இணைக்கப்படும்.

**7. நகரின் குடிநீர் வழங்குதலின் தற்போதைய நிலை:**

ஏரிகளில் நீர்த்தேக்க அளவு குறைவாக இருப்பதால் மக்களுக்குத் தினந்தோறும் லாரிகள் மூலமாகத் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது மற்றும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குதல் கணிசமான அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

**7.1 லாரிகள் மூலமாகக் குடிநீர் வழங்குதல்:**

லாரிகள் மூலமாகக் குடிநீர் வழங்கல் முறை நாளொன்றுக்கு 7,700 தடவை 9,184 தொட்டிகளுக்கு நீர் நிரப்பியும், தெரு விநியோகம் மூலமாகவும் 35 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 20 லிட்டர் வீதம் மொத்தம் நாளொன்றுக்கு 70 மில்லியன் லிட்டர் குடிநீர் லாரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**7.2 கூடுதலான நீர் நிரப்பும் முனைகள்:**

கடந்த வருடம் 9 நீர் நிரப்பும் இடங்கள் இருந்தன. அவை, அண்ணா பூங்கா (2) தெற்கு தலைமை நீரேற்றும் நிலையம் (3) கீழ்ப்பாக்கம் (4) கே.கே.நகர். (5) திருவான்மியூர் (6) பள்ளிப்பட்டு (7) முத்தமிழ் நகர் (8) மகாகவி பாரதியார் நகர் (9) அண்ணா நகர் ஆகும். நீர் நிரப்பும் தொட்டிகளின் எண்ணிக்கை அதிகரித்ததாலும் லாரிகள் மூலம் நீர்

வழங்கும் தேவை அதிகரித்ததாலும் நடப்பு ஆண்டில் 8 புதிய நீர் நிரப்பும் முனைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவை படேல் நகர், கொளத்தூர், சூளைமேடு, கண்ணப்பர் திடல், மைலாப்பூர், நந்தனம், திருவல்லிக்கேணி, வேளச்சேரி மற்றும் ஈக்காட்டுத்தாங்கல் ஆகிய இடங்களாகும்.

**7.3 கூடுதலாக நிலையான நீர்த் தொட்டிகள் அமைத்தல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக 2000 நீர்த் தொட்டிகளைத் தண்ணீர் வராத தெருக்களில் அமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார். இதுவரை கூடுதலாக 809 நிலையான நீர்நிலைத் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 9,184 தொட்டிகள் உள்ளன. மேலும் கூடுதலான நீர்நிலைத் தொட்டிகள் அமைக்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது.

**7.4 கூடுதலாக வாடகை லாரிகள் அமைத்தல்;**

லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் முறையைச் சீர்படுத்துவதற்கும், மேலும் ஏற்கெனவே உள்ள லாரிகளுடன் 152 சிறிய லாரிகள் மற்றும் 149 டிராக்டர்கள் கூடுதலாக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர, 462 லாரிகள் மூலம் நெய்வேலியிலிருந்தும் 396 லாரிகள் மூலம் மாமண்டூர், பாலாறு, பூந்தமல்லி போன்ற இடங்களிலிருந்தும் நீர் கொண்டு வரப்படுகிறது.

**7.5 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அதனுடன் நீரேற்றுவதற்கான ஏற்பாடுகளும் மற்றும் நிலையான நீர்த் தொட்டிகள் மூலம் குடிசை வாழ் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்கான பணிகள்:**

சென்னை மாநகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில், மாநகரின் குடிசைப் பகுதிகளில் குடிநீர் அல்லாத மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய மற்றொரு திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 100 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டவும் மற்றும் அவற்றை நீர் இறைக்கும் மின்சார மோட்டார்களுடன் இணைத்து (HDPE) தொட்டியில் நீர் நிரப்புவது, மேலும் அவற்றுடன் பொதுக் குழாய்கள் அமைத்து குடிநீர் பெற வகை செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் மதிப்பீடு ரூ.76.00 இலட்சமாகும். இத்திட்டத்தின்படி மொத்தம் உள்ள 100 கிணறுகளில் ஏற்கெனவே 37 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதம் உள்ள ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான பணிகள் வருகிற ஆகஸ்ட் 25 ஆம் தேதிக்குள் முடிக்கப்பட உள்ளன. இந்த முயற்சியினால் 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும்.





**8. நீண்ட காலத் திட்டங்கள்**

சென்னை நகரில் தண்ணீர்த் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுகின்றது. அத்தகைய சூழ்நிலையில் குடிநீர் வாரியம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து தட்டுப்பாட்டினைப் போக்கி, சென்னையின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. இருந்தபோதிலும் நீண்டகால நிரந்தரத் தீர்வு காண்பதே இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறைவேற்றப்பட உள்ளன.

**8.1. உவர்நீரைச் சவ்வூடுபரவுதல் மூலம் குடிநீராகச் சுத்திகரிக்கும் நிலையங்கள்**

சென்னைக் குடிநீர் வாரியம், மீனவர் குடியிருப்புப் பகுதி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியதின் விளைவாகப் பாதிக்கப்பட்டவர் களுக்கு மேலான கவனம் செலுத்தி வருகிறது. மீனவர் குடியிருப்புப் பகுதிகள் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ளபடியாலும், குடிநீர் கிடைக்கப் பெற முடியாத நிலையில் உள்ளதாலும் பெரும் அளவில் உடல் நலக் குறைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாலும், அப்பகுதிகளில் சவ்வூடுபரவுதல் மூலம் பல சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைத்து அப்பகுதி மக்களுக்கு உதவி செய்ய ஒரு தீர்மான முடிவு எடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக அயோத்தியா குப்பம், மற்றும் இராயபுரத்திலுள்ள காசிமேடு குப்பம் ஆகிய இரு இடங்களில் சவ்வூடுபரவுதல் மூலம் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. உவர் நீரைக் குடிநீராக்கவும் மற்றும் தரமான குடிநீரை மக்களுக்கு வழங்கவும், அயோத்தியா குப்பம் மற்றும் இராயபுரத்திலும் நாளொன்றுக்கு 0.1 மி.லி. திறனுள்ள சவ்வூடுபரவுதல் மூலம் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் செப்டம்பர் 2001-ல் முடிவடையும்

**8.2 சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-I**

சென்னை குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெற்று சுத்திகரித்து நாளொன்றுக்கு 180 மி.லி. தண்ணீரை நகரத்திற்கு வழங்கப்படும். இத்திட்டத்தை சென்னை குடிநீர் வாரியம் 2 ஆண்டுகளில் செயல்படுத்தும். அரசு ஆணை எண் 105, நாள் 9-08-2001-ன்படி ரூ.720 கோடி மதிப்பீடு கொண்ட இத்திட்டத்திற்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்திற்கான நிதியின் ஒரு பகுதியை மாநில அரசும் எஞ்சிய பகுதியை தேசிய நிதியுதவி நிறுவனங்களும் ஏற்கும்வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மற்றும் நிதியுதவி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தை மேற்கொள்வதால் வீராணம் ஏரியின் பாசனப் பரப்பின் நீர்ப்பாசனத் தேவைகள் பாதிக்கப்படமாட்டாது.

8.3 சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்–2

மழைநீர் வீணாகக் கடலில் சென்று கலப்பதைத் தவிர்த்து கொசத்தலையாறு, கூவம், அடையாறு, பாலாறு ஆகியவற்றில் தடுப்பணைகள், நீர்த்தேக்கங்கள், கசிவுநீர்க் குளங்கள் அமைப்பதன் மூலம் உபரி நீர் சேமிக்கப்படுகிறது. தடுப்பணைகள் கட்டப்படுவதே சென்னை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் 2–ன் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 493 கோடியாகும். இதுதொடர்பாக, விரிவான திட்டச் செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு அதற்கான நிதியுதவி பெறுவதற்காக, பன்னாட்டு நிதியுதவி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இத்திட்டத்தில்,

1) திருக்கண்டலம், ஜமீன் கொரட்டூர், திருநீர்மலை, பள்ளிக்கரணை ஆகிய இடங்களில் நீர்த்தேக்கங்கள் கட்டுதல்

2) கொசத்தலையாறு, கூவம், அடையாறு, பாலாறு ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல்

3) செங்குன்றம், மாதவரம் ஏரி, கொரட்டூர் ஏரி, அம்பத்துார் ஏரி, ரெட்டை ஏரி ஆகியவற்றின் கொள்ளளவுத் திறனை உயர்த்துதல் ஆகியன அடங்கும்

8.4.மேலும் சென்னை நகரின் தொடர்ந்து வரும் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக, காவிரியிலிருந்து தண்ணீர் பெறுவதற்கான திட்டங்கள் அனைத்தையும் உடனடியாக ஆய்வு செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தில் பள்ளிப்பாளையம் திறந்தவெளி கால்வாய்த் திட்டம், பள்ளிப்பாளையம் மூடு கால்வாய்த் திட்டம், மேட்டூரிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் பெறுவது மற்றும் திருச்சிராப்பள்ளியில் பெரிய அணைக்கட்டின் மேற்பரப்பிலிருந்து தண்ணீர் பெறுவது ஆகியன அடங்கும்.





9. கூடுதலான நீர் ஆதாரங்களைக் கண்டறிதல்

9.1. ஆரணி, கொசத்தலையாறு நதிப்படுகையின் நிலத்தடி நீரின் உள்ளாற்றலை மறு மதிப்பீட்டு ஆய்வு செய்தல்

விரிவான ஆய்வினை மேற்கொள்வதன்மூலம், ஆரணி, கொசத்தலையாறு நதிப்படுகையின் நிலத்தடி நீரின் உள்ளாற்றலை மதிப்பீடு செய்ய முடியும். இவ்வாய்வின் பரிந்துரையின்படியே இந்நீராதாரங்களிலிருந்து நீரினைப் பெற முடியும்.

9.2 குடிநீரைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள்

9.2.1 நீர்க்கசிவைக் கண்டறிந்து கணக்கில் வராத நீரினைச் சரி செய்தல்

தொடர்ந்து நீர்க்கசிவினால் ஏற்படக்கூடிய இழப்பு மற்றும் கணக்கில் வராத நீரின் அளவைக் குறைப்பது ஆகியவற்றிற்கான திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பட மேற்கொள்ளப்பட்டன. இந்தச் செயல்முறைத் திட்டம், உலக வங்கி நிதியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதுவரையில் மூன்று நிலைகளாக 35,000 வீடுகளின் குடிநீர் இணைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. அடுத்த நிலையான 4அ, 4ஆ மற்றும் 5–ல் 1,70,000 வீடுகளின் குடிநீர் இணைப்புகளின் பணிகள் டிசம்பர் 2001–க்கு முன் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதுவரையில் 1,30,926 வீடுகளின் குடிநீர் இணைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன (78 சதவீதம்)

9.2.2. உபயோகப்படாததை வளமாக்குவது – கழிவு நீரை மீண்டும் உபயோகிப்பது

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மீண்டும் உபயோகப்படுத்துவதற்கும் தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்குமான பணிகள் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டன. கொடுங்கையூர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து இரண்டாம் முறை சுத்திகரிக்கப்பட்ட நீரைப் பெற்று மூன்றாவது முறையாக சுத்திகரிப்பு செய்வதற்கு தொழிற்சாலைகளே சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துள்ளன. தொழிற்சாலைகள் மூலமாக நிறுவியுள்ள நிலையங்களின் மொத்தத் திறனளவு நாளொன்றுக்கு வழங்கப்படும் நீர் 30 மில்லியன் லிட்டராகும். தற்பொழுது சென்னைக் குடிநீர் வாரியம் நாளொன்றுக்கு 23 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்டக் கழிவுநீரைத் (உயிரியல் ஆக்ஸிஜன் தேவை1 லிட்டருக்கு 50 மில்லி கிராம்கள் மற்றும் மிதவை திடப் பொருட்கள் 1 லிட்டருக்கு 70

மில்லி கிராம்கள்) தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகிறது. சென்னை குடிநீர் வாரியம் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை உபயோகப்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. மற்றும் நாளொன்றுக்கு சுமார் 7 மில்லியன் லிட்டர் அளவிற்கு சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் சென்னை நகரில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றின் மின் சக்தி நிலையத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இரண்டு மின் சக்தி நிலையங்களைத் தவிர பெட்ரோ கெமிக்கல் பூங்கா மற்றும் எண்ணூர் துறைமுகம் ஆகியவற்றுடன் மேலும் கூடுதலான இரண்டு மின் நிலையங்கள் வர உள்ளன. இத்தொழிற்சாலைகள் அடுத்த 3 அல்லது 4 வருடங்களுக்குள் இயக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான தண்ணீர்த் தேவை நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக குடிநீர் வாரியம், இரண்டாவது முறையாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மூன்றாவது முறையாக நாளொன்றுக்கு 50 மி.லி. திறனுள்ள சவ்வூடுபரவுதல் மூலம் சுத்திகரிக்கும் நிலையம் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை இத்தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்த உள்ளது.

### 9.2.3. மழைநீர் சேகரித்தல் மற்றும் நிலத்தடி நீரை உண்டாக்குதல்

1994 ஆம் ஆண்டில் மழைநீரைச் சேகரிக்கும் முறை தொடங்கப்பட்டு தொடர்ந்து செயலாக்கத்தில் பின்பற்றப்படுகிறது. அடுக்குமாடிக் கட்டடங்கள், தனிப்பட்ட வீடுகள் மற்றும் நிறுவனங்களில் மழை நீர் சேகரிக்கும் முறைகளைச் செயல்படுத்த பலவித மாதிரி வடிவமைப்புகளை வாரியம் வெளியிட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு பற்றி விழிப்புணர்வு கொண்டுவரும் வேளையில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் இணைந்து மழைநீரைச் சேகரிக்க சில விதிமுறைகளை வகுத்துள்ளது. புதுக் கட்டடங்களுக்கு பிளான் ஒப்பளிப்பு அனுமதி கொடுக்கப்படும்போது மழைநீர் சேகரிக்கும் முறையைக் கட்டாயமாக்கும் விதிமுறைகளை வகுத்துள்ளது.

### 9.2.3.1 மழை நீர் சேகரிப்பு முறையை மேம்படுத்த குடிநீர் வாரியம் எடுத்துக் கொண்ட முயற்சிகள்:

மழைநீர் சேகரிப்பதன் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காக குடிநீர் வாரியம் பிரத்தியேக "மழைநீர் சேகரிப்பு மையத்தை" உருவாக்கி உள்ளது. இம்மையம் தற்போது செயல் இயக்குநர் தலைமையில் கூட்டுநராக முதுநிலை நிலப் புவியியலாளர்



உதவியுடன் மற்றைய பணியாளர்களுடன் செயல்படுகிறது. இந்த மையத்தின் முக்கியக் குறிக்கோளாவது நுகர்வோர்களிடம் மழைநீர் சேகரிப்பு தகவல் முறையைப்பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி அவர்களின் வீட்டின் அமைப்பிற்கு ஏற்ப மழைநீர் சேகரிக்க தொழில்நுட்ப ரீதியாக இலவச ஆலோசனைகளை வழங்கி, குறைந்த மதிப்பீட்டில் செயல்படுத்த உதவுகிறது.

**இந்த மையத்தின் பிரதான குறிக்கோள்கள்:**

(1) மழைநீர் சேகரிப்புப் பற்றி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துல்

(2) பொதுமக்களிடம் மழைநீர் சேகரிப்பு முறையை விளம்பரப்படுத்துதல்

(3) புவியியலின் அடிப்படையில் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்

(4) மழைநீர் சேகரித்த பகுதிகள் மற்றும் கிணறுகளின் தண்ணீர் அளவு மற்றும் தரத்தைக் கண்காணித்தல்

(5) மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாகப் பராமரிப்பதற்கு ஆதரவளித்தல்

(6) தனியார் வீடுகள் மற்றும் பொது இடங்களில் மழைநீர் சேகரிப்புப் பணிகளை ஊக்குவிப்பதற்கு அனைத்து செயல்களையும் மேற்கொள்ளுதல்

**மழை நீர் சேகரிக்கும் மையத்தின் நடவடிக்கைகள்:**

**(I) மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்:**

1) மழை நீர் சேகரிப்பதன் முக்கியத்துவத்தைப் பரப்புவதற்குப் பல வழிமுறைகளில் விரிவாக மழைநீர் சேகரிப்பு விளம்பரம் பத்திரிகை வாயிலாகவும், அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாகச் செய்தல்

2) மழைநீர் சேகரிப்பை மேம்படுத்த பல்வேறு சமூக நல நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களுடன் சேர்ந்து கருத்தரங்குகள் நடத்துதல் (இதுவரை 10க்கு மேற்பட்ட கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன)

3) அகில இந்திய வானொலி நிலையத்தின் மூலம் மழைநீர் சேகரிப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்புதலுக்கு ஏற்பாடு செய்தல்

**(ii) விரிவுரைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்:**

அரசுத் துறை மற்றும் நிறுவனங்கள், கல்வி நிறுவன்ங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்காக மழைநீர் சேகரிப்புப் பற்றி பல்வேறு விரிவுரைகளும் பயிற்சிகளும் நடத்தப்பட்டன. மேலும் பொது மக்கள், தனியார் துறை பொறியாளர்கள் மற்றும் கட்டடப் பணியாளர்களின் கவனத்திற்காகப் பயிற்சி முகாம்கள் சென்னை குடிநீர் வாரிய ஆதார மையத்தில் நடத்தப்பட்டன.

**(iii)பொது மக்களுக்கு மற்றும் தனியார் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்ப அறிவுரைகள் வழிகாட்டுதல்:**

சென்னை குடிநீர் வாரியத்தில் மழைநீர் சேகரிப்பு மையம் ஏற்படுத்திய பிறகு தனியார் வீட்டின் உரிமையாளர்கள், அடுக்கு மாடி வீடுகள், கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அரசு நிறுவனங்களிடமிருந்து மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகள் கேட்கப்படும்போது சென்னைக் குடிநீர் வாரிய தொழில்நுட்ப ஆலோசகர்கள் மூலம் ஆலோசனை வழங்கப்படுகிறது.

**(iv) பொது இடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை (மாதிரிக்காக) நிறுவுதல்:**

சென்னை குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்பு ஏற்பாடுகளை எல்லா கட்டடங்களிலும் மற்றும் அரசு கட்டடங்களிலும் நிறுவுவதற்கு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. மேலும், பொதுமக்கள் மத்தியில் மழை நீர் சேகரிப்பு முறைகளைப் பிரபலப்படுத்துவதன் முயற்சியைத் தொடர்ந்து, தகுந்த காலத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பற்றிய விவரங்களைப் பரப்புவதற்கு மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வு இயக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்துடன் தீவிரமாக இணைந்து, பயிற்சி மூலமாகவும், இலவச தொழில்நுட்ப ஆலோசனைகள் மூலமாகவும் பொதுமக்கள் பங்கேற்பதற்குமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, "மழைநீர் சேகரிப்பு ஆலோசனை மையம்", சென்னை 600 005, சேப்பாக்கம், காமராஜர் சாலையில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் 31–7–2001 அன்று மாண்புமிகு அமைச்சர், உள்ளாட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.





*10.* பெரும் திட்டத்தில் அடங்கியுள்ள மேம்பாட்டுப் பணிகள்

*10.1.1.* குடிநீர் வழங்கல்

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பெரும் திட்டத்தில் ஏற்கெனவே உள்ள உள்கட்டமைப்பினை முழுமையாகப் பயன்படுத்த வலியுறுத்துதல் மற்றும் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகப்படியான நீரைப் பெற்று சுத்திகரிப்பு செய்து பகிர்மானம் செய்தல், குடிநீர் வழங்குதலை மேம்படுத்துதல், சமமற்ற பகிர்மானம், குறைந்த அழுத்தம், நீர்க்கசிவு, இதர இழப்புகளால் ஏற்படும் குறைபாடுகளைக் களைதல்.

*10.1.2.* குடிநீர் வழங்கல் பெருந்திட்டத்தில் வலியுறுத்தியுள்ள பெரும்பான்மையான பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் உலக வங்கி உதவியுடன் இரண்டாவது சென்னை குடிநீர்த் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் 2003–2004 ஆம் வருடத்தில் முடிவுறும்.

*10.2* கழிவுநீர் பணிகள்:

கழிவு நீரகற்றுப் பெருந்திட்டத்தில் வலியுறுத்தியுள்ள பணிகள் ஏற்கெனவே உள்ள கழிவு நீர் அமைப்பை வலுப்படுத்துதல், கழிவு நீரகற்று வசதிகள் இல்லாத பகுதிகளில் கழிவுநீர்க் குழாய்கள் அமைத்து அதற்கான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல், புதிய கழிவுநீரகற்று நிலையங்களைக் கட்டும் கட்டுமானப் பணிகள், விசைக் குழாய்களை வலுப்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கும். இதுவரை 50 விழுக்காடு அளவிற்குப் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள பணிகள் சென்னை நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகிறது.

*11.* பணி முன்னேற்ற விவரங்கள்:

*11.1.* குடிநீர் வழங்கல்:

இரண்டாவது சென்னைக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் புதிய குடிநீர் விநியோகிக்கும் நிலையங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கொணரும் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் குழாய் அமைப்பை வலுப்படுத்துதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 2002 ஆம் வருடம் ஜூன் மாதம் முடிவுறும்.

*11.1.2* கலந்தாய்வுத் திட்டங்கள்

**அ. இருசார்பு ஏற்பாடு கலந்தாய்வுப் பணிகள்:**

உலக அரங்கில் சிறந்தமுறையில் பணியாற்றிவரும் குடிநீர் நிறுவனங்களின் சிறப்பான பணி முறைகளை வாரியத்தில் மேற்கொண்டால், வாரியத்தின் சேவையின் தரம் உயரும் என்பது ஒரு கருத்து. இதனை அடையும்பொருட்டு இருதரப்பு ஒப்புமை ஏற்பாடு எனும் கலந்தாய்வுப் பணியினை வாரியம் மேற்கொண்டுள்ளது. இக்கலந்தாய்வுப் பணியின் முதற்கட்டப் பணியான ஆய்வு செய்தல் முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு அறிக்கையின் பரிந்துரைகளின்படி நடைமுறைப்படுத்தும் கட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆ. ஆரணி, கொசத்தலையாறு பற்றிய ஆய்வு:**

ஆரணி, கொசத்தலையாறு நதிப்படுகையில், நிலத்தடி நீரின் தன்மையை அறிவதற்காக, குறுகிய காலத்தில் ஆய்வுப் பணிகள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இ. தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம்**

வாரியத்தின் அனைத்துப் பணிகளையும் தொடர் கணினிமயமாக்குவதற்கு குடிநீர் வாரியம் திட்டமிட்டுள்ளது. இரு சார்பு கலந்தாய்வு அமைப்பின் ஆலோசகர் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உதவியும் அறிவுரையும் வழங்குவார். இவற்றின் ஒரு பகுதியாக முன்னோடித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நடப்பு ஆண்டில் செயலாக்கப்படும்.

**12. ரூபாய் 135 கோடி செலவில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் திறனுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்:**

ஆந்திரப் பிரதேசத்திலிருந்து பெறப்படும் நீரைச் சுத்திகரிப்பதற்காக நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் திறனுள்ள சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கான பணிகள் பிரெஞ்சு நாட்டு நிதி உதவியுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. இதற்கான இவ்வருட நிதி ஒதுக்கீடு ரூபாய் 15 கோடியாகும்.





**13. சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம்**

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கழிவுநீரை இடையே தடுத்தல், திருப்புதல் மற்றும் சுத்திகரித்தல் ஆகிய கூட்டமைப்புத் திட்டத்தை "சென்னை நகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்" கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தைத் தவிர இத்திட்டம் பொதுப் பணித் துறை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றால் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.1700.00 கோடியாகும். குடிநீர் வாரியத்தால் செயலாக்கப்படவுள்ள பாகங்களின் திட்ட மதிப்பீடு ரூ.720.15 கோடியாகும். மத்திய அரசு இதற்காக ரூ.491.52 கோடிக்கு நிதி உதவி அளிப்பதற்கு அனுமதி அளித்துள்ளது. மீதமுள்ள ரூ.228.63 கோடிக்கு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் நிதி பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் பாகங்களும் அதனைச் செயல்படுத்தும் நிறுவனங்களும் பின்வருமாறு:

| வ. எண் | பாகங்கள் | மதிப்பீடு ரூபாய் கோடியில் | செயலாக்கப்படும் நிறுவனங்கள் |
|---|---|---|---|
| 1. | அடையார் மற்றும் கூவம் நதிகளில் மணற் கட்டுகளை அகற்றி தூர்வாருதல் | 236.90 | பொதுப் பணித் துறை |
| 2. | ஆறுகளின் கரை ஓரங்களில் வசித்துவரும் குடிசைவாழ் மக்களை மறு இடத்திற்கு மாற்றி புனரமைத்தல் | 613.50 | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் |
| 3. | சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஆறுகளுக்குச் சென்றடைவதைத் தடுத்தல் | 720.15 | சென்னைக் குடிநீர் வாரியம் |
| 4. | நுண்ணிய சாக்கடை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் | 109.25 | சென்னை மாநகராட்சி |
| 5. | திட்டம் உருவாகுதல், கண்காணித்தல் மற்றும் ஏனைய பணிகள் | 20.20 | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| | மொத்தம் | 1700.00 | |

[2001 செப்டம்பர் 5

**14.1 சென்னைக் குடிநீர் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை:**

எதிர்வரும் காலத்தில், சென்னைக் குடிநீர் வாரியம் பெருந் திட்டத்தின் மூலம் விஞ்ஞான முறைப்படி அருகிலும் மற்றும் தொலைதூர நீராதாரங்களிலிருந்து பெறப்படும் நீரைக் குடிநீராக மாற்றி அனைத்து மக்களுக்கும் அனைத்துக் காலங்களிலும் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யும்.

14.2 தொலைநோக்குப் பார்வையில் குடிநீர் வாரியம் 2010 ஆம் ஆண்டு வரை ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு வழங்கும் நீரின் அளவைக் கூடுதலாக்க திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை நகரத்தில் அடிக்கடி ஏற்படும் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க நிரந்தரத் தீர்வாக ஒரு புதிய பெருந்திட்டம் உருவாக்கப்படும். இதன் அடிப்படையில், சென்னை மாநகரப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏற்படும் முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு மேற்கூறிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். இனிவரும் காலங்களில் லாரிகள் மற்றும் சாலை வழியே தண்ணீரை எடுத்துச் செல்லும் முறை அகற்றப்படும்.

14.3 மேலாண் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீணாகும் கழிவுநீரைச் சிறந்த முறையில் மாற்றி நகர மக்களுக்கு அதிக அளவு நீரை இலகுவான கட்டணத்தில் வழங்கும்.

14.4 மேலாண் தொழில்நுட்பத்துடன் தண்ணீரைச் சுத்திகரித்து மீண்டும் அதனைப் பயன்படுத்துதல் இப்பணியில் அடங்கும். இவ்வாரியம் பொதுமக்களுக்கு தன் பணியினை மேம்படுத்தி தொடர்ந்து மேற்கொள்ளும்.

14.5 சென்னை மாநகரம் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில், வாரியம் தனது முழுத் தகுதியையும் பயன்படுத்தி, திறமையான நிர்வாகத்தை அளிக்கும்.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 48 – குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் மொத்தச் செலவினத் தொகை ரூ.159.10 கோடி ஆகும். இதில் ரூ.37.71 கோடி திட்டப்பணிகளுக்கானதாகும். பல்வகை மூலதனச் செலவின்கீழ் குடிநீர் வழங்குதலுக்காக ரூ.534.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

•



2001 செப்டம்பர் 5]

## 2001–2002-க்கான திருத்திய மதிப்பீடு

### அட்டவணை–I

மானியக் கோரிக்கை எண் 48

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2215 | நிலத்தடி நீர் வழங்கும் திட்டத்தைப் பராமரித்தல் | - | 68.48 | 68.48 |
| 2215 | சலுகை வீதங்களில் புற்று நோய் நிறுவனத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக சென்னை குடிநீர் வாரியத்திற்கு மானியம் | - | 7.60 | 7.60 |
| 2215 | மாநகர குடிநீர் வழங்கு ஆதாரங்களை ஆண்டுதோறும் பராமரித்தலும் பழுது பார்த்தலும் | - | 17.00 | 17.00 |
| 2215 | உவரகக் குடிநீர் வழங்கல் செயல் திட்டம் | - | 5.05 | 5.05 |

[2001 செப்டம்பர் 5

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2215 | ஊரகக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையையும், அதற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிதியுதவி | - | 8924.75 | 8924.75 |
| 2215 | ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திற்கு கடன் மற்றும் வட்டியையும் திருப்பி அளிப்பதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிதியுதவி | - | 3115.92 | 3115.92 |
| 2215 | இரண்டாவது சென்னை குடிநீர் வழங்கு திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல் ஏற்பாட்டை மேம்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு மானியம் | 2710.00 | -- | 2710.00 |
| 2215 | விரைவுபடுத்தப்பட்ட நகர்ப்பகுதி குடிநீர் வழங்கு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியங்கள் | 1060.61 | -- | 1060.61 |
| 2215 | நிதிப் பற்றாக்குறை இனத்திற்கு பங்குத்தொகை அளிக்க புதிய திருப்பூர் வளர்ச்சிக் குழுமத்திற்கு மானியங்கள் | 1.00 | -- | 1.00 (அடையாள ஒதுக்கீடு) |
| | மொத்தம் | 3771.61 | -- | 15910.41 |



2001 செப்டம்பர் 5]

## அட்டவணை II

### மானியக் கோரிக்கை எண் 48/60 — குடிநீர் வழங்கல்

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 4215 | குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன மானியங்கள் | 7150.00 | -- | 7150.00 |
| 4215 | குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின்கீழ் கிராமக் குடிநீர் வழங்கல் | 27400.00 | -- | 27400.00 |
| 4215 | குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின்கீழ் கிராமக் குடிநீர் ஆதிதிராவிடர்களுக்கு சிறப்புக் கூறு திட்டம் | 13700.00 | -- | 13700.00 |
| 4215 | உலக வங்கி நிதியுதவி பெறும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுப் பணித் திட்டம் | 1000.00 | -- | 1000.00 |
| 4215 | கழிவு நீரகற்று திட்டத்திற்காக நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன மானியங்கள் | 4240.99 | -- | 4240.99 |
| | மொத்தம் | | | 53490.99 |

[2001 செப்டம்பர் 5


## நீர் தொடர்பான தொற்று நோய்கள்

| வகை | தொற்று நோய் | பாதுகாப்பு நடவடிக்கை |
|---|---|---|
| 1. மனிதக் கழிவு மூலமாகப் பரவும் (நீர் சம்பந்தப்பட்ட) | வயிற்றுப் போக்கு<br>சீதபேதி | குடிநீரின் தன்மையை மேம்படுத்தல் வேண்டும்.<br>சுகாதாரமற்ற குடிநீரினைப் பயன்படுத்துதலைத் தவிர்த்தல் வேண்டும். |
| 2. கழிவு நீர் | | |
| அ) தோல் மற்றும் கண் | தோல் தொற்று நோய்கள் | அதிகப்படியான தண்ணீர் பருகவேண்டும். |
| ஆ) மற்றவை | கண் தொற்று நோய்கள் | நம்பகத்தன்மையுள்ள குடிநீர் பெறும் வசதிகளை மேம்படுத்துதல். |
| | பேன், பொடுகு போன்ற நுண்ணுயிரிகளால் திரும்ப ஏற்படும் காய்ச்சல் | சுகாதாரத்தை மேம்பாடு செய்தல் வேண்டும். |
| 3. நீர் அடிப்படையான நோய்கள் | | |
| அ) தோல் சம்பந்தமான நோய்கள் | சொறி சிரங்கு, தேமல், படை | தொற்று நோய் பரவ வாய்ப்புள்ள நீரினைத் தவிர்த்தல். |
| ஆ) உட்செல்லல் மூலமாக | நரம்பு சிலந்தி | நத்தை இன வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல், நில நீர் மாசுபடுவதைத் தவிர்த்தல் |
| 4. நீர்வழித் தொற்று நோய் பரவச் செய்யும் பூச்சிகள் | | |
| அ) நீரின் அருகாமையில் இருப்பவை | தூங்கும் வியாதி | நிலநீர் மேலாண்மையை மேம்படுத்துதல் |
| ஆ)நீரில் இருப்பவை | மலேரியா | பூச்சிகள் உற்பத்தி ஆகும் இடங்களை அழித்தல். |
| | யானைக்கால் வியாதி | பூச்சிகளின் இனப்பெருக்க இடங்கட்கு செல்தலைத் தவிர்த்தல். |
| | மஞ்சள் காய்ச்சல், டெங்கு போன்ற கொசுக்களால் பரவும் வியாதிகள். | கொசுவலைகளைப் பயன்படுத்துதல் |



2001 செப்டம்பர் 5]

### 01-04-2001 அன்றைய நிலவரப்படி ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர் வழங்குநிலை





**ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர் வழங்குநிலை**

ஊரகக் குடிநீர் வழங்கு நிலை என்பது ஓர் நிலையிலன்றி, மாறும் தன்மையுடையதாகும். 01-04-2001 அன்று நிலவரப்படி 61,615 குடியிருப்புகள் முழுமையான அளவு குடிநீர் வசதி பெற்றவையென வகைப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், இவற்றில் பல குடியிருப்புகள், மக்கட்தொகை அதிகரிப்பு, நிலத்தடி நீர் குறைவு, நீரின் தரம் குறைவு மற்றும் சில சமயங்களில் திட்டத்தின் பகுதிகள் செயலற்றுப் போதல் ஆகிய காரணங்களினால், பகுதியான அளவு குடிநீர் வசதி பெற்றவையாகவே இருக்கலாம்.

[2001 செப்டம்பர் 5

## 01-04-2001 அன்றைய நிலவரப்படி நகரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கு நிலை





| நகரப் பகுதிகளில் நிலவும் குடிநீர் வழங்கல் அளவு பின்வருமாறு | | |
|---|---|---|
| மாநகராட்சிகள் 5 | சராசரி நிலை | 5 |
| நகராட்சிகள் 102 | நன்னிலை<br>சராசரி நிலை<br>குறைந்த நிலை | 31<br>37<br>34 |
| பேரூராட்சிகள் 611 | நன்னிலை<br>சராசரி நிலை<br>குறைந்த நிலை | 217<br>203<br>191 |



2001 செப்டம்பர் 5]


## ஊரகக் குடிநீர் வழங்கலில் நபர் ஒருவருக்கான முதலீடு




ஊரகக் குடிநீர் வழங்கு பணிகளில் நபர் ஒருவருக்கான முதலீடு தொடர்ந்து அதிகரித்ததன் காரணமாக, அதிக அளவில் ஊரகக் குடியிருப்புகள் பயன் பெற்று வருகின்றன. நடப்பு ஆண்டில், துறை சீரமைப்புத் திட்டங்கள் உட்பட, ஊரகக் குடிநீர் வழங்கு பணிகளுக்கென மொத்தம் ரூ. 520 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 5

**நகரகக் குடிநீர் வழங்கலில்**
**நபர் ஒருவருக்கான முதலீடு**





2001 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் மக்கட்தொகையில் 43.86 விழுக்காடு நகரப் பகுதிகளில் வசிக்கும் அளவிற்கு, தமிழ்நாடு, நகர்ப்புற வளர்ச்சி அடைந்த மாநிலமாக உள்ளது. நகரகக் குடிநீர் வழங்கு பணிகட்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 5]


**புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள்**
**நிறைவேற்றப்பட்ட நகரங்கள்**





| ஆண்டு | குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட நகரங்கள் |
|---|---|
| 1998-1999 | 42 |
| 1999-2000 | 42 |
| 2000-2001 | 55 |
| 2001-2002 | 63 (நிறைவேற்றப்பட உள்ளவை |

## குடிநீர் ஆதாரங்களில், நிலத்தடி நீர் செறிவூட்டலின் பயன் முன்னோடி ஆய்வு

ஆய்வுக்கு முன்




ஆய்வுக்குப் பின்




தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து நாமக்கல் மாவட்டத்தில் காரைப்பொட்டனார் நுண் வடிநிலத்தில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை மேற்கொண்டு, அவற்றின் மூலம் அங்குள்ள குடிநீர் ஆதாரங்களில் ஏற்படும் பயன்களை ஆய்வு செய்யும் பொருட்டு, ஒரு முன்னோடித் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. இத்திட்ட முடிவில் கண்டறியப்பட்ட நிலை பின்வருமாறு

| நீராதார வகை | செயல்படும் நீராதாரங்கள் | |
|---|---|---|
| | ஆய்வுக்கு முன் | ஆய்வுக்குப் பின் |
| கையிறைப்பான் | 7 | 22 |
| மின்னிறைப்பான் | 8 | 44 |
| திறந்தவெளிக் கிணறு | 2 | 13 |





## இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் வழங்கு திட்டம்

பயனடையும் ஊரகக் குடியிருப்புகள் – 2,100

புதுக்கோட்டை மாவட்டம்

1. பொன்னமராவதி ஒன்றியம் – 6
2. திருமயம் ஒன்றியம் – 5
3. விராலிமலை ஒன்றியம் – 15

சிவகங்கை மாவட்டம்

4. தேவகோட்டை ஒன்றியம் – 121
5. இளையான்குடி ஒன்றியம் – 182
6. காளையார்கோயில் ஒன்றியம் – 202
7. கல்லல் ஒன்றியம் – 111

இராமநாதபுரம் மாவட்டம்

8. முதுகுளத்தூர் ஒன்றியம் – 162
9. கடலாடி ஒன்றியம் – 197
10. கமுதி ஒன்றியம் – 239
11. மண்டபம் ஒன்றியம் – 197
12. நயினார்கோயில் ஒன்றியம் – 117
13. போகலூர் ஒன்றியம் – 94
14. பரமக்குடி ஒன்றியம் – 146
15. திருப்புல்லாணி ஒன்றியம் – 193
16. இராமநாதபுரம் ஒன்றியம் – 113

14 இலட்சம் மக்கட்தொகை பயனடையும் குடிநீர் வழங்கு திட்டம்

[2001 செப்டம்பர் 5

## சேடப்பட்டி கூட்டுக் குடிநீர் வழங்கு திட்டம்

### பயன்பெறும் பகுதிகள்

உசிலம்பட்டி நகராட்சி

ஆண்டிப்பட்டி பேரூராட்டி

எழுமலை பேரூராட்சி

பேரையூர் பேரூராட்சி

டி. கல்லுப்பட்டி பேரூராட்சி


**447 ஊரகக் குடியிருப்புகள்**


| | | |
|---|---|---|
| ஆண்டிப்பட்டி ஒன்றியம் | – | 43 |
| உசிலம்பட்டி ஒன்றியம் | – | 83 |
| சேடப்பட்டி ஒன்றியம் | – | 127 |
| டி. கல்லுப்பட்டி ஒன்றியம் | – | 113 |
| கள்ளிக்குடி ஒன்றியம் | – | 81 |

5.33 இலட்சம் மக்கட்தொகை பயனடையும் குடிநீர் வழங்கு திட்டம்



2001 செப்டம்பர் 5]








# இணைப்பு-III

(520 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 49 – நகராட்சி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

### நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம்
### மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்

தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளின் மக்கள் தொகை 1971 ஆம் ஆண்டில் 30 சதவிகிதமாக இருந்தது. அது 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 43.8 சதவிகிதத்திற்கு உயர்ந்துள்ளது. இந்த அபரிமிதமான நகர்ப்புற மக்கள் தொகைப் பெருக்கம், உயர்தர குடியுரிமைக்குரிய சேவைகளை வழங்கி, நகர்ப்புற வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், பராமரிப்பதற்கும் அரசின்மேல் பெரும் பொறுப்பைச் சுமத்தியுள்ளது. நகர்ப்புறங்களின் வளர்ச்சிக்குத் திட்டமிடுதலோடு அல்லாமல், மக்கள் தொகைப் பெருக்கத்தால் நகர்ப்புறப் பகுதிகள் குடிசைப் பகுதிகளாக மாறாமல் இருக்க, நகர்ப்புறச் சுற்றுச்சூழலின் சீர்குலைவைத் தடுக்க அரசு தீவிரக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. நகர்ப்புற மக்களின் அதிக எதிர்பார்ப்புகளும் பிரச்சினைகள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைகின்றது. நகர்ப்புறங்களில் சுகாதாரமான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கும், பொதுச் சுகாதாரத்தைப் பராமரிப்பதற்கும், அடிப்படையான குடியுரிமை சேவைகளை வழங்குவதில் ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை. புதிய முதலீடுகளுக்கான ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதோடு மட்டுமல்லாமல், நிதி, தொழில்நுட்பத் திறமை மற்றும் மனித வளம் ஆகிய இனங்களில் திறன் தளராமல் தொடரச் செய்வதற்கும் கணிசமான நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. மத்திய, மாநில அரசுகள் நகர்ப்புறப் பகுதிகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் உள்ள இடர்ப்பாடுகளை உணர்ந்துள்ளன. நகர்ப்புறப் பகுதிகளை மேம்படுத்துவதற்கு நிதிக் குழுவின் நிதிப் பகிர்வு மற்றும் மானியங்கள் மூலமாக இவ்வரசு தொடர் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம், சாலைகள், கட்டடங்கள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், திடக்கழிவு மேலாண்மை, துப்புரவு, பேருந்து நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற மூலதன

[2001 செப்டம்பர் 5

முதலீட்டுப் பணிகளை மேற்கொள்ள ரூ.7904 கோடி அளவிலான அதிக முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அரசு, பெருகிவரும் நகர்ப்புறச் சுற்றுச்சூழல் சீர்கேட்டினை உணர்ந்துள்ளதால் நகர்ப்புற மக்களின் வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவதற்கு முதலீடுகளை அதிகப்படுத்த பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. மேற்படி முதலீடுகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தீவிர ஒத்துழைப்பின்றி மேற்கொள்ள இயலாது. அவை தங்களுடைய நிதி நிலைமையை மேம்படுத்த வரியினங்கள் அதிகரித்தல் மற்றும் வருவாய் இனங்களில் செலவினைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதில் பொது மக்களின் ஒத்துழைப்பும், பெரும் பங்களிப்பும் தேவைப்படுகின்றன.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்**

2. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| மாநகராட்சிகள் | *6* |
| நகராட்சிகள் | *102* |
| பேரூராட்சிகள் | *611* |

3. *2001* ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளின் மொத்த மக்கள் தொகை 2.72 கோடியாகும். இது மாநில மொத்த மக்கள் தொகையில் 43.8 சதவிகிதமாகும்.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீடு**

4. கடந்த *(2000–2001)* மற்றும் நடப்பு *(2001–2002)* நிதியாண்டுகளில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எதிர்நோக்கு வரவு மற்றும் செலவு விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வகை | வரவு | | செலவு | |
|---|---|---|---|---|---|
| | | 2000-01 | 2001-02 | 2000-01 | 2001-02 |
| 1. | மாநகராட்சிகள் | 889 | 948 | 916 | 954 |
| 2. | நகராட்சிகள் | 578 | 583 | 528 | 533 |
| 3. | பேரூராட்சிகள் | 575 | 531 | 572 | 490 |



2001 செப்டம்பர் 5]

5. முதலாவது மாநில நிதிக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வினை கணிசமான அளவிற்கு உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. சென்ற நிதியாண்டில் ரூ.440.27 கோடியாக இருந்த இந்நிதிப் பகிர்வு நடப்பாண்டில் ரூ.565.74 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிதிப் பகிர்வின் மூலம் மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட கூடுதல் நிதி ஆதாரங்கள் உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை சேவைகளை நிறைவேற்றுவதற்கும், பராமரிப்பதற்கும், பணியாளர்களுக்கான சம்பளம் வழங்குவதற்கும் மற்றும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும் உதவிகரமாக அமைந்துள்ளது.

6. இரண்டாவது மாநில நிதிக்குழு தனது அறிக்கையை 2001 மே திங்களில் அரசிடம் அளித்துள்ளது. மேற்படி அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. முடிவுகள் இவ்வாண்டுக்குள் வெளியிடப்படும். இதோடு, பதினோராவது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.76.84 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**அடிப்படைப் பணிகள்**

7. அடிப்படை வசதிப் பணிகளுள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றுதல் குறித்த பெருந்திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன. இப்பொருளுக்கான தனியான கொள்கை விளக்கக் குறிப்பு சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் விநியோகம்**

8. குடிநீர்த் திட்டங்களின் செயலாக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் குறித்த பொறுப்பு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்ததாகும். சில நகராட்சிகளில் நிலவிவரும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க உடனடி நிவாரணமாக ரூ.2 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைக்கு ஏற்ப நிதி உதவி மேலும் அளிக்கப்படும்.

**பாதாள சாக்கடைத் திட்டங்கள்**

9. பாதாளச் சாக்கடை வசதிகள் செய்வதற்குத் தேவையான அளவு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சில மாநகராட்சி மற்றும்

[2001 செப்டம்பர் 5

நகராட்சிகளில் மட்டுமே இவ்வசதி செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிப் பகுதிகளில் இவ்வசதியே இல்லை. எல்லா நகர்ப்புறப் பகுதிகளிலும் இவ்வசதியை சுத்திகரிப்பு அமைப்புகளுடன் படிப்படியாக ஏற்படுத்த இந்த அரசு உறுதி எடுத்துள்ளது. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 3 மாநகராட்சிகள், 5 நகராட்சிகள், 3 பேரூராட்சிகளில் ரூ. 581 கோடி செலவில் ஒரு மிகப் பெரிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடனும், மக்கள் பங்களிப்புடனும் செயல்படுத்தப்படவுள்ளது.

## நகர்ப்புற மகளிர்க்கு கழிவறைகள் கட்டுவதற்கான சிறப்புத் திட்டம்

10. நகர்ப்புறப் பகுதிகளில் மகளிருக்கு, குறிப்பாக தனித்தனியான கழிவறைகள் அமைப்பதற்கான இடம் இல்லாத நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிரிவைச் சார்ந்த மகளிருக்கான அவசியத் தேவைகளை இந்த அரசு நன்கு அறியும். நகர்ப்புற மகளிரின், குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிரின், அடிப்படைத் தேவை கிடைக்கப்பெறாத இந்த அவல நிலையைக் கண்ணுற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி ரூ.42.41 கோடி செலவில் குளியலறை வசதிகளுடன் கழிப்பறைகளைக் கீழ்க்கண்டவாறு அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது:

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | கழிவறைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை மாநகராட்சி | 96 | 268.99 |
| 2. | இதர மாநகராட்சிகள் | 125 | 500.00 |
| 3. | நகராட்சிகள் | 400 | 1600.00 |
| 4. | பேரூராட்சிகள் | 720 | 1872.00 |
| | மொத்தம் | 1341 | 4240.99 |

11. இத்திட்டம் உயர் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செயல்படுத்தப்படும். இந்தக் கழிப்பறைகளைக் கட்டும்பொழுதும் அதற்குப் பின்னரும் பராமரிப்பதற்கான பயிற்சி "சுய உதவி மகளிர் குழுக்களுக்கு" அளிக்கப்பட்டு அவர்களிடம் கழிப்பறைகளைப் பராமரிக்கும் பொறுப்பு



2001 செப்டம்பர் 5]

ஒப்படைக்கப்படும். இந்தக் கழிப்பறைகளைப் பராமரிப்பதன் வெற்றியானது சமூகத்தின் தீவிர ஒத்துழைப்பைச் சார்ந்தே இருக்கும் என்பதால், கழிப்பறைகளைச் சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்கான நடைமுறைப் பழக்கத்தை பொது மக்களுக்கு உணர்த்தும்பொருட்டு ரூ.2.50 கோடி செலவில் ஒரு மிகப்பெரிய விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்படும்.

12. கழிப்பறைகளைச் சரியான முறையில் சுத்தமாக வைப்பதற்கு தண்ணீர் பெரும் பிரச்சினை என்பதால் எங்கெல்லாம் வாய்ப்புள்ளதோ அங்கெல்லாம் கழிவு நீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்படியாக சுழற்சி மூலம் சுத்தம் செய்யப்பட்ட கழிவுநீர் கழிவறைகளைச் சுத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகள் முறையான, நிலையான, சுத்தமான கழிப்பறை வசதிகளை உறுதி செய்யும் என நம்பலாம்.

## ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டம்

13. அனைத்து 102 நகராட்சி மற்றும் 5 மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.42 கோடி செலவில் ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள நகர்ப்புற சமூகப் பிரிவினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் மேற்படி உள்ளாட்சி அமைப்புகளில் தேவையான இடங்களில் ஒவ்வொன்றும் தலா ரூ. 10 இலட்சம் உத்தேசச் செலவில் துப்புரவு வளாகங்கள் கட்டப்படும். கழிப்பறை வசதிகள் மட்டுமன்றி, துணிகள் துவைக்கவும் மற்றும் குளிக்கவும் வசதிகள் செய்து தரப்படும். இந்த வசதிகளைப் பராமரிப்பதற்கு, உபயோகிப்பாளர் பிரதிநிதிகளைத் தேர்வு செய்து பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறான 111 வளாகங்களை 2002, மார்ச் 31-க்குள்ளாகவும் அனைத்து 400 வளாகங்களை 2002 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிக்குள்ளாகவும் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## திடக்கழிவு மேலாண்மை

14. நகர்ப்புறத்தில் தேவையற்ற திடக்கழிவுகளை அகற்றுவது என்பது ஒரு பெரிய முக்கியத் தேவையாகும். ஆனால் உள்ளாட்சி அமைப்புகளால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் இது மிகவும் குறைந்த முன்னுரிமை பெற்றுள்ளது. இந்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின்கீழ் நகராட்சிகளின் திடக்கழிவுகளை

[2001 செப்டம்பர் 5

விஞ்ஞான முறையில் மேலாண்மை செய்து கையாளுவதற்கான சட்டபூர்வப் பொறுப்பு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைச் சாரும். நகர்ப்புறத் திடக்கழிவுகளை விஞ்ஞான முறையில் மாற்றுவதன் மூலம் செல்வம் பெறுவதை ஊக்குவித்து உறுதி செய்வதற்காக இந்த விதிகள் உருவாக்கப்பட்டன.

15. தினசரி உருவாகும் குப்பைகளில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் சராசரியாக சுமார் 75 சதவிகிதம் மட்டுமே சேகரிக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 102 நகராட்சிகளில், 43 நகராட்சிகளில் மட்டுமே குப்பைகள் கொட்டுவதற்குப் போதுமான இடங்கள் உள்ளன. பெரும்பான்மை பேரூராட்சிகளில் இத்தகைய இடங்களே இல்லை எனும் நிலைதான் உள்ளது. சென்னை மாநகரைச் சுற்றியுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இந்தச் சிக்கலின் கடுமை உணரப்படுகிறது. பொதுவாக மொத்தக் குப்பைகளில் 60 சதவிகிதம் மக்கிப் போகக்கூடியவை (bio–degradable) எனவும் சுமார் 20 முதல் 25 சதவிகிதம் மறு சுழற்சிக்கு உகந்ததெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி திடக்கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே பிரித்தெடுத்து தரமில்லா குப்பைகளிலிருந்து உரம் தயாரிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை நிலங்களை வளப்படுத்த உபயோகப்படும் வகையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குப்பைக் கிடங்குகள் யாவும் தரமான உரம் தயாரிப்பதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்வேகம் அளிக்கப்படும். இதைப்போலவே சென்னை மாநகராட்சியிலும் வீடுகளால் உருவாக்கப்படும் மொத்தக் குப்பைகளும் உரமாக்கப்படுவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும். அதன்மூலம் மக்கிப்போகும் வாய்ப்பில்லாத சுமார் 10 சதவிகிதம் தவிர்த்து மொத்தக் குப்பைகளையும் உரமாகவோ அல்லது மறு சுழற்சிக்குள்ளாக்கவோ திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் படிப்படியாக குப்பையில்லாத் திட்டம் (zero garbage) என்ற குறிக்கோள் செயல்படுத்தப்படும். ஆரம்ப நிலையிலேயே திடக்கழிவுகளைப் பிரித்தெடுக்க வேண்டும் என்ற செய்தியினைப் பரப்ப அரசு சாரா அமைப்புகள், குடிமைச் சங்கங்கள் மற்றும் குடியிருப்புச் சங்கங்கள் ஆகியவற்றுடன் பெரிய விழிப்புணர்வு இயக்கம் ஒன்று ஏற்பாடு செய்யப்படும்.

16. திடக்கழிவுகளை வெளியேற்றுவதற்குப் போதுமான இடம் இல்லாத நகராட்சிகளின் உபயோகத்திற்காகத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக நடப்பாண்டில் ரூ.150 இலட்சங்களை அரசு ஒதுக்கியுள்ளது. சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் குப்பை



2001 செப்டம்பர் 5]

கொட்டுவதற்கான இடம் போதுமானதாக இல்லை என்ற நிலையைக் கவனத்தில் கொண்டு திடக்கழிவுகளை வெளியேற்றுவதற்காகத் தற்போது அமைந்துள்ள இடம் போதுமானதாக இல்லாத நகராட்சிகளில் குப்பைகள், சேகரிக்கப்படும் இடத்திலேயே இறக்குவதற்காக நடமாடும் "காம்பேக்டர்களை" வாங்குவதற்காக ரூ.100 இலட்சம் ஒதுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டமானது படிப்படியாக அனைத்து நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**சாலைகள்**

17. மாநிலத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மொத்தம் 28430 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகின்றன. வருங்காலத்தில் சாலை கட்டுமானம் மற்றும் தரம் உயர்த்துதல் ஒருங்கிணைந்த வகையில் செயலாக்கப்பட தற்போதுள்ள சாலைகள் குறித்த ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும். பேருந்து நிலையங்களுக்குள்ளும் பிரதான வழிகளிலும் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்படும். வரைமுறையின்றி சிறிய சந்துகளையும் உட்புறச் சாலைகளையும் சிமெண்ட் சாலைகளாக மாற்றுவது என்பது செலவிற்கேற்ப பயன் தரக்கூடியதல்ல என்பது மட்டுமன்றி இயற்கையாக வெள்ளநீர் வடிவதற்கும், நிலத்தினுள் மழைநீர் இறங்குவதற்கும் தடையாக இருப்பதால் வெள்ளம் மற்றும் அதுதொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்துவதால் அது விரும்பத்தக்கதும் அல்ல.

18. வெள்ளப் பெருக்கினைத் தடுக்கவும் நிலத்திற்குள் மழைநீர் செல்லவும் சாலையோரங்களில் வடிகால் வசதிகள் செய்து தரப்படும். இது சாலைகளின் நீண்டகால உபயோகத்தை உறுதிப்படுத்துவதுடன் அதனைப் பராமரிப்பதற்கான வீண் செலவினத்தையும் தவிர்க்கும்.

**தெருவிளக்குகள்**

19. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் 787932 தெரு விளக்குகளைப் பராமரிக்கின்றன. சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் உயர்மின் கோபுர விளக்குகளை நிறுவிப் பராமரிப்பதில் உள்ள பெரும் செலவைக் கருத்தில் கொண்டு முக்கிய வீதிகள், பேருந்து நிலையங்கள், கோவில்களுக்கு அருகில் உள்ள பகுதிகள் போன்ற மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், பாதுகாப்பு கருதி வெளிச்சம் அதிகம் தேவைப்படும் பகுதிகளிலும் மட்டுமே சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்படும். மின் உபயோகத்தைக் குறைக்கும் வகையில், தேவையில்லாமல் விளக்குகள் எரிவதைத் தவிர்க்க தானியங்கி

[2001 செப்டம்பர் 5

சுவிட்சுகள் அமைக்கப்படும். விளையாட்டு அரங்குகள் போன்ற வெகு சில இடங்களில் மட்டுமே உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்படும்.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிறைவேற்றப்படும் ஏனைய முக்கிய திட்டங்கள்

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்

*20.* உலக வங்கியின் பன்னாட்டு மேம்பாட்டு முகமையின் நிதியுதவியுடன் 1988 முதல் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு கூறாக நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டு நிதி அமைந்திருந்தது. நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டு நிதியின் வெற்றிகரமான செயல்பாட்டால் ஊக்கம் பெற்ற தமிழக அரசு இந்நிதிப் பயன்களை உலக வங்கியின் உதவியுடன் விரிவுபடுத்தி, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தை (TNUIFSL) உருவாக்கி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் என்ற அறக்கட்டளையை ஏற்படுத்தியது. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மேற்படி அறக்கட்டளையின் நிதி ஆதாரங்களைக் கையாளும் நிதி மேலாளராகச் செயல்படும்பொருட்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்தான் காப்புறுதி இல்லாமுறையில் நகர்ப்புற உள்கட்டமைப்பிற்காக நீண்டகாலக் கடன் உதவி வழங்கும் அரசு–தனியார் கூட்டு முயற்சியின் முதல் நிறுவனமாகும்.

*21.* இந்த அறக்கட்டளையின் பிரதான நோக்கம் நகர்ப்புற கட்டுமானப் பணிகளுக்கு தனியார் துறை மற்றும் மூலதனச் சந்தையிலிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டுவதாகும்.

*22.* இதுகாறும் இந்நிதியம் ரூ.669.60 கோடி மதிப்பீட்டில் 177 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 31–3–2001 வரை 170 திட்டங்களுக்கு ரூ.445.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் ஒப்புதல் வழங்கியுள்ள திட்டங்களில் மழைநீர் வடிகால், கழிவுநீர் அகற்றல் மேம்பாடு, துப்புரவு, திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள் மற்றும் சாலைகள் போன்ற மிக முக்கிய அடிப்படை வசதித் திட்டங்கள் மற்றும் வருவாய் ஈட்டக்கூடிய வணிக வளாகங்கள், மொத்த விற்பனைக் கூடங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் ஆகியவை அடங்கும். இந்த நடப்பாண்டில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் 16 திட்டங்களுக்கு இந்நிதியம் ஒப்புதல் வழங்க உள்ளது.



2001 செப்டம்பர் 5]

### தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

*23.* மேற்குறிப்பிட்டவாறு திட்டங்களை நிறைவேற்ற நிதியாதாரம் திரட்டும் பணியின் ஒரு பகுதியாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் உலக வங்கியிடமிருந்து 80 மில்லியன் அமெரிக்க டாலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது. இதுதவிர தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்–II–ன்கீழ் நிருவாக அமைப்பு மேம்பாடு மற்றும் ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டத்திற்காக தமிழ்நாடு இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திட்ட நிருவாக அலகிற்கு 25 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் வழங்கப்பட்டுள்ளது.

*24.* தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–II–ன் நிறுவன மேம்பாட்டுக்கூறின்கீழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத் திறனை உயர்த்தும்வகையில் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(i) நகரக் கூட்டாண்மைத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் 5 ஆண்டு மூலதன முதலீட்டுத் திட்டங்கள் தயாரித்தல்;

(ii) நகர்ப்புற சேவை வழங்கலின் செயல்திறன் குறியீடுகளைத் (Performance indicators) தயாரித்தல்;

(iii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிப்பதன்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மேலாண்மை, நிதி மற்றும் தொழில்நுட்ப திறன்களை வலிமையாக்குதல்;

(iv) அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கல்விப் பயணங்கள் ஏற்பாடு செய்தல்;

(v) கணக்கு வழிமுறைகள், பொறியியல் அளவீடுகள், திடக்கழிவு மேலாண்மை, ஒப்பந்தங்கள் குறித்து நடைமுறை நூல் தயாரித்தல்;

(vi) நிலப்பயன்பாடுகள், பூகோள தகவல் அமைப்பு, நகராட்சி கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்தான ஆய்வு மேற்கொள்ளல்;

[2001 செப்டம்பர் 5

(viii) நகராட்சி நிருவாகத் துறையின் செயல் திறனை உயர்த்துதல் மற்றும்

(ix) மண்டல அலுவலகங்களில் வல்லுநர்கள் அமர்த்துதல்.

25. இவ்வாண்டு இத்திட்டம் குறித்து உலக வங்கிக் குழு இடைக்கால ஆய்வு செய்ய உள்ளது.

26. நகர்ப்புற சுற்றுப்புறச் சூழல் மற்றும் நகர்வாழ் மக்கள் நலம் மேம்பாடு ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–க்கு கீழ்க்கண்டவாறு செயற்குறிப்பினைத் தயாரிக்க அரசு உத்தேசித்துள்ளது:

அ) நகர்ப்புற கழிவு மேலாண்மை–கழிவு நீர் மறுசுழற்சி மற்றும் அகற்றுதல்–திடக்கழிவு பயன்பாடு மற்றும் அகற்றுதல்; மற்றும்

ஆ) நகர்ப்புற சுற்றுச்சூழல் மேலாண்மை—நகர்ப்புற சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் தரத்தாழ்வைத் தடுத்தல்—சுகாதாரமின்மையால் ஏற்படும் நோய்களை வராமல் தடுப்பது மற்றும் குறைப்பது—நகர்ப்புறங்களில் கால்நடை/விலங்குகளால் ஏற்படும் நோய்களைத் தடுப்பது/ குறைப்பது, நகர்ப்புற சுற்றுச்சூழலை மேம்படுத்தும் பொருட்டு விளையாட்டுத் திடல்கள், திறந்தவெளி மற்றும் நிழல் தரும் மரங்களைப் பராமரித்தல் ஆகியவை.

27. கிராமப்புறங்களில் உள்ள மக்கள் நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வதால் கணிசமான அளவில் தாக்கத்தினைச் சந்தித்துக் கொண்டிருக்கிற நகர்ப்புறச் சுற்றுச்சூழல், மேலும் தரந்தாழாமல் தடுக்கப்பட வேண்டுமெனில், மேற்கண்ட துறைகளில் முறையான கவனம் செலுத்தப்பட வேண்டுமென அரசு நம்புகிறது.

28. தகவல், கணக்கு, நிதி ஆதாரங்கள் மற்றும் மனித வளத்தினை அதிகபட்ச அறிவியல் திறனோடு நிருவகிக்க நகர்ப்புற உள்ளாட்சி நிருவாகிகளுக்கு, மேலாண் திறனை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தப்படும்.

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

29. இத்திட்டம் 1998 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள சுமார் 14.45 இலட்சம் குடும்பங்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பினை



2001 செப்டம்பர் 5]

அளிக்கும் நோக்கத்தினைக் கொண்டதாகும். இத்திட்டத்திற்கான மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவி முறையே 75:25 என்கிற விகிதாச்சாரத்தில் அமையும். நடப்பாண்டில் மத்திய அரசின் தோராய ஒதுக்கீடு ரூ.15.29 கோடியும் அதற்கு இணையான மாநில அரசின் பங்குத் தொகை ரூ.5.10 கோடியும் ஆகும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 7637 பயனாளிகள் பயன் பெறுவர். அதில் 3243 நபர்கள் பெண்களாவர். கூலி வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3.79 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும்.

30. இத்திட்டத்தை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் உதவி அளிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தினை, சுய உதவிக் குழுக்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. 18 முதல் 35 வயது வரம்புக்குட்பட்ட நகர்ப்புற மங்கையர்கள் அடங்கிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு கணினி இயக்குதல், மின்சாரப் பணி, குழாய் பணியர், தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்ப்பவர் மற்றும் இதர பயன் தரத்தக்க சுய தொழில் தொடங்குவதற்கு உரிய உதவி அளிக்கப்படும்.

31. மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட நகர்ப்புற வளர்ச்சி முகமைகளுக்குப் புத்துயிர் அளித்து இத்திட்டத்தின் செயலாக்கத்தினைக் கூர்ந்தாய்வு செய்வார்கள். உள்ளாட்சி அமைப்புகளில் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள குடும்பங்களின் பொருளாதாரத்தினை சுயவேலை வாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்பு ஆகிய பல்வேறு திட்டப் பணிகள் மூலம் உயர்த்துதலே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும்.

**தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

32. தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மத்திய அரசின் நிதி உதவியுடன் 1996–97 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், வடிகால் அமைத்தல், தெரு விளக்குகள், குடிநீர் வசதி செய்து தருதல் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் கட்டித் தருதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

[2001 செப்டம்பர் 5

## அடிப்படை வசதிகள் திட்டம்

33. இத்திட்டத்தின்கீழ் அரசு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பேருந்து நிலையங்கள், சாலைகள் அமைத்தல், நகர் மன்றக்கூடம் கட்டுதல், இறைச்சிக் கூடங்களை மேம்பாடு செய்தல், சந்தைகள், குடிநீர் வழங்குதல் தெரு விளக்குகள் ஆகியவற்றிற்காக மானியம் வழங்குகிறது. நடப்பாண்டில் அரசு, மாநகராட்சிகளுக்கு ரூ. 25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.10 கோடியும் .மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.25 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மின்னணு ஆளுகை

34. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உட்பட நிருவாகத்தில் எல்லா நிலைகளிலும், மின் ஆளுமைக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அனைத்து மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் தேவையான கணினி கொடுக்கப்பட்டுள்ளது. முக்கியமான பணிகளான பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல், குடிநீர்த் தீர்வை மற்றும் சொத்து வரி விதித்தல், நிதிக் கணக்கு ஆகியவை கணினி மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளன. எல்லா நகராட்சிகளும் தொகுப்புக் கணக்கு அடிப்படையிலான கணிதவியலுக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும் கட்டட வரைபட அனுமதி, அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், வரியில்லா வருவாய் இனங்கள், கணினி தொகுப்புகள் (Modules) மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இவை தவிர அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தேவையான தகவல் மற்றும் உதவும் வசதிகளுடன் கூடிய மையங்களை கணினிகள் துணையுடன் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பயனாக பொதுமக்கள் தாங்கள் அறியவிரும்பும் சொத்து வரி, குடிநீர் தீர்வை மற்றும் உள்ளாட்சிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் எவை, எவ்வளவு போன்ற அனைத்து தகவல்களைப் பெறவும், குடிநீர் வசதி, மின் வசதி போன்ற அடிப்படைப் பணிகளில் உள்ள புகார்களை உடனுக்குடன் பதிவு செய்யவும் இயலும்.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களின் சீரமைப்பு

35. சத்துணவு மையங்களை மேம்படுத்தி சீரமைத்தல் தொடர்பாக ஓர் ஆய்வு செய்யப்பட்டது. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தங்களின் பொது நிதியிலிருந்து சத்துணவு மையங்களின் மேம்பாட்டிற்கும் சீரமைப்புக்கும் ஏற்கெனவே ரூ.139.72 இலட்சங்களைச் செலவிட்டுள்ளன.



2001 செப்டம்பர் 5]

நிதி நிலைமையில் நலிவடைந்திருக்கும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு இவ்வகையான சீரமைப்புப் பணிகளுக்கான அரசின் உதவி வழங்கப்படும். தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள நிதியையும் இதற்காகப் பயன்படுத்தப்படும். மேலும், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் ஆகியவை சத்துணவு மையங்களைத் தத்தெடுத்து அவற்றை பராமரிப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளில் முனைப்புடன் ஈடுபடச் செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

36. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டுபிட்கோ) 1956 ஆம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 21-3-1990 அன்று பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், பிற முகமைகளான வாரியங்கள் மற்றும் குழுமங்களுக்கும் தேவையான நிதியுதவி அளிப்பதன் மூலம் நகரங்களின் அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கும் திட்டம், சாலைகள், பாலங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றை மேம்படுத்தும் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது.

37. மத்திய அரசுத் திட்டமான சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு இந்நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்பட்டு வருகிறது. ரூ. 32 கோடி செலுத்தப்பட்ட முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் இதுவரை 193 திட்டங்களுக்கு ரூ.111.97 கோடி நிதியுதவி அளித்துள்ளது. வெவ்வேறு திட்டங்களுக்காகவும் மேற்படி டுபிட்கோ நிறுவனம் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.108 கோடி வழங்கும்.

## பெருநகர் வளர்ச்சித் திட்டம்

38. பெருநகர் வளர்ச்சித் திட்டம் என்பது அடிப்படையில் சென்னை மாநகர் உட்பட, 24 பேரூராட்சிகள் மற்றும் 8 நகராட்சிகள் உள்ளடங்கிய சென்னை மாநகரப் பகுதியின் நகர்ப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கம் கொண்டதாகும். இத்திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்குவதை மேம்படுத்தல், மழை நீர் வடிகால் கட்டுதல், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை மேம்பாடு மற்றும் வணிக வளாகங்கள்

கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை ரூ.812.02 கோடி செலவில் 103 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான நிதி உதவி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செய்யப்படுகிறது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.102.22 கோடி மதிப்பீட்டில் 25 திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

### சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (IDSMT)

39. இத்திட்டத்தின்கீழ் 5 இலட்சம் வரை மக்கள் தொகையுள்ள சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் சந்தை வளாகங்கள், பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவ்வாண்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிற திட்டங்கள் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்காக ரூ.25 கோடி விடுவிக்கப்படும்.

### புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் லிட்

40. பின்னலாடை ஏற்றுமதியின் முக்கிய மையமான திருப்பூர் நகரம் பத்தாண்டுகளுக்கு மேலாகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினைச் சந்தித்து வருகிறது. இதன் விளைவாகவும், கிடைக்கின்ற குடிநீரின் விநியோகத்திற்காகும் அதிகச் செலவு மற்றும் தரமின்மை காரணமாகவும் உலக வர்த்தக அமைப்பின் எழுச்சி காரணமாக எழுந்துள்ள புறச் சூழ்நிலை காரணமாகவும் இத்தொழிலைத் திறம்பட நடத்துவது சவாலாகவே உள்ளது. இதன் விளைவாக இத்தொழிலின் நிலைப்பாட்டிற்குள்ள அபாயத்தோடு அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் சுற்றுச்சூழலின் சீர்கேடு ஆகியவையும் கவலை தருகிறது. இப்பிரச்சினைகளுக்கு ஒரு பொருத்தமான தீர்வாக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு சிறப்பு நிறுவனத்தை அரசு உருவாக்கியுள்ளது. பொதுத் துறை, தனியார் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சி என்ற வடிவமைப்பின்படி உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் அரசு ஐ.எல்.எப்.எஸ். மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியவற்றால் கூட்டாக பராமரிக்கப்பட்டு வருகிறது. 'கட்டி–சொந்தமாக்கி–இயக்கி–ஒப்படைத்தல்' (BOOT) என்ற அடிப்படையில் இயக்கிவரும் இத்திட்டம் திருப்பூர் உள்ளூர் திட்ட அமைப்புப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கும் தற்போதைய நிலவரப்படி



இத்திட்டத்தின் மூலம் திருப்பூரில் உள்ள 3.25 இலட்சம் மக்களும், வழியிலுள்ள குடியிருப்புகளில் வாழும் 4.13 இலட்சம் மக்களும் பயன்பெறுவர். அத்துடன் சுமார் 700 வெளுத்தல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளும் பயன்பெறும். இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் உள்ளாட்சி அமைப்புகளில் நான்கு ஊராட்சி ஒன்றியங்களும், 3 பேரூராட்சிகளும், 15 சிற்றூராட்சிகளும் அடங்கும். இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.1000 கோடி என தற்போது கணக்கிடப்பட்டுள்ளது. சலுகை காலமான 30 ஆண்டுகள் முடிவடைந்தபின், இதற்காக உருவாக்கப்பட்ட சொத்துக்களுடன் இத்திட்டம் அரசுக்குத் திரும்ப ஒப்படைக்கப்படும்.

### நகர்ப்பகுதிகளில் மழைநீர் சேகரித்தலை ஊக்குவித்தல்

41. மாநிலம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதால் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே கிடைக்கின்ற மழை நீரைப் பயன்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்த விழிப்புணர்வு இயக்கத்தை பரந்த அளவில் தொடர்ந்து நடத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் பகுதியாக இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைப்பிடிக்கும்:

(i) மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் சேகரிப்பு ஆகியவற்றை புதிய குடியிருப்பு மற்றும் மனைப் பிரிவுகள் அங்கீகாரம் வழங்குவதற்கு முன் நிபந்தனைகளாகச் சேர்க்கும் வகையில் நகரமைப்புத் திட்ட விதிகள் திருத்தம் செய்யப்படும்;

(ii) சாலைகள், நடைபாதைகள் மற்றும் திறந்த வெளி இடங்களையொட்டி நிலத்தடி நீர் செல்லும் வசதிகள் கொண்டதாக நகர்ப்புற உள்ளாட்சிகளில் கட்டப்படும் எவ்வித கட்டுமானமும் இருக்கும் ;

(iii) கட்டட அனுமதி வழங்குவதற்கான விதிகளில் மழைநீர் சேகரிப்பிற்கான அமைப்புகள் இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்படும்;

(iv) மேலே சொல்லப்பட்ட விதிகள் கட்டாயமாக்கப்பட்டு, சொத்து வரி, குடிநீர் மற்றும் கழிவுநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கும்போது சரியாக உள்ளனவா என சரி பார்க்கப்படும்;

(v) மனைப் பிரிவுகளில் உள்ள எந்தக் கட்டடத்திலும் மழை நீர் நேரடியாக சாக்கடை வடிகாலிலோ அல்லது கழிப்பிடத் தொட்டியிலோ நேரடியாகக் கலந்திட அனுமதிக்கப்படாது;

(vi) நகரமைப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாடு விதிகள் மூலமாக தொழில் வரிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு ஒரு சமுதாய மழை சேகரிப்பு கட்டமைப்பை உருவாக்கி பராமரிக்க ஊக்கப்படுத்தப்படும்.

## மாநகராட்சிகள்

## சென்னை மாநகராட்சி

42. சென்னை மாநகராட்சிப் பகுதி 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது. 2001 ஆம் ஆண்டின் மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கள் தொகை 42.16 இலட்சமாகும்.

### பணிகள்

43. 2001–2002 ஆம் நடப்பு ஆண்டில் மாநகராட்சியானது ரூ.160.05 கோடி அளவில் மூலதனப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டியுள்ளது.

### சாலைகள்

44. சென்னை மாநகராட்சி 302 கி.மீ. நீள பேருந்து வழி தடச்சாலைகளையும், 1900 கி.மீ. உட்புறச்சாலைகளையும் பராமரித்து வருகிறது. நடப்பு நிதியாண்டு 2001–2002–ல் சாலைப் பணிகளுக்காக, ரூ.71 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மழைநீர் வடிகால்கள்

45. மழைக்காலங்களில் மாநகர சாலைகளில், குறிப்பாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும், சாலைகளைப் பாதுகாக்கவும் சென்னை மாநகராட்சி சுமார் 784 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்களைப் பராமரித்து வருகிறது. தற்போதுள்ள அமைப்பினைப் பெருக்கவும், நிலைநிறுத்தவும் நடப்பு நிதியாண்டு 2001–2002–ல் ரூ.7 கோடி செலவில் தற்போதுள்ளதை மேம்படுத்துவதன் மூலம் புதிய மழைநீர் வடிகால்களை அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.





### மழைநீர் சேமிப்பிற்கான கட்டமைப்பு அமைத்தல்

46. மழைநீர் சேமிப்புக் கட்டமைப்பினை சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான மற்றும் அதன் பராமரிப்பில் உள்ள கட்டடங்கள் அனைத்திலும் அமைக்க முடிவு செய்துள்ளது. மேற்கண்ட முடிவின் தொடர்ச்சியாக, சென்னை மாநகராட்சியின் வார்டு, பகுதி மற்றும் மண்டல அலுவலகங்களிலும், மாநகராட்சி மருந்தகம், மருத்துவமனை மற்றும் சமூகக் கூடங்கள் முதலானவற்றிற்கும் மழைநீர் சேமிப்பு அமைப்புகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் ஆலோசனைகளைப் பெற்று அமைக்கப்படும். இதைப்போலவே அனைத்து சென்னை மாநகராட்சி பள்ளிக்கூடங்களிலும் இவ்வசதி ஏற்படுத்தப்படும். இந்தப் பள்ளிகளின் மாணவ/மாணவியர்களுக்கு மழைநீர் சேமிப்பு உத்திகளைக் கடைப்பிடிப்பதால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் பயிற்றுவிக்கப்படும். மேலும், சென்னை மாநகரில் மழைநீர் தேங்கக்கூடிய திறந்த வெளிகள் மற்றும் சாலை ஓரங்களில் மழைநீர் சேமிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்படும். மழைநீர் சேமிப்புத் திட்டப் பணிகள் அக்டோபர் இறுதிக்குள் அதாவது வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக முடிக்கப்படும்.

### திடக்கழிவு மேலாண்மை – குப்பையில்லா திட்டம்

47. குப்பைகளை சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு மேலாண்மை செய்வதில் மாநகரங்களுக்குள்ள ஏராளமான பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. சென்னை மாநகரம் தினசரி 3000 டன் குப்பைகளை உருவாக்குகிறது. இந்தக் கழிவுகளைக் கையாளுவதும், களைவதும் மிகப் பெரிய பணியாகும். திடக்கழிவு சுத்திகரிப்புக்கான தொழில்நுட்பங்கள் மிகவும் செலவினமுடையதாகவோ அல்லது அத்தகைய தொழில்நுட்பங்கள் குப்பையின் வடிவங்களை மட்டும் மாற்றுபவையாகவோ உள்ளன. இத்தகைய சூழ்நிலையில், கீழ்க்கண்டவற்றில் மக்களை ஈடுபாடு கொள்ளச் செய்வது அவசியமாகிறது.

(i) குப்பைகளின் அளவினை அவற்றை உருவாக்கும் இடங்களிலேயே குறைத்தல்.

(ii) குப்பைகளை உருவாகும் இடங்களிலேயே தரம் பிரித்தல்.

(iii) தரம் பிரித்தலின் மூலம் அவற்றை மாற்று உபயோகத்திற்குப் பயன்படுத்தி வளம் பெறுதல்.

[2001 செப்டம்பர் 5

(iv) குப்பையிலிருந்து உரம் தயாரித்தல் போன்ற குப்பை மாற்றுத் திட்டங்கள் மூலம் வளம் பெறுதல்.

இந்தக் குறிக்கோளினை அடைய சென்னை மாநகராட்சி குப்பையில்லாத் திட்டம் ஒன்றினை மாநகரில் ஆரம்பிக்கவும் முதற்கட்டமாக மண்டலம்–7–இல் (நுங்கம்பாக்கம்) தொடங்க உள்ளது. பின்னர், இந்தத் திட்டம் மற்ற மண்டலங்களுக்கும் நீட்டிக்கப்பட உள்ளது. பொதுமக்கள், சென்னை மாநகராட்சி மற்றும் இதனைச் செயலாக்கும் ஒரு அரசு சாரா அமைப்பு ஆகியவற்றின் பங்கேற்புடன் செயல்பட உள்ள ஒரு கூட்டு முயற்சியை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்கும் பொது மக்களுக்கு ஊக்கமாக சென்னை மாநகராட்சி நல்ல தரமான சேவையினையும் குறைகளைத் தீர்க்கவும் உறுதியளிக்கிறது.

### பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்

*48.* மாநகராட்சி சுகாதார மையங்களில் தொடக்க சுகாதார பாதுகாப்பு வசதி உள்ளது. நடப்பு ஆண்டில் தொற்று நோய்களைத் தடுப்பதற்கான சிறப்புக் கவனத்தை வலியுறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### கல்வி

*49. 2001–2002* ஆம் ஆண்டில் ரூ.2.60 கோடி செலவில் மாநகராட்சி பள்ளிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மதுரை மாநகராட்சி

*50.* மதுரை மாநகராட்சி 518.5 சகிமீ. பரப்பளவும், 2001 ஆம் ஆண்டில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 9.23 இலட்சம் மக்கள் தொகையையும் கொண்டுள்ளது.

### சாலை வேலைகள்

*51. 2001–2002* ஆம் நிதியாண்டில் சாலைப் பணிகளுக்காக ரூ.3.00 கோடி செலவிடப்படும்.



2001 செப்டம்பர் 5]

### குடிநீர் வேலைகள்

*52.* புதிய குடிநீர் விநியோக பிரதானக் குழாய்களைப் பதிக்கவும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் ரூ.50 இலட்சம் செலவிடப்படும். தற்போது மாநகரின் தென் பகுதிகளுக்கான குடிநீர் விநியோகம் வைகை அணையிலிருந்து நேரடியாகக் குழாய் மூலம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வசதி மாநகரின் வடக்குப் பகுதிக்கும் விரிவாக்கப்படவுள்ளது.

### தெரு விளக்குகள்

*53.* இவ்வருடத்தில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் புதிய தெரு விளக்குகள் அமைக்கவும், பேருந்து வழித்தட சாலைகளிலும், பிரதான சாலைகளிலும் மின் குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றும் பணிகளுக்காகவும் ரூ.50.00 இலட்சம் செலவிடப்படும்.

### சுகாதாரம்

*54.* தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–II–ன் கீழ் கழிப்பறைகள், குளியலறைகள், துணிகள் துவைக்கும் வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் கொண்ட ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் ஒவ்வொன்றும் தலா ரூ.10 இலட்சம் செலவில் நான்கு இடங்களில் ரூ.40 இலட்சம் மொத்தச் செலவில் கட்டப்படும்.

### பாதாள சாக்கடை திட்டம்

*55.* தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிறுவன நிதியுதவியின்கீழ் ஏற்கெனவே உள்ள பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.12.50 கோடி செலவில் அபிவிருத்தி செய்யப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.5.84 கோடி மதிப்புள்ள பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் யாவும் இந்த நடப்பு நிதியாண்டில் செய்து முடிக்கப்படும். தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் மானியம் மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் மானியம் மாநில அரசின் பங்கு மற்றும் மாநகராட்சி நிதி ஆகியவற்றுடன் பாதாள சாக்கடை இல்லாத பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.150 கோடி ஆகும். இத்திட்டப் பணிகள் மூன்று ஆண்டுகளில் முடிவடையும்.

[2001 செப்டம்பர் 5

*மூலதனப் பணிகள்*

*56.* (i) இந்த ஆண்டில், பேருந்து செல்லும் முக்கியச் சாலைகள் மற்றும் பிரதான சாலைகளில் பாதசாரிகளுக்காக சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை ரூ.50.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

(ii) பயணிகளின் வசதிக்காக இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்காக ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் ரூ. 55 இலட்சம் செலவில் வாகனம் நிறுத்துவதற்கான வசதி உருவாக்கப்படும்.

(iii) இந்திய அரசின் சுற்றுலா அபிவிருத்திப் பணிகளின்கீழ் இவ்வருடத்தில் சுற்றுலாப்பயணிகள் தங்க " யாத்ரீ நிவாஸ் " விடுதி கட்டுதல் மற்றும் பாரதியார் வணிக வளாகத்தில் வாகன நிறுத்தும் இடத்திற்கு சிமெண்ட் கான்கிரிட் தளம் போடுதல் ஆகிய பணிகள் ரூ.52.10 இலட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப்படும்.

(iv) மதுரை பாராளுமன்ற உறுப்பினர்களின் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.100 இலட்சம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.50 இலட்சம் உள்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்காகச் செலவிடப்படும்.

(V) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் அருகில் ஒரு மொத்த மற்றும் சில்லறை காய்கறிச் சந்தை அமைந்துள்ளது. இவ்விடத்தில் அமைந்துள்ள காய்கறிச் சந்தையானது சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதாகவும் பெரிய போக்குவரத்து நெருக்கடியை உருவாக்குவதாகவும் உள்ளது. இதனைச் சமாளிக்க போதிய நிலம் கிடைக்கக்கூடிய கூடல் நகர் வீட்டு வசதி வாரியப் பகுதிக்கு மொத்த விற்பனைச் சந்தையை மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த இடமானது அனைத்துச் சாலைகளையும் நன்றாக இணைக்கிறது. தற்போது உள்ள சந்தை இடம் பலதரப்பட்ட வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் கட்ட பயன்படுத்தப்படும். நிதி உதவி வழங்குவதற்கான இத்திட்ட முன்மொழிவுகள் மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சித் திட்ட அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் நிதியுதவி கிடைத்த பின்பு தொடங்கப்படும்.

(vi) மதுரை கோவில் பாப்பாகுடி கிராமத்தில் ரூ3.31 கோடி செலவில் லாரிகள் நிறுத்துமிடம் ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் யாவும் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு நிறுவன நிதியுதவி அனுமதி கிடைத்ததும் தொடங்கப்படும்.



2001 செப்டம்பர் 5]

**தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

*57.* இத்திட்டத்தின்கீழ் மதுரை மாநகரத்தில் குடிசைப்பகுதிகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 2001–2002 ஆம் ஆண்டிற்கு ஊக்குதவித் தொகையாக ரூ.16 இலட்சம் விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கோயம்புத்தூர் மாநகராட்சி

*58.* கோயம்புத்தூர் மாநகராட்சி 105.60 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 2001 ஆம் வருட மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி 9.23 இலட்சம் மக்கள் தொகையையும் கொண்டுள்ளது.

*சாலைகள்*

*59.* 6.83 கிலோ மீட்டர் நீள சாலைகளைப் பராமரிப்பதற்காக ரூ.40 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*மூலதனப் பணிகள்*

*60.* (i) ரூ.2 கோடி செலவில் அனைத்து ஓட்டுவில்லை பள்ளிக் கட்டடங்களையும் கான்கிரீட் கூரைக் கட்டடங்களாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு நல்ல வசதிகளைத் தரும் பொருட்டு ரூ.1 கோடி செலவில் பள்ளிகளுக்கான மேசை நாற்காலிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) ரூ.20 இலட்சம் செலவில் அனைத்துப் பள்ளிகளின் கழிப்பறை வசதிகளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iii) விலங்குக் காட்சிசாலை, குழந்தைகள் பூங்கா மற்றும் வ.உ.சி. பூங்கா ஆகியவற்றை மேம்படுத்த ரூ.20 இலட்சம் ஒதுக்க குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) ரூ.10 இலட்சம் செலவில் ஆர்.எஸ். புரத்திலுள்ள மாநகராட்சிக் கலையரங்கத்தை அனைத்து நவீன வசதிகளுடன் புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(v) மாமன்றக் கூடம் மற்றும் மாநகராட்சியின் தென் மண்டல அலுவலகம் ஆகியவற்றைக் கட்டவும் பிரதான அலுவலகத்தை மேம்படுத்தவும் நடப்பு நிதியாண்டான 2001–2002–ல் ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 5

### புதிய மற்றும் புதுமைத் திட்டங்கள்

61. (i) மாதிரி சாலைத் திட்டத்தின்கீழ் 10 முக்கிய சாலைகளைத் தேர்வு செய்து ரூ.1 கோடி செலவில் சாலைகள், மத்திய மற்றும் பக்கவாட்டு சாலைப் பிரிவுகள், தெரு விளக்குகள், வடிகால் அமைப்பு, நடைபாதை, நவீன போக்குவரத்து அறிவிப்பு சமிக்ஞை முதலானவற்றை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) நகரின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள பூங்காக்களை மறு வடிவமைத்து அபிவிருத்தி செய்ய ஓர் அருகிடத்து பூங்காத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

(iii) பல்வேறு திரையரங்கு உரிமையாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் விளம்பர முகமைதாரர்கள் ஆகியோர் மாநகரின் அழகு பாதிக்கும் வகையில் சாலையோரச் சுவர்களின்மீது சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். இதற்காக கட்டண அடிப்படையில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக மாநகரில் 150 விளம்பரப் பலகைகளை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iv) மாநகராட்சியின் பொறியாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் அனைவருக்கும் ரூ.10 இலட்சம் செலவில் கம்பியில்லாச் சாதனங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(v) சாலைகளைச் சுத்தம் செய்வதற்காக நவீன சுத்தம் செய்யும் இயந்திரங்களை வாங்க ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) ரூ.10 இலட்சம் செலவில் வ.உ.சி. பூங்காவில் உள்ள மூத்த குடிமகன் பூங்காவை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தேசிய குடிசைப் பகுதி அபிவிருத்தி திட்டம்

62. இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிசைப் பகுதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 2001–2002 நிதியாண்டில் அரசு மானியமாக ரூ.16 இலட்சத்தை விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

63. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 146.90 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும். 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி



2001 செப்டம்பர் 5]

7.46 இலட்சம் மக்கள் தொகையும் கொண்டதாகும். இம்மாநகராட்சி கீழ்க்கண்ட பணிகளை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உள்ளது:

### சாலைகள்

64. ரூ. 1 கோடி செலவில் பேருந்து செல்லும் மிக முக்கியமான 12 கிலோ மீட்டர் சாலையை இரட்டை வழிப் பாதையாக மாற்றி அகலப்படுத்தவும், வலிமைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் 21 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மண் சாலையை ரூ.1.70 கோடி செலவில் தார்ச் சாலையாக மேம்படுத்த முடிவு செய்துள்ளது.

### தெரு விளக்குகள்

65. மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மனைப் பிரிவுகளில் ரூ.50 இலட்சம் செலவில் 1000 குழல் விளக்குகளைப் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மழைநீர் வடிகால்

66. மேற்சொன்ன மாநகராட்சிப் பகுதியில் ரூ.1.00 கோடி செலவில் 12.50 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மழைநீர் வடிகால் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பாதாளச் சாக்கடை

67. மாநகராட்சிக்குட்பட்ட முந்தைய பகுதி மட்டுமே பாதாளச் சாக்கடை வசதியைக் கொண்டுள்ளது. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடை வசதி செய்யப்படவில்லை. மேற்சொன்ன, பாதாளச் சாக்கடைத் திட்டம் ஸ்ரீரங்கம் மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளுக்கும் ரூ.120 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டு பணி விரைவில் தொடங்க இருக்கிறது.

### மூலதனப் பணிகள்

68. 28 பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ.2.00 கோடி செலவில் கழிப்பிட மற்றும் இதர வசதிகளைச் செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 5

தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

69. இத்திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் பணிக்காக 2001 – 2002 ஆம் ஆண்டில் ரூ.16 இலட்சம் அரசு ஊக்குவிப்புத் தொகையாக விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சேலம் மாநகராட்சி

70. சேலம் மாநகராட்சி 91.34 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் 2001 ஆம் வருட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 6.93 இலட்சம் மக்கள்தொகையும் கொண்டுள்ளது.

சாலைகள்

71. சாலைகள், வடிகால்கள், சிறு பாலங்கள் முதலானவற்றைப் பராமரிப்பதற்காக 2001–2002 ஆம் வருடத்தில் ரூ.2.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குடிநீர் வழங்கல்

72. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்தபடி 18 நீர்த்தேக்கங்கள் கட்டப்படுவதற்கும் இந்த மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பிரதான தண்ணீர்க் குழாய்கள் பதிக்கப்படுவதற்கும் ரூ.21.84 கோடி செலவிலான இரண்டாவது கட்ட திட்ட மதிப்பீட்டிற்கான அனுமதியை அரசு வழங்கியது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தெரு விளக்குகள்

73. ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பிரதான சாலைகளில் 500 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் தெரு விளக்குகளாக 500 குழல் விளக்குகள் ஆகியவற்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

74. மூலதனப் பணிகள்

(i) மாநகராட்சிக் கட்டடங்களைப் பராமரிப்பதற்காக 2001–2002 ஆம் வருடத்தில் ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) ரூ.40.00 இலட்சம் செலவில் 12 கட்டணக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது.



2001 செப்டம்பர் 5]

(iii) புதிதாக இணைக்கப்பட்ட 28 டானிடா துணை சுகாதார மையங்கள் மற்றும் ஏற்கெனவே இருந்து வரும் சுகாதார மையங்கள் ஆகியவற்றிற்கான உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் செலவினமாக ரூ.10 இலட்சம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தாதகாப்பட்டி மகப்பேறு மையத்தில் ரூ.10.00 இலட்சம் செலவில் ஓர் அறுவை சிகிச்சை அரங்கம் பராமரிக்கப்படும்.

தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

75. சேலம் மாநகராட்சியில் உள்ள குடிசைப்பகுதிகளை மேம்படுத்துவதற்காக 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.16.00 இலட்சம் மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திருநெல்வேலி மாநகராட்சி

76. திருநெல்வேலி மாநகராட்சி 108.65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 4.11 இலட்சம் மக்கள் தொகையினையும் கொண்டதாகும்.

குடிநீர் விநியோகம்

77. இம்மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் ரூ.1 கோடி செலவில் கூடுதலாக குடிநீர் விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

தெரு விளக்குகள்

78. இம்மாநகராட்சியில் உள்ள பிரதான சாலைகளில் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1000 எண்ணிக்கை 40 வாட்ஸ் குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றவும், புதிதாக 250 எண்ணிக்கை 40 வாட்ஸ் குழல் விளக்குகள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம்

79. ஒருங்கிணைந்த சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.46.25 இலட்சம் செலவில் 5 ஒருங்கிணைந்த சுகாதார மையங்கள் நிறுவப்படவுள்ளன.

[2001 செப்டம்பர் 5

### பாதாளச் சாக்கடை

80. தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் புதிய புதைவடிகால் திட்டம் ரூ.70 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

### மூலதனப் பணிகள்

81. (i) திடக்கழிவு அகற்றும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் ரூ.9900 இலட்சம் செலவில் கழிவு பொருள் அகற்றல் திட்டம் இயந்திரமயமாக்கப்படவுள்ளது.

(ii) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் மற்றும் அரசு உதவி ஆகியவற்றுடன் ரூ.6.90 கோடி செலவில் ஒரு புதிய பேருந்து நிலையம் கட்டப்பட உள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் 2001 டிசம்பரில் முடிவடையும்.

(iii) திருநெல்வேலி மாநகராட்சியில் உள்ள ஆரம்பப் பள்ளிகளைப் பராமரிக்க ரூ.22.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) மாநகராட்சி மருத்துவமனைகளில் வருடாந்திர பராமரிப்பிற்காக ரூ.7 லட்சங்களும், இவற்றைப் புதுப்பொலிவாக்கிட ரூ.10 லட்சங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

(v) டிரைவ்–இன் உணவக வசதிகளுடன் கூடிய திறந்தவெளித் திரையரங்கம் ஒன்றினை நேரு சிறுவர் கலையரங்கத்தில் ரூ.10 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.20 இலட்சம் செலவில் சரோஜினி பூங்காவில் ஒரு நீச்சல் குளம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

82. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில், கூலிக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளில் சாலை மேம்பாடு, வடிகால், குடிநீர் வழங்கல், மழைநீர் சேகரிப்பு, மதிய உணவு மையங்கள், பள்ளிக் கட்டடங்கள் ஆகிய வெவ்வேறு தலைப்பின்கீழான பணிகளை ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

83. இத்திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள 2001–2002 ஆம் நிதியாண்டில் அரசு ஊக்குதவித் தொகையாக ரூ.16 இலட்சங்களை விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 5]

84. இறுதியாக நகர்ப்புற மக்களுக்கு உயர்தரமான வாழ்வளிக்கும் நோக்கத்துடன், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முறையான மற்றும் தளராத வளர்ச்சிக்கு உதவிட இந்த அரசு உறுதி எடுத்துள்ளது.

## இணைப்பு I

### 2001 – 2002 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | மானியக் கோரிக்கை 49 | | | |
| | (1) | (2) | (3) | (4) |
| 2217-191 | PC நகர்ப்பகுதி வளர்ச்சி தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2000.00 | - | 2000.00 |
| | JR குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2711.00 | - | 2711.00 |
| | JH நகராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த | 1050.00 | - | 1050.00 |
| | JN மாநகராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த | 1250.00 | - | 1250.00 |
| | JQ நகராட்சிகளில் மொபைல் காம்பேக்டர்கள் வழங்குதல் | 100.00 | - | 100.00 |
| | JR மதுரை உள்வட்டச் சாலை அமைப்பதற்கான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்திற்கு ஆண்டுத் தொகை | 40.00 | - | 40.00 |
| | PD யு.என்.யு.டி.எப் ஆதாரப் பங்குத் தொகையிலிருந்து மானியத் தொகை | 12.00 | - | 12.00 |

[2001 செப்டம்பர் 5

| | | | | |
|---|---|---|---|---|
| | AC நகராட்சி நிர்வாக இயக்குநரகம் — சம்பளங்கள் | - | 292.67 | 292.67 |
| | AD நகராட்சி ஆணையாளர் — சம்பளங்கள் | | 161.65 | 161.65 |
| | AE நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் | | 3.06 | 3.06 |
| | AH நிதி நிலையில் நலிவுற்ற நகரங்களுக்கு தன்னிறைவுத் திட்டத்தை நீட்டித்தல் 01 சம்பளங்கள் | | 8.18 | 8.18 |
| | JC 01 நிறுவன நிதிக் கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவு — 01 சம்பளங்கள் | 10.62 | - | 10.62 |
| | JD திட்டமிடுதல் தொலைநோக்குத் திட்டப்பிரிவு — 01 சம்பளங்கள் | 10.43 | - | 10.43 |
| | JE நகராட்சி நிருவாக வட்டார இயக்ககங்களின் அலுவலகங்களைச் சீரமைத்தல் | 38.58 | - | 38.58 |
| | JF நகராட்சி நிருவாக இயக்ககத்தில் குறைந்த செலவிலான துப்புரவுப் பணித் திட்டத்தை கண்காணிக்கும் பிரிவு | 9.38 | - | 9.38 |
| | KA மகப்பேறு குழந்தை நல மையங்களை மேம்படுத்த நகராட்சிகளுக்கு நிதியுதவி | 15.00 | - | 15.00 |



2001 செப்டம்பர் 5]

| | | | | |
|---|---|---|---|---|
| 2236 102 | AS சத்துணவுத் திட்டம் | - | 882.08 | 882.08 |
| | AT சத்துணவுத் திட்டம் | | 160.92 | 160.92 |
| 2515 | AI பேரூராட்சி இயக்ககம் 01 சம்பளங்கள் | | 81.77 | 81.77 |
| | AJ மாவட்ட பேரூராட்சி அலுவலகங்கள் 01 சம்பளங்கள் | | 165.69 | 165.69 |
| | 102 KD பேரூராட்சிகளில் வசதிகள் செய்து கொடுக்க நிதியுதவி | 2500.00 | - | 2500.00 |
| 3475 | 108 வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட நகர்ப்பகுதித் திட்டம் | | - | |
| | JA | 264.37 | - | 264.37 |
| | JB | 171.10 | - | 171.10 |
| | JC | 74.34 | - | 74.34 |
| | UC 01 சம்பளங்கள் | 66.21 | - | 66.21 |
| 3604 | BA மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி பேரூராட்சிகளுக்கு மொத்த நிதி ஒதுக்கம் | 14746.70 | - | 14746.70 |
| | BC நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மொத்த நிதி ஒதுக்கம் | 41826.82 | - | 41826.82 |
| | JE பதினோராவது நிதிக் குழு மானியம் | 7683.99 | - | 7683.99 |

[2001 செப்டம்பர் 5


| | மானியக் கோரிக்கை 33 | | | |
|---|---|---|---|---|
| 2217-800 | JG சுவர்ண ஜெயந்தி சகாரி வேலைவாய்ப்புத் திட்டங்கள்—நிருவாகம் மற்றும் செயல்பாட்டுச் செலவுகள் தலைமைச் செயலகம். | 2.30 | - | 2.30 |

| | மானியக் கோரிக்கை 60 | | | |
|---|---|---|---|---|
| 4215 | குடிநீர் வழங்கல் துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 4240.99 | - | 4240.99 |
| 4217 | JA பெருநகரத் திட்டம் | 1700.00 | - | 1700.00 |
| | PA தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு பங்குத் தொகை | 800.00 | - | 800.00 |


| | மானியக் கோரிக்கை 61 | | | |
|---|---|---|---|---|
| 6217-191 | JS மாநகராட்சிகளுக்கு அடிப்படை வசதிகளுக்காக கடன்கள் | 1250.00 | - | 1250.00 |
| 6217 191 | PC தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் II—க்கு கடன்கள் | 17000.00 | - | 17000.00 |
| பெரு மொத்தம் | | 99573.83 | 1756.02 | 1013.29.85 |



2001 செப்டம்பர் 5]




நகராட்சிகளின் வரி வசூல்







உள்ளாட்சி அமைப்புகளின் (நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள்)
மாநில நிதி ஆணைய பகிர்வு




[2001 செப்டம்பர் 5







2001 செப்டம்பர் 5]





நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை
(குப்பை அகற்றுதல் நாளொன்றுக்கு டன்னில்)








துப்புரவு
நகராட்சிகளில் முடிக்கப்பட்ட பொதுசுகாதாரப் பணிகள்





நகராட்சிகளில் தெருவிளக்குகள், சாலைகள், துப்புரவுப் பணி மற்றும் குடிநீர் வழங்கல் இனங்களுக்கு
ஒரு நபருக்கு செலவாகும் தொகை
ரூபாய்
ஆண்டு
1991-92
1992-93
1993-94
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
1999-2000
2000-2001
2001-2002
தெருவிளக்கு
சாலைகள்
துப்புரவுப்பணி
திடக்கழிவு மேலாண்மை
குடிநீர் வழங்கல்





சென்னை மாநகராட்சியின் நிதிநிலை
மொத்த வரவு மற்றும் செலவு
(ரூபாய் கோடிகளில்)
ஆண்டு
1997-98 1998-99 1999-2000 2000-2001 2001-2002 மதிப்பீடு
வரவு 389 435 443 525 580
செலவு 417 489 475 552 585



சென்னை மாநகராட்சி
சொத்து வரி வசூல்
(ரூபாய் கோடியில்)
0
25
50
75
100
125
150
175
200
59
69
75
105
113
114
152
175
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
1999-2000
2000-2001
2001-2002
மதிப்பீடு
ஆண்டு





சென்னை மாநகராட்சி
தொழில் வரி வசூல்
(ரூபாய் கோடியில்)
0
5
10
15
20
25
30
35
11
13
16
24
24
23
31
32
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
1999-2000
2000-2001
2001-2002
மதிப்பீடு
ஆண்டு








| | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|
| சாலைகள் | 58 | 64 | 24 | 66 | 71 |
| தெரு விளக்குகள் | 12 | 10 | 3 | 3 | 3 |
| மழை நீர் வடிகால்கள் | 15 | 24 | 15 | 10 | 7 |


சென்னை மாநகராட்சி
அடிப்படை வசதிகள் அமைப்பு
(ரூபாய் கோடியில்)
175
150
125
100
75
50
25
0
77
94
73
107
131
117
152
160
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
1999-2000
2000-2001
2001-2002 மதிப்பீடு
ஆண்டு





மாநகராட்சிகளின் நிதிநிலை (சென்னை நீங்கலாக)
ரூபாய் கோடியில்
400
300
200
100
0
1995-96
1996-97
1997-98
1998-99
1999-2000
2000-2001
2001-2002 மதிப்பீடு
வருவாய் 147 202 258 315 358 363 368
செலவு 137 184 246 336 344 364 369
ஆண்டு


மாநகராட்சிகளின் வரி வசூல் (ரூபாய் கோடியில்)
(சென்னை நீங்கலாக)







மாநகராட்சிகளில் சாலை பணிகள்
(சென்னை நீங்கலாக)





97803
108671
113600
1999-2000
2000-2001
2001-2002
0
20000
40000
60000
80000
100000
120000
ஆண்டு





94
115
219
221
169
126
180
178
190
217
325
1991-92
1992-93
1993-94
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
1999-2000
2000-2001
2001-2002
0
50
100
150
200
250
300
350
ஆண்டு


மாநகராட்சிகளில் மக்கட் தொகைக்கேற்ப அடிப்படை வசதிகளின் வளர்ச்சி (சென்னை நீங்கலாக)







பேரூராட்சியில் சொத்து வரி வருவாய்





பேரூராட்சிகளில் பராமரிக்கப்படும் சாலைகள்
14476
15549
15559
1999-2000
2000-2001
2001-2002 மதிப்பீடு
ஆண்டு




பேரூராட்சிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு
291332
298388
303388
1999-2000
2000-2001
2001-2002 மதிப்பீடு
ஆண்டு

[2001 செப்டம்பர் 5




தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224477
சென்னை-600 008
நூலகம்